Page no. 601 To 688 only.

அலைகளாம் புயல்கள் அலையுமோர் விதானம்
நிலத்தினை அணைந்து நிலவுதல் நோக்காய்,
வியனுல கணைந்தவவ் விசும்பினில் உலவும்
புயலெனும் அலைகளைப் பொற்புறக் கிழித்த
வெண்ணுரை மின்னலின் எண்ணரும் வரிசைகள்
கண்ணுமைந் தகத்தைக் களித்தலைக் காணாய்.
கடலே! கடலே! காதலி வெண்மதி
மடந்தையுன் பாற் கொளும் மாசிலாக் காதல்போல்
இஞ்சிற் றெனக்குக் கிட்டில தெனினும்
நெஞ்சுற் றொருபால் நெடுந்துயர் நெருக்கினும்
நீயுநின் நேயையும் நித்திய மாய்க்கொளும்
பாயுமெய்க் காதற் பரவசம் பார்த்து
மற்றுமிவ் வானிலும் மண்ணிலும் மலர்ந்துள
பொற்புகள் புகழ்கள் புதுமைகள் பார்த்துச்
செஞ்சுவைக் கவிதை சிந்தியான் களிக்க,
துஞ்சுதல் தோன்றுதல் துறந்திடு தூயவள்
எனக்கும் உனக்கும் எவர்க்கும் முதல்வி
மனமும் வாக்கும் மன்னுதற் கரியவள்
அருளுக வென்றே அவளையான் போற்றினேன்,
விருப்பொடவ் வணங் விமலையைப் போற்றுவாய்
உன்பால் அன்புயான் உற்றிருப் பதுபோல்
என்பால் அன்புநீ இயைந்தனை யாயின்,
கடலே! கடலே! கண்மணி கடலே!
உடல்புள கிதமுற உவந்திடு கடலே!

பொருட் குறிப்புகள்.

வரி 11. கடுத்த, போன்ற. வரி 18. கோதறு, மாசற்ற.

வரி 43-50. ஜானகிப் பிராட்டியை யன்றி வேறு எப்பெண்ணையும் இதயங் கொள்ளாத ஏக பத்தினி விரத சிரேஷ்டராகிய ஸ்ரீ ராமபிரான் மனத்தையும் கொள்ளை கொண்ட பேரழகுடைய மதி அவ்வாறு கொள்ளை கொண்டதும் அவரது யௌவனப் பருவத்து மன்று, தாய்ப்பால் மறவாத குழந்தைப் பருவத்திலேயே எனின், அந்த மதியின் அழகும் வசீகரமும் எத்துணை மகிமை மன்னியதாம்! என்பது குறிக்கப் பெற்றிருக்கிறது.

வரி 51-52. மலர்ந்த பூவணிந்த கூந்தல் கொளும் பெண்கள், மலைத்தோள் ஆடவர்கள் ஆகிய காதலர் ஒருவரையொருவர் பிரிந்திருக்குங்கால் வெண்மதி அவர்களுக்குப் பிரியமான சத்துருவா யிருக்கும் தகைமையை விளக்கி விவரிப்பின் விரியுமென விடுகின்றோம்.

வரி 53. கிசி, இரவு. படாம், வஸ்திரம். வரி 54. மணிகள், இரத்தினங்கள். வரி 55. மீன்கள், நட்சத்திரங்கள். வரி 56. கார்த்திட, ஒளிர்ந்திட. வரி 57. வனநடை, அழகிய நடை. வரி 58. முகில், மேகம் இளம் பிடிகள், இளமையான பெண் யானைகள்.

வரி 57-60. மதியும் முகிலும் மகிழ்சிறந்து ஓடி விளையாடும் அற்புதக்காட்சி இளவேனிற் காலத்தில் சிற் சில சமயமே கிடைக்கும். (கார் காலத்திலோ மேகங்கள் மதியை நமது கண்ணே காணாவாறு முற்றும் மறைத்து விடும்.)

வரி 79-84. பரந்த கடலின் காட்சி நீல வானமே பூமியை அணைந்துள்ளதுபோல் தோற்றுகிறது. அலைகளே அவ்வாறு நிலத்தை அணைந்த வானத்து மேகங்கள்போல் தெரிகின்றன. அந்த மேகங்களில் பளிச்சு பளிச்சென்று தோற்றுகின்ற மின்னல்கள் போலவே இருக்கின்றன கணக்கற்ற இந்த அலை வரிசைகளைக் கிழித்துக் கிழித்துத் தோன்றுகிற வெள்ளிய நுரைகள்.

வரி 94-96. இம்மூன்று வரிகளால் குறிக்கப்பெற்ற தெய்வம் ஸ்ரீ சரஸ்வதி தேவியாவள்.

221396.

ஜப்பான் தேசத்தியப் பெண்கள்.

(ஜய கர்ணாடக.)

ஜப்பான் தேசம் உலக சுகானுபவங்களிலும் முன்னேற்றத்திலும் ஐரோப்பா அமெரிகா கண்டங்களுக்கு நிகராக உன்னத நிலையையடைந்து பிரசித்தி பெற்றிருப்பது யாவரும் அறிந்த விஷயம். அதிவிரைவில் அத்தேசம் உலகமே பிரமிக்கத்தக்க உன்னத நிலையையடைந்திருப்பதற்கு அத்தேசத்திய அபிவிருத்தியே மூலகாரணமாயிருக்கின்றதால் இளமை முதல் முதுமைப்பருவம் வரை அவ்விடத்தியப் பெண்மணிகளின் நடவடிக்கைகளைப் பற்றி நாம் அறிந்து கொள்ளல் தற்சமயத்திற்கு அவசிமாயிருக்கின்றது.

ஜப்பான் பெண்களிடையுள்ள வணக்கம், அடங்கி நடத்தல், கடமையில் கருத்து, தேசாபிமானம், சுயமரியாதையைக் காத்தல் இவைகளை நன்கறிந்து நமது சகோதரிகள் நடப்பரேல் நம் நாடு விரைவில் முன்னேற்ற மடையத் தடையே இல்லை.

ஜப்பானில் பருவமடைந்து விவாக மாகாத பெண்களும் விவாகமானவர்களும் எப்போதும் உண்மைவாய்ந்த பரிசுத்த மனதுடனும் தைரியம் உற்சாகம் பெருந்தன்மை அன்பு ஒற்றுமை இவைகளுடன் கூடியவர்களாக விளங்குகிறார்கள். பிறந்தது முதல் விவாக மாகும் வரை இம்மை மறுமைக்குரிய கல்விப் பயிற்சியையும் படிப்பினையையும் பாடசாலைகளிலும் சங்கங்களிலும் பெரியோர்களிடத்தும் உயர்தர நோக்கமுள்ள போதகர்களிடத்திலும் கற்று தேச சேவைக்காகவே பிறந்திருக்கிறோமென்ற நம்பிக்கை யுள்ளவர்களாக இருக்கின்றார்கள். ஸ்திரீ தர்ம நீதிக்குரிய சாவித்திரி, அகலிகை, மைத்திரேயி முதலிய புண்ணிய ஸ்திரீகளின் சரித்திரங்களையோ, 'கார்யேஷு தாஸீ' என்ற நீதிசாஸ்திர வாசனையையோ, 'யத்ர நார்யஸ்து பூஜ்யந்தே' என்ற ஸ்மிருதி வசனங்களின் பரிசயத்தையோ, 'மாத்ருதேவோ பவ' என்ற ச்ருதி வாக்கியத்தையோ சிறிதும் அறியாத ஜப்பான் ஸ்திரீகள் அதிகாலையில் துயில் விட்டெழுந்து காலைக்கடனை முடித்துக் கொண்டு கணவன் அல்லது பெரியோர்கள் படுக்கை விட்டெழும் சமயத்தைக்கவனித்திருந்து அவர்கள் எழுந்ததும் தவறாது காலை வந்தனத்தைச் செலுத்தி 'நல்ல தூக்கத்திலிருந்தும் எழுந்தீர்களா? நற்பொழுது விடிந்ததா?' என்று விசாரித்துப் பிறகு அவர்கள் காலைக்கடனை முடித்துக் கொள்ளுவதற்கும் ஸ்னானம் செய்வதற்கும் வேண்டியவற்றைத்தயாரித்துக்கொடுத்து காலை போஜனமளித்தல் போன்ற உபசாரங்களால் அவர்களை சந்தோஷப் படுத்துகின்றார்கள். கணவன் தனது உத்தியோகத்தின் நிமித்தம் வெளியிற் புறப்படும்போது வேண்டிய உடுப்புக்களை யணிவதில் உதவி புரிந்து தெருவாயிற்படி வரை கூடச்சென்று தலை வணங்கி வந்தனம் செய்து சௌக்கியமாகப் போய் வாருங்கள் என்று விடை யளித்தனுப்பிய பிறகு வீட்டு வேலைகளிற் கவனம் செலுத்துகிறார்கள். வீட்டிற்கு வேண்டிய பொருள்களை வாங்கச் செய்து குழந்தைகளுடையவும் வேலைக்காரர்களுடையவும் க்ஷேமலாபங்களை விசாரிக்கின்றார்கள். தாங்கள் செய்யவேண்டிய காரியங்களிற் சிறிதும் அலக்ஷ்ய புத்தியற்றும் சோம்பற் கொள்ளாதும் கவனித்துக் கொள்ளுவதுடன் குடும்ப நிர்வாகச் செலவுகளைத் தவறாது எழுதி வைக்கின்றார்கள். சமையல் முடித்து சாப்பாட்டிற்கு சித்தப்படுத்திவிட்டு வர்த்தமானப் பத்திரிகைகளைப் படித்தவண்ணம் கணவன் வரவை எதிர் பார்த்திருக்கின்றார்கள். அவன் வந்ததும் வந்தன மளித்துச் சௌக்கியமாய் வந்து சேர்ந்தீர்களா என்று இனிமை வாய்ந்த சொற்களால் அன்புடன் விசாரித்து வீட்டிற்குள் அழைத்து வந்து ஜமக்காளம் அல்லது பாயின் மீது உட்காரச்செய்து வந்தனம் செய்து களைந்த உடுப்புக்களை எடுத்து வைப்பார்கள். சாப்பாடு முடிந்ததும் குளிர் தேசமாகையால் கணப்பில் கையைக் காய்ச்சிக் கொண்டு கணவன் உட்கார்ந்திருக்கும் சமயத்தில் தாங்களும் கூட உட்கார்ந்து சமயமறிந்து வீட்டிற்கு வேண்டிய பொருள்கள் பற்றியும் செய்து முடிக்கவேண்டிய குடும்ப காரியங்களைப் பற்றியும் பேசுவார்கள்.

மத்தியான வேளையில் கணவனுடையவும் குழந்தைகளுடையவும் துணிகளைத் துவைத்து இஸ்திரி செய்தல், பொத்தான்கள் போடுதல், கிழிந்திருப்பதை தைத்தல் முதலிய காரியங்களைச் செய்ய வாரம்பிக்கின்றார்கள். இராச் சாப்பாட்டிற்குத் தயாரித்து வைத்துத் தங்கள் வேலை (அதாவது கைத்தொழில் வேலைகள்) அல்லது படித்தல் இவைகளைச் செய்கின்றார்கள். இதற்குப் பிறகு அண்டை அயல் வீட்டுத் தோழிமார்களுடன் தோட்டங்களுக்கும் விடுதிகளுக்கும் உலாவச் செல்கின்றார்கள்.

ஜப்பானில் பெண்களுக்கென உயர்தர ஹைஸ்கூல்களும் காலேஜுகளும் மற்றும் இதர கல்விச் சாலைகளும் இருக்கின்றன. அவைகளில் அநேகம் பெண் உபாத்தினிகள் பாடம் கற்பிக்கின்றார்கள். பல ஏழை ஸ்திரீகள் தொழிற் சாலைகளிலும் ரயில் இலாகாக்களிலும் வியாபாரச் சாலைகளிலும் அமர்ந்து பிழைக்கின்றனர். இதல்லாது சொந்தத்தில் கைத்தொழில், பூநூல் வேலை, வர்ண வேலை, காகிதப் பூக்கள் முதலிய பலவிதப் பொருள்களைச் செய்து விற்கின்றார்கள். ஜப்பானில் பிச்சை கேட்பது இளப்பமானதால் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து பேர்களுக்கு மேலாகவே படித்த பெண்கள் காணப்படுகிறார்கள்.

ஜப்பானில் பிச்சை யெடுத்தலைத் தடுத்திருக்கும் காரணத்தால் நிர்க்கதியான ஏழைப் பெண்கள் ஆறு வருஷ காலம் கல்வி பயின்றபின் அவர்களின்பெற்றோர் (பிழைப்பிற்குச் சிறிதும் வழியற்றிருப்பவர்கள் மட்டும்) தாசிகளின் சமூகத்திலும் நர்த்தனக்காரர் சமூகத்திலும் தம் பெண்களை அடமானம் செய்து பணம் பெறுவர். அச்சிறுமியர்கள் அங்கு சங்கீதம் அல்லது பரத சாஸ்திரம் இவைகளை நன்கு கற்றுக்கொண்டு கடன் தீர்க்கமாட்டாதவர்கள் அவ்விடமே தங்கி விடுகின்றார்கள். இவர்களுக்கெனத் தனிமையாக ஏற்படுத்தப் பட்டிருக்கும் தெருக்களில் வசிக்கின்றார்கள். சிலர் தங்களுக்குக் கிடைக்கும் சம்பளத்தில் தங்கள் பெற்றோர் வாங்கியிருக்கும் கடனையும்தீர்த்துப் பெற்றோரிடம் திரும்பி வந்து தங்கள் தொழில் கொண்டு ஜீவிக்கின்றார்கள்.

பெண்கள் தாங்கள் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டுமென்பதைக் கற்பது போல ஆடவர்களும் தாங்கள் நடந்து கொள்ள வேண்டிய விதத்தை நன்கறிந்திருந்தால் அக்குடும்ப வாழ்க்கை இன்பமயமாகவும் இம்மை மறுமைக்குரியதாகவும் ஏற்படுகிற தன்றோ? ஆகையால் அவ்விடத்திய ஸ்திரீகள் தங்கள் கணவனை வணக்கத்துடன் கேட்டுக் கொள்ளும் முக்கிய விஷயங்கள் யாவையெனில்:—

1. கணவன் தன் வேலைகள் நிமித்தம் வெளிச் செல்லும் சமயங்களில் இது காரியம் பற்றி இன்ன விடத்திற்குச் செல்லுகிறான் என்பது பற்றியும் நெடுநேரம் வெளியில் தங்க வேண்டிய சந்தர்ப்பங்களை முன்னதாகவே தெரிவித்துச் செல்லவேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறாள்.

2. குழந்தைகள் எதிரிலும் வீட்டிற்கு வந்துள்ள விருந்தினர் முன்னிலையிலும் கோபித்துக் கொள்ளாமலும் குடும்ப நிர்வாக விஷ

யங்களைப் பேசாமலும் இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறாள்.

3. வீட்டு வேலைகளிற் தனக்குப் பூரண சுதந்திரம் கொடுத்திருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறாள்.

4. தன் குழந்தைகள் முன்னிலையில் விசனகரமான செய்திகளையோ குடும்ப ரகசியங்களையோ பேசக் கூடாதென்று கேட்டுக் கொள்ளுகிறாள்.

5. கணவன் செய்யும் செலவுகளைத் தன்னிடம் ஒளிக்காது தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறாள்.

ஜப்பான் ஸ்திரீகளின் உடை பாவனைகள் நமக்கு வேறு விதமாகக் காணப்படினும் அவர்களின் நடவடிக்கைகள் நமது பூர்வீகப்பெண்மணிகளின் நடவடிக்கைகளை ஒத்திருக்கின்றன.

தேச சேவையின் விஷயத்தில் அப்பெண்கள் எவ்வளவு தூரம் சிரத்தை கொண்டிருக்கிறார்கள் என்பதைப்பற்றி ரஷ்யா—ஜப்பான் யுத்த காலத்தில் நடைபெற்ற சிறுகதையொன்று அவர்களிடையே வழங்குகிறது. கிழவி ஒருத்திக்கு ஒரே மகன் இருந்தான். தாய் நோயுற்றிருந்தமையால் அவளை யுபசரித்துக்கொண்டு மகன் வீட்டிலேயே இருந்து கொண்டிருந்தான். தாய் பிள்ளையை நோக்கி "குழந்தாய்! எனக்காக நீ வீட்டிலிருக்கக்கூடாது. உன் தாயைக் காட்டிலும் உன் தேசமே உனக்குப் பெரிதெனப் பன்முறை யுரைத்தும் சுகவீனமாயுள்ள தாயை விடுத்து யுத்தகளம் செல்ல மகன் ஒப்பவில்லை. இது கண்டு கிழவி ஒரு மரண சாஸனத்தை எழுதி வைத்துத் தற்கொலை புரிந்து கொண்டாள். மரண சாஸனத்தில் 'என் தேக அசௌக்கியம் காரணமாக எனக்குப் பணிவிடை செய்வதன் நிமித்தம் வீட்டில் இருக்கும் என் மகனை யுத்தகளத்திற்கனுப்பி தேச சேவை செய்விப்பதன் பொருட்டு நான் சந்தோஷத்துடன் தற்கொலை புரிந்து கொண்டிருக்கிறேன். இதனால் அவனுக்கு இப்பொழுது விடுதலையாயிற்று' என்று எழுதியிருந்தது.

இதனால் அறிவதென்னவெனில் தமது உயிரிலும் ஆசை வைக்காது தேச சேவைக்காக உடல் பொருள் உயிர் மூன்றையும் தாரைவார்க்கும் தேசாபிமானத்தை என்னென்று வர்ணிப்பது?

சிறுவர்கள் பெரியோரிடத்தில் எப்படி நடந்து கொள்ளவேண்டும்; தேச சேவையில் எவ்வாறு ஈடுபடவேண்டும்; உலகில் ஜனசமூகம் எவ்வித நிலையிலிருக்கின்றது; நமது நடவடிக்கைகளை எவ்வாறு திருத்திக்கொண்டால் ஆண் பெண் இருவரும் உன்னத நிலையையடையலாம் என்பவற்றை போதிக்கக்கூடிய சித்திரங்களுடன் கூடிய வசனம் காவியம் கதை முதலிய நீதி மொழிகளைத் தாய்மார் முதுகின் மீதிருக்கும் குழந்தைக்கு இனிய குரலோடு கூடிய பாட்டுக்களால் எப்பொழுதும் போதித்த வண்ணம் இதற்கிடையே தங்கள் காரியங்களையும் செய்து கொள்ளுகிறார்கள்.

ஜப்பான் ஸ்திரீகள் குழந்தையை முதுகில் கட்டிய வண்ணம் கிருக கிருத்தியங்களைச் செய்தும்கடை வீதிகளில் வியாபாரம் செய்தும் ஜனக்கூட்டத்தினிடையே நடமாடிக் கொண்டும் தங்கள் ஜீவனத்திற்குரிய தொழில்களைச் செய்தும் ரயில் முதலிய பிரயாணம் செய்தும் தோட்டங்களில் உலாவியும் வருவார்களானதால் தாய் செய்யும் ஒவ்வொரு காரியங்களையும் சம்பாஷணைகளையும் குழந்தை கண்டும் கேட்டும் பயிற்சி பெற்றுக் கிரமமாக நடக்க வாரம்பித்ததும் தைரியத்துடன் நடமாடத் தொடங்குகிறது. இதனால் சிறு பிராயம் முதல் பயம் கூச்சமென்பதில்லாமல் உலக விவகாரத்

தில் ஈடுபடக்கூடிய சக்தி உண்டாகின்றது. தாய்க்குரங்கினால் வயிற்றிலணைத்துக் கட்டப்பட்ட குட்டிக்குரங்கானது சற்று பெரிதானதும் தாயைப்போல் சுயாலோசனையையும் சுதந்திரத்தையும் கைக்கொண்டு திரிகின்றதோ அவ்வண்ணம் ஜப்பான் பிரஜைகள் இளம் பருவமிருந்து தங்கள் தாயின் மூலமாக அபிவிருத்தியடைந்து வருகின்றார்கள்.

வீட்டிற்கு விருந்தினர்களும் முன்பின் அறியாதவர்களும் வந்தால் ஒரே விதமாகக்கவனிக்கிறார்கள். நடவடிக்கைகளிற் கம்பீரத்தன்மை உயர்ந்த நோக்கம் அன்பு இவைகளைக் கொண்டவர்களாகவும் சிரித்த முகத்துடனும் இருக்கிறார்கள். தங்கள் காலத்தை வீண் பொழுதாகக் கழிக்காது உட்காரும் சமயத்திலும் நிற்கும் சமயத்திலும் தங்கள் ஜீவனத்திற்கு அவசியமான வேலைகளைச்செய்த வண்ணமிருக்கிறார்கள். ஜாப்பானில் சித்திரம் சங்கீதம் அபிநயம் தலைக்குந்தலைப் பற்பல விதமாக அலங்கரித்தல் போலிப்புஷ்பங்கள் செய்தல் இவை முதலியவற்றைக் கற்பதற்கென வேறாகப் பெண்களுக்குக் கலாசாலைகளும் உயர்தரக் கலாசாலைகளும் இருக்கின்றன. உடைகளின் அலங்காரம் முக்கியமாகத் தங்கள் தலைக்குந்தலைப் புதிய விதங்களில் அலங்கரித்துக் கொள்ளுதல் இவையே அப்பெண்களுக்கு ஆபரணங்களாகும். தலைக் குந்தலை அலங்கரித்தல் என்ற தொழில் கொண்டு ஜீவிக்கும் லக்ஷோப லக்ஷம் பெண்களை ஜாப்பானில் காணலாம்.

பட்டுத் தொழிற்சாலைகளிலும் நூல் ஆலைகளிலும் நெசவுச் சாலைகளிலும்ஹோட்டல்களிலும் பெண்கள் ஏராளமாக வேலைகளில் அமர்ந்து தங்கள் ஜீவனத்தை நடத்துகிறார்கள். உயர்தரக்கல்விகற்றபெண்கள் மேல்நாடுகளைப்போல அரசாங்கத்தில் உத்தியோகம் வகிக்கிறார்கள். முக்கியமாக, பொருட்காட்சிச் சாலை, வயித்திய இலாகா, போஸ்டாபீஸ், கல்விச்சாலை இவைகளில் அதிகப்படியாக இருக்கின்றார்கள். தேச முன்னேற்றத் திருநாட்களில் இவர்கள் உற்சாகமுள்ளவர்களாக இருப்பது பார்ப்பவர்களுக்கு அளவற்ற ஆனந்தத்தை விளைவிப்பதாயிருக்கின்றது.

ஜப்பான் ஆடவர் சொந்த சாமர்த்தியத்தால் நடத்தி வரும் ஜூஜூட்ஸ் (தேகாப்பியாச சம்பந்தமானது) மற்றும் தேகாப்பியாசத்திற்கான சர்கஸ் முதலியவைகளைக் கைகொள்ளுதல்போலப் பெண்களுங்கூட அவைகளைக் கற்று பொருளீட்டுவதுடன் தங்கள் சரீரத்தையும் பலப்படுத்திக்கொண்டு நோய் நொடிகளுக்கிடங் கொடாது பிரகாசிக்கிறார்கள். அவர்களின் தேக புஷ்டிதான் ஜப்பானியரின் அபிவிருத்திக்குக் காரணமாயிருக்கிறதுடன் சொந்த அபிவிருத்திக்கும் காரணமாக இருக்கிறது. இதற்கு ஒரு சிறு உதாரணத்தை எடுத்துரைத்தல் அவசியமாயிருக்கிறது. சில வருஷங்களுக்கு முன் அமெரிக வாலிபப் பிரயாணி யொருவன் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருக்கும் ஜப்பான் பெண் ஒருத்தியைப் பின் தொடர்ந்தான். அவனிடமிருந்து தப்பித்துக்கொள்ள வேறு வழியின்றி ஜூஜூட்சு என்னும் தேகாப்பியாசத்தால் அவன் சரீரத்தின் ஓர் அங்கத்தை ஊனப்படுத்தி விட்டு அவள் தன்னைக் காப்பாற்றிக் கொண்டாள். அவ்வாலிபன் அதனாலுண்டான அவஸ்தையாற் கோபங்கொண்டு அவள் மீது நியாயஸ்தலத்தில் வழக்குத் தொடர்ந்தான். விசாரணையில் 'திட சரீரத்துடன் வளர்ந்திருக்கும் உம்மை இந்த நாலரை அடி உயரமுள்ள பெண் எவ்விதம் அங்கஹீனப்படுத்தினாள் என்பது ஆச்சரியமாக விருக்கிறது! எல்லாவற்றிற்கும் என் முன்னிலையில் ஒரு முறை அவ்விதம்நடத்திப்பார்த்தல்சிலாக்கியமன்றோ'

என்று வாதியை நோக்கி நீதிபதி வினவினார். வாதிநீதிபதியைப்பார்த்து 'ஐயோ! சுயகாரியப் புலியாகிய அந்த ராக்ஷஸியை இனி மீண்டும் கண்ணால் காணவும் சகியேன்'என்று பதிலளித்தாளும். அபாய காலத்தில் தன்னைத்தான் காப்பாற்றிக் கொள்ளக்கூடிய சக்தி பெற்ற தீரம்பெற்ற பெண்மணிகள் நமது நாட்டில் என்று அபிவிருத்தி யடைவார்கள்? பெண்களும் ஆண்களும் தங்கள் சரீரத்தைப்பலப்படுத்திக்கொண்டு தேசசேவைக்கு மார்தட்டி முன்னிற்பதற்கு உற்சாகமும் சட்ட திட்டங்களும் இருக்கின்றனவோ ?

ஜப்பானில் முன் பெண்களுக்கு விவாக வயது பதிமூன்று என்று இருந்ததை இப்பொழுது பதினாறு வயதாக அதிகப் படுத்தியிருக்கின்றனர். இச்சட்டத்திற்கு விரோதமாக நடக்க யாரும் இஷ்டப்படுவதில்லை. தனிமையாக விருக்கும் தோட்டங்களில் ஏதேனும் தகாத செய்கைகள் நடை பெறுகின்றனவா என்பதைக் கவனிப்பதற்கு ஒற்றர்களை அரசாங்கத்தார் ஏற்படுத்தி யிருக்கின்றனர்

பெண்பால் என்றால் விவாகமாய்த் தீரவேண்டும் என்ற கட்டாயம் அவர்களில் கிடையாது. பல பெண்கள் கலியாண மின்றி இருக்கிறார்கள். தம்பதிகளின் அபிவிருத்திக்குத் தக்க சௌகரியங்கள் இருந்தால் விவாகம் செய்து கொள்ளுகிறார்கள். இன்னாரையே விவாகிப்பதென்று விரும்பினால் இடையில் எவ்வளவு நாட்களானாலும் இருவரும் காத்திருப்பர். இவ்வெண்ணம் பலிக்காவிடில் மற்றொருவரை விரும்புதல் சரியல்லவெனத் தற்கொலை புரிந்து கொள்ளுவதும் விவாகமே இல்லாது வாழ்நாளைக் கழிப்பதும் வழக்கமாயிருக்கின்றன.

சிறு வயதில் விவாகம் செய்து அகாலத்தில் பலங்குன்றிய மக்களைப்பெற்று நோய் நொடிகளுக்காளாகி வீண் செலவுகளுக்கு இடங்கொடுத்து, தேச சேவைக்கு ஏற்ற பெண் பிள்ளைகளைப்பெறுவிடின் விவாகம் செய்து கொள்ளுவதிற் பயனில்லை என்பதாகக் காலங்கழித்து விடுகின்றார்கள்.

பணக்காரராயினும் ஏழையாயினும் ஒவ்வொரு ஆடவனும் பதினெட்டு வயதானதும் அரசாங்கத்தின் சைனிய இலாகாவில் மூன்று நான்கு வருஷம் பயிற்சி பெற்றுத் தீரவேண்டும் என்ற கட்டாயச் சட்டம் இருக்கின்றது. அதற்குச் சேரும் சமயத்தில் தாம் தந்தையரும் அண்டை அயல் வீட்டு நண்பர்களும் சந்தோஷத்துடன் விருந்துகளளித்து உபசரிப்பதுடன் பெற்றோர் தம்மகனை வீர வாக்கியங்களால் உற்சாகப்படுத்தி ஜயகோஷத்துடன் அனுப்புகின்றனர். இவ்வாறு கட்டாய ராணுவப்பயிற்சிக்குச் செல்லும் வாலிபர்கள் கூட்டங் கூட்டமாகத் தங்கள் தேசக்கொடியைப் பிடித்துக்கொண்டு ஆனந்தத்துடன் தெருக்களில் செல்வார்கள். அவர்களை அண்டை அயல் வீதிக்காரர்களும் வழியில் எதிர்ப்படும் நண்பர்களும் 'உங்களுக்கு ஜயமுண்டாகட்டும்! தேச சேவையில் ஈடுபட்டவர்களாக வாருங்கள்'! என்று ஜயகோஷம் செய்வார்கள். பெற்றோர் தம்மக்களை வளர்த்தல் போற்றக்கூடியதாயிருக்கும்.

பெற்றோர் தம்மக்களை சிறு வயதிலிருந்து மெத்த உற்சாகச் சொற்களுடன் வளர்ப்பர். ஆண் குழந்தையைத் தாய் நோக்கி 'நீ தைரியசாலி. இவ்வீட்டிற்கு நீயே எஜமான். எங்களை ஆளப்பட்டவன். தேச சேவை செய்யக்கூடிய வீரன். வித்தை புத்தி நடவடிக்கைகளில் ஒப்பற்று விளங்கக்கூடிய சூரன் நீ!' என்று இவ்வாறு புகழ்ந்து கூறி அவனிடத்துள்ள துர்க்குணங்களைத் தன் சாமர்த்தியத்தால் போக்கடித்து வளர்க்கிறாள். இத்தகைய ஆண் பெண்களினாலேயே ஜப்பானின் முன்னேற்றமானது அபிவிருத்தியடைந்து வருகின்றது.

சுபம்!

பர்வதகுமாரி.

இரண்டாம் பாகம்.

(ஸ்ரீமான் மகேசகுமார சர்மா.)

(549-ம் பக்கத் தொடர்ச்சி.)

பதினொன்றாம் அத்தியாயம்.

சௌந்தரிய மோஹம்.

இராஜ குமாரன் அந்தப்புரத்திலிருந்து வெளிப்பட்டுக் கச்சேரிக்கூடத்தை நோக்கிச் சென்றான். அவன் முகக்குறிப்பைக் கண்ட எவருக்கும் அவனுடன் எதுவும் பேசச் சாகசம் உண்டாகவில்லை. கச்சேரிக்கூடத்தைச் சேர்ந்தவுடனே அவன் மஞ்சத்திற்போய் உட்கார்ந்து, வேலைக்காரனைப் பார்த்து, "நீ கதவைப் போட்டுக்கொண்டு வெளியில் உட்கார்" என்று சொல்லவும், அவன் அந்த க்ஷணமே அக்கட்டளையை நிறைவேற்றினான்.

மஞ்சத்தில் வெகு நேரம் உட்கார்ந்திருக்க முடியவில்லை. அங்கத்துக்கு அங்கம் தளர்ச்சியுண்டாக, படுக்கையில் படுத்தவுடனே இராஜகுமாரன் நித்திரைக்கு வசமாய் விட்டான்.

ஆனால் அவனுக்கு நல்ல நித்திரை வரவில்லை. உமாசுந்தரியின் சௌந்தரிய மோஹம் அவன் இருதயத்தை எல்லாப் பக்கங்களிலிருந்தும் கவிந்து கொண்டது. அந்த மோஹத்தினால்

அதிக வேதனை உண்டாயிற்றே யன்றி அமைதி உண்டாகவில்லை. ஆகையால் இராஜ குமாரனுக்கு காட நித்திரை வரவில்லை. அவன் நாநாவித சொப்பனங் காணலானான். ஒரு சொப்பனத்தில் அவன் தவசியாய் விட்டதாகவும் ஓர் அழகிய மலைப்பிரதேசத்தில் குடிசை கட்டிக்கொண்டு வாசம் செய்வதாயும் கண்டான். காட்டுக் கனிகளையும் கிழங்குகளையும் தின்று, சலசலவென்றோடும் நதியின் தெள்ளிய நீரைப் பருகி வாழ் நாளைப் பரமாத்மாவின் தியானத்தில் கழித்துக்கொண்டிருக்கிறான். தனக்கு ஒரே துணைவியும் சகதர்மிணியும் ஆகிய பிரதிமை கூடவே இருக்கிறாள். அவளும் தன்னைப் போலவே தவம் செய்து கொண்டு பரமாநந்தமாய்க் காலங்கழித்து வருகிறாள்.

ஒரு நாள் அந்த ஒப்பற்ற ரூபலாவண்யவதியான உமாசுந்தரியே அங்கு வந்து சேர்ந்தாள். அவளுடைய சௌந்தரியத்தைக் கண்டு நவீன தவசி மோகங்கொண்டான். உமாசுந்தரியும் விளக்கில் ஆசை கொண்ட விட்டிலைப் போல் தவசியின் ரூபத்தால் ஆகர்ஷிக்கப்பட்டுக் காதல் பிச்சை வேண்டலாயினாள். ஆனால் தவசிக்குத் திடீரென்று சுயம் பிரஞ்ஞை வந்து விட்டது. அவன் தன் சித்தத்தை அடக்கிக் கொண்டு அவளுடைய விருப்பத்தை நிறைவேற்றாமல் அவளை அகற்றி விட்டான். மானச் செல்வியாகிய உமை இந்த அவமானத்தினால் துக்கமடைந்து அந்த க்ஷணமே நதியில் குதித்து முழுகிப்போய் விட்டாள். தவசி இந்தத் துன்ப நிகழ்ச்சியினால் அதிக வருத்தமுற்று அழத்தொடங்கினான்.

இதற்குள் பூபேந்திர நாதனுக்கு நித்திரா பங்கம் உண்டாய் விட்டது. வாஸ்தவமாகவே அவன் கண்களிலிருந்து நீர் பெருகிக்கொண்டிருந்தது. கெட்ட கனாக் கண்டதினால்தான் அழுதுக்கொண்டிருப்பதாக அவன் எண்ணினான். சொப்பனத்தின் எல்லாச் செய்திகளும் அவன் நெஞ்சத்தில் அப்படி யப்படியே அழுந்தியிருந்தன. சொப்பனம் சோகத்தை உண்டாக்கும் நிகழ்ச்சி கொண்டதாயிருந்தும், ஏனோ தெரியவில்லை, பூபேந்திரனுக்கு அதன் நினைவு சுகந்தருவதாய்க் காணப்பட்டது.

ஆஹா! எவ்வளவு மநோரம்யமான பிரதேசம்! அவ்விடத்து இயற்கைக்காட்சிகள் எவ்வளவு அழகாயிருந்தன! மலை, குடிசை, ஆறு, பிரதிமை, தவவொழுக்கம் முதலிய எல்லாமே பூபேந்திரநாதனுக்கு உண்மைபோல் தோன்றலாயின. உமாசுந்தரிதானும் பொய்ப் பொருளாயில்லையே. அப்படியானால் அவளுடைய சௌந்தரிய மோஹம், அவளுடைய காதல் வேட்கை, அது மறுக்கப்பட்டதன்மேல் அவளுடைய தேகத்தியாகம்—இவையெல்லாம் சத்தியமேயோ?

பூபேந்திர நாதனுக்கு மெய் சிலிர்த்தது. உமாசுந்தரியின் பொருட்டு அவன் உள்ளம் உருகியது. அதே சமயத்தில் இன்னதென்று சொல்ல முடியாத ஒரு பயம் வந்து அவன் மனதைச் சஞ்சலப்படுத்தியது. ஐயோ! இந்த உமாசுந்தரி ஏன் ஜன்மமெடுத்தாள்! அவள் பிறவாதிருந்தால் தன்னுடைய பரிசுத்தமான தபோநிஷ்டை கலங்காமலிருக்குமே யென்று நினைத்தான். இப்பொழுது பூபேந்திர நாதனுடைய சித்தத்தில் இந்த சொப்பனத்தினால் உண்டான ஆழ்ந்த மாறுபாட்டினால், அவனுக்குச் செல்வம் மானம் வைபவம் முதலிய சகலமும் துக்கமாகத் தோற்றியது. இவ்வெல்லாப் பொருள்களுக்கும் மாறாகத் தனக்கு அந்தத் தவ வாழ்வும் பிரதிமையும் மட்டும் கிடைத்து விடுமானால், உன்னபடியே தன் சுகாநந்தம் பூர்ணமாகி விடுமே; ஆனால் இந்த உமாசுந்தரி

அந்த சுகமார்க்கத்தில் முன்போல் தடையாக ஏன் வந்து தோன்றினாள்? என்று எண்ணினான்.

இப்படி எண்ணி எண்ணி பூபேந்திர நாதனுடைய இருதயம் உமாசுந்தரியின் ஒப்பற்ற ரூபலாவண்யத்தில் ஈடுபட்டு அவளுடைய மோஹத்தில் மீண்டும் சிக்கிக்கொள்ளவே, அவன் மறுபடியும் அமைதியற்று வேதனைப் படலானான். சற்று நேரத்திற்கெல்லாம் அவனை மறுபடியும் சொப்பனமயமான நித்திரை வந்து சூழ்ந்து கொண்டது.

பூபேந்திர நாதன் மீண்டும் கனவு கண்டான். இந்தத் தடவை தான் இராஜாவாய் விட்டதாகவும் பிரதிமை இராணியாய்விட்டதாகவும் கண்டான். அரண்மனையில் மகோற்சவம் நடந்து கொண்டிருக்கிறது. நூற்றுக்கணக்கான ஏழை யெளியவர்களுக்கு ஏராளமாய் தான தர்மம் வழங்கப்படுகிறது. அவ்வெளிய துர்ப்பாக்கியருக்குள் ஒருபுறம் உமாசுந்தரியும் நின்றுகொண்டு மருண்ட விழிகளால் இராஜ குமாரனைப் பார்த்துக்கொண்டிருக்கிறாள். பூபேந்திரன் அவளைக்கண்டு நடுக்கமுற்றுத் தடுமாற்றத்துடன் கூறினான்—"உமாசுந்தரி, நீ எப்படி இங்கே வந்தாய்? உனக்கு என்ன வேண்டும்? சொல்லு." அந்தக் கேள்வியைச் செவியுற்ற உமாசுந்தரி முன்போலவே இனிமையாய்ச் சிரித்து, 'எனக்கு என்ன வேண்டுமென்பது உமக்குத் தெரியாதா? எனக்கு வேறொன்றும் வேண்டாம், நீர்தான் வேண்டும்' என்று சொல்ல அதைக் கேட்டு பூபேந்திர நாதனுக்கு முகம் சுண்டிப்போய் விட்டது; அவனுடைய மார்பு படபடவென்று அடித்துக் கொள்ளலாயிற்று. சற்று கழித்து அவன் இவ்வாறு கூறினான்: "என்னையா வேண்டுமென்கிறாய்? இன்னும் நீ என்னை மறந்து போகவில்லையா? நீ ஒரு தடவை என் தவத்தைக் கெடுத்து விட்டாய்; இப்பொழுது மறுபடியும் என் சுகத்துக்குத் தடை செய்ய வந்திருக்கிறாய். இனி என்னைக் கஷ்டப்படுத்தாதே. நான் இந்த செல்வத்தையெல்லாம் உனக்குக் கொடுத்து விடச் சித்தமாயிருக்கிறேன். இதை எடுத்துக் கொண்டு என்னை மறந்து விடு. நான் என்னுடைய பிரதிமையோடு வனத்தில் காய் கிழங்குகளைப் புசித்துக்கொண்டு தவம் செய்யப் போகிறேன். நீ இங்கேயே இருந்து சுகத்தை அநுபவித்துக் கொண்டிரு" இப்படி பூபேந்திரன் பேசி முடிக்கு முன்னமே, உமாசுந்தரி உரக்கச் சிரித்து, "உன் செல்வத்தை யெல்லாம் பிரதிமைக்குக் கொடுத்துவிடு; எனக்குக் கேவலம் நீயே வேண்டும், உன்னை நான் அடையாவிட்டால் செத்தே போவேன்" என்றாள். இப்படிச் சொல்லி அவள் ஒரு திசையில் தன் விரலை உயர்த்திச் சுட்டிக் காட்டினாள். பூபேந்திர நாதன் அந்தப் பக்கத்தை நோக்கிப் பார்க்கையில், அதே மலையருவி மழை நீரால் நிறைந்து சலசல வென்ற வோசையுடன் பாய்ந்து கொண்டிருக்கிறது. பூபேந்திரனுக்கு இன்னது செய்வதென்று தோன்றாமல் நின்றான். அப்பொழுது நித்திரை கலைந்து கண் விழித்துக் கொண்டான்.

பன்னிரண்டாம் அத்தியாயம்

தெய்வச் செயல்.

பூபேந்திரநாதன் விழித்துக் கொண்ட பொழுது சாயங்காலமாய் விட்டது. அவனைக் கண்டு பேச அவனுடைய இஷ்டமித்திரர் சிலர் வந்திருந்தார்கள். ஆனால் அவன் நித்திரை செய்து கொண்டிருப்பதாய் அறிந்து எல்லோரும் அவரவர் வீடுகளுக்குப் போய்விட்டார்கள். பாட்டியம்மையும் மற்ற மாதரும் கன்னிகை விஷயத்தில் இராஜ குமாரன் கருத்து என்னவென்று தெரிந்து கொள்ள முடியாமற்

போயிற்று; ஏனெனில், அவன் அந்தப்புரத்திலிருந்து திடீரென்று எழுந்து வந்துவிட்டான். அவர்கள் அதன் பிறகு இரண்டு மூன்று வேலைக்காரிகளை இராஜகுமாரனிடம் அனுப்பினார்கள். ஆனால் அவர்களும் அவன் தூங்கிக்கொண்டிருந்தபடியால் திரும்பி வந்துவிட்டார்கள். இராஜ குமாரன் திடீரென்று புறப்பட்டுப் போய்விட்டபடியாலும், அகாலத்தில் படுத்துத் தூங்கினபடியாலும் இங்கே ஸ்திரீகளுக்குள் பற்பல வகையான ஆலோசனைகள் உண்டாகத் தலைப்பட்டன.

இராஜ குமாரன் விழித்துக் கொண்டதும் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தான். நித்திரை மயக்கம் அவனை விட்டு இன்னும் நீங்கவில்லை. அதே மலைப்பிரதேசம், அதே அழகிய சிறிய குடிசை, அதே சலசல வோசையுடன் கூடிய அருவி, அதே தவவாழ்க்கை, அதே புதுத் தவவிரதம்பூண்ட பிரதிமை முதலிய எல்லாம் அவனுக்குப் பிரத்தியக்ஷம்போல் தோன்றின. பிரதிமையின் அந்தத் தவக்கோலம் ஆஹா! எவ்வளவு அழகாயும் தூய்மை கொண்டதாயும் பொலிந்தது! பிரதிமையின் இத்தகைய சௌந்தரியத்தை அவன் இதற்கு முன் எப்போதும் பார்த்ததில்லை இனிப் பிரதிமையின் அந்த இராணி வடிவமோ! அதைப் பார்த்தால் ஸாக்ஷாத் இராஜராஜேசுவரியாகிய லக்ஷ்மியே பிரதிமையின் வடிவம் தாங்கி அவனருகே வந்து நிற்பதுபோல் தோன்றுகிறது. பிரதிமையின் இவ்விரண்டு வடிவங்களுக்கும் எதிரில் உமாசுந்தரி மிகவும் எளியவளாயும், மாசுபடிந்தவளாயும், எழிலற்றவளாயும் காணப்படுகிறாள். அவள் பிரதிமைக்குப் பணிப் பெண்ணாயிருக்கவும் தகுதியற்றவள் போல் தென்படுகிறாள். ஆனால் உமாசுந்தரியின் அழகில் அதிசயமான தீவிர மோகன சக்தி காணப்படுகிறது. இதைப்பற்றியும் யோசித்தான். அப்படி யோசிக்கும்போதே அவன் நெஞ்சம் திடுக்கிட்டது. சொப்பனம் பொய்யென்றே நாம் பெரும்பாலும் எண்ணுகிறோம். ஆனால் நாம் சொப்பனம் காணும் போது சொப்பனத்தில் தோன்றும் சகல காட்சிகளும் பிரத்தியக்ஷமாய் நிகழ்வது போலவே இருக்கின்றன. எந்த தேசங்களையும், எந்த இயற்கைக் காட்சிகளையும், எந்த மனுஷ்யர்களையும், எந்த நிகழ்ச்சிகளையும் நாம் ஒரு காலும் கண்டதில்லையோ, எவற்றைக் கண்டதாக நமக்குச் சற்றும் நினைவில்லையோ, அவையனைத்தையுமே நாம் சிற்சில சமயங்களிலே சொப்பன ராஜ்யத்தில் சஞ்சரிக்கும் போது காண்கிறோம். அப்படிப்பட்ட சமயங்களிலே இந்த தேசங்களும் காட்சிகளும் மனுஷ்யர் முதலியவைகளும் நமக்கு வெகு காலமாகப் பரிசயமானவை போலவும், நாம் ஏதோ பூர்வ ஜன்மத்திற்கூட இவற்றைப் பார்த்திருப்பது போலவும் தோன்றுகிறது. சொப்பனத்தில் காணப்பட்ட காட்சிகளிலிருந்து பெரும்பாலருடைய வாழ்க்கையாகிய நீரோட்டம் ஒரு திசையிலிருந்து மாறி இன்னொரு திசையில் பாயத் தொடங்குகிறது. இதிஹாஸத்தில் இப்படிப்பட்டவை ஒன்றல்ல, பல உதாரணங்கள் இருக்கின்றன.

இராஜகுமாரன் விழித்துக் கொண்டு இவ்வாறு யோசிக்கலாயினான் :—"உள்ளபடியே உமாசுந்தரி ஏதோ ஒரு பூர்வ ஜன்மத்திலிருந்து என்னோடு பரிசயங்கொண்டு என்னுடைய தவத்தைக் குலைத்திருக்கவேண்டும். இந்த ஜன்மத்திலும் அவள் என்னைப் பின் தொடர்ந்து வருகிறாள். இது என்ன ஆச்சரியம்! ஒரு ஜன்மத்தில் திருப்தியடையாத காதல் இன்னொரு ஜன்மத்திலும் திருப்தியடையாமற் போகுமா? உமாசுந்தரி காதலை விரும்பினவளாய் ஜன்மாந்தரங்களிலும் என்னை விடாது பின்

தொடர்ந்து வருகிறாள். நானும் அவளை அடிக்கடி ஆசாபங்கப்படுத்தி அகற்றி வருகிறேன்." இந்த விசாரத்தினால் இராஜகுமாரனுடைய நெஞ்சு இன்னும் அதிகமாய் அடித்துக்கொள்ளலாயிற்று. இருந்தாற்போலிருந்து அவனுடைய உள்ளத்தில் என்ன எண்ணம் உண்டாயிற்றோ தெரியவில்லை. அவன் அந்த க்ஷணமே படுக்கையிலிருந்து எழுந்து அந்தப்புரத்தை நோக்கிச் சென்றான்.

அப்பொழுது சந்தியா காலமாய் விட்டது. அந்தப்புரத்து அறைகள் தேஜோமயமான தீபங்களால் பிரகாசித்துக் கொண்டிருந்தன. பாட்டியம்மை தன் அறையில் உட்கார்ந்து ஜபமாலையைத் திருப்பிக்கொண்டிருந்தாள். இராஜகுமாரன் அவள் பக்கம் போகாமல் நேராகத் தன் தாயாரின் படுக்கையறைக்குச் சென்றான். ஆனால் அங்கே உமாசுந்தரியும் விமலையும் இருக்கக்கண்டு அவனுக்கு மிக்க வியப்பு உண்டாயிற்று. உமாசுந்தரி இராஜகுமாரன்-பிரதிமைகளின் சித்திரப்படங்களுக்கருகே ஒரு சாய்வு நாற்காலியில் சுகமாய் உட்கார்ந்திருந்தாள். அவள் பக்கத்தில் விமலை நின்றுகொண்டு அந்தப் படங்களின் விஷயமாய் ஏதோ சொல்லிக்கொண்டிருந்தாள். அப்பொழுது யாரோ வருகிற அரவம் கேட்டு அவள் திரும்பிப்பார்த்தாள். இராஜகுமாரனைப் பார்த்ததும் அவள் திடுக்கிட்டு அந்த க்ஷணமே அறையைவிட்டு வெளியே போய்விட்டாள். உமாசுந்தரியும் நாற்காலியிலிருந்து எழுந்து வேகமாய் ஓடிப்போய்விட முயன்று கொண்டிருக்கையில், இராஜகுமாரன் அவளருகில் வந்து "உமாசுந்தரீ, உட்கார், எங்கே போகிறாய்?" என்றான்.

உமாசுந்தரி நாணத்தால் கூசித் தன் இனிய புன்முறுவல் பூத்த முகத்தைத் தாழ்த்திக்கொண்டே நாற்காலியில் உட்கார்ந்த வண்ணமாய் அவசர அவசரமாய்த் தன் ஆடையைத் திருத்திக்கொள்ளத் தொடங்கினாள்.

இராஜகுமாரன் அந்த விளக்குகளின் ஒளியால் தேஜோமயமாய்த் திகழும் ஏகாந்தமான அறையிலே அந்த ஒப்பற்ற அழகு வாய்ந்த யுவதியின் எதிரில் சித்திரத்தெழுதியதுபோல் நின்றுகொண்டு, "இது என்ன அதிசயமான ரூபலாவண்யம்! இத்தகைய ரூபலாவண்யத்தை முன் எப்போதும் பார்த்ததில்லையே. இந்த ரூபலாவண்யத்தில் எவ்வளவு பயங்கரமான பைத்தியங்கொள்விக்கும் சக்தி காணப்படுகிறது!" என்று கருதினான். அப்பொழுது இராஜகுமாரனுடைய இருதயத்தில் இருந்தாற்போலிருந்து எங்கிருந்தோ ஒரு பெருத்த உணர்ச்சி வெள்ளம் எழுந்தது. அந்த வெள்ளத்தில் அவனுடைய அறிவு, புத்தி, விவேகம் முதலிய அனைத்தும் துரும்புக்குச் சமானமாய் அடித்துக்கொண்டு போகப்பட்டது. அவன் வெறிகொண்டவனாய் விட்டான். தேசம், காலம் ஒன்றையும் கவனியாமல் அவன் நாற்காலியில் உமாசுந்தரியின் பக்கத்திலேயே போய் உட்கார்ந்துகொண்டு, தன் தோள்களால் அவளுடைய மெல்லிய மேனியைத் தழுவிக்கொள்ளத் தலைப்பட்டான்.

இவ்வளவில் ஏதோ ஒரு பொருள் கடகடவென்று பயங்கரமான சத்தஞ்செய்துகொண்டு எதிரிலுள்ள சுவரிலிருந்து திடீரென்று விழுந்தது. இருவரும் அச்சத்தாலும் வியப்பினாலும் திகைப்புற்றுப் பார்க்கையில், இராஜபுத்திரன் பிரதிமை இவர்களுடைய சித்திரப்படங்கள் சுவரிலிருந்து விலகிக் கீழே விழவும், அவற்றின் கண்ணாடிகள் துண்டுதுண்டாக உடைந்து நாலாபக்கத்திலும் சிதறிப்போய், அத்துண்டுகளில் ஒன்று உமாசுந்தரியின் தலையிற்பட்டு இரத்தம் பெருகச்செய்தது. உமாசுந்தரியும் இராஜகுமாரனும் அச்சத்தினாலும் வியப்பினாலும் திகைப்பினாலும் சற்று நேரம் வரையில் அறிவழிந்து பேசசற்றிருந்தார்கள். அந்த சமயத்தில் அந்த சித்திரப்படங்கள் விழுந்த சத்தத்தைக்கேட்டு வேலைக்காரி விமலை அலறி அறைக்குள் ஓடி வந்தாள். அவளைக் கண்டவுடனே இராஜகுமாரன், "விமலா, உமையின மண்டையில் காயம் பட்டிருக்கிறது, அதை விரைவில் கட்டு" என்று சொல்லிவிட்டு, பயத்தினால் மருண்ட கள்ளனைப்போல திடீரென்று அந்தப்புரத்திலிருந்து போய்விட்டான்.

இரண்டாம் பாகம் முற்றுப்பெற்றது.

சாந்தம்.

(ஸ்ரீமதி மைதிலி.)

சாந்தம் என்பது மனிதர்களுக்கு அவசியமான அநேகம் நற் குணங்களில் ஒன்று. ஆனால் இது அநேகரிடத்தில் குறைவாகவும் சிலரிடத்தில் அதிகமாகவும் இருக்கிறது. இதை அநுபவத்திற் காணலாம்.

இவ்வுலகில் ஒவ்வொருவரும் சந்தோஷமாகயிருக்கவே ஆசைப்படுகிறார்கள். எவருக்கும் கஷ்ட துக்கங்களை அநுபவிக்கப் பிரியமிருப்பதில்லை. ஆனால் சந்தோஷமாக இருக்க வேண்டுமானால் சாந்தம் என்னும் ஆபரணத்தை அவசியம் அணிய வேண்டும். சாந்தமென்றால் கோபித்துக் கொள்ளாதிருத்தல் மாத்திரமல்ல. யார் தரித்திரத்தை அநுபவிக்கும் போதும் அஷ்டைச்சுவரியத்திலிருக்கும்போதும் ஒரே விதமான திருப்தியுடன் இருக்கிறார்களோ அவர்கள் மனதுதான் சாந்தத்தை அடையும். துக்கமும் சுகமும் கலந்திருக்கும் இப்பிரபஞ்சத்தில் எப்போதும் ஒரே விதமாக மனத்திருப்தியுடனிருப்பது எவ்வாறு சாத்தியமென்று கேட்கலாம். இவ்விஷயத்தில் பிறருடைய விடையை எதிர் பார்ப்பதைவிட தாமே ஒவ்வொருவரும் யோசித்துப் பார்த்து அறிவது உத்தமமாகும்.

சாந்த மடைவதற்கு நம்மெல்லோரையும் முக்கியமாகத் தடுப்பது ஒன்றிருக்கிறது. அதுதான் கோபம் என்பது. மனிதராகிய நமக்கு மட்டுமல்லாமல் இதர ஜீவப்பிராணிகளுக்கும் இஷ்ட விரோதம் நேரிடும்போது கோபம் உண்டாவது சகஜம். ஆனால் மனிதராகிய நாம் சிறிது ஆலோசனை செய்து இக்கோபம் எக்காரணத்தால் உண்டாயிற்று என்பதை கவனித்தல் அவசியம். சாதாரணமாக யாராவது நம்மைக் கண்டித்துச் சொல்லும்போதும் எதையாவது நம்மிஷ்டப்படிச் செய்யவிடாமல் தடுக்கும்போதும், வேறு ஏதாவது காரணங்களினால் நாம் அவமானமடைந்த போதும் நம்மையறியாமலே கோபாக்கினி என்னும் ஜுவாலையால் சூழப்படுகிறோம்.

இந்தக் கோபத்திற்குப் பெரியவர்கள் சிறியவர்கள் என்னும் பேதமேயில்லை தன்னுடைய ஆளுகையை எல்லோரிடத்திலும் பக்ஷபாதமின்றி ஒரேவிதமாகச் செலுத்தி விடுகிறது. அகங்காரத்தினுடைய மற்றொரு ரூபமே கோபம். இவ்வகங்காரம் சூக்ஷ்ம சரீரத்திலிருந்தால்தான் அச்சரீரத்திற்கு ஸ்துல சரீரத்தின் சம்பந்தம் ஏற்படுகிறது என்று கற்றறிந்த பெரியோர்கள் சொல்லுகிறார்கள். இதனால் இக்கோபமானது நாம் இவ்வுலகில் ஜனிக்கும்போதே அதுவும் நம்முடன் பிறந்திருக்கிறது என்பதை நாம் அறிகிறோம். இது நாம் குழந்தைகளாகயிருந்தபோது சிறியதாகயிருந்துகாலக்கிரமத்திலநாம் பெரியவர்களானபோது அதுவும் பெரியதாகி விடுகிறது. சிறு குழந்தைகள் தங்களுக்குக் கோபம வந்தால் வாய்விட்டு அழுது தம் குறையைத் தீர்த்துக் கொள்ளுகின்றன. அச்சமயத்தில் பிறருடைய இனிய சொற்களாலும் பெரியவர்களுடைய உதவியாலும் குழந்தைகள் சமாதானமடைகின்றன.

பெரியவர்களுடைய கோபமானது பிறரால் சமாதானமடையக் கூடியதாக இல்லை. பெரியவர்கள் கோபாவேசத்தால் தம்மை மறந்து இது செய்யத்தக்கது இது செய்யத்தகாததென நிதானித்தறியக்கூடிய சக்தியை இழந்து தங்களுடைய கோபத்தினால் பிறரை அனாவசியமாக அநேகவிதக் கஷ்டங்களுக்கு பாத்திரர்களாகும்படி செய்வதை நாம் பிரதிதினமும் கண்ணாக் காண்கிறோம். ஆகையால் கொடிய விஷத்திற்குச் சமானமான இக்கோபத்தை அடக்க முயலவேண்டியது மனிதராகிய நம்முடைய கடமையல்லவா?

முதலில் நமக்குக்கோபம்உண்டாகும்போது நமக்கு எதனால் கோபம் உண்டாயிற்று, அதற்கு என்ன காரணம் என்பதைச் சிறிது யோசித்துப் பார்த்தோமேயானால் உடனே அந்தக் கோபம் தணிந்துவிடும். இவ்வாறு யோசிக்கும் குணத்திற்குத்தான் சாந்தம் என்னும் பெயர் வழங்கிவருகிறது. சாதாரணக் கோபத்தின் சக்தி இவ்வாறு யோசிக்கும்போது தணியும். தாங்க முடியாத பெரிய கஷ்டங்கள் வந்தபோதும் நம் மனதைச் சமாதானம் செய்வது இச்சாந்தமே. ஆனால் அச்சமயத்தில் தெய்வ நம்பிக்கையுடன் எல்லாம் ஈசன் செயல என்பதை அறிந்தால்தான் சாந்தம் உண்டாகும். வெளிச்சமிருக்கும் இடத்தில் எவ்வாறு இருட்டு உண்டாகாதோ அவ்வாறே சாந்தத்தினிடையே கோபம் வசிக்க இயலாது.

இவ்வாறாக முதலில் மிகக் கஷ்டத்துடன் பழகிவரக் காலக்கிரமத்தில் அதுவே குடிகொண்டுவிடும். இதனால் முதலில் மிகக் கெட்ட சுபாவமுள்ளவர்களும் நாளடைவில் சாந்த சொரூபிகளாகிவிடலாம்.

சாந்தசொரூபிகளான பெரியோர்களிடத்தில் சிறு குழந்தைகள் முதல் வயோதிகர்கள்வரை எல்லோரும் சந்தோஷமாய் சம்பாஷிப்பதை நாம் பார்க்கலாம். இச்சாந்தத்திற்குள்ள கவர்ச்சி என்னும் ஆகர்ஷண சக்தி வேறு எந்த வஸ்துவுக்கும் இல்லை என்பது தெளிவாகப் புலப்படுகிறது.

இதனால்தான் "சாந்தம் சாகரத்தினும் பெரிது" என்று பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள். அதனால்தான் அவ்வளவு பெரிய வஸ்துவை நம்மால் சீக்கிரத்தில் அடைய முடிவதில்லை. கஷ்டப்பட்டால் சுகமுண்டாகும் என்னும் பழமொழியின்படி முதலில் அதிக சிரமத்துடன் பழகிவந்தால் கடைசியில் சந்தோஷமே நிறைந்திருக்கும் சாந்தத்தை அடையலாம்,

ஆகையால் நாம் ஒவ்வொருவரும் அவ்வுன்னத பதவியை அடைவதற்கு முதலில் உண்டாகும் சிறிது கஷ்டங்களை பொருட்படுத்தாமல் சாதகம் செய்து வந்தோமேயானால் காலக்கிரமத்தில் அவ்வுன்னத பதவியை கட்டாயம் அடைவோம்.

" Peace-Maker " என்னும் பட்டப் பெயர் நமது ஏழாவது எட்வர்டு சக்கரவர்த்திக்குக் கிடைத்திருந்தது வாசகர்களில அநேகருக்குத் தெரிந்திருக்கும். " Peace-Maker " என்றால் 'சாந்தத்தை உண்டு பண்ணுபவர்' என்று பொருள். யார் சாந்தமே உருவாக்கப்பட்டவர்களாகயிருக்கிறார்களோ அவர்களால்தான் பிறரையும் சாந்தமடையும்படி செய்வதுசாத்தியம். நமது ஏழாவது எட்வர்டு சக்கரவர்த்தியின் ஆட்சி மிகவும் குறுகிய காலமேயானாலும் அச்சமயம் அநேகமாக எல்லாத் தேசங்களும் சமாதானமாகவே யிருந்தன வென்பதை யாவரும் அறிவார்கள்.

இப்பொழுது ஜீவ திசையில் இருக்கும் நமது இந்தியா தேசத்து கவீந்திரரான ரவீந்திர நாத்டாகூர்என்னும் பங்காளி கனவான் வடக்கே போல்பூர் என்னுமிடத்தில் நமது சிறுவர்களுககாக "சாந்தி நிகேதன்" என்னும் பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தியிருக்கிறார். அதனுடைய கருத்து என்ன வென்றால் அவ்விடத்திற் படிக்கும் மாணாக்கர்கள் சாந்தமாகயிருத்தலை முதற்கடமையாகக் கொள்ள வேண்டுமென்பது தான்,

இன்னும் நமது தென்தேசத்தில் வெகு காலத்திற்கு முன்தோன்றி மறைந்தும நாளது வரை புகழுடம்புடன் பிரகாசித்துக் கொண்டிருக்கும் தியாகய்யர் என்னும் பிரபல சங்கீத வித்வான் 'சாந்த முலேக சௌக்கியமு லேது" என்று பாடியிருக்கிறார். அதாவது, சாந்தமில்லாதவர்களுக்கு வேறு எதனாலும் சௌக்கிய மேற்படாது என்று சொல்லியிருக்கிறார்.

இதே மாதிரியாக இன்னும் அநேக உதாரணங்கள் இருக்கின்றன. அவைகளை எல்லாம் சொல்லவேண்டுமானால் சாந்தம் என்னும் வியாசம் எழுதாமல் சாந்தம் என்னும் புஸ்தகத்தையே எழுதினாலும் அதனுடைய மகிமையை முழுவதும் சொல்வதற்குச் சாத்தியப்படாது.

அறிவுள்ளவர்கள் யாவரும் சாந்தத்தை விரும்புவார்கள். ஆகையால் நாம் ஒவ்வொருவரும் இதை அடையப் பிரயத்தனப்படவேண்டும். இதற்குத் தடங்கலாக முளைத்திருக்கும் கோபத்தை அடக்கப் பிரயத்தனப்படவேண்டியது நம்முடைய முதற் கடமையாகும். அதிலும் முன்கோபம் என்னும் கொடியவிஷம் நம் ரத்தத்தில் கலந்திருக்கும்வரை நாம் சாந்த சாகரத்தில் ஸ்நானம் செய்யமுடியாது.

இச்சாந்தத்தை விரும்புகிறவர்களுக்குக் கோபத்தை அடக்கும் சக்தியை எங்கும் நிறைந்திருக்கும் சாமானிய ஜனங்களுக்குப் புலப்படாமலிருக்கும் ஸர்வாந்தர்யாமியாகிய ஈசுவரன் கொடுத்துக் காப்பாற்றவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

சுபம்!

கோபாலன்.

சிறுகதை.

(ஸ்ரீமான் அ. பா. சுப்பிரமணியன்.)

மாதர் மாணிக்கம் கோபாலன் மாதாவே! அவள் கணவனும் நற்குணவானே! அவன் செல்வத்தைப் பொருளென மதிக்காத மாணி; பரிசுத்தமாக இருந்துகொண்டு, வேதத்தைக் கசடறக் கற்று, தான் கற்றறிந்த அழகிய பொருள்களையும் செவிக்கினிய சிறந்த சுருதியின்கண் பொதிந்து விளங்கும் இரகசிய சாதனங்களையும் பிறர்க்குப் போதித்தலே தனது வாணாட்கட்கேற்ற வேலையெனக் கொண்ட உத்தமன். கிராமத்தார் அவனைச் சிறந்த படிப்பாளியாகக்கண்டு அவனுக்கோர் விளைநில மீந்தனர். இதில் அவனுக்கும் அவன் குடும்பத்திற்கும் போதுமான உணவுப்பொருள்கள் கிடைக்கும். பழமுங் காயுங் குலைகுலையாகத் தொங்கும் மாங்களடர்ந்த சிறு தோட்டம் ஒன்று அவன் அகத்தருகே இருந்தது. இவை அவனுக்குப் போதுமானவைகளே.

மரண காலங்கிட்டியதே அவன் தன் மனையாளை அருகழைத்து, "என் உயிர்க்காதலியே! உன்னையுங் கோபாலனையும் பற்றி எனக்கொரு விசனமுமில்லை. அறப்பெருங்கடல் அருளீந்து காப்பான் அத்துடன் அன்று விளைநிலம் உணவியும்" என, அது கேட்ட மனைவியும், "அது ரொம்பவும் சரியே! எனதன்பார்ந்த காதலனே! எங்களைப்பற்றி யாதொரு விசாரமுங் கொள்ள வேண்டாம். நாங்கள் க்ஷேமமாய் இருப்போம்" என்றுரைத்துத் தன்னாற் கூடுமட்டுந் தன் மணாளனைச் சமாதானப்படுத்தினாள். அஃதால் அவன்றன் முழு எண்ணத்தையும் இறைவனிடம் செலுத்திச் சமாதானத்

துடனிறப்பான் என்பதே அவள் கோரிக்கை. காதலன் காலவசத்தால் கண் மூடி எழாப் பெருந்துயிலிலாழ்ந்து போகவே, அவனது,

"உயிரினை இழந்த உடலதுதன்னைக்
களவுகொண்ட கள்வனைப்போலக்
காலும் ஆர்த்துக்கையும் ஆர்த்துக்
கூறைகளைந்துக் கோவணம்கொளுவி
ஈமத்தீயை எரியெழமூட்டிப்
பொடிபடச்சுட்டுப் புனலிடைமூழ்கிப்
போய்த்தமரோடும் புந்திநைந்து........"

அழுதாரவர் பேதைச்சுற்றத்தார். அந்தோ! பாவம்!! மீந்த சாம்பலும் ஆற்றிற் கரைந்தது. தையல் துக்கம் அளவு கடந்தது. ஆயினுமொருவாறு மனந்தேறினள். தனதிறப்பை எதிர் பார்த்தனள்—இறப்பை மாத்திரமோ? இறந்தபின் கணவனைச் சேர்வதையுந்தான். தானவனை அடைவதை உறுதிப்படுத்த ஆவல்கொண்டு, கடவுளை மனங்கரைந்து கண்கள் தொடுமணற் கேணியிற்சுரந்து நீர்பாய மெய்ம்மயிர் பொடிப்ப விதிர் விதிர்ப்பெய்தி அளவு கடந்த அன்புடன் அடிக்கடி துதித்தாள்.

நாட்களோடின! கோபாலன் ஐந்து வயது குழந்தையாயினன்! அவனம்மை அவனைப் பள்ளிக்கனுப்ப வேண்டுமென் றுணர்ந்தாள். ஒரு சுபதினமுங் குறிக்கப்பட்டது. மகனை மனப்பூரணமாய் ஆசிர்வதித்துக் கதவருகே நின்று கொண்டே அவன் போவதைப்பார்த்துக்கொண்டிருந்தாள். அவன் போன வழி காட்டு வழி. அவன் கண்ணுக்கெட்டுந் தூரத்திற் கப்பாற் சென்றதே—பாவம்! பிரிவு ஆற்றாமையினால் பதைபதைத்து நின்றனள்.

கோபாலன் நெடுவழி சென்றான். அப்பாதை அவனுக்கு ரொம்பவும் நீளமானதாய்த் தோன்றிற்று. தான் வழிதப்பிவிட்டதாகவுங் கருதினான் ஆனால் கடைசியில் கிராமம் கண்ணிற் கெட்டியது. பல பையன்கள் பள்ளிக்குப் போவதைப்பார்த்தான். உடனே யாவற்றையும் மறந்தவனாய் அவர்களுடன் கூடிப்பள்ளிக்குச் சென்றான்.

அஃதோர் சந்தோஷகரமான நாளே! பாடங்கள் முடிவு பெற்றன. எனினும் அவனுண்டுற்ற நேயர்களுடன் விளையாடிக்கொண்டிருந்தான். கடைசியில் யாவும் முடிந்தன—கோபாலனும் வீட்டிற்குப் புறப்பட்டான். மீண்டும் நெடுந்தூரம் செல்ல வேண்டியிருந்தது. பாதையில் இருள்மூண்டது. பாவம்! சிறுபாலன் செய்கையறியாது தவித்தான். வரவர இருளுமதிகரிக்கக் காட்டு மிருகங்கள் பேரிடி போற் சப்தித்தன. பயத்தால் அவனுடல் கிடு கிடு என்றாடிற்று. இன்னது செய்வதன்றறியாது பதைத்து நின்றான். அவன் கால்களோ ஒரே ஓட்டமாய் ஓட ஆரம்பித்தன.

அவன் பயத்தால் ஒன்றையுங் கவனித்தானில்லை. ஈற்றில் தான் தனதன்னையருகே பெரு மூச்சுடன் நிற்பதொன்றையே அவனுணர்ந்தான்.

மறுநாட் காலை அவன் பள்ளிக்குச் செல்ல விரும்பினானில்லை.

அன்னையார் :—"ஆனால் நேற்றைய தினம் ஒரு சந்தோஷகரமான தினமாகத் தோன்றவில்லையா? என் செல்வக் குழந்தையே! எவ்வளவோ அழகிய பொருள்களை நீ நேற்றுக் கற்கவில்லையா ? என் பெருஞ் செல்வமே!! நீ உன பாடங்களைக் காதலிப்பதாய் விளம்பினாயே!—ஏனின்று போக மறுக்கின்றனை ?"

கோபாலன்:—அம்மா! பள்ளி, பாடம் எல்லாம் சரிதான். ஆனால் எனக்குத் தனியே காட்டு மார்க்கத்தில் செல்ல பெரும் பயமாயிருக்கிறதே.........

அந்தோ! அன்னை மனம் ஆயிரஞ் சக்கலாயிற்று. வெட்கம் வலித்தது—துக்கம் தூண்டியது, பாலனைப் பள்ளிக்கனுப்ப வேண்டுமென்ற

போவல் பிடர் பிடித்துந்தியது—ஆனால் ஊழ் வலி ஒத்து நின்றது. அந்தோ! என் செய்வது? அவளோ பரம ஏழை, மகனுடன் மற்றொரு பையனைப் பள்ளிக்குக் கூட்டியனுப்ப அவளால் கூடுமோ? ஒரு க்ஷணநேர முறைப்பது அறியாது நின்றாள். மனம் பின்பு ஒரு வழிப்பட்டது. மாதவன் மனத்தின்கண் தோன்றினான். அவள் மாதவனை "பால கிருஷ்ண"னாகத் துதிப்பவள். ஆதலின் அவள் தன் மகனுக்குக் "கோபாலன்" எனப் பெயரிட்டாள்......ஒரு கதையை மகனிடங்கூற ஆரம்பித்தாள். அதை அவன் நம்ப வேண்டுமென்றே அவள் கோறியிருந்தனள்.

அன்னையார்:—"என்னருமைக் கண்மணியே! அதோ......அடுத்த காட்டில் உன் அண்ணன் வசிக்கிறான். அவன் பெயரும் 'கோபாலன்' என்பதே! அவன் எப்பொழுதும் பசுக்களை மேய்த்துக் கொண்டிருப்பான். பள்ளிக்குப் போகும் பாதை யருகே சதா இருப்பது வழக்கம். ஆதலின் நீ பள்ளிக்குச் செல்லும்போது, "ஓ என தருமை அண்ணனே!! என்னுடன் வரமாட்டாயா?' என்று கூவினால் அவன் உன்முன் தோன்றுவன்—உன்னைச் சர்வ சாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்வான். நீ பிறகெதற்கும் பயப்பட வேண்டியதே இல்லை...ஏன்?......நீ இனிப் பள்ளிக்குச் செல்ல மனங் கொள்வாயா?" என்றுவலுடன் கேட்டாள்.

"நீ சொல்வதுண்மைதானா? ஆங்கிருக்கும் அண்ணனெனக் குதவுவானா?" என்று கூர்மையான நோக்கத்துடன் கூறினன் கோபாலன். அதற்கன்னை "ஆம்! ஆம்!! இது முழுதும் உண்மையே. என் மாசறு பொன்னே! போய் வருகிறாயா?" என, கோபாலன் "ஆஹா! நானங்ஙனமாயின் பள்ளிக்குச் செல்ல விரும்புகின்றேன். சரி! இதோ போய் வருகிறேன். ரொம்ப வந்தனம்" என்று சொல்லி விடை பெற்று வீட்டினின்று வெளிப்பட்டான்.

தைரிய வீரனாப் சிறிது தூரம் சென்றான். அப்பால் புதர்களிடையேயிருள் தென்பட்டது. சல சல வென்னுஞ் சத்தமுங்கேட்டது. கோபாலனது இருதயம் படபடவென்றடிக்கத்தொடங்கியது. உடனே "ஓ என்னருமை அண்ணனே! வந்தென்னுடன் விளையாடாயோ?" என்று கூவினான்......ஒரு புறப் புதர்களசைந்தன. பிறகு ஒதுங்கின உடனே ஓர் பையனுடைய சிரசு தென்பட்டது. சிரசில் சிறு தங்கக் கிரீடமிருந்தது அதில் மயிலிறகொன்றிருந்தது. அடுத்த நிமிடம் ஒரு பெரிய பையன் அங்கிருந்து எட்டிக் குதித்தான்.

கோபாலனைக் குளிர நோக்கி—அவன் கைகளைத் தன் கைகளுடன் கோர்த்துக்கொண்டு தழுவி முத்த மீந்தான். "என்னருமைத் தம்பியே!" என்றழைத்தான். கோபாலனுடைய கண்களில் பிரகாசம் தோன்றிற்று. அவனுடலோருணர்வெய்தினன். தான் ஏதோ சுவர்க்கத்தில் இருப்பதாக நினைத்தான். அவனுக்களவற்ற மகிழ்ச்சி அவ்வமயம் உண்டாயது. பிறகு இருவரும் விளையாடிக் கொண்டே சென்றார்கள். கிராமமும் நெருங்கிற்று.

உடனே அண்ணன் தம்பியை நோக்கி, 'தம்பி! நீ திரும்பி வரும் பொழுது என்னைக் கூப்பிடு; நான் வருகின்றேன்! அச்சம் சிறிதுங் கொள்ளாதே' என்று சொல்லி இறுக அணைத்து முத்தமீந்து பிடியினின்று விடுவித்தனன். கோபாலனும் அண்ணனைப் பார்த்துக் கொண்டே சென்றான். அண்ணனுந் தம்பியின் பிரிவாற்றாமையினால் வருந்துபவன்போல் தம்பியைக் கண்ணிற்கெட்டுந் தூரம்வரையில் பார்த்துக் கொண்டிருந்தான். மாலையிலும் இச்செய்தி நிகழ்ந்தது.

வீடடைந்ததே கோபாலன் நடந்தவற்றை ஆதியோடந்தமாய்த் தெரிவித்தான். அன்னை மகிழ்ச்சி அளவில் அடங்காததாயிற்று. மனமுருக, நாக்குழற பாலகிருஷ்ணனை வாழ்த்தினள்...ஏன்?...கோபாலனைக் காட்டிற் சந்தித்தோன் யார்? அவனண்ணனோ? — இல்லை! சகமேழளித்துண்டவனே!

காலமும் ஓடிற்று. ஒரு நாள் பள்ளி ஆசான் தான் ஒரு விருந்து நடத்தப் போவதாய்த் தெரிவித்தான். அன்று மாலை கோபாலன் வீடடைந்ததே "அன்னாய்! எங்கள் கனம் பொருந்திய குருவின் விருந்து நாளைக்காகும். நானவருக்கென்ன கொண்டு போவேன்?" என்று வினாவினான். இச்சொற்களவளுக்குக் கூரிய வாட்களாயின. ஒரு க்ஷண நேரம் மனம் நொந்தாள், தன் வறுமையை நினைந்து நினைந்து மனம் புண்பட்டாள். உடனே பாலகிருஷ்ணனை மனதில் தோற்றுவித்து, "அந்தோ! குழந்தாய் நான் யாது கொடுக்கவல்லேன்? காட்டில் வசிக்கும் உன்னண்ணனை ஏதாவது கொடுக்கும்படி கேள்" என்று கோபாலனை நோக்கிக் கூறினாள்.

அடுத்த நாட் காலை கோபாலன் தன் அண்ணனைச் சந்தித்தபொழுது, 'எனது அருமை அண்ணா—நான் மறந்தே விட்டேன். இன்று எங்கள் குரு விருந்து......நானவருக்கேதாகிலும் கொடுத்துதவ வேண்டாமா?—ஏன்?—நான் சொல்வது சரிதானே!......(கெஞ்சுங் குரலில்) நீ எனக் கேதாகிலுங் கொடுக்கின்றையா?......உம்!......கொடுக்கின்றையா?' என அண்ணன் 'கோபாலா! நீஎன்ன இப்படிக்கெஞ்சுகிறாய்? அந்தோ! நான் யாது கொடுக்கவல்லேன். —நான் என்ன ஒரு ஏழை இடையன்தானே? ஓ! ஆனால்—ஆனால்!—இதோ!......" என்று சொல்லிக்கொண்டே ஒருபுறம ஓடிச்சென்று சிறிது நேரங்கழித்துத் திரும்பி வந்தான். அவன் கைதனில் தயிர் நிறைந்த சிறு கலயங் காணப்பட்டது. பின்பவன், "எனதிளைய சகோதரனே! இவ்வளவுதான் என்னால் கொடுக்கக்கூடியது. இது ஒரு ஏழைப்பரிசே! ஆனால் இதைக் காட்டாயம் உன்னாசானிடங் கொடு—மறந்துவிடாதே!" என்றான்.

அதை கோபாலன் உயர்ந்ததொரு பரிசென்றெண்ணினான். ஏனெனில் அது அவன் அண்ணன் கொடுத்ததல்லவா? ஆதலினவன் பேராவலுடன் ஆசான் வீடடைந்து தன்கைப்பாத்திரத்துடனங்குற்ற கூட்டத்தினருள் ஒருவனாயினன். ஒவ்வொரு மாணவனும் தான்கொணர்ந்தவைகளை ஆசிரியருக்குக்கொடுத்துக் கொண்டிருந்தான். ஆனால்! பாவம்!! தந்தையற்ற கோபாலனை கவனிப்பார் யார்? ஒருவருமிலர்—இவனது ஏழைப்பரிசைப் பரிந்து நோக்குபவர் பாரில் உளரோ? இன்றின்று—அவனிதயம் துக்கத்தாற்றுண்டிக்கப்பட்டது—பாவம்! கண்ணீர் வடித்தான். என் செய்வது?

தெய்வகதியா யவ்வழிசென்ற ஆசான் கோபாலனைப் பார்க்க நேர்ந்தது. உடனே அவரவன் கையிலிருந்த கலயத்தை வாங்கிக்கொண்டு அதைக் காலியாக்கச்சென்றார். ஆனால்...என்ன இது?......அது காலியாகவில்லையே! ஆசானதனுள்ளிருந்த தயிரை ஒரு பெரிய பாத்திரத்தில் ஊற்றினார். அப்பெரிய பாத்திரமும் நிறைந்தது. ஆனாலச்சிறு கலயமோ காலியானபாடில்லை! திரும்பவுமதிலுள்ள தயிரை வேறொரு பெரிய பாத்திரத்தில் ஊற்றினார். அது நிறைந்ததேயொழிய அச்சிறு பாத்திரங்காலியாகவில்லை. அது நிறைந்தே இருந்தது. ஒவ்வொருவனும் ஆச்சரியத்துடன் நின்றான். கோபாலனும் அவ்வாறே! இப்பொழுதுதானவன் தன்னண்ணனைப்பற்றி ஐயங்கொண்டான். அவனதுவரையில் உண்மை அவ்வாறிருக்குமென்று கனவிலுங் கருதவில்லை.

ஆசானும், "நீ இதை எங்கு சம்பாதித்தாய்?" என்றாசாவ மாணவன். "காட்டருகாமை வசிக்கும் என் அண்ணனிடமிருந்து..........என்றதும் ஆசானிடை மறித்து, "அவன் யார்?" என்றாவலுடன் கேட்டார்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது!......... நான் பள்ளிக்கு வரும்போதும்—வீட்டிற்குத் திரும்பிப் போகும்போதும் அவன் என்னிடம் வந்து விளையாடுகிறான். அவன் ஒரு சிறு கிரீடத்தை அணிந்துள்ளான். கிரீடத்தில் ஒரு மயிலிறகுண்டு. அவன் கையிலூதுங்குழல்கொண்டுள்ளான். அவனைக்காணில் எனக்களவற்ற மகிழ்ச்சியுங் குதூகலமும் என்னையறியாமலுண்டாகிறது......இரவெல்லாம் எப்பொழுது பொழுதுவிடியும் என்றேங்குகிறேன்-அடாடா! இந்தப் பள்ளிமட்டும் இல்லாதிருந்தால்...நானவனுடனே சதா இருப்பேனே! ஆனால், கொடுத்து வைக்கவில்லை....என்செய்வது? பச்சைமாமலை போன் மேனிப் பவளவாய் கமலச் செங்கண் படைத்த........" என்று சொல்லிக்கொண்டே போனான். ஒருவரும் இடைமறிக்கவில்லை.

ஆனால் ஆத்திரம்மிகுந்த ஆசான், "அப்படியாயின் எனக்கவனைக் காட்டுகின்றையா?" என்று உசாவ, பாலன், "ஆஹா!...நீர் மட்டும் என்னுடன காட்டுப்பாதைக்கு வந்தால்..." என்றான். பின்பிருவரும் அப்பாதையை அடைந்தனர்.

ஆங்கு கோபாலன், "ஓ! எனதருமை அண்ணனே! இங்கு வரமாட்டாயோ?" என்று கூவினான்.—ஆனால் ஒரு பூசரும் அங்கு வரவில்லை. கலவரத்துடன் கோபாலன் ஆசான் முகத்தை நோக்க—அவர் முகத்தில் அவநம்பிக்கைக்குறி தோன்றக்கண்டான்.—உடனே மிரண்டு, "ஓ! என்னுயிருக்குச் சமதையான எனதண்ணனே! நீ இங்கு வராவிடில் நான் பொய்ப்புகலுவதாயிவர்கள் நினைப்பார்களே!" என்றலறினான்.

உடனே கீழ்க்கண்ட அசரீரி கேட்கப்பட்டது:—

"குழந்தாய்! நான் முகத்தைக்காட்டேன். உன்னாசான் என் முகம் பார்க்க எவ்வளவோ தவம் செய்யவேண்டும். உன்னைபோன்ற சில புண்ணிய பக்குவிகளே ஆசீர்வதிக்கப்படுகின்றனர்."

நான் கொண்ட பெருமை.

(ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாள்.)

துயின்றெழுந்து காலை காப்பி அருந்தியாய் விட்டது. இனிதான் மற்ற வீட்டுக் காரியங்களை கவனிக்கவேண்டும். இப்பட்டணத்துக் குழாய்த் தண்ணீரில் ஸ்னானம் செய்வது என் உடம்பிற்குச் சிறிதும் ஒத்துக் கொள்ளுவதில்லையாதலால், இவ்வெய்யற் காலத்தையும் கவனியாது வெந்நீர் வைத்து ஸ்னானம் செய்தான பின் உலை நீர் வைத்து அரிசி களைந்து போடவும், வாயிலிற் பிச்சைக்காரனொருவன் கொட்டாங்கச்சி பிடிலொன்றை வைத்துப் பாடிக்கொண்டு வந்ததைக் கேட்டு அவனுக்குப் பிச்சையிட்டு வருவதற்காகக் கையில் அரிசியுடன் வாயிற்புறம் சென்றேன். அவன் தேசிங்குராஜன் கதையை (அக்கதை இக்காலில் வெளிப்படும் புது நாவல்களைக் கண்டு எங்கு ஓடி ஒளிந்ததோ!) பாட்டாகப் பாடிக்கொண்டிருந்தான். அதில் தேசிங்கு ராஜன் சண்டைக்குச் செல்வதும் அப்பொழுது அப்துல்கானென்னும் தன் மகம்மதிய நண்பனை உதவிக்கு அழைக்க அவனும் "உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு" என்ற பழமொழிக்கேற்ப தான மணப் பந்தலில் மனைவியுடன் வீற்றிருக்கும் தருவாயிலிருந்தும் உடனே யாவற்றையும் விட்டுத் தாய் அலற, புதிதாய் மணந்த மனைவி ஒரு புறம் கண்ணீர் விட்டுக் கதற, மந்திரி முதலானோர் விவாகத்திற் கிடையே போவது உசிதமல்லவென மறுத்துக் கூற, யாவற்றையும் அசட்டை செய்து உதவியை வேண்டி நிற்கும் நண்பனைக் காக்க வேண்டுவதொன்றே மிக்க அவசியமெனக் கருதி விரைந்து குதிரை யேறிச் சென்றானென்று பாடிக் கொண்டே வரும் பொழுது நான் அரிசி கொணர்ந்திருப்பதைக் கண்டு பாட்டை நிறுத்தி அதை வாங்கிக் கொண்டான்.

சிநேகிதத்திற்காக இவ்வளவும் செய்த அவ்வப்துல்கான் என்ன வானானென்பதை அறிய ஆவலுற்ற நான் 'அப்பா! அவன் சண்டையில் ஜயித்தானா? பாடு, கேட்போம்' என்றேன். உடனே அத்துருக்கக் கிழப்பிச்சைக்காரனும் தங்கள் ஜாதியான் ஒருவனை உயர்வாகக் கூறியிருக்கும் பெருமையாலோ அல்லது நான் ஆவலாய்க் கேட்டதைக் கண்டு பிச்சை இன்னும் அதிகமாகப் போடுவேனென எண்ணியோ உடனே பாட்டை விமரிசையாகத் தொடங்கி, என்றும் அவனைக் கண்டதுமே புறப்படத் தயாராயிருக்கும் அவன் குதிரை அன்று புறப்பட மனமில்லாமல் 'புராண்டு புராண்டு' அழுததென்றும், வழியிலுண்டான அநேக அபசகுனங்களையும் கவனியாது தன் நண்பனே நினைவாய் அவனை யணுக, பாசறையில் வீற்றிருந்த தேசிங்குராஜனும் மணக்கோலத்துடன் வந்துள்ள இவனைக் கண்டு திடுக்கிட்டு சங்கதியறிந்து அவனன்பிற்காக மிகவும் வியந்து தான் முன்பு ஒருகால் அவனுயிரைக் காக்க நேர்ந்ததற்காக அவன் செய்யும் பிரதியுபகாரத்தைக் கண்டு ஆச்சரியமுற்று அவனைத் தழுவிக்கொண்டான் என்றும், அப்பால் அவனைக் கேட்டு யாவையும் அறிந்து உடனே சென்று கலியாணத்தை முடித்து மனைவியிடமும் விடை பெற்று வரும்படி எவ்வளவோ மன்றாடி வேண்டியும், அவன் கேளாததால் இருவருமாகப் போர்க்களத்தை நோக்கிச் சென்றார்களென்றும், அச்சண்டையில் தேசிங்குராஜன் தோல்வியுற்று இறக்க அப்துல்கானும் குற்றுயிராய் வீடு கொணர்ந்து போடப்பட்டானென்றும் கல்லும் கரையுமாறு பாடினான்.

இதற்கு முன் தேசிங்குராஜன் கதையைக் கேட்டறியாத நமக்கு அவன் பாடியது அக்கதையில் வருவதுதானா வென்பது தெரியாவிடினும், கொச்சைத் தமிழில் அச்சண்டையையும் தேசிங்கு ராஜனின் சாவையும் மற்றும் அப்துல்கான் குற்றுயிராய் வீடு கொணர்ந்து போடப்பட்ட பொழுது அவனது தாய், மனைவி முதலானோர் அலறினதையும் அவன் பாடும்பொழுது நம்மையறியாமலே கண்ணீர் ஆறாய்ப் பெருகி விடும்போலிருந்தது. இவ்விதம் நான் மெய்மறந்து பாட்டைக் கேட்டுக் கொண்டிருக்கும்பொழுது என் இரண்டு வயது குழந்தை வெளி வந்து அவனைக் கண்டு பயந்து அலறிய வண்ணம் என் கால்களைக் கட்டிக் கொண்ட பின்புதான் எனக்குத் தன் நினைவு வந்து அடுப்பில் சாதம் கொதிக்குமே என்ற எண்ணம் பிறந்தது. உடனே அழுகிற குழந்தையை சமாதானம் செய்ய அதை இடுப்பிலெடுத்துக்கொண்டு அப்பிச்சைக்காரனுக்கும் அரையணா காசுகொடுத்துப் போகச்செய்தேன். அவன் சலாம் செய்து அதைப் பெற்றுக் கொண்டு போனபின் உட்சென்று அடுப்பிற் கொதிக்கும் சாதத்தைப்பார்க்க அது அவிந்து தானிருந்தது. எக்காரியத்தையும் செவ்வையாகச் செய்வதாய் பெருமை கூறிக்கொள்ளும் நான் சாதம் அவிந்து போனது என் கணவருக்கு மிகுந்த கோபத்தை யுண்டு பண்ணுமெனபதை யறிந்தவளாயினும் அதற்காகச்

சிறிதும் கவலையாவது வருத்தமாவது கொண்டேனில்லை. ஏன்? அவ்விதம் நேர்ந்தது நான் அப்பாட்டைக் கேட்டு மெய்மறந்திருந்ததனாலல்லவா? ஓர் பிச்சைக்காரன் பாடியதிலிருந்து அதன் விசேஷத்தையும் உருக்கத்தையும் கண்டு பிடிப்பதென்றால் அவ்வுணர்வின் பெருமை எவ்வாறானதாயிருக்கும்! அன்றியும் பக்கத்து வீடுகளில் ஒரு நிமிஷமும் தாமதிக்காமல் அவன் சென்றது நானொருவளே அதை அறிந்தேனென்பதை உறுதிப்படுத்திற்றன்றோ.

முதலில் பிச்சைக்காரனின் பாட்டைக் கேட்க மனம்பொருந்துவதே அற்பமல்ல. அதிலிருக்கும் ரசத்தை நுட்பமாய் உணர்ந்து களிக்கவோ கேவலம் படிப்புமட்டு மன்றி உயர்ந்த மனோபாவமுமன்றோ இருக்கவேண்டும். சாதாரண ஜனங்களுக்கு விளங்கக்கூடாத பெரும் விஷயங்களை எடுத்துரைப்பதைக் காட்டிலும் சிறிது சிந்தித்தால் நம் மனதிலும் விடக் கூடியதாயிருந்தும் நம்மாலவ்விதம் செய்யாமலே விடப்பட்டிருப்பதை ஒருவர் அழகுடன் எடுத்துக் கூறினால் அப்பொழுதுண்டாகும் ஆனந்தமே மேலாகின்றதல்லவா? இப்பிச்சைக்காரனின் பாட்டைக் கவனித்ததிலிருந்து இந்துக்களும் மகம்மதியர்களும் சிநேகமாயிருக்கக் கூடு மென்பதற்கு இக்கதையே ஒரு பெரிய அத்தாட்சியாகு மென்று எனக்குத் தோன்றியது.

இவ்விதம் சிந்திக்கும்பொழுது எதையும் உட்புகுந்து கவனிப்பதில் ஏற்படும் நன்மையை ஏன் வியாசமாயெழுதி நம் போன்ற சகோதரி யொருத்தியால் திறமையுடன் நடத்தப்பட்டு வரும் 'சிந்தாமணி' என்னும் பத்திரிகைக்கு அனுப்பலாமா வென்றுகூடக் கருதலானேன். அன்று சமையலைப்பற்றி என் கணவர் குற்றம் கூறியதொன்றும் என் காதில் விழவில்லை. எவ்விஷயத்தினின்றும் அழகையுணரும் என் நுட்பசக்தியையும் உயர்ந்த மனோபாவத்தையும் பற்றி நானே வியந்து செருக்குற்றிருக்கும் பொழுது எவ்வண்ணம் விழும்?

சாப்பாடானபின் அண்டை வீட்டில் வசிக்கும் என் தோழியொருத்தி என்னைப் பார்க்க வந்தாள். அவளிடம் நான் இவ்விஷயத்தைப் பற்றிப் பேசத் தொடங்கிய பொழுது அவள் "ஆமாம். எவனோ பிச்சைக்காரன் கொட்டாங்கச்சி பிடிலை வைத்துப் பாடிக்கொண்டு வந்தான். என் கணவர் பிச்சைக்காரர்களுடைய இரைச்சலில் தன் வேலை கெடுகிற தென்று கூறுகிற வழக்கமாகையால் நான் அவனுக்கு உடனே பிச்சையிட்டுப் போகச்செய்து விட்டேன்" என்று கூறி "இந்த ஊரில் பிச்சைக்காரர்களுக் கென்ன குறைவு? பொழுது விடிந்தது முதல் விதம் விதமாய் வரவேண்டியதுதான்" என்றாள். அவளுடைய இம்மொழிகள் நான் ஏற்கெனவே கொண்டிருந்த பெருமையை இன்னும் அதிகப்படுத்த, அன்று அப்பிச்சைக்காரன் பாடின பாட்டின் விசேஷத்தையும், எதையும் அற்பமென்று அலக்ஷியமாய்த் தள்ளுவது பிசகென்றும் அவளுக்கு நான் ஒரு பெரிய பிரசங்கம் செய்து வீட்டிற்கனுப்பினேன். "யாருக்கு என்ன தெரிகிறது? நாமெடுத்துச்சொன்ன பின்புகூட அவளறிந்து கொண்டாகத் தெரியவில்லை. இந்நாளில் யாவரும் படிப்பில் ஒருவரை யொருவர் மேற்போக விரும்புகிறார்களே யொழிய விஷயத்தையல்லவா தெளிவாயறிந்து கொள்ளவேண்டும்? எடுத்துக்கூறினாலும் கேட்கப்பிடிப்பதில்லையே" என்று நான் தானே கூறிக்கொண்டேன்.

என் கணவர் ஆபிஸிலிருந்து வந்ததும், இச்சங்கதி மட்டுமல்ல, அடுத்தகத்து விசாலாக்ஷி நானெடுத்துக்கூறிய பின்பும் அசட்டையாகவிருந்ததையும் சேர்த்துக் கூறலாமென்று ஆவலாய் எதிர் நோக்கியிருந்தேன். இராச்சமையல் முன்பே ஆய்விட்டபடியால், கணவன், குழந்தைகள் இவர்களைக் கவனித்துக்கொண்டு ஒரு குடித்தனத்தையும் நடத்தும் பெண்ணாகிய நமக்கு எத்தனை விஷயங்களில் புத்தி செல்லுகிறதென்றும் எண்ணமுதிக்க, சற்று பெருமையும் சந்தோஷமும் கொண்டு வாயிற்புறம் நிற்கும்பொழுது, பேபர்காரன் "ஹிந்து" பேபரைக் கொடுத்துச் சென்றான். ஒரு நிமிஷமும் வீண் போக்கமனமற்றவளென நான் என்னைப்பாவித்திருந்ததால், உடனே, அதைப்பிரித்துப் பார்க்கத்தொடங்கினேன். இதனாலெல்லாம் கேவலம் தற்பெருமை கொண்டவளென்றும் வீண்பழியை நீங்கள் என் மேற் சுமத்தலாகாது. என்னைச்சுற்றியிருந்த சந்தர்ப்பங்கள் இவ்வித எண்ணங்கொள்ள என்னைத் தூண்டிற்றே யன்றி வேறல்ல. என்போன்று சொந்தப்படிப்புள்ள பெண்கள் கணவன் வீடுசென்று ஒன்றிரண்டு குழந்தைகளுக்குத் தாயுமாய்விட்டால், பின்பு படிக்க நேரமில்லையென அதை விட்டுவிடுவதை நான் கண்டிருக்கிறேனாதலால், நான் அவ்விதமல்லாமல், அதை மேன்மேலும் விருத்திசெய்ய ஆவல் கொண்டது எனக்குப்பெருமையையே அளித்ததெனில், அது முற்றிலும் வீண் கர்வமாகதல்லவா? உயர்தரக் கலாசாலைகளிற்சென்று எவ்வளவோ பெண்கள் படிக்கிறார்களே யென்றால், ஆண் பிள்ளைகளைப்போல் குடும்பக்கவலையற்று அவ்விதம் படிக்கும் பெண்களுக்கும் நமக்கும் எவ்விதத்தில் ஒற்றுமை ஏற்படும்? ஆகவே நான் அவர்களை ஒரு நாளும் என்னுடனே ஒப்பிட்டுக்கொள்ளுவதில்லை. ஆனால் இவ்வெண்ணங்களை நான் ஒருபொழுதும் வெளியிட்டுக் கொள்வதும் கிடையாதாகையால் தற்பெருமை கொண்டவளென்று பிறர் குற்றம் கூறவும் நான் இடம் வைத்துக்கொள்ளவில்லை. இவ்வாறு நடப்பதையே எவ்வளவோ உயர்வாக அநேக சமயங்களில் நான் நினைப்பதுண்டு. ஆனால் இப்பொழுது நான் பேபரில் கண்ட ஓர் விஷயம் நான் இது காறும் கொண்டிருந்த வீண் பெருமையைக் குறைக்க, சிறிது வருத்தமும் மனதில் தாழ்மையும் குடிகொண்டவளானேன். நான் எப்பிச்சைக்காரனின் பாட்டை கேட்டு காலை முதல் ஆநந்த முற்றிருந்தேனோ அதே பாட்டை ஜானகி அம்மாள் என்னும் என் போன்ற ஸ்திரீ யொருவள் கேவலம் அதன் ரசத்தை அறிந்ததற்காக மட்டும் பெருமை கொண்டிருப்பதோடு திருப்தியுறாமல், அதை உயர்ந்த நடையிலெழுதி இன்னும் இரண்டொரு தினங்களில் வெளியிடப்போவதாயும், அதை வாசிப்போர் அடையப்போகும் நன்மையையும் ஆனந்தத்தையும் தவிற, குடித்தனத்தி லுழன்றுகொண்டிருக்கும் சாமானிய ஸ்திரீ யொருத்தியின் ஊக்கத்தைப் பற்றியும் மிகக்கொண்டாடி எழுதியிருந்தது.

ஒரு சிறு குருவியானது தன் முட்டையினின்றும் வெளிவந்ததும் தானிருக்கும் அக்கூட்டையே இப்பெரிய உலகமாகக் கருதிற்றாம். பிறகு இறகு முளைத்து சிறிது பறக்கத் தொடங்கி, அக்கூடு இருந்த மரத்திற்கு வரவும் பசுமையாகவிருக்கும் இம்மரம்தான் உலகம்போலும் என எண்ணிற்றாம். அப்பால் எங்கு வேண்டுமாயினும் பறக்கச்சக்தி வாய்ந்தபின், உலகம் இவ்வளவு பெரிதாவென வியப்புற்றதாம்! இந்த குருவிக் கதைபோலிருக்கிறது நாம் கொண்ட பெருமையின் கதியென்று சிறிது வெட்கம் கொண்டேன். ஜானகி அம்மாள் பெண் பிள்ளைகளைப்பெற்று நம் போன்ற குடும்ப ஸ்திரீயாயிருப்பாளா? அப்படியிருப்பினும் நம்மைவிட வயதிலாயினும் முதிர்ந்தவளா யிருக்கமாட்டாளாவென ஆவலுடன் நான் எண்ணாமலிருக்கவில்லை.

இக்காலத்தில் ஸ்திரீகள் பலர் அநேக விஷயங்களைப் படித்தும், அறிந்தும் பெரிய நற்காரியங்களைச்செய்ய முன்வந்துள்ளார்களென்பது உண்மையாயினும், அவர்கள் யாவரும் தங்கள் புருஷர்கள் தூண்டுதலினாலன்றி, சுபாவத்திலேயே சக்திவாய்ந்துள்ளவர்களென்று நாம் வைத்துக்கொண்டாலும், அவர்கள் குடும்பக் கவலைகளினின்றும் நீங்கினவர்களாகவேனும், அல்லது கலாசாலைகளிற்சென்று உயர்தரப்படிப்பு பெற்றவர்களாகவேனுமிருப்பார்களேயன்றி என்போன்று சொற்பப்படிப்பைக் கொண்டு ஒருவர் தூண்டுதலும், பாதுகாப்புமின்றியே விருத்திசெய்துகொள்ளுபவர்களல்லவென்று நான் கொண்டிருந்த அற்பப்பெருமையும் இந்த ஜானகி அம்மாளின் செய்கையால் குறைவுபட நேரிடுமோ என நினைக்கவே நான் மனது ஒய்ந்தவளானேன். அன்று என் கணவர் பேபர் பார்த்து இச்சமாசாரத்தை எனக்குச் சொன்னபொழுது நான் வியப்பாகவோ, அல்லது கொண்டாடியோ ஒரு வார்த்தையேனும் கூறவில்லையென்றால், அதை நீங்கள் பொறாமையென்று நினைப்பீர்களோ? அல்ல. அது படிப்பின்மீது நான் கொண்டுள்ள என் ஆசையின் மிகுதியினாலேயாம் என்று நான் உங்களுக்குத் திண்ணமாய்க் கூறுவேன்.

மார்க்கோ போலோவின் யாத்திரைகள்.

(ஸ்ரீமான் S R. அனந்தநாராயண அய்யர்)

(545-ம் பக்கத் தொடர்ச்சி.)

பதினேழாவது அத்தியாயம்.

கூப்ளேகானது அரண்மனையின் பிரபாவமும் அவரது பிரஜைகளின் பழக்க வழக்கங்களும்.

மார்ச்சு மாதம் பிறந்தவுடன் சக்கரவர்த்தியானவர் பறவைகளைப் பிடிக்கக்கூடிய வல்லூறுகளும், இராஜாளிகளும், மற்ற வேட்டைப் பறவைகளுமுடைய சுமார் பதினாயிரம் வலையர்களுடன் கம்பலு நகரத்தைவிட்டுப் புறப்பட்டு, இரண்டு நாட் பயணமுள்ள சமுத்திரத்தை நோக்கி வடகிழக்காகப் பிரயாணஞ் செய்வார். அப்போது மேற்குறித்த வல்லூறுகள் நூறு அல்லது இருநூறு சேர்ந்த கூட்டங்களாகப் பிரிந்து சென்று வேறு பறவைகளைப் பிடித்துவரும். கூப்ளேகான், கால் குடைச்சலினால் நடமாட முடியாததாமல், சிங்கத்தோல் போர்த்துச் சரிகைப் படுதாக்களால் அலங்கரிக்கப்பட்டு இரண்டு யானைகளால் இழுக்கப்பட்ட மரக்கூட்டில் பன்னிரண்டு தேர்ந்த வல்லூறுகளுடனும், பன்னிரண்டு உத்தியோகஸ்தருடனும விநோதமாகக் காலங்கழித்துவருவார். வலையர்கள், பிடிபட்ட பறவைகளை அரசனிடம் கொண்டுவந்து சேர்ப்பார்கள்.

இப்பிரயாணத்தில் சக்கரவர்த்தியின் மெய்காவலரான அனேகம் பிரபுக்களும் போர்வீரர்களும் அவரருகில் சவாரி செய்துவருவார்கள். அவர்கள் மயில்களாயினும், கொக்குகளாயினும் வேறேந்தப் பறவைகளாயினும் ஆகாயத்திற் பறப்பதைக் கண்ணுற்றால் அச்செய்தியை அருகிலிருக்கும் வலையருக்குத் தெரிவிப்பார்கள். அவ்வலையர்கள் அதை அக்கணமே அரசனுக்கறிவித்து, அவர் தமது படுக்கையிலுட்கார்ந்தபடியே பறவைகளின் விளையாட்டைக் கண்டு மகிழுமாறு, அவரது மரக்கூட்டின் படுதாக்களை நீக்கித் தங்களது வல்லூறுகளையும் ராஜாளிகளையும் பறக்கவிடுவார்கள்.

இப்பறவை வேட்டை நிகழ்கையில் அரசனது பரிவாரத்திலுள்ள பதினாயிரம் வேறு ஜனங்கள், வேட்டைப் பழக்கமில்லாத வல்லூறுகளும், ராஜாளிகளும் பறக்குமிடங்களைக் கவனித்து, அவைகளுக்கு வேண்டியபொழுது உதவிசெய்வதற்காக இரண்டிரண்டு பேர்களாய் அங்குமிங்கும் ஓடித்திரிவர். இவர்களுக்குத் தார்த்தார் பாஷையில் 'துஸ்கவுல்' என்று பெயர். அவ்வார்த்தைக்குப் பறக்கவிடும் ராஜாளிகளைக் கூவியழைப்பதில் சமர்த்தரான காவற்காரர்கள் அல்லது கண்ணிக்காரர்கள் என்று அர்த்தம். இக்காவற்காரர்கள் இவ்வாறு கண்ணுங் கருத்துமாய் இராஜாளிகளைத் தொடர்ந்து சென்று அவைகளுக்கொருவிதமான கெடுதியும் கஷ்டமும் வாராமல் வெகு ஜாக்கிரதையாய்ப் பாதுகாத்து வருவதினால், அவைகளைப் பறக்கவிடுவோர் அவற்றின் பின்னே செல்லவேண்டிய அவசியமிருப்பதில்லை. பறக்கும் ராஜாளி யொவ்வொன்றிற்கும் அதன் சொந்தக்காரனது அடையாளமிட்ட வெள்ளித் தகடொன்று அதன் காலில் கட்டப்பட்டிருக்கும். இதனால் தவறிப்போன ஒவ்வொரு ராஜாளியும் திரும்பப் பிடிக்கப்பட்டபொழுது அதன் சொந்தக்காரனிடம் சேர்க்கப்படுகின்றது. அடையாளமில்லாத ராஜாளியை மேற்குறித்த காவலாளிகள் புலங்காஷி யென்னும் ஒரு உத்தியோகஸ்தனிடம் கொண்டுவந்து சேர்ப்பார்கள். இவ்வுத்தியோகஸ்தனிடத்தில் தங்களுக்குச் சொந்தமல்லாத பண்டங்களை யெடுத்தவர் அவைகளைக் கொண்டுவந்து சேர்ப்பார்கள். அப்படிச் செய்யாவிடில் அவர்கள் திருடர்களென்று மதிக்கப்பட்டு தண்டனைக்குள்ளாவார்கள். பண்டங்களை இழந்தவர்களும், இந்த புலங்காஷி யென்னும் உத்தியோகஸ்தனிடமே சென்று அப்பண்டங்கள் அங்குவந்து சேர்ந்தனவா என்று விசாரிப்பார்கள். இவ்வளவு பெரிய ஜனக்கூட்டத்தில் அவனுடைய இருப்பிடம் எப்போதும் தெரியுமாறு அவ்வுத்தியோகஸ்தனுக்கு உயர்ந்த கொடிபறக்கும் ஒரு உன்னதமான இடம் நியமிக்கப்பட்டிருக்கும்.

இவ்வாறு மிருகவேட்டையும் பறவை வேட்டையும் ஆடிக்கொண்டு இவர்களெல்லாம் கர்ஜார்மோடின் என்னும் ஒரு பெரிய சமவெளி வந்து சேர்வார்கள். அப்போது அங்கு சக்கரவர்த்திக்கும் அவரது உத்தியோகஸ்தருக்குமாக சுமார் பதினாயிரம் கூடாரங்கள் கட்டுவார்கள். இவற்றுள் முக்கியமானது சக்கரவர்த்தியின் கூடாரந்தான். அதில் பிரபுக்களும், சீமான்களும், பதினாயிரம் போர்வீரர்களும் நிற்கலாம்; அதன் வாயில் தென்புறமாகவும், அதனுள் மழைத்தண்ணீர் செல்லாவண்ணம் சிங்கத் தோல்களாலும் வேறு காட்டு மிருகங்களின் தோல்களாலும் போர்க்கப்பட்டு, விநோதமும் விசித்திரமுமாகக் கொத்து வேலைகள் செய்யப்பட்ட மூன்று தூண்களின்மேல் கட்டப்பட்டிருக்கும். இந்த கூடாரத்தின் சுவர்களின் உட்புறங்கள் இத்தேசங்களில் விலைமிக்கவை யென்று மதிக்கப்பட்டு வருகின்ற எர்மைன், ஸேபிள் என்னும் மிருகங்களின் தோல்களால் போர்த்தப்பட்டிருக்கும். இரண்டாயிரம் பொன் ஸுல்தானிக்குங்கூட ஒரு ஜோடி உள்ளங்கிக்குப் போதுமான எர்மைன் தோலாவது ஸேபிள் தோலாவது கிடைப்பதருமை யென்றாலும், அரசனது கூடாரத்தை யலங்கரிப்பதற்கு இவைகளே உபயோகமாகின்றன. தோல்களிற் சிறந்தது ஸேபிள் என்பது தார்த்தாரியரின் அபிப்பிராயம்.

இந்த கூடாரங்களைக் கட்டுவதற்கு உபயோகமாகும் கயிறுகளெல்லாம் பட்டுக் கயிறுகளே. சக்கரவர்த்தியின் மனைவிமார், மக்கள், வைப்பாட்டிகள் முதலானவர்கள் தங்குவதற்காக வேறு கூடாரங்கள் உண்டு. வேட்டையாடும் வல்லூறுகளுக்கும் ராஜாளிகளுக்கும் வேறு பறவைகளுக்குங்கூட கூடாரங்கள் உண்டு. இவ்வாறாக இங்கு அபரிமிதமான கூடாரங்கள்

இருப்பதினால், தூரத்திலிருந்து இங்கு வருவோருக்கு இங்கு ஒரு பிரசித்தமான பட்டணம் கட்டியிருப்பதுபோல் தோன்றும்.

சக்கரவர்த்தியானவர் மார்ச்சு மாதம் முழுவதும் இம்மைதானத்தில் தங்கியிருந்து எண்ணிறந்த மிருகங்களையும் அபரிமிதமான பறவைகளையும் பிடிப்பார். மார்ச்சுமாதம் முதல் அக்டோபர் வரைக்கும் ஒருவரும் ஒரு வேட்டை நாயையாவது வல்லூறையாவது வளர்க்கக் கூடாதென்பதும், வேட்டை ஆடக்கூடாதென்பதும் இச்சக்கரவர்த்தியின் சட்டம். வேட்டையாடியே ஜீவனம் செய்யவேண்டியவர்களுங்கூட அரசனது அரண்மனைக்குப் பின்பக்கம் தவிர மற்றைய மூன்று பக்கங்களிலும் ஐந்து, பத்து, பதினைந்து நாட் பயணமுள்ள காடுகளில் வேட்டையாடுவதை நிறுத்தி விடுவார்கள்.

கண்ணிகள் மூலமாகவாவது, கூண்டுகளின் மூலமாகவாவது கலைமான்கள், புள்ளிமான்கள் பொன்மான்கள் அல்லது முயல்களைப் பிடித்தால் அவைகளின் ஜாதிகுணம் மாறிவிடுமென்று அவ்விதமான நிர்ப்பந்தங்கள் செய்வதற்கு ஒருவருக்கும் இத்தேசச் சட்டங்கள் இடங்கொடுப்பதில்லை. இக்காரணங்களினாற்றான் இத்தேசத்தில் வேட்டை யாடுவோருக்கு ஏராளமான மிருகங்கள் அகப்படுகின்றன.

கம்பலுவில் காணப்படும் ஜனத்திரளையும், வியாபாரிகளையும் சாமான்களின் வகைகளையும் விஸ்தாரமாகச் சொன்னால் புறநாட்டார் நம்பமாட்டாரென்று நான் அவ்விஷயங்களை இங்கு எழுதத்துணியவில்லை.

சக்கரவர்த்தியின் நாணயம் தங்கம், வெள்ளி அல்லது வேறு லோகங்களில் அடிக்கப்படுவதில்லை. மல்பெரி மரத்தின் நடுப்பட்டையை யெடுத்து நன்றாயுலர்த்தி, உருண்டை வடிவாகச் சிறிதும் பெரிதுமாய்த் துண்டித்து, அதில் அரசனது அடையாளத்தைப் பதிப்பார்கள். இக்காகித நாணயம் சக்கரவர்த்தியின் ஆக்ஞைப்படி கம்பலு நகரத்தில் ஏராளமாக அடிக்கப்படுகிறது. இது அவருடைய ராஜ்ய மனைத்துக்கும் போதுமானதாகவு மிருக்கின்றது. இந்நாணயத்தை அவரது நாடுகளிலும் மாகாணங்களிலுமுள்ள வேறு யாரேனும் அடித்தாலாவது, அல்லது அங்கீகாரம் செய்ய மறுத்தாலாவது, அல்லது வேறு நாணயங்களை வழங்கினாலாவது அவர்கள் மரண தண்டனையடைவார்கள். புறநாட்டாரும் கூப்ளேகானது ராஜ்யத்தில் அவரது நாணயத்தைத் தவிர வேறு நாணயங்களை வழங்கத்துணியார். இதனால் தூர தேசங்களிலிருந்து கம்பலு நகரத்திற்கு அடிக்கடி வரும் வியாபாரிகள் தங்களது பொன், வெள்ளி, பவழங்கள், ரத்தினக் கற்கள் முதலிய சரக்குகளை கூப்ளேகானது நாணயத்திற்கு விற்பதும், அந்நாணயங்கள் தங்களுடைய தேசங்களில் செலாவணியாகாமையினால் அவற்றிற்கு கூப்ளேகான் ராஜ்யத்தில் அகப்படும் வேறு சாமான்களை வாங்கிக் கொண்டு தங்கள் சொந்த தேசம் போவதும் வழக்கம்.

மேற்சொன்ன காகித நாணயத்தினால்தான் கூப்ளேகான் தமது உத்யோகஸ்தர்களுக்கும் போர்ச்சேவகர்களுக்கும் சம்பளந்தருகின்றார். மேலும், தமது அரண்மனைக்கு வேண்டிய சகல சாமான்களையும் இந்நாணயத்தைக் கொண்டே வாங்குகின்றார். ஆகவே, கூப்ளேகானைவிட அதிகமான தனமும், அவரைப்போல் செலவில்லாத நாணய சாலையையுமுடைய அரசன் உலகத்தில் எங்குமேயில்லை. முன்னமே சொல்லியபடி கூப்ளேகானிடம் பன்னிரண்டு பிரபுக்களுண்டு. அவர்களே யுத்த காரியங்களில் ஆலோசனை சொல்வோரும், யுத்த சம்பந்தமான விஷயங்களைத் தீர்மானிப்போரும், தளகர்த்தர்களுக்கும் போர் வீரர்

களுக்குமுள்ள பதவிகளை உயர்த்துவோரும் தாழ்த்துவோரும் ஆவர். அவர்களுக்குக் கூப்ளேகானைத் தவிர வேறு மேலதிகாரியில்லையாதலால் அவர்களது கச்சேரிக்கு "தை" அல்லது உச்சமண்டபம் என்று பெயர்.

சீனாவிலுள்ள முப்பத்து நான்கு மாகாணங்களின் நடவடிக்கைகளை கவனிக்குவாப் பன்னிரண்டு வேறு பிரபுக்கள் இருக்கின்றார்கள். அவர்கள் கம்பலுவிலுள்ள ஒரு அழகான அரண்மனையில் தங்களது கச்சேரியை வைத்துக்கொண்டு, ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஏற்பட்ட நியாயாதிபதியும், நியாயவாதிகளும் சரியாக நீதி செலுத்தி வருகின்றனராவென்று கவனித்து வருகின்றார்கள். மேற்குறித்த மாகாணங்களின் ஆதிபத்தியத்திற்குத் தகுதியானவர்களைத் தெரிந்தெடுப்பதற்கும், அவர்களது பெயர்களை அரசனுக்கு அறிவிக்கவும் இவர்களுக்கு அதிகாரமுண்டு. இவர்களது பிரேரணையை அரசன் ஆமோதித்து விடுகிறார். அரசனுடைய பொக்கிஷத்தைக் காப்பவரும், வரிவிதிப்பவரும், இராஜாங்கச் செலவுகளைச் செய்பவரும் இவர்கள்தான். இவர்களது கச்சேரிக்கு 'லிங்' அல்லது இரண்டாம் மண்டபம் என்று பெயர். இவ்வுத்தியோகஸ்தர்களும் கூப்ளேகானுக்கன்றி வேறொருவருக்கும் கீழ்ப்பட்டவரல்லவென்றாலும், முன்னையோர் இராணுவ விஷயங்களை கவனித்து வருவதுபற்றி, இவர்கள் அவரினும் தாழ்ந்த ஏற்றமுள்ளவராக மதிக்கப்படுகின்றனர். கம்பலு நகரத்திலிருந்து அதற்கு சமீபத்திலுள்ள மாகாணங்களுக்குப்போக அநேக ராஜ பாட்டைகள் இருக்கின்றன. அவை யொவ்வொன்றிலும் இருபத்தைந்து அல்லது முப்பது மைல்களுக்கிறுதியில் "லாம்ப்ஸ்" என்னும் விடுதிகள் அல்லது சத்திரங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இவைகள் விசாலமான அழகிய மண்டபங்களும், படுக்கைகள் முதலாக எல்லா சாமான்களும் நிறைந்த உக்கிராணங்களுமுள்ள தபாற் சாவடிகள். இங்கு வழிப்போக்கர்களான பெரிய மனிதர்களும், பரிவாரங்களுடன் செல்லும் ஒரு அரசனுங்கூட தங்கியிருப்பதற்கு வேண்டிய எல்லாவித சௌகரியங்களு மிருக்கின்றன. பிரயாணிகளுக்கு வேண்டிய சாமான்களெல்லாம் சாவடிகளைச் சுற்றியிருக்கும் ஊர்களிலிருந்து சேகரிக்கப்படுகின்றன. துரைத்தனத்து சேவகர்களும், தூதர்களும் தங்களுடைய களைத்த குதிரைகளை இச்சாவடிகளில் விட்டுவிட்டு இங்கு எப்போதும் சித்தமாகவிருக்கும் நானூறு குதிரைகளிலிருந்து தங்களுக்கு வேண்டிய புதுக்குதிரைகளைக்கொண்டு முன் செல்வார்கள். கிராமங்களில்லாத மலைப் பிராந்தியங்களிலும், சக்கரவர்த்தி இத்தபால் சாவடிகளைக்கட்டி அவைகளின் உபயோகத்துக்கு வேண்டிய சாமான்களை சமீபத்திலேயே பயிர்செய்து வரும்படி பதினாயிரம் குடிகளை நியமித்திருக்கிறார்.

இச்சிறந்த ஏற்பாடுகள் இவ்விராஜ்யத்தின் ஒரு கோடியிலிருந்து மறு கோடிவரையிலும் நடந்து வருவதினால் இவ்விராஜ்யத்திலுள்ள ராஜ பாட்டைகள் எல்லாவற்றிலுஞ் சேர்ந்து சுமார் பதினாயிரம் தபாற் சாவடிகள் இருக்கின்றன. இச்சாவடிகளிலெல்லாம் அரண்மனைச் சேவகர்களின் உபயோகத்திற்காகக் கட்டப்பட்டிருக்கும் குதிரைகளின் சங்கியையை இரண்டு லக்ஷம் என்பார்கள். இதைக்கேட்டாலே மலைப்புண்டாகின்றதல்லவா!

இவ்வாறு சாவடிக்குச் சாவடி ஆளுங் குதிரையும் மாற்றப்படுவதினால் சிறிதும் காலதாமதமும் தடையுமின்றி தேசத்து வர்த்தமானமெல்லாம் அரசனது சமஸ்தானத்திற்கு வந்து விடுகின்றது.

இவ்வளவு மனிதர்களுக்கும் குதிரைகளுக்கும் எங்கிருந்து சாப்பாடும் தீனியும் வருகிறதென்று யாரேனும் வியந்து கேட்கலாம். அதற்கு பதிலென்னவென்றால், மூர்களும் ஜென்டல்களும் தங்களுடைய கணக்கற்ற ஸ்திரீகளிடம் அனேகம் குழந்தைகளைப் பெறுகின்றனர். முப்பது குமாரர்களைப் பெற்றவர்களும் அவர்களில் உண்டு. இவர்களெல்லாம் ஆயுதபாணிகளாய்த் தங்களது தகப்பன்மாரைப்பின் தொடர்ந்து அவர்களுக்குத் துணையாய்ச் செல்வார்கள். ஒழிந்த வேளைகளில் விளையும் நிலத்தைப் பண்படுத்தி அதில் அரிசி, பணிக்கே, சோளம் ஆகிய மூன்று தானியங்களைப் பயிரிடுவார்கள். இவைகள் ஒன்றுக்கு நூறாக விளைகின்றன. இவர்கள் இத்தானியங்களைப் பால் அல்லது புலாலுடன் கலந்து சமைத்து உண்பார்கள். ரொட்டி செய்ய மாட்டார்கள். இவர்களது தேசத்தில் கோதுமையானது மேற்குறித்த தானியங்களைப்போல் செழிப்பாக விளைவதில்லை.

வீட்டு மிருகங்களும் இடைவிடாமல் அதிகரித்து வருவதினால் ஒவ்வொருவனும் வெளியேறுகையில் தனது உபயோகத்துக்காக ஆறு, எட்டு அல்லது இன்னும் அதிகமான குதிரைகளைக்கொண்டு செல்வான். குதிரைகளும் முறையாகவே உபயோகப்படுத்தப் படுகின்றமையால் நாம் சொல்லிய நானூறு குதிரைகளில் பிரதி மாதமும் இருநூறு குதிரைகள் லாயத்தில் சவாரிக்கு ஆயத்தமாகவும் மீந்த இருநூறு குதிரைகள் காடுகளிலும் தோட்டங்களிலும் மேய்ந்துகொண்டிருக்கும்.

நதிகளையும் ஏரிகளையும் அடுத்துள்ள பட்டணங்களில் தபால் போக்குவரவுக்காக, ஒரு கரையிலிருந்து மறுகரை செல்லத் தெப்பங்களும் படவுகளும், பாலைவனங்களையடுத்த பட்டணங்களில் அப்பாலைவனங்களைக் கடந்துசெல்வோருக்கு வேண்டிய குதிரைகளும் தானிய முதலிய சாமான்களும் எப்பொழுதும் சித்தமாகவிருக்க வேண்டுமென்று சக்கரவர்த்தி ஏற்பாடு செய்திருக்கிறார். இவ்வேற்பாடுகளெல்லாம் இராஜாங்கச் செலவிலேயே நடந்துவருகின்றன.

அதிமுக்கியமான நிமித்தம் தபால் கொண்டு செல்பவன் வல்லூறுபோல் இரக்கை கட்டிக்கொண்டு தினமும் இருநூறு அல்லது இருநூற்றைம்பது மைலுங்கூட சவாரி செய்வான்.

இந்நாட்டுத் தபாற்காரர்கள் இராக்காலத்திலுங்கூட எங்குந்தங்காமல் சவாரி செய்வார்கள் அப்படிச் செய்கையில் நிலா வெளிச்சமில்லாத தினங்களில் பாதசாரியாக ஓடும் தபாற்காரர்கள் கையில் தீவட்டி பிடித்துக்கொண்டு குதிரை சவாரி செய்வோருடன் ஓடுவார்கள்.

ஒரு சாவடிக்கு வருமுன்னரே அவர்கள் ஒரு கொம்பை யூதுவார்கள். அதைக்கேட்டவுடன் லாயக்காரர்கள் புதுக்குதிரைகளைக் கொண்டுவந்து நிறுத்துவார்கள். தபாற்காரர்கள் தங்களது வயிற்றையும் தலையையும் நன்றாய்க்கட்டிக்கொண்டு குதிரைகளின் முழுவேகத்துடன் அச்சாவடியை விட்டு முன்னுக்குச் சவாரி செய்வார்கள்.

குதிரை யேற்றமே சிறந்த வித்தையென்று கருதிவரும் இத்தேசத்தார் இவ்வாறு அதிக சவாரி செய்வதினால் உண்டாகும் களையைப் பொறுக்கக் கூடியவர்களை வெகுவாகக் கொண்டாடி வருகின்றனர்.

இச்சாவடிகளினிடையில் மூன்று நான்கு மைல்கள் தூரத்தில் வேறு குடிசைகளுமிருக்கின்றன. அங்கு பாதசாரியாக ஓடும் தபாற்காரர்கள் வசித்து வருகின்றனர். அவர்கள் ஒவ்வொருவனும் கலகலவென்று சத்திக்கும்

மணிகள் கட்டிய ஒரு கச்சையைக் கட்டிக்கொண்டிருப்பான். இவர்கள் எந்த சமயத்தில் தபால் வருமோவென்று சதா காத்துக்கொண்டிருப்பார்கள். அரசனுடைய தபால்கள் தங்களது குடிசையின் சமீபத்தில் வந்தவுடன் இவர்கள் அவற்றை அதிவேகத்துடன் அடுத்த கிராமத்திலுள்ள தபாற் குடிசைக்குக் கொண்டு செல்வார்கள். அங்குள்ளவர்கள் கால்நடைத் தபாற்காரர்கள் வெகுதூரத்தில் வரும்பொழுது அவர்களது மணியோசையைக் கேட்டு அவர்களை எதிர்பார்த்திருந்து அவர்கள் கொண்டுவருந் தபாலை வாங்கிக்கொண்டு அக்கணமே அடுத்த சாவடிக்குக் கொண்டு செல்வார்கள். இவ்வாறு தபால்கள் பல கைகள் மாறிச் சிறிதும் தாமதமின்றிக் குறித்தவிடங்கள் சேருகின்றன. இந்த ஏற்பாடுகளினால் நூதன சமாசாரங்களும், புதிய கனிகளும் பத்து நாட் பயணமுள்ள இடங்களிலிருந்து இரண்டு நாட்களில் கிடைக்கின்றன. உதாரணமாக, கம்பலுவில் ஒரு நாட்காலையில பறித்த புஷ்பங்கள் மறு நாளிரவில் ஜாண்டு பட்டணத்திற்கு வந்துவிடுகின்றன. இதுவரை சொல்லிவந்த தபாற்காரர்கள் அரசனது வரிகளை வசூல செய்வோரிடமிருந்து தாங்கள் செய்யும் ஊழியத்திற்காக விசேஷமான வெகுமானங்கள் பெறுகிறார்களேயன்றி அரசனுக்குத் தாங்கள் ஒருவிதமான வரியும் கொடுப்பதில்லை. இத்தபால்களை மாதந்தோறும் தணிக்கை செய்வதற்கும் முறை தவறியவர்களை தண்டிப்பதற்கும் மேலதிகாரிகள் உண்டு.

குப்ளேகான் பிரதிவருஷமும் தமது ஆளுகைக்குட்பட்ட பல தேசங்களில பயிர்களுக்குப் புயல்களினாலாவது, வெட்டுக்கிளிகளினாலாவது வேறு எக்காரணங்களினாலாவது கெடுதியுண்டாகிறதாவென்று அறிந்துவருமாறு தமது உத்தியோகஸ்தர்களை யனுப்புவார். எந்த ஊருக்காயினும் தேசத்திற்காயினும் ஏதாவது நஷ்டம் உண்டாகிவிட்டதாகத் தெரிந்தவுடன் அவர் அவ்வூர் அல்லது அந்நாட்டுக் குடிகள் தமக்கு அவ்வருஷத்திற்குக் கட்டவேண்டிய வரிகளைத் தள்ளி விடுவதுமன்றித் தமது களஞ்சியத்திலிருந்து அவர்களுக்குச் சாப்பாட்டுக்கும் வித்துக்கும் வேண்டிய தானியங்களைக் கொடுத்துதவுவார். செழித்து விளைந்த காலங்களில் அவர் தமது உத்தியோகஸ்தர்கள் மூலமாக மூன்று அல்லது நான்கு வருஷங்களுக்கு வேண்டிய தானியங்களை வாங்கி ஆங்காங்குள்ள தமது களஞ்சியங்களிற் சேர்த்து வைப்பார். இவ்வாறு செய்வதினால் அவரது தேசங்கள் ஏதாவதொன்றில் பஞ்சம் நேரிட்டால் அப்பஞ்சம் அயல் நாட்டுக்களஞ்சியங்களிலுள்ள தானியங்களால் நீக்கப்படுகின்றது. அப்பஞ்சகாலத்தில் குப்ளேகான் தமது களஞ்சியங்களிலுள்ள தானியங்களைத் தாம் கொண்ட விலைக்குக் கால் விலைக்கு விற்பார். தமது களஞ்சியங்கள் எப்போதும் நிறைந்திருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளனைத்தையும் இவர் விடாமற் செய்துவருகிறார்.

ஒரு தேசத்தில் கால்நடைகளுக்கு ஏதாயினும் வியாதிகள் வந்தால் அப்போது குப்ளேகான வேறு தேசங்களிலிருந்து பத்துக்கொன்றாகத் தமக்குக் கப்பமாய்க் கிடைத்த மிருகங்களை அத்தேசத்திற்கனுப்புவார்.

ஆடு மாடு மேய்ப்பவரது உருப்படிகள் ஏதேனுமொன்று இடிவிழுந்து இறந்துபோய் விட்டால், அவர்களது மந்தை பெரிதாயிருந்தாலும் சிறிதாயிருந்தாலும், அரசன் அவர்களிடமிருந்து மூன்று வருஷம்வரைக்கும் ஒருவிதமான கப்பமுங்கொள்வதில்லை. இடியினால் வெருண்ட ஆடுகள் கடவுளின் கோபத்திற்குப் பாத்திரமானவையென்று நினைத்து அவைகளின்மேல் இவர் ஒருவிதமான வரியும் வசூல் செய்வதுமில்லை.

மரங்கள் வளரக்கூடிய இடங்கள் இன்னின்னவையென்று வழிப்போக்கர்கள் அறியுமாறு, கூப்ளேகான் முக்கியமான ராஜ மார்க்கங்களில் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் தகுந்த தூரங்களில் மரங்களை நட்டு வைத்திருக்கிறார். அவ்வாறே மணற் பாங்காகவும் பாலைவனமாகவுமிருக்கும் இடங்களைத் தெரிவிக்கு நிமித்தம் அங்கங்கே கற்களையும் தூண்களையும் நிறுத்தி வைத்திருக்கிறார். இவைகளை கூப்ளேகானது உத்தியோகஸ்தர்கள் பராமரித்து வருகின்றார்கள். "மரம் வைத்தவன் நெடுநாள் ஜீவித்திருப்பான்" என்னும் ஆன்றோர் வாக்கியத்தைக் கருத்திற் கொண்டவராய் கூப்ளேகான் மரங்களை விசேஷமாக நட்டு வருகின்றார்.

கத்தே மாகாணத்தில் அரிசியையும் பலவிதமான வாசனைத்திரவியங்களையும் சேர்த்து சிறந்த பானகம் ஒன்று செய்கின்றார்கள். அது சாராயத்தினும் அதிருசியானது. அதைத் தங்களது அளவுக்கும் சக்திக்கும் மீறிக்குடிப்பவர்களுக்கு சாராயத்தினாலுண்டாகும் வெறியினும் அதிகமான வெறி சீக்கிரத்தில் உண்டாகின்றது.

கத்தே மாகாணத்திலிருக்கும் எல்லா மலைகளிலுமிருந்து ஒருவிதகருங்கற்களைத்தோண்டியெடுக்கின்றார்கள். அவை நெருப்புப் பற்றிய பின் வெகுநேரம்வரை அணைவதுமில்லை. சாயங்காலத்தில் அவைகளைக்கொண்டு நெருப்பு மூட்டிவிட்டால் அந்நெருப்பு இராத்திரியெல்லாம் அணையாமலிருக்கும். இங்கு விறகு ஏராளமாகவிருக்கினும், அது எல்லாக்காரியங்களுக்கும் போதுமானதாயிராமையினால் இந்நாட்டார் இக்கற்களையும் விறகுடனே விசேஷமாக எரிக்கின்றனர்.

தமது ஆளுகைக்குட்பட்ட தேசா தேசங்களில் கூப்ளேகான் செய்துள்ள ஏற்பாடுகளை இதுவரை விவரித்தெழுதினேன். இனி கம்பலுவிலுள்ள ஏழைகள் விஷயமாய் அவர் என்ன ஏற்பாடு செய்திருக்கிறார் என்று சொல்லுகிறேன். நல்ல குடிப்பிறந்தார் எவரேனும் காலகதியினால் ஏழைகள் ஆகிவிட்டார்களென்றாவது, அல்லது உழைப்பாளிகள் சக்தி குன்றித் தினசரிச்சோறில்லாமல் வருந்துகின்றனரென்றாவது தெரிந்தவுடன் கூப்ளேகான் அவர்களது குடும்பத்திற்கு ஒரு வருஷச் செலவைக் கொடுக்கும்படி உத்திரவு செய்து விடுகின்றார். அவ்வக்குடும்பத் தலைவன் இவ்விஷயங்களை விசாரிப்பதற்கென்று ஏற்பட்ட உத்யோகஸ்தனிடஞ்சென்று தனக்கு அரசனளித்த உத்திரவைக்காட்டி அதில் கண்டிருக்கும் சாமான்களைப் பெற்றுக் கொள்வான். இக்காரியங்களை நடத்தும் உத்தியோகஸ்தர்களுக்கு பிரத்தியேகமான கச்சேரி யொன்றுண்டு. மேற் கண்ட உதவி பெறுவோருக்குக் குளிர் கால வெயிற் கால உடைகளும் கொடுக்கப்படுகின்றன. கூப்ளேகான் தமக்குக் கப்பமாகக் கிடைக்கும் கம்பளி, பட்டு, சணல் முதலியவைகளையெல்லாம் ஒரு பெரிய விடுதியிற் சேர்த்து வைத்து உடைகளாக நெய்யும்படி ஏற்பாடு செய்திருக்கிறார். இவ்வுடைகளே ஏழைகளுக்கு வழங்கப்படுகின்றன. கூப்ளேகான் தமது சைனியங்களுக்கும் வருஷாவருஷம் புதிய உடுப்புகள் அளிப்பதுண்டு.

இந்நாட்டிலுள்ள தொழிலாளிகளெல்லாம் வாரத்திலொரு நாள் அரசனுக்கு ஊழியஞ் செய்யக் கடமைப் பட்டிருக்கின்றனர்.

தொன்றுதொட்டு தார்த்தார்கள் தர்ம சிந்தனையே யில்லாதவர்களென்பதை நீங்கள் நன்றாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். ஏழைகளெல்லாம் தெய்வத்தினால் வெறுக்கப்பட்டவர்கள் என்பதே அவர்களது

கொள்கை; ஆகலால் அவர்கள் ஏழைகளை நிந்தித்து வருகின்றனர். ஆனால் விக்கிரகாராதனைக்காரர் அதிலும் விசேஷமாய் பக்ஷிகள், தர்மஞ் செய்வது தெய்வத்திற்கு சம்மதமென்று அரசனுக்குப் போதித்து அவரை மேற் சொல்லியபடி தர்ம சிந்தனையுடையவராக்கியிருக்கின்றனர். இதனால் கூப்ளேகானது ராஜ்யத்தில் இரப்போர்க்குப் பிச்சை கிடையாமலிருப்பது மில்லை; இருபதினாயிரம் கிரவுன் விலையுள்ள அரிசி, சோளம், பனிக்கே முதலிய தானியங்கள் தானமாக வழங்கப்படாத நாளுமில்லை. இவ்வாறு தாராளமாய்த் தருமஞ் செய்வதினால் கூப்ளேகானை அவரது பிரஜைகள் தெய்வமென்றே கொண்டாடி வருகின்றனர்.

கம்பலுவில் கிறிஸ்தவர்களும், சரேசர்களும், கத்தேயர்களும் ஏறக்குறைய ஐயாயிரம் சோதிடர்களும் குறிசொல்வோரும் இருக்கின்றனர். இவர்கள் அனைவருக்கும் மேற் சொல்லிய ஏழைகளைப்பந்தம் கூப்ளேகான் வருஷக் கணக்காக அன்ன வஸ்திரங் கொடுத்து உதவுகின்றார்.

இந்நாட்டாரிடம் கிரகங்களும் அவைகள் ஒரு வருஷத்தில் தினந்தோறும் நிற்கும் நிலைகளும் குறிக்கப்பட்டுள்ள ஒரு சக்கரம் இருக்கின்றது. அதன் மூலமாய்ப் பிரதி மதத்தையுஞ் சேர்ந்த சோதிடர்கள் தனித்தனியே சந்திரனுடைய சாரங்களை கவனித்து வருஷ பலன்களையும், ருதுக்களின் ஒழுங்கையும் அறிந்து, சுகதுக்கங்களெல்லாம் தெய்வ நியமனமென்றும், அந்நியமனம் நிறைவேற வேண்டுமென்றும் பிரார்த்தனை செய்வார்கள். இவர்கள் தமிணி யென்னும் சில சதுரக் கட்டங்களில் ஒரு வருஷத்தில் நடக்கக் கூடிய சங்கதிகளை முன்னாடியே யெழுதி வேண்டுவோருக்கு விற்பார்கள். அவ்வாறு வரும்பொருளை முன்னாடியே உண்மையாக உரைப்பவர்களுக்கு இந்நாட்டில் மரியாதை வெகு அதிகம்.

பெரிய காரியங்களை ஆரம்பிப்போரும், நெடுந்தூரம் பயணஞ் செல்வோரும் தாங்கள் எடுத்த காரியம் எவ்வாறு முடியும் என்று அறிய விரும்பினால் அவர்கள் இந்த ஜோசியரிடம் சென்று ஆகாயத்தை நோக்கிப் பலன் சொல்லும்படி கேட்பார்கள். இந்த சோதிடர்களும் அவ்வாறே சொல்வதாக நடித்து பிரசினைக்காரனுடைய ஜனன ராசியைக்கேட்டு அதைப் பிரசின காலத்தில் ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் நின்ற நிலையுடன் ஒத்துப்பார்த்துப் பலன் சொல்லுவார்கள்.

தார்த்தார்கள் தங்களது வருஷங்களைப் பன்னிரண்டு பன்னிரண்டாகக் கணக்கிடுகின்றனர் முதல் வருஷத்திற்குச் சிங்கமென்று பெயர்; இரண்டாவது எருது; மூன்றாவது யாளி; நான்காவது நாய்; இவ்வாறே மற்றைய வருஷங்களுக்கும் பெயராம். ஆகையால ஒரு மனிதனை அவன் எப்போது பிறந்தவன் என்று கேட்டால் அவன் 'சிங்க வருஷத்தில் பலான மணியில் பலான லக்கினத்தில் பிறந்தேன்' என்பான். இவ்விவரங்களை அவர்களது தகப்பன்மார் சிறிதும பிழையின்றி ஒரு புஸ்தகத்தில் பதிந்து வைக்கின்றனர். பன்னிரண்டு வருஷங்கள் தீர்ந்தபின் வருஷங்களின் பெயர்களெல்லாம் பழையபடி மாறிவிடும்.

அவர்களது மதம் விக்கிரகாராதனை என்று முன்னமேயே சொல்லிவிட்டோம். அவர்கள் தங்களது தெய்வங்களை தங்கள் வீட்டுச் சுவர்களில் உயர்ந்த இடங்களில் ஒரு மேஜையின்

மேல் வைத்திருப்பார்கள்; அம்மேஜையின் மேல் பரமபதத்திலுள்ள கடவுளின் பெயர் எழுதியிருக்கும். அக்கடவுளுக்கு அவர்கள் தினந்தோறும் தூபங்காட்டி தங்களது தலைக்கு மேல் கையைக் கூப்பியும் மூன்று தரம் பல்லில் அடித்துக் கொண்டும் தங்களுக்கு நல்லறிவும் தேக ஆரோக்யமுங் கொடுக்கும்படி வேண்டுவார்கள்; வேறு பிரார்த்தனைகள் செய்வதில்லை. அவர்கள் நாதிகே என்ற வேறொரு பிரதிமையையும் பூமியின் மேல் வைத்து வணங்குகின்றனர். அது பூலோக வஸ்துக்களின் சுவாமியாம். அதற்கு சம்சாரமும் குழந்தைகளுமுண்டு. அக்கடவுளையும் இவர்கள் தூபங் காட்டி வணங்குவார்கள். அப்பொழுதும் பல்லைக் கடித்தும் அடித்தும் செய்து கைகளையும் உயரத் தூக்குவார்கள். மிகுந்த குளிராவது உஷ்ணமாவது இல்லாத காற்றையும், நல்ல விளைவையும், குழந்தைகளையும், வேறு சம்பத்துகளையும் தங்களுக்குக் கொடுக்குமாறு இந்த தெய்வத்தை வேண்டுவார்கள்.

ஆத்மா அழிவற்றதென்பதும் ஒரு மனிதன் இறந்த பின் அவனது ஆத்மாவானது அவன் அந்த ஜன்மத்தில செய்த புண்ய பாவங்களுக்குச் சரியான சிறந்த அல்லது இழிந்த உடலில் பிரவேசிக்கின்றதென்பதும் அவர்களது கொள்கை. உதாரணமாக, ஏழை யொருவன் புண்ணியங்கள் செய்தால் அவன் படிப்படியாக தனவானாகவும் பின்பு சீமானாகவும் பிரபுவாகவும் பிறந்து கடைசியாகக் கடவுளுடன் ஐக்கியமாகி விடுவான்; அப்படியில்லாமல் பாபங்களே செய்திருந்தால் அவன் முன்னிலும் ஈனஸ்திதியிலும் பின்பு நாயாகவும் அப்புறம் அதினும் இழிந்த ஜன்மங்களிலும் உழலுவான் என்பது இவர்கள் கொள்கை.

அவர்களது வசனங்கள் கேட்பதற்கு இனிமையாகவும் அவர்கள் நல்வரவு கூறுவது சந்தோஷமும் யதார்த்தமுமாகவும் நடை அழகாகவும் போஜன மருந்துவது சுத்தமாகவுமிருக்கும். அவர்கள் தங்கள் பெற்றோரிடம் அதிக வணக்கமுடையவர்கள். பெற்றோரைப் பேணாமலாவது, லக்ஷ்யம் செய்யாமலாவது இருப்பவர்களை தண்டிப்பதற்கு ஒரு பகிரங்கமான நியாயஸ்தலம் இருக்கின்றது. இந்த நியாயஸ்தலத்தில் குற்றவாளிகளென்று தீர்மானிக்கப் பட்டவர்கள் மூன்று வருஷம் சிறைச்சாலையில் அடைக்கப்படுவார்கள். விடுதலையாகும் பொழுது உலகத்தார் இவர்களை துர்ப்புத்திகளென்று அறியுமாறு இவர்களுக்குக் கன்னத்தில் சூடும் போடப்படுகின்றது.

சக்கரவர்த்தியிடம் செல்லும் பிரபுக்களும் வேறு ஜனங்களும் பின் வரும் விதிகளை அநுசரிப்பார்கள்:—

அரண்மனைக்கு அரை மைலுக்குட் பட்ட தூரத்தில் வந்தவுடன சந்தடி செய்வதையும் உரத்துக் கூவுவதையும் நிறுத்தி விடுவார்கள். ஒவ்வொரு பிரபுவும எச்சில் துப்புவதற்காகத் தன் கையில் ஒரு சிறு பாத்திரங் கொண்டு செல்வான். துப்பினவுடன் அதை மூடிக்கொள்வான். சபாமண்டபத்தில் ஒருவனும் துப்பத் துணியான். தவிர சபாமண்டபத்தில் விரிக்கப் பட்டிருக்கும் கம்பளங்கள் கெடாமலிருப்பதற்காக அங்கு செல்லுவோர் தாங்களணிந்து வந்த பாதரக்ஷைகளைத் தங்களது சேவகர்களிடம் கொடுத்துவிட்டு வெண்தோலினால் செய்த வேறு பாதரக்ஷைகளை யணிந்து கொண்டு அம்மண்டபத்தினுள் நுழைவார்கள்.

(தொடரும்)

கொசு.

(குகப்ரியை)



நான் யார் தெரியுமா? என் பெயர் கொசு. மெத்தப்படித்த சிலர் கொசுகு என்றும் சொல்லுவார்கள். இவ்வளவு பெரிய உலகில் மிகவும் சிறிய என்னிடத்தில் பொதுவாய் ஜனங்களெல்லோரும் பகைமை பாராட்டுகிறார்கள். என்னிடமேன் இவ்வளவு விரோதம்? நானும் அவர்களைப்போல் ஒரு ஜீவன்தானே. அவர்களுக்கு இருப்பதுபோல் எனக்கும் பசியும் தூக்கமுமில்லையா? சுகம் துக்கம் இரண்டுமில்லையா? ஜீவசிருஷ்டிகளுள் மிகவும் உயர்ந்தவர்களென்று சொல்லிக்கொள்ளும் மனிதர்களையும் என்னையும் ஒரே கடவுள்தானே சிருஷ்டித்தார். அப்படியிருக்க மனிதர்கள் எங்களைக்கண்டு விட்டாற்போதும்! அடித்தும் புகைத்தும் கொல்லுகிறார்கள் எங்கள் வம்சத்தையே நிர்மூலமாக்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். எங்கள் பாட்டுச் சத்தத்தைக்கேட்டால் அவர்களுக்கு வெகு கோபமுண்டாகிறது. அதிலும் சுகாதார உத்தியோகஸ்தர்கள் எங்களுக்கு "பரம விரோதி." அவர்கள் முதலில் எங்களை அடியோடழிக்க ஏற்பாடு செய்தவர்கள்.

முதலில் என் தாயிடமிருந்து வந்தபோது நான் முட்டை வடிவமாயிருந்தேன். நானும் எண்ணிக்கை யற்ற என் சகோதர சகோதரிகளும் ஒவ்வொரு முட்டையிலுமிருந்தோம். அப்பொழுது எங்களை அவள் ஒரு தண்ணீர்க் குட்டையில் விட்டுப்போனாள் அக்குட்டை மிகவும் சௌக்கியமான இடம். வெகு காலமாய்த் தேங்கியிருந்த தண்ணீரில் தவளைகளின் முட்டை சரம் சரமாய் வெகு அழகாய் வலைபின்னப்பட்டது போலிருந்தது. பச்சை நிறமாய்ப் பாசி நிறைந்திருந்த அக்குட்டை எங்களுக்கு வெகு வசதியாயிருந்தது. ஒரு வாரத்திற்கெல்லாம் நாங்களெல்லோரும் புழுவாக மாறினோம். அப்பொழுது எங்களுக்கு இறக்கைகள் கிடையாது. வாலின் நுனியில் ஒரு மயிர் மட்டுமுண்டு. அதன் மூலமாகவே நாங்கள் காற்றை சுவாசிப்போம். நாங்கள் வெகு வேகமாய் உடலை நெளித்து நெளித்துக் கொண்டு தண்ணீரில் ஓடுவோம். சில நாட்களுக்கெல்லாம் நாங்கள் மறுபடி வேற்றுமையடைந்து தண்ணீருக்கு அடியிலேயே கிடந்தோம். பிறகு சில நாட்கள் செல்ல, நான் என் மேலிருந்த போர்வையைக் கழித்துக்கொண்டு கொசுவாக மாறினேன். நாளடைவில் என் சகோதர சகோதரிகளெல்லாரும் மாற ஆரம்பித்துவிடுவார்களென்றும் எண்ணிக்கொண்டேன்.

ஆனால் நான் எண்ணியது பிசகு என்று உடனே தெரிந்துகொண்டேன். அந்த குட்டைக்கருகில் ஒரு சுகாதார உத்தியோகஸ்தர் கையில மண்ணெண்ணை வைத்துக்கொண்டிருக்கும் ஒரு வேலைக்காரனைக் கூப்பிட்டுக் கொண்டிருந்தார். அவன் வந்து கையிலிருந்த மண்ணெண்ணையைக் குட்டையில் ஊற்றினான்.

மண்ணெண்ணெ குட்டை முழுவதும்பரவிற்று. அதிலிருந்த நூற்றுக்கணக்கான என் சகோதரர்களும் சகோதரிகளும் தவித்துத் தவித்துச் சாவதை கண்ணால் கண்டும் ஒரு உதவியும் செய்ய முடியாமல் உட்கார்ந்திருந்தேன். அது முதல் சுகாதார உத்யோகஸ்தர்களைக் கண்டால் எனக்கு அடக்க முடியாத கோபமும் துக்கமும் வந்துவிடும். உடனே அவர்களண்டைபோய் சரிலென்று அவர்கள் காதையோ மூக்கையோ கடித்துவிட்டு ஓடிவிடுவேன் பிறகு சிலநாட்கள் வரையில் நான் நிர்விசாரமாய் இருந்தேன். ஆனால் அந்த உத்யோகஸ்தரோ ஒவ்வொரு இடத்திலிருந்தும் என்னைதுரத்த ஆரம்பித்தார்.

அவர் அப்படி துரத்தியதால் நானும் அவர் வீட்டிலேயே வசிப்பதென்று நிர்மானித்து அங்கேயே வசிக்கத் தொடங்கினேன். அவர் எங்கள் வம்சத்தையே வேரறுத்துவிட வேண்டுமென்றும், எங்களாற்றான் மலேரியா என்னும் முறைக் காய்ச்சலும் யானைக்காலும் முதலிய வியாதிகளெல்லாம் தொத்துகிறதென்றும், தான் உலகத்தையே புரட்டித் தலை கீழாய் வைத்துவிட வந்த அவதாரமென்றும் பெரிய பிரசங்கஞ்செய்வார். உலகத்தில் வியாதிகளும் மனிதர்களும் எங்கும் வியாபித்திருக்கிறார்கள். மனிதரில்லாவிடத்து வியாதியில்லை, வியாதியில்லாத மனிதருமில்லை, இருந்தாலும் அவர் சொல்வதும் சில விஷயங்களில் சரிதான். மலேரியா என்னும் சுரம் எங்கள் இனத்தாரின் தயவிலும் மற்றும் சில நல்ல மனிதர்களுடைய தயவினாலும் இவ்வளவு மேலான நிலைமையை அடைந்தது. இல்லாவிடில் இப்பொழுது சாதாரண மனிதர்களுக்குக்கூட அதன் மகிமை தெரிந்திருக்குமா? மேற்குறித்த நல்ல மனிதர்களில் சுகாதார உத்தியோகஸ்தர் மனைவியைப் பற்றி சொல்ல வேண்டியது அவசியம். அவர் எவ்வளவு கோபித்தபோதிலும் அந்த அம்மாள் எங்கள் மேல் கருணைகொண்டு அறைகளின் சன்னல்களை நன்றாய்த் திறக்க மாட்டாள். கிழிந்த துணிகளும், ஓட்டைக் கூடைகளும், கோடிகளில் அப்படியே அவிழ்த்து அவிழ்த்து வீசி எறியப்பட்ட புடவைகளும் குழந்தைகளின் சட்டைகளும், சுவர்களின் ஓரங்களிற் பிடித்திருக்கும் ஒட்டடைகளும்விளக்குத்துடைக்கும் துணிகளும்,கிழிந்த புஸ்தகங்களும், ஒடிந்துபோன கட்டிற் சட்டங்களும் நிறைந்திருக்கும். அந்த வீட்டில் அவ்வறை ஒன்றுதான் எனக்கு மிகவும் வசதியாயிருந்தது. விறகு வாட்டி முதலியவைகளை அடுக்கும் பரண்களிலும் இருப்பேன். ஆனால் அங்கே இருந்தால் எனக்கு மனிதரைக் கடிக்கவும் இரத்தத்தை உறிஞ்சவும் சமயம் கிடைக்காது. சமையலறையில் புகை எப்பொழுதுமிருந்து கொண்டிருந்தாலும் என்னைத் தவிர மற்ற என் இனத்தார்க்கு அங்கே வேண்டிய சௌகரியங்கள் கிடைக்கும். குழம்பு முதலியவைகள் செய்வதற்காகக் கரைத்த புளிச்சக்கையும், அழுகின மாம்பழம் முதலியன நறுக்கப்பட்ட துண்டங்களும் கொட்டையும், திறந்து வைத்திருக்கும் தயிரும், தோசைமாவும், பலவித ஊறுகாய்களும், பாதி ஒரு குழந்தைக்குக் கொடுத்துவிட்டு மற்றொரு குழந்தைக்காக மீதி வைத்திருக்கும் வாழைப்பழமும், அவர் வந்து பார்த்து கோபித்தாலன்றி அவ்வறையை விட்டு வெளிப்படாது. ஆனால் எங்களுடைய நல்லதிர்ஷ்டத்தின் பயனாக அவர் அடிக்கடி சமயற் கட்டுக்கு வருவதில்லை. சாப்பாடு முன்கட்டிலேயே பரிமாறுவதுவழக்கம். இது தவிர பகலில் அந்த அம்மாள் சாப்பிட்டானபிறகு முன் கட்டில் ஆண் பிள்ளைகள் வருவார்களென்று சமையலறையிலாவது நான் முன் சொன்ன உக்கிரான அறையிலாவது தலைப்பை விரித்துப் படுத்துவிடுவாள். தலையை முகர்ந்த

உடனே நல்ல தூக்கம் வந்துவிடும். பிறகு நான் என்னிஷ்டப்படியே சுயேச்சையாய் அவள் முகத்தின் மீதும் கைகால்களின் மீதும் குதித்துக் கடித்துத் துள்ளி விளையாடுவேன். நான் எவ்வளவுதான் கடித்தாலும் பாட்டுப் பாடினாலும் மிகவும் பொறுமையுடனிருப்பாளேயன்றி ஒரு நாளாவது சீ! என்று ஓட்டியதே கிடையாது. இப்படிப்பட்ட உத்தமியை அடிக்கடி கோபிக்கும் அவள் புருஷர் எவ்வளவு கெட்டவரென்பது நான் சொல்லாமலே விளங்கும். இப்படி சில நாட்கள் செல்ல ஒரு நாள் வீடு முழுவதும் வெள்ளையடிக்க வேண்டுமென்று சாமான்களை யெல்லாம் அப்புறப்படுத்தி கையில் கரண்டி போன்ற வலை ஒன்றை வைத்துக்கொண்டு இப்புறமும் அப்புறமும் வீசினர். அதில் என்னுடன் கூடவிருந்த பல நண்பர்கள் அகப்பட்டு நசுக்குண்டனர். நானும் எனக்கு சிநேகமான மற்றொரு சிட்டிக் கொசுவும் அந்த ஆபத்துக்குத் தப்பி அங்கே மாட்டியிருந்த சட்டைகளுக்குள் புகுந்து கொண்டோம். ஆனால் எங்களுடைய துன்பம் அத்துடன் ஒழிந்தபாடில்லை. ஒரு கரி யடுப்பில் கொஞ்சம் நெருப்பைக் கொணர்ந்து வாட்டியைச் சிறு சிறு துண்டுகளாக்கி அதில் போட்டு நிறைப் புகை போட்டார். அதுவும் போதாதென்று ஒரு விஷத்தூளை அதில் தூவினர். தவித்துத் திக்குமுக்காடித் தத்தளித்துக்கொண்டு புலி வேஷத்திற்குப் பயந்து ஓடும் சிறு குழந்தைகளைப்போல் எப்படியாவது பிழைத்தாற் போதுமென்ற எண்ணத்துடன் சட்டையை விட்டு வெளியே வந்தோம். அறை முழுவதும் விஷப்புகை சூழ்ந்திருந்தது. எங்களைக் கொல்வதற்கு விஷமாயிருந்த அந்த வஸ்துவினால் அவர்களுக்கு ஒரு தொந்தரவுமில்லை. அவர்களுக்கு அந்தத் தொந்தரை ஏற்பட்டால் எங்களுடைய துயரைச் சற்றுவது உணர மாட்டார்களா? ஜீவ இரக்கம் பச்சாத்தாபம் முதலிய நற்குணங்களே இல்லாத அவர்களுக்குத் தன்னுயிரைப்போல் மன்னுயிரை நினைக்க வேண்டுமென்கிற எண்ணமாவது உண்டாகாமற் போகுமா? விஷப்புகை அடங்கின பின் உள்ளே வரலாமென்று மெதுவாய் வெளிப்பட்டு கிணற்றருகில் வந்தேன். கிணற்றருகில் முளைத்திருந்த "காணு வாழை"ச் செடியின் மேலுட்கார்ந்தேன். நல்ல காற்று வீசிற்று. என்னையறியாமலே எனக்கு ஆனந்தமுண்டாயிற்று. அதன் பேரில் உட்கார்ந்து கொண்டு மெதுவாய் வீசும் காற்றின் உதவியால் சாய்ந்து சாய்ந்து ஊஞ்சலாடிக் கொண்டிருந்தேன். அப்பொழுது அந்த சுகாதார உத்தியோகஸ்தர் கையில் ஒரு சீசாவில் ஊதாவர்ணமான சலத்தை எடுத்துக் கொண்டு கிணற்றில் கொட்டுவதற்காக வந்தார். எனக்கு அடக்க முடியாத அகங்காரமும் கோபமும் வந்தது. மெதுவாய்ப் பறந்து அவர் கண் இரப்பையைக் கடித்தேன். அவர் கையை வீசினார். நான் மறுபடி காணு வாழையின் பேரில் உட்கார்ந்தேன். கிணற்றில் அவர் கொண்டுவந்த தண்ணீரை ஊற்றினார். முன் என் இனத்தார்களைக் கொன்றதுபோல் மறுபடி கொசு வேட்டைக்கு ஆரம்பித்து விட்டாரோ என்று எனக்குள் சொல்லிக் கொண்டேன். மறுவினாடி ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து அவர் மூக்கில் நுழைந்தேன். உடனே அவர் 'ஹாம், ஹாம்' என்று சிந்தினர். மனம் போலாயிற்று மங்களம்! இத்துன்ப உலகை நீத்து சகலரையும் படைத்த ஈசுவரனிடம் முறையிடச் சென்று வா விடைகொடுங்கள். போய் வருகிறேன்,

வீராபாய்-பத்மினிபாய் அல்லது அக்பரின் பெருந்தன்மை.

ஒரு காட்சியில் ஒரு நாடகம்.

(ஸ்ரீமான் மோ. வே. கோவிந்தராஜையங்கார்.)

நாடக பாத்திரங்கள்.

1. அக்பர் ... ... டில்லி சக்ரவர்த்தி
2. அப்துல் பேஸல் ... ... (Abdul Fazl) சக்ரவர்த்தியின் ஆருயிர் நண்பரும் மந்திரியும். ... ...
3 வீராபாய்—சித்தூர் உடையசிங் ராணுவின் பட்டமகிஷி. ... ...
4. பத்மினிபாய்—சித்தூர் உடையசிங் ராணுவின் சகோதரி. ... ...
5. பிரதாப்சிங் ... ராஜபுத்திர ராணுவத்தலைவன்
6 அப்துல் கரீம் ... ஒரு மகமதியப்போர்வீரன்
7. ஒரு சிப்பாய் ... ... வாயிற் காவலன்.

இடம்:—புவராஜபுரிக்கு அருகில் அக்பர் பாதுஷாவின் ஜாகை.

காலம்:—சூரியன் அஸ்தமித்த வேளை; அக்பர் தமது கூடாரத்தினுள் வீற்றிருக்கிறார் அப்துல் பேஸல் அருகில் இருக்கிறார்.

அக்பர்:—ஆம்; நாம் நிச்சயமாகவே வென்றுளோம்; எனினும், வெற்றியெல்லாம் அந்த சிறிய ராஜபுத்திர சேனைக்கேதான் சொல்லல் வேண்டும்; அந்த சிறிய சைனியத்தால் நமது பெருஞ்சேனையிற் பலர் மாண்டிவிட்டனர். போர்க்களத்தில் அந்த சிறிய ரஜபுத்திர ராணுவத்தலைவன் காட்டிய அற்புத வீரத்தனத்தை நீங்களும் பார்த்திருக்கல் வேண்டுமென்னும் விருப்பம் எனக்கு இருக்கிறது. ஆஹா! அவன் அவ்வமயம் ஒரு போர்க்கடவுள் போலவே தோன்றினானன்றி வேறில்லை. அவனை உயிருடன் பிடித்துவரும்படியே கட்டளையிட்டிருக்கிறேன். அவன் அங்ஙனம் நம் கையில் அகப்படுவானென்று நான் எண்ணவில்லை; ஆஹா! எப்படி யுத்தம் செய்தார்கள் அவர்கள்!! ஆச்சரியம்! ஆச்சரியம்!!

அப்துல் பேஸல்:—ஆம்! ரஜபுத்திர வீரர்கள் ஆச்சரியமான வீரத்துடன் நின்று நமது பெருத்த சேனை வீரர்களுடன் போர்புரிந்தார்கள் என்பதாகக் கேள்விப்பட்டேன்.

அக்பர்:—தாங்கள் ஒவ்வொருவரும் தோல்வியடைந்து மரண மடைவது நிச்சயமென்பதை அவர்கள் உணர்ந்திருந்தும், அந்த ரஜபுத்திர வீரர்களில் ஒவ்வொருவனும் என்ன உறுதியுடனும் துணிவுடனும் ஊக்கத்துடனும் யுத்தம் செய்தான் தெரியுமா?

அப்துல் பேஸல்:—வீரம், துணிவு என்று பொருள்படும் குணமின்னதென்பதைத் தர்பார் அவர்கள் ஆழ்ந்து ஆலோசித்திருக்கலாம் என்று நினைக்கிறேன்.

அக்பர்:—ஏன்? என்ன விஷயம்!

அப்துல் பேஸல்:—நாமெல் ஆச்சரியப்படும் வீரத்தன்மையானது முடிவு வரையில் வீரத்தன்மையாகவே விளங்கவேண்டியதொன்று கவலலவோ இருத்தல் வேண்டும்! இந்த வீரத்தனம் இடையில் பங்கப்பட்டதாகவல்லவோ இருக்கிறது!! அந்த வீரத்தனம் முட்டாள்தனத்தில் முடிந்திருக்கும்போது, அதனைப் பற்றி ஆச்சரியப்படுகிறோம்; போற்றுகின்றோம் என்ன வீரம் காட்டியும் எவ்வளவும் போர் புரிந்தும் எதிரிகளைக்கவலைக்குள் ஆழ்த்தியும், என்ன அவர்கள்

கண்ட பயன்? எப்படியோ எங்கேயோ ஓடி ஒளிந்து கொண்டனர்; பாவம்!

(சிறிது தூரத்தில் வீராபாயும் பத்மினிபாயும் பக்கீர் வேடம் புனைந்து பாடிக்கொண்டு வருகிறார்கள்.)

பல்லவி.

"சிந்தா சாந்தி கிலா—தேஷாம்—சிந்தா சாந்தி கிலா

சரணம்

சம தம கருணா ஸம்பூர் ணாநாம் — } சிந்தா சாந்தி
ஸாது ஸமாகம ஸங்கீர் ணாநாம் — }

அக்பர்:—(உற்றுகேட்டு) எவ்வளவு இனிமையாக அந்த பிச்சைக்காரர்கள் பாடுகின்றனர்! அவர்களுடைய இனிய பாட்டில் எவ்வளவு உயர்ந்த தத்துவங்கள் அடங்கியிருக்கின்றன பார்த்தீர்களா?—அவர்கள் யாராயிருக்கலாம்? அடே! யார் அங்கே!!

(வாயிற் காவலன் பிரவேசிக்கின்றான்.)

வாயிற் காவலன்:—ஹுஸூர்! (தலை வணங்கி) இதோ காவலன் இருக்கின்றேன்.

அக்பர்:—அங்கே பாடிக்கொண்டு வருகிற பக்கீர்கள் யாவர்?

வாயிற் காவலன்:—ஹுஸூர்! மஹாராஜ்!! அவர்கள் இந்து சன்னியாசிகளென்று சொல்லுகிறார்கள்; கூடாரத்திருகே வரக்கூடாதென்று வேண்டிய மட்டும் எடுத்துச்சொன்னோம்; ஆனாலும், அவர்கள் தங்களைக்காண வேண்டுமென்று சொல்லி ஒரே பிடிவாதமாய் உள்ளே வந்து விட்டார்கள். பக்கீர்களைத் தடங்கல் செய்யப்படாதென்று உத்தரவானபடியால், பலாத்காரமாக அவர்களைத் தடுக்க முடியாமல் விட்டு விட்டோம்; இன்னது செய்வதென்று எங்களுக்கு விளங்கவில்லை; அவர்கள் உள்ளே வந்து விட்டார்கள். மன்னிக்க வேண்டும்; பிரபு!

அக்பர்:—அவர்களை இங்கே அழைத்து வா!

(சிப்பாய் போகிறான்.)

அப்துல் பேஸல்:—அவர்களுடைய குரலை கவனிக்கும்போது அவர்கள் சன்னியாசிகளாகத் தோன்றவில்லை. இன்னவரென்று விளக்கமாகத் தெரிந்துகொள்ள முடியாதவர்களை தர்பார் சமீபத்தில் வரவழைப்பது அத்தனை உசிதமான காரியமன்று; அஜாக்கிரதையுமாகும்.

அக்பர்:—நம்பிக்கையுள்ளவர் எதையும் நம்புவர்; சமுசயமுள்ளவன் எதையும் சமுசயிப்பான்.

(இந்து சன்னியாசிவேடம் புனைந்த வீராபாயும் பத்மினிபாயும் வாயிற் காவலன் பின்னே வருகின்றார்கள்.)

வீராபாய்:—மகமதியக் கடவுளும் இந்துக் கடவுளும் மகா பெரிய பாதுஷாவுக்கு நீண்ட ஆயுளையும் புகழையும் ஈந்தருளுக.

அக்பர்—நீங்கள் சன்னியாசிகளானபடியால் ஆசீர்வதிக்க உரியவர்களே.

வீராபாய்:—நாங்கள் வேலைக்காரர்களும் கருவிகளுமே யாவோம்.

அக்பர்:—(அப்துல் பேஸலைப்பார்த்து) இவர்களது குரல் வெகு இனிமை.

(வீராபாயும் பத்மினிபாயும் பரஸ்பரம் பார்த்துக் கொள்கின்றனர்.)

அக்பர்:—எந்த நாட்டிலிருந்து நீங்கள் வருகிறீர்கள்?

வீராபாய்:—எங்களுக்குச்சொந்தமாக யாதொரு நாடுமில்லை.

அக்பர்:—சுமார் எத்தனை யாண்டுகளாக நீங்கள் இங்ஙனம் சன்னியாசிகளாக இருந்து வருகிறீர்கள்?

வீராபாய்:—இந்த வாழ்க்கையின் இன்பத்தை யிங்ஙனம் அனுபவிக்கத் தொடங்கி நீண்ட நாட்கள் ஆய்விட வில்லை

அக்பர்;—உங்கட்கு மனைவியரில்லையோ?

வீராபாய்:—எங்கட்குரிய விதிப்படி நாங்கள் மனைவி கொள்ளல் தகாது.

அக்பர்:—ஆகவே உங்கட்குப் புத்திரர்கள் இல்லை போலும்?

வீராபாய்:—நாங்கள் ஒரு போதும் மனைவியைப் பெற்றிருந்த தில்லையே.

அக்பர்:—நீங்கள் இருவருமே மிக்க இளைஞர்களாகக் காணப்படுகின்றீர்கள்! அத்தகைய நீங்கள் இங்ஙனம் சன்னியாசிகளாகக் காரணமென்ன ?

வீராபாய்:—இந்த இளம் பிராயத்திலேயே உலகப் பற்றெல்லாவற்றையும் ஒழித்துவிடும்படியான விதி எங்கட்கிருந்தது.

அக்பர்:—எல்லாந் துறந்த நீங்கள் என்னைக் காண வந்ததன் காரணமென்ன ?

(வீராபாய் பத்மினிபாயைப் பார்த்து ஜாடை செய்கிறாள்.)

பத்மினிபாய்:—மகா பாதுஷா அவர்களே! உண்மை சொல்கின்றோம். தாங்களே இவ்வனம் எங்கட்கு விதித்து விட்டீர்கள் என்பதில் யாதொரு பொய்யுமில்லை. தாங்கள் சங்கீதத்தினிடத்திலும் சன்னியாசிகளிடத்திலும் வைத்திருக்கும் அன்பும் காட்டும் ஆதரவுமே எங்களை யிவ்வண் வரச்செய்தன. இல்லாவிடில் அன்னிய மதத்தினராகிய எங்கட்குத் தங்களது கௌரவம் பொருந்திய இந்தத் தர்பார்ப் பிரதேசங்களில் எங்ஙனம் பிரவேசம் கிடைக்கும்?

வீராபாய்:—பாதுஷா அவர்களது—எங்கும் ஓதப் பெற்றுவரும்—கீர்த்திப் பிரதாபங்களைக் கேள்வியுற்ற நாங்கள் சாவதற்கு முன் ஒரு முறை பேனும் தங்களை தரிசனம் செய்வது என்னும் தீர்மானத்தைச் செய்து கொண்டிருந்தோம். அது இன்று பலித்தது.

அப்துல் பேஸல்:—இந்த தினத்திலேயே கட்டாயம் எவ்வகையிலேனும் மாட்சிமை தங்கிய பாதுஷா அவர்களை தரிசனம் செய்து விடுவது என்னும் உறுதியான தீர்மானம் செய்து கொண்டிருந்தீர்கள் என்று கேள்விப் பட்டோம். ஏன்? உங்கள் மரணத்தை இவ்வளவு சீக்கிரத்தில்—இன்றே எதிர் பார்க்கின்றீர்களோ ?

வீராபாய்:—சர்க்கார் அவர்களைத் தரிசனம் செய்தற்கு இன்று கிடைத்துள்ள சமயம் போல் என்றும் கிடைக்க மாட்டாது பாருங்கள்; அல்லாமலும் மரண மென்னும் ஒரு விஷயத்தைப் பற்றிய நிர்ணய மொன்றை நாம் செய்யப் புகுங்கால் நம்மில் யாரிலாவது—நீங்கள் கூட—தமக்குரிய மரணம் இன்று தான்—இன்ன விடத்தில் தான்—இன்ன காரணத்தினால் தான் வரும் என்று துணிந்து சொல்லும் நிச்சயம் உடையவர்களாக இருத்தல் கூடுமோ? அன்றியும் இறப்பு எனும் மெய்ம்மையை இம்மை யாவர்க்கும் மறப்பு எனும். இதனின் மேல் கேடு மற்றுண்டோ? ஆலோசித்துச் சொல்லுங்கள்.

அக்பர்:—ஆம்! எப்போதும் மரணத்துக்கு ஆயத்தத்துடன் இருத்தலே அறிவுடையார்க்கு அழகாகும். இது உண்மையே.

பத்மினிபாய்:—நாங்கள் இக்கோலம் கொண்டபோதே எங்கள் மரணத்தை திடப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

அப்துல் பேஸல்:—ஆமாம்; அது மெய். உங்களுடைய இக் கோலத்தைக் கண்டவுடனே நானும் அப்படியே தீர்மானித்தேன்.

வீராபாய்:—எங்கள் தத்துவ சாஸ்திரமும் உங்களது தீர்மானத்தையே தான் கூறுகின்றது; புறத்தில் காண்பன எல்லாம் தோற்ற மென்பதும், தத்துவம் அகத்தே மறைந்து கிடக்கின்றது என்பதுமே வேதாந்த உண்மைகளாம்.

அப்துல் பேஸல்:—புறத்திற்காணும் தோற்ற மாத்திரையைத் தோற்றமென்றே உணரும் அறிவாளிகட்கு அகத்திற்கிடக்கும் உண்மை வெளிப்படத்தானே செய்யும்.

வீராபாய்:—இல்லை; அப்போதும் உண்மை இலகுவில் விளங்கிவிட மாட்டாது; முதல் தோற்றத்துக்குப் பின்னே மற்றொரு தோற்றமுண்டு; அதுதான் வெளிப்படுமேயன்றி, திடீரென்று உண்மை வெளிப்பட்டு விட மாட்டாது. அந்தத் தோற்றம் இந்தத் தோற்றத்தைவிட இன்னும் உறுதியாக இருத்தலும் கூடும்.

அப்துல் பேஸல்:—ஆஹா !! அப்படியா !!! மிகவும் புத்திசாலித் தனத்துடன் பேசுகின்றீர்களே.

அக்பர்:—கூடாரத்துக்கு வெளியே நீங்கள் பாடிக்கொண்டிருந்தபோது உங்களிருவர் குரலும் கூட மிக்க இனிமையாக இருந்தது. உண்மையில் நான் பாடிக்கொண்டு வருபவர் பெண்களாகவே இருத்தல் வேண்டுமென்று எண்ணினேன்.

அப்துல் பேஸல்:—ஆமாம்; நீங்களிருவரும் பெண்ணாகவே பிறந்திருத்தல் வேண்டும்.

வீராபாய்:—அப்படியாயின் மிக்க சந்தோஷம்! பெண்ணாகப்பிறந்த அந்நியர்கட்குக் கூட இந்த உயர்ந்த தர்பார் தரிசனம் வெகு சுலபமாகக் கிடைக்கக்கூடுமாயின் அது பூஜாபலமன்றோ?

அக்பர்:—உங்களது சாதுர்யமான பேச்சுக்கள் என்னை மிகவும் களிக்கச்செய்கின்றன.

வீராபாய்:—எங்களது சாதுர்ய வார்த்தைகட்கும் அவற்றுக்குக் காரணமான மனோற்சாகத்திற்கும் எங்கள் குரலுக்கும் இந்த எங்கள் தோற்றத்துக்கும் நிலைவான காரணம் எங்கள் எதிரே சாந்தத்துடனும் கௌரவத்துடனும் கம்பீரத்துடனும் வீற்றிருந்தருளும் மஹா பாதுஷா அவர்களின் அற்புதக் காட்சிதான் என்பதில் ஏதேனும் தடையுண்டோ?

(வாயிற் காவலன் பிரவேசித்து ஏதோ ஒரு கடிதத்தை மந்திரி அப்துல் பேஸலினிடம் கொடுக்கிறான்; மந்திரி அதனுட்கிடக்கையைப் படித்து இரண்டு சன்னியாச உருவர்களையும் கவனித்துப் பார்த்தபின், அக்கடிதத்தைப் பாதுஷாவிடம் வணக்கத்துடன் கொடுக்கிறார்; அக்பர் அக்கடிதத்தைப் படித்துப் பார்த்துவிட்டு வீராபாய் பத்மினிபாய்களைக் கவனித்துப் பின் மந்திரியை நோக்கிப் புன்னகை புரிகிறார்.)

அக்பர்:—(வாயிற் காவலனைப் பார்த்து) அப்துல் கரீமை உள்ளே வரும்படியாகச்சொல்.

(வாயிற்காரன் போகிறான்.)

(வீராபாயும் பத்மினிபாயும் ஏதோ தொடர்பான எண்ணத்துடன் பரஸ்பரம் பார்த்துக் கொள்கின்றனர்.)

(அபதுல் கரீம் பிரவேசிக்கின்றான்.)

(வீராபாயும் பத்மினிபாயும் அப்துல்கரீமை பார்த்தவுடன் சிறிது திடுக்கிடுகிறார்கள்)

அக்பர்:—சன்னியாசிகளே! நீங்கள் இந்த மனிதனை இதற்குமுன் பார்த்திருக்கிறீர்கள் போற் காணப்படுகின்றீர்கள். எங்கே, எப்போது, என்ன காரணம் பற்றி, இந்த மனிதனுடன உங்கட்குப் பரிசயம் நேர்ந்தது?

வீராபாய்:—இந்த வாழ்க்கையாகிய நாடகத்தில் பலரும் பரஸ்பர பரிசயங்களைப்பலகாலும் செய்து கொள்ளல் நேர்வதுண்டு. அங்ஙனம் தோன்றி மறையும் பரிசய விசேஷங்களைக் குறித்து எப்போது, எங்கே, என் என்னும் குறிப்புக்களுடன் ஒவ்வொன்றையும் நினைவில் வைத்துக் கொண்டிருத்தல்

யாவர்க்கும்சாத்தியமானதொன்றன்று. இந்த மனிதனுடைய குறிப்புஞ் சொல்லும் இவரது மனப் பூர்த்தியுடன் உண்மை யென்று பாதுஷா அவர்களுடைய இந்தக் கேள்விக்குத் தக்க விடை இவர் குறிப்பிலும் சொல்லிலுமே தோன்றி யிருக்கலாமே.

அப்துல் கரீம்:—ஒருகாரியம் தக்கது தகாதது என்பது அவரவர் நோக்கத்தின் கடமையின் லக்ஷியத்தைப் பொருத்ததாகும். ஒரு காரியத்தை ஆக்கவோ நீக்கவோ அந்த மனிதன் கட்டுப்பட்ட கடமையுள்ளவனே யன்றோ?

(கூடாரத்துக்கு வெளியில் ஏதோ சத்தம் கேட்கிறது)

அப்துல்பேஸல்:—சிப்பாய்! அங்கே என்ன சத்தம்?

(சிப்பாய் பிரவேசிக்கிறான்.)

சிப்பாய்:—ஜிஜியர் சர்க்கார்! மகமதியனுடைய வேஷம் தரித்துக் கொண்ட ஒரு ராஜபுத்திரப் போர்வீரன் நமது கூடாரத்தைச் சுற்றி வளைய மிட்டுக்கொண்டே யிருந்தான். காவலர்கள் அவனைப் பிடித்துக்கொண்டு வந்திருக்கிறார்கள்; தர்பாரில் உத்தரவானால் இங்கே அழைத்து வருகின்றோம்.

அக்பர்:—பலே தில்ஜி! இன்று மாலை யாரம்ப முதல் ஏதேனும் குழப்பங்கள் நடந்துகொண்டே யிருக்கின்றன. எதிரிகள் சும்மா இருக்க மாட்டார்கள் போலிருக்கிறதே.

அப்துல்பேஸல்.—அப்படித்தான் தோன்றுகிறது. இன்னும் எத்தனை பேர் இங்ஙனம் வரக் காத்துக் கொண்டிருக்கிறார்களோ! யார் அறிவர்?

அக்பர்:—(சிப்பாயைப் பார்த்து) கொண்டுவா! அந்த ராஜபுத்திரனை யிங்கே!

(இப்படி சொல்லிவிட்டு அக்பர் வீராபாயையும் பத்மினிபாயையும் கவனித்தார்; அவ்விருவரும் பரஸ்பரம் பார்த்துக் கொள்கின்றனர்.)

(பிரதாப் ஸிங் என்னும் ராஜபுத்திர வீரனுடன் சிப்பாய் பிரவேசம்.)

(வீராபாயும் பத்மினிபாயும் பிரதாபனைக் கண்டவுடன் திடுக்கிடுகின்றனர்; உள்ளே பிரவேசித்தவுடன் அப்துல் கரீமும் பிரதாபனும் பரபரப்புடன் பார்த்துக் கொள்கின்றனர்.)

அக்பர்:—(பிரதாபனை நோக்கி) யாவன் நீ? எனது இருக்கையைச் சுற்றி இம்மாறு வேடத்துடன் திரிந்து கொண்டிருக்கக் காரண மென்ன?

அப்துல்பேஸல்:—உதயஸிங்கின் ஒற்றர்களில் ஒருவன் போலும் நீ! காட்டை நாடி ஓடி ஒளிந்து கொண்டிருக்கும் உங்கள் அரசனுடன் நீயும் ஓடி ஒளிந்து கொண்டு க்ஷேமமா யிருக்கலாமே? ஏன் இங்கே வந்தாய்?

பிரதாப்ஸிங்:—(மந்திரியின் கேள்விக்கு மாற்றம் கூறாமல் மன்னவரை நோக்கித் துணிவுடன்) மாட்சிமை தங்கிய பாதுஷா அவர்களே! ஒரு ராஜபுத்திர வீரன் மாறு வேஷத்துடன் பாதுஷாவின் கூடாரத்தைச் சுற்றிக் கொண்டிருப்பது பாதுஷாவின் நன்மைக்காக வல்ல வென்பதும் அங்ஙனம் சுற்றிக் கொண்டிருக்கும் அவன் பிடிபடுவானாயின் அந்த ராஜபுத்திரன் தான் வந்த சங்கதியை மறைத்துப் பொய்யுரைக்க மாட்டானென்பதும் பாதுஷா அவர்கள் அறிந்த உண்மைகள் தாமே.

அக்பர்:—இருக்கட்டும்; இந்த சன்னியாசிகளை யுனக்குத் தெரியுமா? (அப்துல் பேஸலைப் பார்த்து) மந்திரி! பலே தில்ஜி! நம்மைத்தவிர ஏனையர் யாவரும் இந்தசன்னியாசிகள் யாவரென்பதை யறிந்து கொள்ள ஆர்வ முடையவர் போல் காணப் படுகிறார்களென்பதை யுணர ஆச்சரியமாகவே இருக்கிறது,

(வீராபாயும் பத்மினிபாயும் மறு முறையும் பரஸ்பரம் பார்த்துக் கொள்கின்றனர்)

பிரதாப்:—நான் டில்லி பாதுஷாவின் வேலைக்காரனல்லன். ஆகையால் பாதுஷா இந்தக் கேள்வியை யென்னைப் பார்த்துக்கேட்டதை நான் மறுக்கிறேன். பாதுஷாவின் தீரமான பகைவன் என்பதை பாதுஷா அவர்கள் மனதில் குறிக்கொண்டு பேசட்டும்.

அக்பர்:—நாம் உனக்கு இன்னொரு அவகாசம் கொடுக்கிறோம். அதற்கு நீ உண்மையாகவும் வணக்கமாகவும் மறுமொழி தருவாயாகில் நீ உயிருடன் வாழக்கடவாய்; அன்றெனில் ஒரு கணப்பொழுதில் உன் தலை யிங்கிருந்து பறந்து போய்விடும்.

பிரதாப்:—(மிக்க அலக்ஷியமாகப் புன்னகையுடன்) சத்தியமாகச் சொல்லுகிறேன். ஒரு ராஜபுத்திரனை மரணத்தைக் காட்டி பயமுறுத்திச் சொன்ன கதையைக் கேட்டது இதுதான் முதல் தடவை யாகும்.

அப்துல்பேஸல்:—ராஜபுத்திர வீரனுக்கும் பெண்டிர் மக்கள் உண்டல்லவா?

பிரதாப்:—ஒரு ராஜபுத்திரன் மணந்து கொள்வது கௌரவத்தின் பொருட்டே யாகும்; அவன் வாழ்வதும தனது தேசத்தின் பொருட்டே யாகும்.

அக்பர்:—இம்மாதிரி பல ராஜபுத்திர வீரர்களிடமிருந்து பன்முறை கேட்டிருப்பதாக நினைவிருக்கிறது. அஃதிருக்கட்டும்; ஆனால் நீ வேணும் புத்தியுடன் பிழைத்துப் போவாயென்றெண்ணுகிறேன். நீ உன்னுடைய துணிகரத்தினால் இங்குள்ள உனது நண்பர்கட்கு உதவுவதாக இன்னும் கருதுவாயாகில் நீ பிழை செய்ததாகவே கருதப் படுவாய். என்ன சொல்கிறாய்!

பிரதாப்:—மேலொன்றும் நான் சொல்லப் பிரியப்பட வில்லை.

அக்பர்:—இவர்கள் இன்னாரென்பதை நான் அறிந்து கொள்ள வில்லை யென்பது உனது உத்தேசம் போலும்.

பிரதாப்:—உண்மையை யறிந்தும் அறியாதவர் போல் கேட்கும் கேள்விகட்கு உண்மை யுணர்ந்தவன் எங்ஙனம் பதில் சொல்லுவான்?

அக்பர்—சாவுக்குத் துணிந்தனை யாதலின் இங்ஙனம் லக்ஷியம் செய்யாமல் பேசுகின்றனை போலும்; சிப்பாய்! நமது ஜாகையைத் தீய எண்ணங்கொண்டு மாறு வேஷத்துடன் சுற்றித் திரிந்து கொண்டிருந்த இந்த ராஜபுத்திரனைச் சித்தூர் வீதியில் நாளை காலையில் யாவருமறியக் கழுவி லேற்றும்படி நாம் உத்திர விட்டதாக சேனாதிபதியிடம் சொல்லிவா. இவனை யழைத்துபோ.

சிப்பாய்—சர்க்கார் உத்திரவின் படியே.

(கூடாரத்திலிருந்து பிரதாபஸிங்கை யழைத்துப்போக முயல்கிறான்)

(வீராபாயும் பத்மினிபாயும் பிரதாப் கொலைக் களத்துக்கு அழைத்துப் போகப் படுகிறான் என்பது தெரிந்தவுடன் தங்களைக் காப்பதற்காக மாறு வேடம் புனைந்து வந்து இங்ஙனம் உயிரிழக்கத் துணிந்திருக்கும் அவனைத் தாங்கள் காப்பாற்ற எண்ணி பரஸ்பரம் சைகை செய்து கொண்டு எழுந்து பாதுஷாவின் எதிரே முழங்கால் மண்டியிட்டு வணக்கம் செய்து)

வீராபாய்.—மஹா சக்கரவர்த்தியே! டில்லிப் பிரபுவே!! சாந்த மூர்த்தியே!!! இரக்கத்துக்கும் சாந்தத்திற்கும் தனி மூர்த்தி யென்று எங்கும் யாவராலும் புகழ்ப் பெற்ற தாங்கள் எங்களிருவரையும் காப்பாற்றுதற் கென்றே துணிந்து பகைவர் பாது காப்பில் வந்து நுழைந்து இத்தகைய ஆபத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் நிரபராதியான ஒரு சத்த

வீரையாவது சுதந்திர வுணர்ச்சிக்காகக் கொலை செய்திடும்படி உத்தரவு இட்டு விடுதல் தங்களது அரிய பெரிய புகழினுக்கு ஆறாத அழுக்கையல்லவோ தருவதாகும்!

அக்பர்:--உண்மை பேசுங்கள்! மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுங்கள்!! நீங்கள் யார்!!!

வீராபாய்—(தனது சன்னியாச கோலத்தை யுடனே எடுத்துவிட்டு, தனது உண்மையான மகா ராணி கோலத்துடன் நிற்கின்றாள்; பத்மினிபாயும் அவ்வணமே செய்கின்றாள்)

“ இதோ எங்களது உண்மைக் கோலத்தையும் நிகழ்ச்சியையும் பாதுஷா அவர்கள் அறிந்து கொள்ளட்டும். நான்தான் சித்தூர் உடைய ராணாவின் பட்டமகிஷி வீராபாய். அவள் ராணா அவர்களின் சகோதரி பத்மினிபாயம்மாள், போர்க்களத்தில் பாதுஷா அவர்கட்கே முற்றும் வெற்றி தோன்றி, பாதுஷா அவர்கள் சித்தூரைக் கைப்பற்றிக் கொள்வீர்களென்பதை ராணா அவர்கள் அறிந்து, மீண்டும் துணிந்து போர் செய்யக் கருதாது, தங்கள் ரஜபுத்திர தர்மத்தையும் காப்பாற்ற நினைக்காமல், அவமதிப்பையும் கவனியாமல், மலைகளிலும் காடுகளிலும் ஓடி ஒளிந்து கொள்ளப் போய்விட்டார் என்பதைத் தெரிந்தவுடனே நாங்களிருவரும் யுத்தப்பயிற்சி யற்றவராக இருப்பினும், ஆண்வேடம் புனைந்து உள்ளதொரு சிறிய சேனையுடனும் தோன்றி தங்களுடன் போர் தொடுத்தோம். ஆனாலும் எங்கள் பெரு முயற்சியெல்லாம் குன்றின் மேற் பெய்த மழையாகவே நாங்கள் தோல்வியடைந்தோம்; எங்கள் சேனையெல்லாம் அழிந்தது; எங்கள் நகர் அபகரிக்கப்பட்டது; நாங்கள் நம்பிக்கை யிழந்தோம். எங்களது பெருமையும் குலமரியாதையும் கூடப்போயின. ஆகையால் உயிருக்குத்துணிந்து இந்த வேஷத்துடன் தங்கள் கூடாரத்தில் நுழைந்து தங்களைப் பழிவாங்குவதென்று கருதி வந்தோம். ஒரு வார்த்தையில் சொல்லுகிறேன்; தங்களை நாங்கள் கண்டவுடனே தங்களை பெவ்விதத்திலேனும் கொலை செய்துவிட்டு நாங்களும் தற்கொலைசெய்து கொள்வதென்று தீர்மானித்துத் துணிந்து வந்து தங்கள் கூடாரத்திற் பிரவேசித்துத் தங்களைத் தரிசித்த மாத்திரத்தில், தங்களது பிரசன்ன முகத்தையும் சாந்த குணத்தையும் காம்பீர்யத்தையும் கண்டவுடன் எங்கள் குரூர எண்ணங்கள் ஓடி யொளிந்து போய், நாங்கள் வானரங்கு நின்றோம்; தங்களது கருணைக் கண்களைக்கண்டு நடுங்கி எங்களது செய்கையை வெறுத்தோம். எங்களால் காப்பாற்றப்பட்டு உயிர்தப்பிப் பிழைத்து இங்கு வந்திருக்கும் இதோ இங்கிருக்கிற இந்த அப்துல் கரீம் ஒரு ஆண் மகன் ஒரு போர் வீரன் என்பதையும் மறந்து எங்களை யலைக்கழித்துத் தன்னாற்கூடிய கேடுகளைச்செய்தான். இதுதான் எங்கள் செய்கை. பாதுஷா அவர்களது இஷ்டப்படி நியாயம் செய்யலாம்; எங்களைக்கொன்று எங்கட்காக உயிர்விடத் துணிந்து நிற்கும் சுத்த வீரனான அந்தப்பிரதாபனை அந்த நிரபராதியை மன்னித்து விடுதலை செய்ய வேண்டுகிறோம். பெருமையும் சாந்தமும் நிறைந்த பாதுஷா அவர்களை நாங்கள் துதித்து வேண்டுகிறோம்; குற்றவாளியைத் தெரிந்து குற்றத்துக்கேற்ற தண்டனை விதிக்க மன்றாடுகிறோம்.

அக்பர்:—எழுந்திருங்கள்! மகா ராணிகளே!! இத்தகைய வீரமும் பெருந்தன்மையும் கொண்ட ஆன்மாக்களே இவ்வணம் ஒருவரை யிறைஞ்சுதல் தகாது. உங்களது ரஜபுத்திர வீரத்தின் பொருட்டும், பெருந்தன்மையின் பொருட்டும், உங்கள் தேச பக்தியின் பொருட்டும், எல்லாவற்றுக்கும் மேலான உங்களது சத்தியத்தின் பொருட்டும் நான் இவனையும் மன்னித்து, என்னை மன்னிக்கும்படி உங்களைவேண்டிக்கொள்ளவும் செய்கிறேன். ஆனால் எனது பட்டத்துப் போர் வீரனாகிய அப்துல் கரீம் பேரில் சாட்டிய குற்றங்கள் தவறானவை. உண்மையாக நடந்தவற்றை யெல்லாம் எழுதி இதோ இந்தக் கடிதத்தை முன்னரே யவன் அனுப்பியிருக்கிறான். அவன் எஜமான் பக்தன்; உண்மைச்சேவகன்; இதல்லாமல் அவனால் ஏது செய்தல் கூடும்? இதோ இந்தக் கடிதத்தினைப் பாருங்கள்! உங்களைக் காப்பாற்றும் பொருட்டு எத்தனை நியாயங்கள் கூறியிருக்கின்றானென்பதை யறிந்து கொள்வீர்கள். உண்மையும் உறுதியும் இல்லாதவனாகில் இத்தகைய கஷ்டங்கள் ஒன்றுக்கும் அவன் ஆளாகாமல் எங்ஙனமேனும் அவன் தப்பித்துக்கொண்டிருத்தல் கூடும். பாடிக்கொண்டு வரும்போது உங்கள் குரலைக்கேட்டவுடனே எனக்குள் சந்தேகம் தோன்றியது; இங்கு வந்த பிறகு உங்களது முகத்தில் நாணம் முதலிய தன்மைகள் தோன்றவே, அந்த சந்தேகம் இரட்டித்தது; பிறகு சம்பாஷணையில் அது பூர்த்தியாகி உண்மை தோன்றியது. இவற்றை யெல்லாம் நன்கு இக்கடிதமும் விளக்கிக்கொண்டிருக்கிறது; ஆயினும் இத்தகைய வீர மாதர்களாகிய நீங்களிருவரும் சுத்த பயங்காளியாகப் புறமுதுகிட்டு ஓடி மலைகளில் ஒளிந்து கொண்டிருக்கும் அந்த உடையசிங்கிற்கு எவ்வணம் உறவின் முறையிற் பொருந்தமாவீர்களென்பதுதான் இன்னும் எனக்கு ஆச்சரியமாக இருக்கின்றது.

வீராபாய்:—ஆண்வேடம் புனைந்தாலும் பெண்ணின் சுபாவம் போகாதென்பதை இன்று கண்டுகொண்டோம்.

அப்துல் பேஸல்:—ஆன்ம சக்தி தளர்ந்ததாகாது; அந்தப் பெண் உருவம ஆன்ம சக்தியைத் தளரச்செய்து விடுகிறது.

அக்பர்:—மகா ராணிமார்களே! தங்களிருவர்க்காக நான் ஏதேனும் என் கடமையைச் செய்ய அனுமதி கொடுப்பீர்களா?

பத்மினிபாய்:—ஆமாம்! மாட்சிமை தங்கிய பாதுஷா அவர்கள் எங்கள் உயிருக்கும் அவமானத்துக்கும் ஒரு முடிவு காட்டியருளல் வேண்டும்.

அக்பர்.—இங்ஙனம் பேசாதீர்கள்; நீங்கள் ஏன் இறக்க விரும்புகிறீர்கள்?

வீராபாய்.—இனிஉயிருடனிருப்பது அவமானமல்லவா? சித்தூர் அந்தப்புரத்தைச் சேர்ந்த இரண்டு கோஷா ஸ்திரீகள்—ராணிமார்கள்—மாறு வேஷங்கொண்டு அக்பர் பாதுஷாவின் கூடாரத்துக்கு அருகே போய் பிடிபட்டார்கள் என்பது இன்று நாளை உலகு அறியுமானால் எங்கள் கௌரவம் என்ன பாடுபடும்? அத்தகைய அவமானப் பேச்சுக்குப் பிறகு நாங்கள் உயிர் வாழ்தல் தகுதியா? மரணமொன்றே எங்கட்குப் புகலிடம்!

அக்பர்.—உங்கட்கு மரண மளிப்பதை நான் மறுக்கிறேனென்று வைத்துக் கொள்ளுங்கள்; அப்போது:—

வீராபாய்.—நீங்கள் வாக்குக் கொடுத்து நாங்கள் கேட்டதைத் தாராமல் மறுத்தவராகிறீர்கள்.

அக்பர்.—நண்பரே! பஸ-ல்ஜி!! இத்தகைய உயர்ந்த வீரச் செயலைப் பற்றி தாங்கள் எங்ஙனம் நினைக்கிறீர்கள்?

அப்துல் பேஸல்.—(மகிஷிகளைப் பார்த்து) உங்கள் நாட்டுப் பெண்மணிகளெல்லாம் இத்தகைய வீரம் பொருந்தினவர்கள் தாமோ?

வீராபாய்.—இல்லை, அவர்களெல்லோரும் எங்களைக் காட்டிலும் வீரர்கள். இங்ஙனம் அவ

மானப்பேர் கண்டவழி இதுவரையிற் கூட பிராணனை வைத்திருக்க நினையார்கள்.

அக்பர்.—உங்களது இந்த வீரச் செயலை—சுதந்திரச் செயலை—அவமானச் செயல் என ஏன் சொல்லுகிறீர்கள்? நீங்கள் எதனை விரும்பினாலும் அதனை யளிக்கின்றேன். கேளுங்கள்.

பத்மினிபாய்.—யாசித்தலை நாங்கள் பழகவே யில்லை.

அக்பர்.—ஆனால் நீங்கள் கேளாமலே நான் கொடுக்கிறேன்; உங்கள் ராஜ்யத்தைத் திருப்பி யுங்கட்குக் கொடுக்கிறேன். (வீராபாயைப் பார்த்து) "நாளைக் காலையில் நீங்களிருவரும் உங்கள் ராஜகோலத்துடன் உங்கள் நகரத்திற்கு அழைத்துச் செல்லப்பெற்று உங்கள் பர்த்தாவுக்குப் பதிலாக சித்தூர் அரச கிரீடத்தைப் புனைவிக்கப் பெறுவீர்கள்.

வீராபாய்.—தாங்கள் அளிப்பது ஒரு அரசாட்சியே யாயினும், இத்தகைய நிபந்தனையுடன் நான் எப்படி ஏற்றுக்கொள்வேன்?

அக்பர்.—அடேயப்பா!! உங்களைத் திருப்தி செய்தல் கடினம் தான்; ஆஹா! பெண்களல்லவா நீங்கள்!! எவ்விதத்திலும் உங்களைத் திருப்தியாக்குவதென்றே தீர்மானித்திருக்கிறேன். ஆகையால் உங்கள் ராஜ்யத்தை யாதொரு நிபந்தனையும் நிர்ப்பந்தமுமில்லாமல் உங்களிஷ்டப் பிரகாரம் நீங்கள் எடுத்துக் கொள்ளும்படி நான் மனப்பூர்த்தியாய்க் கொடுக்கிறேன். சரிதானே?

வீராபாய்—இத்தகைய பெருந்தன்மையும் பரோபகாரமும் மன்னிப்பும் உலகம் இது வரையில் கண்டிருக்கின்றதோ? ஆச்சரியம்!

பத்மினி.—உங்களது பெருந்தன்மையும் இப்பரோபகாரத் தன்மை போலவே உலகிற் பரவிப் பெருகுக.

வீராபாய்.—எவ்விதத்திலும் தங்கள் பெருமையைக் காப்பதே பெருமை யுடையோர்க் கழகு.

தற்கால நாகரிகம்.

(ஸ்ரீமதி இராதாபாய்)

நாகரிகம் என்னும் பதத்திற்கு அவரவர் யுக்திக்கும் புத்திக்கும் தகுந்தவாறு இலக்கணங் கூறியிருக்கின்றார்கள். உலகத்தில் சமுதாய முன்னேற்றத்திற்குரிய நற்கருமங்கள் இயற்றி நமது சமுதாயத்தை அபிவிருத்தி செய்வதையே நாகரிகம்என்று நான் கூறத்துணிவேன். எந்த ஜாதியிற் பிறந்தாலும் எவ்வருணத்து உதித்தாலும் எம்மதத்தைக் கையாடினும் பிறர் நமக்கின்னலே விளைவித்தாலும் நாம் என்றும் நன்மை கடைப்பிடித்துத் தீயாரையும் நம்மாலியன்ற அளவு சீர்திருத்த முயற்சி செய்வதே நமது பெரிய கடமையாகும். ஆடவர், மகளிர், இளையோர், முதியோர் யாவரும் ஆங்கிலேய பாஷையை வழுவறக் கற்றுணர்ந்து, ஐரோப்பிய அமெரிக்கா ஜனங்கள் ஒழுகா நிற்கும் நடையுடை பாவனைகளை நன்கு பின்பற்றி அவர் தம் தடத்தில் மிதித்து நடக்கவேண்டும் எனக் கூறுவாருமுளர். லண்டன் மாநகரிலும் பாரீஸ் நகரத்திலும் ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு மணிக்கூறிலும் நடையுடை பாவனைகள் மாறிக்கொண்டிருப்பதாகப் பத்திரிகைகளினின்றும் வாசித்தறிகிறோம். இவைகளையே சிறந்த நாகரிகம் என்று கூறுகின்றார்கள். ஆராய்ந்து உற்று நோக்குவோமாயின் இல்லறநெறி பிறழாது எவ்வாறாயினும் பிறருக்கு இன்னலே விளைவிக்காமல் இல்லற தருமத்தை இயற்றுவதே சிறந்த தருமமாகும். இவ்வியாசத்தில் திருவள்ளுவர் கோட்பாடுகளையே

மிக்கவாறு எடுத்துக்கூறி அதன் பொருளை நன்குணர்வோம். பெண்கள் முன்னேற்றமே இப்பத்திரிகையின் முழுநோக்கம் ஆகையினால் அவர்கள் பயிற்சி செய்யவேண்டும் மார்க்கங்களை நன்றாய்க் கருதுவோம். பெண்கள் யாவரும் முன்னேற்றமடைவாராகில் ஆண்பாலார் யாவரும் அவரைத் தொடர்ந்து செல்வாரென்பது திண்ணம். தாலாட்டுங்கையே செங்கோலாட்டும் வேந்தர்களுக்கும் நல்லமுதளிக்குங்கை. தொட்டிலாட்டுங்கையே உலகை ஆள்கின்றதென்ற ஆன்றோர் வசனமும் பொய்யாகுமோ? அரசராயினும், அமைச்சராயினும், படைவீரராயினும், பணிந்துழைக்கும் குடிகளாயினும், செல்வர்களாயினும், வறுமையாளராயினும், யாவரும் தமது பாலிய காலத்திலேயே மாதர்களாலேயே ஊண் உடை அளிக்கப்பட்டும், அவரது நெறி கடைப்பிடித்தே வாழா நிற்கின்றனர். உலகிலே பெரியோராய் மதிக்கப்படுகின்றவர்களெல்லாம் மிகுந்த விவேகத்தையும் ஊக்கத்தையும் கொண்ட தாய்மார்களையே உடைத்தாயிருப்பார் என்பது முற்றிலும் உண்மை. இயற்கையான நற்குணமும், செயற்கையில் சிறந்த ஒழுக்கங்களும் உடைய மகளிர் வயிற்றிற்றோன்றுகின்ற குழந்தைகள் மிகுந்த பாக்கியசாலிகளாகவே இருக்கவேண்டும். நெறி பிறழாத மக்களைப்பெற்றோர் மிகவும் பெரியோராய் யாவராலும் மதிக்கப்படுவர். ஆகவே உலகில் மகளிர் கடமை மிகவும் பெரிதென்றும் அவராலேயே பெருமையும் சிறுமையும் ஏற்படுகின்றன வென்றே நன்கறிக்கின்றோம்.

இனி ஆசிரியர் திருவள்ளுவனார் முதுமொழிக் குறளில் இல்லறத்தைப்பற்றிக் கூறுகின்ற மொழிகளைச் சற்றே கவனிப்போம். இவ்வாழ்க்கைக்கு வேண்டும் இன்றியமையாத மாதர்களிடத்தே விரும்பபபடும் குணங்களென்ன?

"பெண்ணிற் பெருந்தக்கயாவுள கற்பென்னுந்
திண்மை யுண்டாகப்பெறின்."

அறம் பொருள் இன்பம் மூன்றிலும் கற்புடைய இல்லாளின் மேம்பட்ட பொருள்கள் இவ்வுலகத்தே காண்பதரிது. அதுபற்றி மகளிரிடத்தே முதன்மையாக வேண்டப்படும் 'கற்பே' மிகச் சிறப்புற்றதெனக் கூறவும் வேண்டுமோ. அக்கற்புடைய மகளிரிடமும் அன்பெனும் குணமும் அமைந்திருத்தல் வேண்டும்:—

"அன்பின் வழிய துயிர் நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த உடம்பு."

உயிருக்கே ஆதாரமாயுள்ளது அன்பென்றும், அவ்வன்பிலா உடம்பு பாழ்உடம்பே—உயிரற்ற பிணமெனப் பொருள் படுமாயின், இல்லாள் தமதினத்தாரிடத்தும், பிறஉயிர்களிடத்தும் எம்மட்டு அன்பு காண்பித்தல் வேண்டும்.

இல்வாழ்வாள் மனத்தின்கண் உவகையை வெளியிடுபனவாகிய இனிய சொற்களையே எப்பொழுதும் உபயோகித்தல் வேண்டும். பிறர் கூறிய இன்சொல் தனக்கின்பம் பயத்தலை அனுபவித்திருக்கின்றவர் பிறர்மாட்டு வன்சொல்லைச் சொல்லி அவரைப்புண் படுத்துகின்றார் மானிடராகக் கருதவும படுவரோ.

மெய் மொழி மனம் இவை ஒருபொழுதும் தீய நெறிக்கண் செல்லாது அடக்கமுடையராய் இருத்தல் வேண்டும். அப்பொருள் பற்றியே:—

"காக்க பொருளா வடக்கத்தை யாக்க
மதனினூங் கில்லை யுயிர்க்கு"—

எனக்கூறியிருக்கின்றார். உயிர் நிலையையுடைய மக்களுக்கு அடக்கமே சிறந்த செல்வமாதலின் அவ்வடக்கததையே உறுதிபொருளாகக்கொண்டு அழியாமற் காக்ககடவர்.

சாதியினாலும் வருணத்தினாலும் ஒருவருடைய நிலை மேன்மை அடைய முடியாது. ஆனால் அவரது ஒழுக்கத்திற்கேற்ப உயர்ந்தோருள் வைக்கப்படுவர். அதுபற்றியே ஒழுக்கத்திற்கு உயிரினும் மேம்பாடாகிய பதவியளித்து உயிரினும் சிறந்ததாக ஒழுக்கத்தைப் பாதுகாக்கவேண்டும் எனப்பொருள்படுகின்ற குறளடியைக் கூறுகின்றார்:—

"ஒழுக்கம் விழுப்பந்தரலா னொழுக்க
முயிரினு மோம்பப்படும்."

மேற் கூறியவைகளினின்றும் தற்கால நாகரிக நிகழ்ச்சிகளும் நடையுடை பாவனைகளும் நமது இந்திய மாதர்களுக்கு நன்மை யளிக்க முடியாதென்றும் நமது பூர்வீக நூல்கள் போதனை செய்கின்ற நெறி யொழுக்கங்களைக் கடைப்பிடித்து நடப்போமாயின் அவைகள் நமக்கு இன்றும் என்றும் நன்மை பயக்குமென்பதும் அறியக்கிடக்கின்றது.

சுபம் !

சுந்தரி.

சிறுகதை.

(ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி.)

1-வது அதிகாரம்.

பூந்தமல்லியில் ஒரு விசாலமான மைதானத்தின் நடுவில் ஒரு மாளிகை மிகவும் உன்னதமாய்க் கட்டப்பட்டு விளங்கியது. அதன் முன் பக்கத்தில் புற்கள் ஏராளமாய் வளர்ந்து அழகாய் வெட்டிவிடப்பட்டு பார்வைக்குப் பச்சைப் படுக்கை விரித்தாற்போலும் காணப்பட்டன. இந்நாளில் நில மகப்படுவது அருமையாதலால் ரங்கநாத முதலியார் அவ்விடத்தை அதிக விலை கொடுத்தே வாங்கினார். அவர் வியாபாரத்தினால் ஏராளமான பணம் சேர்த்து யாவராலும் நன்கு மதிக்கப்பட்ட ஒரு கண்ணியமுள்ள மனிதர். அவருடன் வியாபாரம் செய்த மற்ற வியாபாரிகளுக்கும் அவரிடத்தில் நிரம்ப மரியாதையுண்டு.

நல்ல சித்திரை வைகாசி மாத மாதலால் அழகான அந்த சந்தியா காலத்தில் தோட்டம் பார்க்க அதி ரமணீயமாயிருந்தது. அப்பொழுதுதான் உதித்த சந்திரன் தன் மெல்லிய கிரணங்களை மல்லிகை மலர்களின் மேல் வீசி அவைகளின் வெளுப்பை இன்னும் அதிகரித்துக் கொண்டிருந்தான். இன்னும் சிறிது நேரத்திற்குள் மூடிக்கொள்ளப் போகும் புஷ்பஜாதிகளின் வாசனையால் அங்கெங்கும் இனிய நறுமணம் கமழ்ந்து கொண்டிருந்தது. அம் மாளிகையின் முன் பக்கத்தறை யொன்றின் ஜன்னலருகில் ஒரு சிறு பெண் நின்று வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். புஷ்பங்களின் வாசனை அவளுக் கடித்ததும் ஏற்கனவே களிப்புடன் கூடியிருந்த அவள் இருதயம் மேன்மேலும் ஆநந்தத்துடன் பொங்கி யெழும்பியது.

இச்சிறுமி ரங்கநாத முதலியாரின் மைத்துனன் குமாரி. சிறு குழந்தையாயிருக்கும் போதே தாய் தந்தை இறந்து போனதால் இவர்கள் வீட்டிலேயே வளர்ந்து வந்தாள். எப்பொழுதும் சிரிப்பும் விளையாட்டும் உற்சாகமுமுள்ள பதினான்கு வயது கொண்ட ஓர் பெண்மணி. இன்னும்பதினைந்து நிறையவில்லை. மலர் போன்ற அவள் முகத்தில் சந்தோஷக் குறிகளேகாணப்பட்டன. கறுத்தடர்ந்த அவள் கூந்தல் வாரிக்கட்டபடாமையால் அழகிய சுருள்களுடன் அவள் மார்பின் மேலும்

தோள் மீதும் புரண்டு கொண்டிருந்தது. தன்னிரு குமாரிகளான வனஜா, பத்மா இவர்களுடன் ரங்கநாத முதலியார் மனைவி ஒரு நண்பர் வீட்டில் நடக்கும் காலக்ஷேபத்திற்கு சென்றிருந்தாள். ரங்கநாத முதலியார், அவர் மகன், அவர் சகோதரன் குமாரனான விஜயசுந்தரம் இம்மூவரும் உள்ளே ஏதோ ஒரு விஷயமாய் பேசிக் கொண்டிருந்தனர். பட்டணத்திற்குக் காரியமாய்ப் போயிருந்தபடியால் இவர்கள் வீட்டிற்குத் திரும்பிவர சிறிது நாழிகையாய் விட்டது

சுந்தரி என்னும் பெயருடைய அப்பெண்மணியின் முகத்தில் காணப்பட்ட சந்தோஷக் குறிகள் அவள் இருதயத்திலிருந்த ஆநந்தத்தின் பிரதி பிம்பமே தவிர வேறல்ல. அதன் காரண மென்னவெனில் அபூர்வமான ஒரு அன்புடன் ஒரு யுவகனை அவள் காதலிக்கக் கற்றுக்கொண்டதே. அவளதுபோன்று ஆழ்ந்ததாயும், வேரூன்றியதாயுமுள்ள காதல் வாழ்நாள் முழுவதையுமே வேறுவிதமாக மாற்றக்கூடிய சக்தி வாய்ந்த தன்றோ.

அறைக் கதவு திறக்கப்பட்டு உள்ளே யாரோ வரும் சத்தம் கேட்டது. சுந்தரி திரும்பிப் பார்க்கவில்லை. அவள் தானிருந்த விடத்திலேயே நின்று தனக்குள்ளேயே ஒரு பாட்டினுடைய அடியை மெல்லப் பாடத் தொடங்கினாள். ஆயினும் அவள் இருதயம் சந்தோஷத்தால் பட பட வென்றடிக்க, அவள் கபோலங்கள் ரோஜாப் புஷ்பம் போற் சிவந்தன.

"என்ன சுந்தரி! நீ இங்கேயா இருக்கிறாய்? அவர்களுடன் நீயும் காலக்ஷேபத்திற்குப் போயிருக்கிறா யென்றல்லவோ நான் நினைத்திருந்தேன்!" இப்படிப் பேசியது ரங்கநாத முதலியார் மகன் ஞானசம்பந்தம். ஒரு நிமிஷத்திற்குமுன் மட்டில்லா ஆநந்தத்துடன் மலர்ந்த அவள் முகம் சரேலென வாடியது. மெதுவாய் திருப்பிப் பார்த்தாள்.

'அங்கே போகவெனக்குஇன்று விருப்பமில்லை. பேலும் எவ்வளவு பேர் போவதென்று அத்தை அம்மாள் சொல்லவே நான நின்று விட்டேன்' என்றாள்.

"உன்னை இங்கு விட்டுப் போவதற்காக அம்மா அப்படிச் சொல்லியிருக்க வேண்டும். வனஜாவாவது, பத்மாவாவது உன்னுடன் இங்கு வீட்டிலேயே தங்கியிருக்கலாம்" என்று ஞானசம்பந்தம் சொல்ல, 'அவர்களிருவரும் வயதில் என்னைவிட எவ்வளவு பெரியவர்கள்! எனக்காக வீட்டிலேயே உட்கார்ந்திருப்பார்களா? 'ஞானசம்பந்தம்! அதை யொன்றும் நீ தப்பாக நினைக்க வேண்டாம். காலக்ஷேபத்திற்குச் செல்ல விருப்பமற்று வா வில்லை யென்று கூறியது நான் தான். வேறொருவருமல்ல. அப்பா போகவில்லையா?' என்று சுந்தரி கூறினாள்.

" இப்பொழுது என்னுடன் வரவில்லை. சிறிது பொறுத்துப் போவார். விஜய சுந்தரத்துடன் சில விஷயங்களைப் பற்றி அவர் ஏதோ ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார். சரி; நான் போய் வரட்டுமா?". விஜய சுந்தரத்துடன் சில விஷயங்களைப்பற்றி ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறாரென்று சொல்லும் பொழுது அவன் தயங்கியதை யொன்றும் சுந்தரி கவனிக்கவில்லை. அவள் மனதில் சற்று விநோதமாய்ப் பட்டதெல்லாம், விஜயசுந்தரமென்று அவன் கூறிய தொன்றே. ஏனெனில் விஜய மென்ற பெயரைத் தவிற வேறு பெயரால் ஒருவரும் அவனை யழைக்க அவள் கேட்டதே யில்லை. ஞானசம்பந்தம் வெளியிற் போவதை அவள் பார்த்துக் கொண்டே நின்றாள். அவனுக்கு இருபத்து மூன்று வயதாயிற்று. நல்ல உயரமும் அழகும் பொருந்தியவனா யிருந்தான்,

சில நாட்களுக்கு முன்புதான் அவனை அவன் தந்தை தன் வியாபாரத்தில் ஒரு பாகஸ்தனாகச் சேர்த்து வைத்தார்.

சுந்தரி கதவைத் திறந்து வெளிமைதானத்தி லிறங்கினாள். நாற்புறமுமிருந்த அழகை நோக்கும்போது அவளுக்கு ஆடிப்பாடிக் குதிக்க வேண்டியபோல் உற்சாக மெழும்பியது. "ஆஹா? அவர்கள் அவனை யழைக்காதிருக்கும்போது நான் மட்டும் எப்படிப்போக விரும்புவேனோ! அத்தையம்மாள் என்னை பல வந்தப்படுத்தினாலன்றி நான் அப்படி ஒரு போதும் செய்ய மாட்டேன். ஆயினும் சென்ற வாரம் ஞானசம்பந்தம் ஏதோ சந்தேகப் பட்டதுபோல் தோன்றியது." இப்படி நினைக்கும் பொழுது அவள் முகம் யோசனை யிலாழ்ந்தது. "அன்று சாயந்திரம் நாங்கள் அந்த மல்லிகைப் பந்தலின் கீழ் நின்று பேசிக் கொண்டிருந்த பொழுது அவன் சிறிது வெறித்தே எங்களை நோக்கவில்லையா? ஆஹா! இந்த உலகத்தில் எல்லாம் அழகாகவே யிருப்பது போல் எனக்குத் தோன்றுகிறது." அவள் குனிந்து ஒரு ரோஜாப் புஷ்பத்தைப் பறித்துத் தன் கூந்தலில் சூட்டிக் கொண்டாள். அந்நிலா வெளிச்சத்தில் அவள் கைகள் வெண்மையாயும் அழகாயும் காணப்பட்டன. அவள் மறுபடியும உள்ளே சென்று சன்னலருகில் நின்று வெளியில் தெரிந்த அந்த நேர்த்தியான காட்சியை உற்று நோக்கினாள். நிச்சந்தமாயிருந்தது. சாலை யோரத்தினின்று வெகு தூரம் உள்ளே தள்ளி அவர்கள் வீடு இருந்தமையால் வண்டிச் சத்தம் முதலியவை அங்கெட்டக் காரணமில்லை. மேற்குத் திசையில் உள்ளே ஒளி சிறிது சிறிதாக மறையச் சந்திரனும் முன்னிலும் பிரகாசமாகவே, சமீபத்திலிருக்கும் மரத்தின் மேல் ஒரு பட்சி இனிமையாய்ப பாடத் தொடங்கிற்று. மங்கலாய்ச் சில நக்ஷத்திரங்களும் இப்பொழுது ஆகாயத்தில் தென்பட்டன.

பால் வெள்ளம் போலும் பிரகாசித்த அந்நிலவைக் கண்டதும் தன்னையறியாமலே உற்சாகமுண்டாகச் சுந்தரி மெதுவாய்ப் பாடத்தொடங்கினாள். ஆறுமாதத்திற்கு முன்பு விஜயசுந்தரம் அவளுக்கொரு பாட்டுப் புஸ்தகம் கொடுத்திருந்தான். அதிலிருந்த பாட்டுக்களை வெகு சீக்கிரம் அவள் கற்றுக்கொண்டு விட்டாள்

இச்சமயத்தில் உள்ளே ஒரு கடியாரம் அதன் வெண்கல நாதத்தால் அவள் சங்கீதத்தைக் கலைத்து 'டிங், டிங்' என்று மணி எட்டு அடித்தவுடன் ஓய்ந்தது. இவ்வளவு நாழிகையாக அவர்கள் இன்னும் எதைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்? சுந்தரி மறுபடியும் வெளியிலிறங்கி மைதானத்தின் வழியே நடந்து வெளியே அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் அறைச் சன்னலண்டை சென்றாள். கதவு மூடப்பட்டிருந்தது. வெய்யில் காலத்தில் வெப்பம் இவ்வளவு அதிகமாயிருக்கும் பொழுது ஜன்னற் கதவை மூடுவானேன்? அவள் வளர்ப்புத் தந்தையான ரங்கநாத முதலியார் பனி காலத்திலன்றி வேறெப் பொழுதும் ஜன்னற் கதவுகளை மூடவே மாட்டார். காற்று எவ்வளவு அடித்தாலும் அவருக்குப் போதாது. சுந்தரி ஆச்சரிய மடைந்து கதவிடுக்கின் வழியாய் உள்ளே உற்று நோக்கினாள். அங்கே அவள் கண்ட காட்சி அவள் மனதை நடுங்கச் செய்தது. விஜயசுந்தரம் தன் கைகளை மார்பில் கட்டிய வண்ணம் குனிந்த தலையுடன் சுவற்றில் சாய்ந்துகொண்டு நின்றான். அவனழகிய முகமும் விலக்க முடியாததோர் துயரத்தி லாழ்ந்திருப்பது போல் காணப்பட்டது. ஏதோ ஒரு பெரிய அவமானத்திலிருப்பவன்போல் தோன்றினான். ஞானசம்பந்தமும் அவனும் ஒரே உயரமுள்ளவர். ஆனால் அவனைவிட விஜயசுந்தரம் வயதில் இளையவன். இருபது வயதானபிற்று. பெரிய பட்டணமாகிய சென்னை

யில், அங்கு சுலபமாய்ப்படியும் கெட்ட நடவடிக்கைகளொன்றும் அணுகாதபடி கவனிக்க ஒருவருமற்று, தனியே இச்சிறுவயதில் அவன் வாடகைக்கு ஒரு அறையில் வசித்து வந்தான்.

ரங்கநாத முதலியார் விஜயசுந்தரத்திற்கெதிரே நின்று, நிரம்ப கோபத்துடன் தன் வலதுகையை ஆட்டி ஏதோ இரைந்து கொண்டிருந்தார், காரணம் தெரியாமலே ஒருவித பயம் மனதை வருத்த, சுந்தரி மெதுவாய்த் தன்னறைக்குச் சென்றாள். இப்படி அவர் இரைந்து கோபிக்கும்படியாய் விஜயசுந்தரம் என்ன குற்றம் செய்திருப்பான்? இப்பொழுது அவர்கள் பேசிக்கொண்டே வெளித்தாழ்வாரத்திற்கு வந்தார்கள், தலை முதல் கால் வரையில் உடம்பு நடுங்க, சுந்தரி மெதுவாய் வெளியே எட்டிப்பார்த்தாள். விஜயசுந்தரம் வாயிற்படியில் நின்று கொண்டிருந்தான். வெளியிலிருந்து திரும்பி வந்தபோது அவிழ்த்த சட்டை இன்னும் அவன் கையில் மடித்தபடியே இருந்தது.

"என் வீட்டு வாயிலை இனி நீ ஒருபோதும் மிதிக்க வேண்டாம். எங்கள் குலத்திற்கே நீ ஒரு பெரிய அவமானத்தை உண்டாக்கி விட்டாய். நானும் என்னைச்சேர்ந்தவர்களும் இனி உன் முகத்தில் ஒருபோதும் விழிக்கமாட்டோம்" எனறு ரங்கநாத முதலியார் மிகுந்த கோபக்குரலில் கூறினார். விஜயசுந்தரம் பதிலொன்றும் சொல்லாமல் படியைவிட்டுக் கீழிறங்க அவர் கதவைச்சாத்திக்கொண்டு உள்ளே போய் விட்டார். ரங்கநாத முதலியார் ஐம்பதுள்ள மனுஷ்யர். ஆள் உயரமாய் கறுத்த மேனியும், பருத்த தேகமுமுடையவராயிருப்பார். தன் வேலைகளில் நிரம்ப கண்டிப்புள்ளவர். தான தருமங்கள் விசேஷமாய் அவர் செய்வது முண்டு. மனைவியினிடத்திலும் மக்களிடத்திலும் அதிக அன்புள்ளவர். என்றாலும் கடுமையான கோப சுபாவமுடையவர்.

சுந்தரி ஜன்னலண்டைசென்று பார்த்தாள். விஜயசுந்தரம் அப்பொழுதுதான் வளைந்த மைதானத்தின் வழியாய்ப்போய்க் கொண்டிருந்தான். அவன் இனி ஒருபோதும் திரும்பி வரப்போவதில்லையோ? இவ்வெண்ணம் தோன்றியதும், அவள் இடி விழுந்தவள் போலாகி, ஒன்றும் யோசிக்காமல் கதவைத்திறந்து கொண்டு வெளியே ஓடினாள்.

"விஜயம்! விஜயம்!"

விஜயசுந்தரம் திரும்பிப் பார்த்தான். அவன் ஒருவிதத்திலும் அவளுக்கு உறவல்ல. சிறிது காலமாய்த்தான் அவளை மிகவும் நேசிக்க ஆரம்பித்திருந்தான். ஆனால் அதெல்லாம் அப்பொழுது ஒரு முடிவிற்கு வந்து விட்டதென்று அவனுக்கு நன்றாய்த்தெரியும்.

"எங்கு போகிறாய் விஜயம்?" என்று அவள் கேட்க, "சுந்தரி! நீயா? அவர்களுடன் வெளியிற் போயிருக்கிறாயென் றெண்ணியிருந்தேன்" என்றான் விஜயசுந்தரம்.

"இல்லை; வெளியிற் செல்ல எனக்கு இன்று விருப்பமில்லை யாதலால் நான் போகவில்லை. அப்பா உன் மேல் நிரப்ப கோபித்திருப்பது போல் தோன்றுகிறதே என்ன சமாச்சாரம்?"

"கோபமா?" ரங்நாத முதலியாரின் மனநிலைமையைக்கூற, அது ஒரு அற்ப வார்த்தை போல் தோன்றியது. "ஆம்; கோபம் கொண்டு தானிருக்கிறார்."

"ஆனால், அவர் கோபிக்கும்படியா யொன்றும் நீ செய்யவில்லையே?"

"அவர் என்னை இன்னும் எவ்வளவோ கோபிக்கவேண்டும் சுந்தரி" என்று கூறி அவன் மிகவும் வருத்தத்துடன் அவளை நோக்கினான். அந்நிலா வெளிச்சத்தில் அவன் முகம் நிரம்ப வேதனை கொண்டிருப்பது போல் தோன்றியது. ஒருவிதப்பிடிவாதப் பார்வையும் அவன் அகன்ற கண்களில் பிரகாசித்தது.

"சுந்தரி, நான்போய் வருகிறேன். இச்சென்னைபட்டணத்தில் நானிருக்கலாகாது. வெகு தூரத்திற்கு எங்கேயாவது போகவேண்டும். இவ்வளவு நாளாக ஒரு தப்பு வழியிலேயே நான் சென்று விட்டேன். ஆனால், கடவுள் என்னை மன்னிப்பாராக! அது இப்படியாய் விடுமென்று நான் கனவிலும் நினைக்கவில்லை."

சுந்தரி பதிற்சொல்ல முயன்றாள். ஆனால் ஒரு வார்த்தையும் வெளிக்கிளம்பவில்லை. அவள் முகம் வெளுத்து, தலை சுழன்றது. விஜயசுந்தரம் மறுபடியும் சொல்லத்தொடங்கினான். "மனப்பூர்வமாய் நான் சரியாய்த்தான் நடக்கவேண்டுமென்றெண்ணியிருந்தேன் உன் பொருட்டாயினும், சுந்தரி! உன் பொருட்டாயினும் நேர்வழியில் நடந்திருக்கலாம். என் குற்றங்களுக்கொரு பிராயச்சித்தமாக வெகு தூரத்தில் ஒரு கண்காணாத தேசத்திற்கு நான் போகிறேன். என் கண்ணே! அவர்கள் என்னைப் பற்றி கெட்ட கதைகளேதாவது கூறும்பொழுது கெட்ட கதைகளென்று அவர்கள் சொல்லுவது ஒருவிதத்தில் பொய்யல்ல. உண்மையே. அவர்கள் அப்படிக் கூறும்பொழுது, என்னை நல்ல புத்தி தோன்றும்படி செய்தது நீயே யென்பது உனக்கு ஞாபகமிருக்கட்டும். என் வாழ் நாளாகிய இருளில் வெகு தூரத்திற் காணப்படும் ஒரு மங்கலான சிறு வெளிச்சமாய் நீ தோன்றினாய். சுந்தரி! கடவுள் உன்னை ரக்ஷிப்பாராக!" அவன் அவளைத் தன் மார்போடணைந்து, கண்ணீர் தாரை தாரையாய்ப் பெருகிக்கொண்டிருந்த அழகிய முகத்தில் முத்தமிட்டான். அச்சமயம் தான் கூறியது என்னவென்று அவளுக்கு முழுவதும் தெரியாது. அதற்குப் பிறகும் அவைகள் அவள் ஞாபகத்திற்கு வரவில்லை. தன் பணத்தைச் செலவழித்து அவனுக்குதவி புரிவதாக அவள் தட்டித்தடுமாறிக் கூறியபொழுது "வேண்டாம்; வேண்டாம்" என்றான். அவன் சிறிது சிரித்துக்கொண்டே "நான் ஒரு அயோக்கியனேயாயினும், சுந்தரி! அப்படி நிரம்பக் கெட்டவனல்ல. உன் பெருந்தன்மை பொருந்திய வார்த்தைகளுக்காக நான் மிகவும் நன்றி பாராட்டுகின்றேன்." அவன் அவள் கைகளிரண்டையும் பிடித்துத் தன் மார்பின்மீது வைத்தணைத்துக்கொண்டான். 'உன் உதார சுபாவத்திற்காக, என் அன்பே! நான் மிகவும் வந்தனம் புரிகின்றேன். இவ்வுலகத்தில் இறப்பதற்கு முன் நாமினிமீண்டும் சந்திப்போமென்ற நம்பிக்கை எனக்கில்லை. என் விதி அநேகமாய்க் கடினமானதாகவே யிருக்கும். சுந்தரி! யாராவதொரு பாக்கியவானை நீ மணந்து, அநேகம் புத்திரர்களைப்பெற்றுச் சந்தோஷமாயிருப்பாய். அப்படி நீ சந்தோஷமாயிருக்குங்கால், என்னைக்குறித்துக் கடவுளைப் பிரார்த்தித்துக்கொள். தெய்வம் தன் பரிசுகளைப் பக்ஷபாதமின்றியே அளிக்கும். போய்வருகிறேன்" எனக் கூறி ஒன்றுமே புரியாமல் மனம் பதறி நின்ற அவளை அவ்விடத்திலேயே விட்டு, அவன் போகப் புறப்பட்டான். மைதானத்தின் கடைசியில் ஒரு மூங்கில் புதரின் சமீபத்தில் ஞானசம்பந்தம் அவனுக்காகக் காத்துக்கொண்டு நின்றான்.

"விஜயம்! கடைசியாய் அவர் என்ன தீர்மானம் செய்தாரென்பதைத் தெரிந்து கொள்ளாமல், வெளியிற்போக எனக்கு மனம் வரவில்லை. அதெப்படி முடிந்தது?" என்று ஞானசம்பந்தம் கேட்க, "எப்படி முடியும்? அதற்கு ஒரே ஒரு வழிதானிருந்ததல்லவா?" என்றான் விஜயசுந்தரம்.

"அப்படியானால் அவர் உன்னை நிராகரித்து விட்டாரா?"

"ஆம், அவர் என்னை விட்டைவிட்டுத் துறத்திவிட்டார். ஞானசம்பந்தம்! உன் தந்தை தன் கௌரவம், பெயர் இவைகளில் சம்பந்தப்படும் விஷயமெதிலும் மிகவும் கடுமையாகவே யிருக்கிறார். பெரும் பணம் படைத்தவர்களில் பத்துக்கு ஒன்பது பெயர்கள் இவ்விதமே.

"நீ என்ன செய்யப்போகிறாய்?"

"என்னால் எது முடியுமோ அதைத்தான் செய்யப்போகிறேன். அவர் முற்றிலும் கடுமையாயிருக்கவில்லை. ஏதோ கௌரவமாயிருக்கும்படியான வழியொன்று எனக்குச்செய்யப் போவதாய்க்கூறி, சீமைக்குப்போகச் செலவிற்கும் கொடுத்திருக்கிறார். நானொன்றும் குறை கூறவில்லை. ஞானசம்பந்தம்! நான் செய்திருப்பவைக்கு இத்தண்டனையும் போதாது. புறப்படுவதற்கு முன் உன்னை மறுபடியும் வந்து பார்க்கிறேன்" என்று சொல்லி அவன் அங்கு போய்க் கொண்டிருந்த ஒரு வாடகை வண்டியிலேறிச் சென்றான். ஞானசம்பந்தமும் தான் போக வேண்டிய இடத்திற்குப் புறப்பட்டான். சுந்தரியோவெனில் துக்கம் நெஞ்சடைக்கக் கண்களில் நீர் பிரவாகம்போல் பெருகத் தன்னறைக்குப்போய்ச் சேர்ந்தாள். மறுநாளே விஜயசுந்தரம் சீமைக்குக் கப்பலேறப் புறப்பட்டான். அவனைப் பற்றியும், அவன் செய்கைகளைப் பற்றியும் ஒன்றும் மறைத்து வைக்கப்படவில்லை. எல்லாருக்குமெட்டிய சங்கதிகளே அவள் காதிலும் விழுந்தன. அவன் கெட்ட குற்றங்களொன்றும் செய்துவிடவில்லை. தன் பெரிய தந்தையின் பணத்தைத் திருடவாவது, அவர் செக் புஸ்தகங்களில் கள்ளக் கையெழுத்திடவாவது ஒன்றும் அவன் செய்யவில்லை. இவ்வுலகில் பலருக்கும் நேருவதுபோல், அவன் வரம்பு மீறிச்செலவழித்து, சகிக்க முடியாத கடன்களுக்குள்ளானான் என்பதொன்றே அவன் செய்த குற்றம்.

"இவை யெல்லாவற்றிற்கும் சமயம் அவனுக்கு எவ்விதம் நேர்ந்ததோ?" என்று ரங்கநாத முதலியார் எல்லாரெதிரிலும் நிரம்ப கோபத்துடன் கூறினார். "என் வியாபார ஸ்தலத்தில் நான் அவனுக்கு ஒரு வேலையும் செய்துவைத்து, இங்கும் அடிக்கடி அழைத்து இருக்கச் சொன்னதற் கெல்லாம் நல்ல கைம்மாறு! நான் தற்செயலாய் அவன் செய்கைகளைக் கவனித்திராவிட்டால் அவன் இன்னும் எவ்வளவு தூரம்வரை போயிருப்பானோ! இனி அப்பெயருடையவன் உலகிலொருவனிருக்கிறான் என்பதையே நாம் நம் நினைவை விட்டொழித்துவிட வேண்டும்." அவர் சொல்லியவாறே விஜயசுந்தரமென்ற பெயர் இவ்வுலகில் அடியோடு மறைந்து போயிற்று.

2-வது அதிகாரம்.

நாட்கள் வாரங்களாயின; வாரங்கள் மாதங்களாயின; மாதங்களும் ஆண்டுகளாயின. ஆறு வருஷங்கள் சென்று ஏழாவது வருஷமும் முடிவதற்காயிற்று. ரங்கநாத முதலியாரும் அவர் மக்களும் என்றும் குறைவில்லாத செல்வத்திலிருந்தனர். கெட்ட நடவடிக்கையையுடைய அவர் சகோதரன் மகனைப் பற்றி ஒரு சங்கதியும் கிடைக்கவில்லை. அவனைப் பற்றிய நினைவே எல்லோர் மனதை விட்டும் ஒழிந்து விட்டது. ரங்கநாத முதலியார் மனைவி இறந்து போய் விட்டாள். அவர் குமாரிகளான வனஜா, பத்மா இருவரும் விவாகமாகிக் கணவன் வீட்டிலிருந்தனர். இம்மூவரைத் தவிர அவ்வீட்டிலிருந்த மற்றவர்கள் யாவரும் முன்பிருந்தவரே. சங்கராந்திக்கு இன்னும் ஒரு தினம்தானிருந்தது. விடிந்து சிறிது நேரமாயும் பனி மழை போல் பெய்து கொண்டிருந்தது.

ரங்கநாத முதலியாரும் அவரது மகனும் மாளிகையின் முன் பக்கத்தறையில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். ஞானசம்பந்தம் ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகையை நிரம்பு

கவனத்துடன் வாசித்துக் கொண்டிருக்க அவர் ஏதோ யோசனையுடன் காப்பி சாப்பிட்டுக் கொண்டிருந்தார். இறந்த அவர் மனைவியின் முகம் அப்பொழுது அவர் மனக்கண் முன்பு தோன்றியது. அவள் சாவால் அவர் நிரம்ப துக்கப்பட்டுப் போனார். பிறகு தங்கள் கணவன் வீட்டில் சந்தோஷமாயிருக்கும் பெண்களின் நினைவும் விவாகமாய் அயலூரில் உத்தியோகமாயிருந்த தம் இரண்டாவது மகன் நினைவும் அவருக்குண்டாயிற்று. தம் சொந்த ஸ்திதியும் இன்னும் விருத்தியாகும் நிலைமையிலிருந்ததே தவிர க்ஷீணமாகவில்லை. கூட்டாகவும் தனியாகவும் அவர் அநேக தருமங்களைச் செய்து வந்தார். மற்ற மனிதர்களைப்போல் தானுமில்லாதிருப்பதாக எண்ணி அவர் சுவர்க்கலோகத்திற்குத் தான் நேரே செல்லப் போவதாக நம்பி தனக்குள்ளே சந்தோஷித்துக் கொண்டார். தவிர தன் சமீபத்தில் உட்கார்ந்திருந்த ஞானசம்பந்தத்தின் நினைவும் சுந்தரியின் நினைவும் அவருக்குண்டாயிற்று. அவர்களிருவரும் விவாகம் செய்து கொள்ள வேண்டுமென்று சிறிது நாளாக அவர் விரும்பியிருந்தார். சுந்தரி வயது வந்தவளாகித் தன் பிதாவின் உயில் பிரகாரம் இருபது வயதானவுடன் அடைய அதிகாரம் பெற்றிருந்த மூன்று லக்ஷம் ரூபாய்க்கும் எஜமானியானாள். தான் விரும்பியவனையே அவள் விவாகம் செய்து கொள்ள வேண்டுமென்று இறக்கும் பொழுது அவள் தந்தை கேட்டுக் கொண்டபடியால் ஒருவரும் அவளை மணம் புரிந்து கொள்ளக் கட்டாயப்படுத்த முடியவில்லை. ரங்கநாத முதலியார் மட்டும் ஞானசம்பந்தமாயிருந்தால் அவளை விவாகம் செய்து கொள்ள விரும்புவதாய் வெகு வருஷங்களுக்கு முன்னமேயே அவளிடம் தெரிவித்து அவள் சம்மதத்தையும் பெற்றிருப்பார். இவ்விஷயத்தைப் பற்றிக் குறிப்பாய் ஏதாவது கூறலாமென்று அடிக்கடி அவர் நினைத்ததுண்டு. ஆயினும் இது போன்ற விஷயங்கள் தனியே விடப்பட்டால் எவ்வளவு நன்றாய் வேலை செய்யுமென்பதை நன்கு அறிந்தவராதலால் அப்படிச் செய்யவில்லை. ஐந்தாறு மாதத்திற்கு முன்பு நிரம்ப ஜுரத்தில் வருந்திய சுந்தரி இன்னும் தன் பழைய தேகபலத்தை யடைந்தவளாய்க் காணப்படவில்லை.

"ஞானசம்பந்தம்! இன்னும் சில மாதங்களில் உனக்கு 30 வயது நிறம்புகின்றதல்லவா?" என்று ரங்கநாத முதலியார் அந்நிச்சத்தத்தை மாற்றி திடீரென்று கேட்டார்.

"ஆம், முதுமைப் பருவம்வர ஆரம்பித்து விட்டது."

"அதற்குள்ளாகவா? இல்லை; ஆயினும், அதுவும் சீக்கிரத்திலேயே வந்து விடும். ஏனெனில் நம்மையறியாமலே நமது வயது செல்லுகின்றது. ஞானசம்பந்தம்! நீ ஏன் இன்னும் விவாகம் செய்து கொள்ள மாட்டேனென்கிறாய்?"

ஞானசம்பந்தம் தன் பத்திரிகையில் ஒரு பக்கம் திருப்பித் தள்ளினான். 'என்னை ஒருவரும் விவாகம் செய்து கொள்ளுவார்களென்று தோன்றவில்லை.'

"என்ன புத்தியின்மையிது! ஞானசம்பந்தம்! உன்னைப் போன்றவர்கள் தானே விரும்பியவர்களை உடனே அடையக் கூடியவர்கள்? ஆனால் நீயாகக் கேட்க விரும்பாவிட்டால் ஏன் அப்பொழுது—" ரங்கநாத முதலியார் தான் சொல்ல வந்ததை முடிக்காமல் மத்தியில் நிறுத்த அவரது மகன் சிறிது சிரித்தான். ஆனால் பதிலொன்றும் சொல்லவில்லை. அவன் தந்தையும் சிறிது கோபமான பார்வையுடன் 'வேண்டிய மட்டும் நீ சிரி. ஆனால் ரங்கநாத முதலியார் மகன் கேட்டால் மாட்டேனென்று சொல்லக்கூடிய பெண்ணொருவளும் இவ்வுலகிலிருக்கமாட்டாளென்பது நிச்சயம். நீ வரிக்க வேண்டிய சிறுமியை நானே தேர்ந்தெடுத்து விட்டேன்' என, 'யாரது?' என்று ஞானசம்பந்தம் சற்று ஆச்சரியத்துடன் கேட்டான்.

"நீ அதிக தூரம் அவளுக்காகப் போக வேண்டியதில்லை நமது சுந்தரியே அவள்."

இதற்கு விடையாக மெதுவாய் ஒரு புன்னகை புரிந்து அவன் மீண்டும் தன் பத்திரிகையை வாசிக்கத்தொடங்க, 'எனக்கு வேறொன்றும் பதிலில்லையா?' என்று அவன் தந்தை சிறிது கோபக் குரலிலேயே கேட்டார்.

"சுந்தரியை விவாகம் செய்து கொள்ள நான் இஷ்டப்படவில்லை. அவள் என் மாமன் மகளல்லவா?"

"ஆனாலென்ன?" என்றார் ரங்கநாத முதலியார் கோபத்துடன். "அவளுக்கு மூன்று லக்ஷ ரூபாய் ஆஸ்திருக்கிறதே."

ஞானசம்பந்தம் தன் பத்திரிகையில் இங்குமங்கும் பார்த்துக் கொண்டிருந்தான்.

"அவளைவிட சாந்த சுபாவமும் நற்குணமும் படைத்த பெண்மணி இவ்வுலகில் வேறெங்கு தேடினாலும் கிடைக்காது. ஞானசம்பந்தம்! வீணாய் அறிவிழந்து போகாதே."

"ஆம் வாஸ்தவம் தான். அவள் அழகும் குணங்களும் ஒருங்கே அமையப் பெற்றவளே." என்று தந்தை கூறியதை யொத்துப் பேசினான். "ஆனால் அவளை என் மனைவியாக்கிக்கொள்ள இதுவரையிலும் நான் எண்ணினதில்லை."

"அப்படியானால் இப்பொழுது அப்படி நினை. வெகு நாளாக நான் இப்படி நடக்கவேண்டுமென்று விரும்பிக் கடவுளைப் பிரார்த்தித்து வருகிறேன்."

அவர் இவ்விதம் கூறிய பிறகு ஞானசம்பந்தம் தன்பரிகாசப் பேச்சை நிறுத்தி விட்டான். கையிலிருந்த புஸ்தகத்தை மூடி மேஜைமேல் வைத்து விட்டு "நீங்கள் உண்மையாய் இவ்வளவு விரும்பியிருந்தீர்களென்பதைக் கேட்க நிரம்ப வருந்துகிறேன். இப்படிப்பட்ட ஒரு எண்ணம் உங்கள் மனதிலிருக்குமென்றே நான் சற்றும் சந்தேகிக்கவில்லை. இவ்விஷயத்தில் என்னபிப்பிராயம் ஒருவாறாயிருக்கட்டும். சுந்தரி ஒருபோதும் என்னை விவாகம் செய்து கொள்ள மாட்டாளென்பது மட்டும் எனக்கு நிச்சயமாய்த் தெரியும். அவள் ஒருவரையும் மணம் புரிந்து கொள்ள இசைய மாட்டாள்" என, "ஏன்? அவளுக்குத்தான் இப்பொழுது உடம்பு முற்றிலும் குணமாகி விட்டதே" என்றார் ரங்கநாத முதலியார்.

"அவளுடம்பைப் பற்றியல்ல. அவள் மனதைப்பற்றிச் சொல்லுகிறேன். கலியாணத்தைப்பற்றி ஒரு வார்த்தையேனும் நான் அவளிடம் கூறுவிடினும் ஒருவரையும் மணம் புரிய வேண்டாமென்பதே அவள் தீர்மானமென்று எனக்கு நிச்சயமாய்த் தெரியும். சுந்தரியினுடைய மனோராஜ்யங்களெல்லாம் வெகு வருஷங்களுக்கு முன்னமேயே உதயமாகி மறைந்து விட்டன."

"என்ன சொல்லுகிறாய்? அவள் யாரையேனும் காதலித்திருந்தாளா?"

"ஆம்; துரதிர்ஷ்டவசமாய் விஜயசுந்தரத்தின்மேல் அளவற்ற அன்பு கொண்டிருந்தாள்."

ரங்கநாத முதலியார் தன் மகனை விழித்துப் பார்த்தார். அவன் கூறியவைகளை அவரால் நம்ப முடியவில்லை. இகழ்ச்சிப் பார்வையுடன் அவர் பரிகாசக்குரலில் "விஜயசுந்தரத்தின்மேலா? அது ஒருபோதுமில்லை. அவன் சென்றபோது அவள் ஒன்றுமறியாத சிறு குழந்தையாயிற்றே" என்றார்.

"இல்லை. இல்லை. அப்பொழுதும் அவள் சிறு குழந்தையேயல்ல. காதல விஷயத்தைப்பற்றிப்

பதினுன்கு வயதுள்ள ஒருபெண்ணும் இருபத்தைந்து வயதுள்ள ஒரு ஸ்திரீயைபபோல எல்லாம்தெரிந்தவளாகத் தானிநடபாள். அப்பா! நான் சொல்வது தவறல்ல வென்பது எனக்கு நன்ருய்த்தெரியும். விஜயசுந்தரமும் சுந்தரியை அதிகமாய் நேசித்திருந்தான்.''

''நமது குலத்திற்கு அவமானத்தை விளைத்த அந்த அற்பப்பயலையா?'' என்று ரங்கநாத முதலியார் கூறும்பொழுது அவர் குரலில் விளங்கிய வெறுப்பை நோக்கின தப்பிதம் செய்த தன் சகோதரன் மகனை அவர் ஒருபோதும் மன்னிக்கவில்லை யென்பது தெளிவாய் விளங்கியது. ''நான நம்பவில்லை. ஆயினும், நீ கூறியபடியே யிருப்பினும், அவலை மறந்துவிட இப்பொழுது நாளாய்விட்டது. சிறு வயதில் உண்டான அசடுததனம் இன்னுமிருக்குமா?''

''வாஸ்தவம் தான். ஆயினும் அவள் மறந்திருப்பாளென்று தோனறவில்லை.''

''ஒரு சிறு குழந்தையாயிருக்கும்பொழுது புத்தியீனததால நடந்த இவ்வறப விஷயத்தறகாகவா நீ அவளை விவாகம் செய்து கொள்ள மறுக்கிருய்? உன் புத்தி இவ்வளவு தானு?''

''அப்படியல்ல. தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும். எனனிஷ்டத்தைப்பற்றி யொன்றும் இங்கு பேசவேணடிய அவசியமில்லை. நான் கூறியதெல்லாம் எவ்வளவு வேண்டியும் அவள் என்னை மணம புரிநது கொள்ள ஒருபோதும் இசையமாட்டாளென்பதே.'' இப்படிச்சொல்லிவிட்டு ஞானசம்பந்தம் தன் பத்திரிகையை யெடுத்துப் படிக்கத் தொடங்கினுன். அவன் தந்தையும் காப்பி சாப்பிட்ட டம்ளரை மேஜையினமேல் வைத்துவிட்டு, சூரிய வெப்பத்தால் உருகிய பனிததுளிகள் இலைகளினின்றும சொட்டப பலவித புஷ்பச்செடிகளுடனும் கூடிய தோட்டத்தினமீது தன் பார்வையைச் செலுத்தலானுர். அதிபுத்திமானென்று தானெண்ணியிருந்த தன் மகன் இவ்வளவு புத்தியற்றவனுயிருப்பானென்று அவர் இதுவரையும் நினைக்கவில்லை. அவன் அசட்டுத்தனத்தை அவனுக்கு மெய்ப்பித்துக் காட்டவேண்டுமென்று தீர்மானங்கொண்டார்.

3-வது அதிகாரம்.

தோட்டத்தை நோக்கும் முன் பக்கத்தறையில் முன் போலவே இப்பொழுதும் நாம் சுந்தரியைக் காணலாம். ஒரு நாளிற் பாதிப்பொழுதையும் இவ்வறையின் ஜன்னலிலுட்கார்ந்து தோட்டத்தைப் பார்த்துக்கொண்டிருப்பதிலேயே கழிப்பாள். நாம் முன்பு கண்ட சந்தோஷக்குறிகளொன்றும் இபபொழுது அவள்முகத்தில தென்படவில்லை. பதினுன்கு வயது சிறுமியாயிருநதபோதிருந்த உற்சாகம் யாவும் இருபததொனறு வயதாவதற்குள் அவளை விட்டு வெகு தூரம் விலகிவிட்டது. ஏறக்குறைய ஏழு வருஷங்களுக்கு முன் சில நிமிஷங்களாயினும் தனனுடன தங்காமல் அவசரமாய் விடைபெற்றுச்சென்ற காதலனை நினைத்து சதா வருந்தும் சுந்தரி இப்பொழுது மிகவும் மாறித் தோன்றுவதில் என்ன ஆச்சரியம்! வெளுத்து இளைததிருப்பினும் அவள் சௌந்தரியம் மட்டும முனனிலும் இனிமையாகவே தோன்றியது. சமீபததில் வருநதிய ஜுரததின் நிமித்தம் சிக்காயிருந்து கததரிக்கபபட்ட அவள் தலைமயிர் மீண்டும் சுருள் சுருளாய் வளர்ந்து கொண்டிருந்தது.

தன் கையிலிருந்த புஸ்தகத்தை வாசிக்க விருப்பமில்லாமல் மூடியபடியே கீழேவைத்துவிட்டு அவள் தோட்டத்தின் நடுவே ஒரு சிங்காரமான கற்தொட்டியின் மத்தியிலமைக்கப்பட்டிருந்த பித்தளைக்குழாயிலிருந்து தண்ணீர் அழகிய சிறு துளிகளாக மேலெழும்பி மீளவும் அததொட்டியிலேயே விழும் வேடிக்கையை

நோக்கினுள். அக்காட்சி அவள் மனதை விநோதப்படுத்தியதுமன்றி, பலவித விசனகரமான எண்ணங்களையுமுண்டாக்கியது. ''ஆகா! இக்குழாயினின்றும் விழும் நீர்த் திவலைகளைப் போலவே மாந்தர்களுடைய வாழ்விலும் எவ்வளவு விசித்திர விஷயங்கள் தோன்றி, கடைசியில் எல்லாம் ஒரே முடிவை யடைகின்றன. உலகமே இவ்வாருயிருக்கும்பொழுது என்னை மட்டும் சுக துக்கங்கள் பீடிக்காதிருக்குமா?'' என்று அவள் தானே சொல்லிக்கொண்டாள்,

இச்சமயத்தில் ரங்கநாத முதலியாரும் ஞானசம்பந்தமும் அவ்வறையில் நுழைந்தார்கள். அவளது வெளுத்து வாடிய முகத்தையும் கவலை தேங்கியபார்வையையுங்கண்ட ரங்கநாத முதலியார் இப்பொழுதுதான் முதன் முதல் தன் மகன் சொல்லியதில் உண்மையிருக்குமோவென்று சந்தேகிக்கலானுர். இதுவரையும் மூடியிருந்த அவர் கண்கள் இப்பொழுது பலாத்காரமாய்த் திறக்கப்பட்டன, ''ஆயினும் இவ்வசட்டு எண்ணத்தை அவள் மறந்து போகும் காலம் முன்னமேயே வந்துவிட்டது. நிச்சயமாய் அவள் தன் மனதைவிட்டு இச்சமயம் அவ்வெண்ணத்தை அடியோடு அகற்றியிருப்பாள். ஞானசம்பந்தம் மட்டும் மனது வைத்தால் இனியும் எல்லாம் சரியாய் விடும்'' என்று அவர் தனக்குள்ளேயே நினைத்துக்கொண்டார்; அவர் சமீபம் சென்றதும் அவரைக் கண்டு எழுந்து நின்ற அவளை ஒரு நிமிஷம் உற்று நோக்கிப்பிறகு ''உன் முகம் மிகவுங்களைப்பைக் காட்டுகிறதே'' என்ருர்.

''இல்லையே. எனக்கு உடம்பு இப்பொழுது முற்றிலும் சௌக்கியமாய் விட்டது. நீங்கள் ஒன்றும் கவலைப்படவேண்டாம்.''

''மரகதம்மாளின் மகன் தெய்வசிகாமணியின் தேகஸ்திதி அப்படியே யிருக்கிறதென்று இப்பொழுதுதான் ஒரு ஆள்வந்து சொல்லிவிட்டுப்போனுன். நான் போய்ப்பார்த்து வரப் போகிறேன். நீயும் வருகிருயா சுந்தரி?'' என்று ஞானசம்பந்தம் கேட்க, ''நான் சற்று முன்புதான் அங்கு சென்றிருந்தேன். கவலைப்படும்படியாயொன்றுமில்லை யெனத்தோன்றுகிறது'' என்று சுந்தரி பதில் சொன்னுள்.

ஞானசம்பந்தம் போய்விட்டான். ரங்கநாத முதலியார் ஜன்னலின் அருகே ஒரு நாற்காலியிலுட்கார்ந்தார். தம் மகன் கூறிய விஷயத்தின் உண்மையை அறிய அவர் தீர்மானித்துக் கொண்டார். இன்னும் அவருக்கு அதை நம்ப முடியவில்லை. சீட்டாடியும் கட்குடியர்களுடன் சேர்ந்து நாடகம் சென்றும் வரம்பு மீறிச்செலவழித்துக் கடனிலாழ்ந்து தமமையும் மிக்க கஷ்டத்திற்குள்ளாக்கிய அற்பப்பயலொருவன் தம் மகனிலும் மேலாக மதிக்கப்பட்டது என்னயோசித்தும் முற்றிலும் மதியீனமாகவே அவருக்குத் தோனறியது. அவளை நேரில் கேட்டறிந்து கொள்ளுவதற்கும் அவர் சிறிது அச்சப்பட்டார். சுந்தரி பாதி பின்னிவைத்திருந்த தன் கைச்சவுக்கத்தை எடுத்துக்கொண்டு வந்துட்கார்ந்தாள்.

சிறிது தயங்கிப்பிறகு ரங்கநாத முதலியார் ''புதுவருஷம் பிறந்துவிட்டது. நம்மையறியாமலே நாட்கள் செல்லுகின்றன'' என்ருர்.

''ஆம். உண்மையே.''

''சில நாட்களாய் நான் ஒரு விஷயத்தைப் பற்றி அடிக்கடி நினைத்துக்கொள்ளுகிறேன். அம்மா! நீ விவாகம செய்துகொள்ளும் வயது தாண்டுகிறதே.'' சுந்தரி சற்று வியப்புடன் அவரை நோக்கினுள். மெதுவாய் ஒரு சிறு புன்னகையும் அவள் முகத்தே தோன்றியது.

''விவாகமா? நான் அதைப்பற்றிச் சிறிதும் யோசிக்கவில்லை.

''நமது ஜாதியில் இதுவரையும் கலியாணமில்லாமலிருந்தவர்கள் கிடையாது. நீனுப்

பிறரின் வசைச்சொல்லுக்காளாகாமலிருப்பது நலமல்லவா?"

"மற்றவர்கள் தங்களிஷ்டப்போற் சொல்லிக் கொள்ளட்டும். எனக்கொன்றும் கவலையில்லை" என்று சுந்தரி உறுதியான குரலில் கூறினாள். "தாங்கள் என்னைக்கோபிக்கவேண்டாம் என் தீர்மானத்தை ஒருவரும் மாற்றமுடியாது."

ரங்கநாத முதலியார் முகம் மாறியது. மீண்டும் அவர் சற்று தயங்கிய குரலிலேயே "வெறும் கட்டுக்கதை போன்று என் காதுகளில் விழுந்தது. அது ஒரு கட்டுக்கதையே யொழிய உண்மையல்லவென்றே நான் நிச்சயமாய் நினைக்கிறேன். நீயும் என் சகோதரன் மகனும் வந்துதித்த அவ்வற்பப்பயல் விஜயசுந்தரமும் ஒருவரை யொருவர் நேசித்தீர்களென்பது பொய் தானல்லவா?"

சுந்தரியின் முகம் சிவக்க, கண்கள் கீழே தாழ்ந்தன. அதைக் கண்ட ரங்கநாத முதலியார் "சுந்தரீ! அது உண்மையா? என்னிடம் சொல். குழந்தாய்! நிச்சயமாய் அவ்விஷயம் வெகு காலத்திற்கு முன்னமேயே மறக்கப்பட்டிருக்குமல்லவா?"

"நாங்களிருவரும் ஒருவரை யொருவர் நேசித்தோமென்பதுண்மையே" என்று அவள் கூற, "ஆனால் இப்பொழுது அப்படியொன்றுமில்லையல்லவா? நீ இனியும் அவனைப்பற்றி நினைத்துக் கொண்டிருக்க முடியாது" என்றார் ரங்கநாத முதலியார் ஆவலாய்.

"ஆம் முடியாதுதான் — அவர் இறந்துபோயிருக்கவேண்டும்" என்று அவள் அப்புறம் மெதுவாய்த் தாழ்ந்த குரலில் கூறினாள். "இல்லாவிடில் இதற்குள் இவ்விடம் வந்திருப்பாரல்லவா?"

"இவ்விடம் மீண்டும் வருவதா?" என்று ரங்கநாத முதலியார் மிகவும் கோபமாய்ப் பேசினார். "அவன் ஒரு நாளும் துணிய மாட்டான். அப்படியாக அவன் திரும்பி வந்தாலும் நீ அவனுடன் பேசுவாயா?"

"ஆம். ஏன் கூடாது? நீங்கள் என்மீது கோபிக்க வேண்டாம். அவர் உயிருடனிருக்கிறாரென்னும் நம்பிக்கை எனக்கில்லாததனாலேயே நான் இவ்வார்த்தைகளைத் தங்களிடம் கூறுகிறேன் இல்லாவிடில் ஒரு வார்த்தையும் என்னாற் பேச முடியாது. சென்ற மூன்று வருஷங்களாக அவர் இறந்திருக்க வேண்டுமென்றே என் மனதில் அடிக்கடி தோன்றுகிறது. ஆயினும் தன் தப்பிதங்களெல்லாம் பரிகரிக்கப்பட்டு இனி நல்வழியில் நடக்கும் உத்தேசத்துடன் அவர் திரும்பி வந்தால் நான் கட்டாயம் அவரைச் சந்தோஷமாய் வரவேற்பேன். ஆனால் அதைப்பற்றி யெல்லாம் இப்பொழுது பேசுவானேன்."

"இவ்வற்பப் பயலுக்காகவா — அவன் இறந்திருக்கலாமென நீயே சந்தேகப்படும் பொழுது விவாகம் செய்து கொள்ள மறுக்கிறாய்? உன் மதியீனம் வெகு நன்று பெண்ணே! தெய்வாதீனம்! உன் அத்தைஇப்பொழுதுஉயிருடனில்லையென்று சந்தோஷப்படுகிறேன்" என்றார். "நானொன்றும் தீர்மானமாய்ச் சொல்ல வில்லையே" என்று சுந்தரி பயந்துபோய் பதிற்சொன்னாள். "இப்பொழுது சத்தியாக அவ்விஷயத்தைப் பற்றி என்னை நிர்ப்பந்திக்காதிருக்க வேண்டிக் கொள்ளுகிறேன். இவ்வுலகில் யாவற்றிற்கும் ஒரு மாறுதலுண்டல்லவா? சிறிது காலமாயினும் சுயேச்சையுடனிருக்க நான் விரும்புகிறேன்."

இவ்வார்த்தைகள் தன் மகனுக்கொன்றும் பிரயோஜனத்தை யளிக்காதென்று தெரியவே ரங்கநாத முதலியார் சகிக்கமுடியாத கோபங் கொண்டவராய்த் தன் சகோதரன் மகனைப் பல விதமாய் அவதூறு செய்து அவன் தப்பிதங்களைப் பற்றியும் கண்டபடி பேசினார். சுந்தரி மௌனமாய் யாவற்றையும் கேட்டிருந்து விட்டுப் பிறகு அவர் கோபம் சிறிது சாந்தமானதும் "நீங்கள் கூறுவது முற்றிலும் சரியே. ஆயினும் இளவயதுள்ளவர்கள் தங்கள் பிழைகளினின்று மாறி நல்வழியில் திரும்புவது முண்டு" என, ரங்கநாத முதலியார் அப்படி ஒருபோதும் விஜயசுந்தரம் மாற முடியாதென்று கூறத் தொடங்குமுன் அவள் அவ்வறையை விட்டுச் சென்று விட்டாள்.

சில நிமிஷங்களுக்குப் பிறகு திரும்பி வந்து அவள் சமீபத்தில் வசித்துக் கொண்டிருந்தவோர் எளியவனுடைய குழந்தைக்குத் தான் வாங்கி வைத்திருந்த சில விளையாட்டுக் கருவிகளைக் கொண்டு போய்க் கொடுத்து விட்டு வருவதாய்க் கூறி வெளியே செல்ல அவர் தம்மறைக்குச் சென்றார். இது வரையும் தம் பிரியத்திற்கு விரோதமாய் ஒன்றும் நடந்ததில்லையாதலால் இப்பொழுது அவரிஷ்டத்திற்கு மாறாக நடந்த விஷயங்கள் அவர் பொறுத்துக் கொள்ளுவதற்கும் மேற் போய் விட்டது. கோபத்துடன் அவர் வெகு நேரம் இங்கு மங்கும் நடந்து கொண்டேயிருந்தார். கடைசியாகத் தம் மேஜையண்டை வந்துட்கார்ந்து வியாபார விஷயமான கணக்குப் புஸ்தகங்களை அவர் பார்க்கப் புகுந்த பொழுது மேஜையின்மேற் கிடந்த ஒரு கடிதம் அவர் கண்களில் தென்பட்டது. காலையில் அதை மற்றக் கடிதங்களுடன் தபால்க் காரன் கொண்டு வந்து கொடுத்தபொழுது அவர் அதை மட்டும் பிரித்துப் பார்க்காமல் வைத்திருந்தார். ஏனெனில் கொழும்பு என்னும் முத்திரையைப் பார்த்து அவர் அவ்விடத்திலிருந்து தமக்கெழுதக் கூடியவர்களொருவருமில்லையாதலால் அது ஏதாவதொரு வியாபார விளம்பரக் கடிதமாயிருக்கலாமென்ற அசிரத்தையினால் உடனே பிரிக்கவில்லை. இப்பொழுது அதை யெடுத்து உடைத்துப் பார்க்க அவர் முன் எண்ணியபடி அது வெறும் விளம்பரக் கடிதமாயில்லாமல் வேறு விஷயத்தைப் பற்றியதாயிருக்கவே, முதலிரண்டு வரிகள் படித்ததும் அப்பொழுதிருந்த அவர் மனநிலைக்கேற்றவாறு பின்னும் தாங்கமுடியாத கோபங் கொண்டவராகி அக்கடிதத்தைக் கசக்கி அலட்சியத்துடன் கீழே விட்டெறிந்தார்.

"எனக்கு நேரில் எழுத அவனுக்கு எவ்வளவு தைரியம்! நல்லது! அவன் என்னதான் எழுதியிருக்கிறானென்று பார்ப்போம். அவன் துணிகரத்தை அவனுக்கு நன்றாயெடுத்துக் காட்டுகிறேன்" என்று கீழே கிடந்த கடிதத்தை மீண்டுமெடுத்துப் பிரித்துப் பார்த்தார். அது அத்துற்பாக்கியமுள்ள விஜயசுந்தரம் எழுதிய கடிதமென்பது நாம் கூறாமலே விளங்கும். அதில் அவன் அவர் விரும்பியபடி பல்லாயிரம் மயிலுக்கப்பாலுள்ள ஒரு அன்னிய தேசத்தில் முகமறியாத வேறு ஜாதி மனிதர்களுடன் வசிக்கமனமற்றுக் கொழும்பில் தங்கியதைப் பற்றி அவர் மன்னிப்பை வேண்டியதுடன் இதற்கு முன் அநேக முறை அவருக்கெழுத எண்ணமுண்டாகியும் குற்றங்கள் பரிகரிக்கப்படுமுன் அப்படிச் செய்வது துணிகரமாயும் அவர் பிரியத்திற்கு விரோதமாகவும் நினைக்கப்படுமென்று அவ்விதம் செய்யாது விடுத்ததாய்க் கூறி, இரண்டொரு வேலைகளை முயன்று பார்த்தும் பயன்படாமல் கடைசியில் தேயிலை காப்பிக் கொட்டை பயிரிடக்கூடியதோர் பெரிய தோட்டத்தையுடைய ஒரு ஐரோப்பிய கனவானிடம் அவர் கம்பெனியின் கணக்குகளை யெழுதும் வேலையில் தகுந்த சம்பளத்துடனமர்ந்து அவர் மனதுக்கு கந்தபடி நடந்து கொண்டால் அவர் மதிப்பையும் பெற்றுக் கூடியமட்டும் சிறிது கௌரவ

மாகவே காலம் கழிப்பதாக வணக்கத்துடன் சொல்லி, இதற்குள் தன் பிழைகள் மன்னிக்கப்பட்டுத் தன் பெரிய தந்தையால் மறக்கப்பட்டிருக்குமென்று தான் நம்புவதாகவும் எழுதியிருந்தான்.

“அவன் தப்பிதங்களை மன்னித்து மறப்பதா? அது ஒரு நாளுமில்லை” என்று ரங்கநாத முதலியார் சற்றும் கலங்காத குரலில் கூறி, அக்கடிதத்தை நூறு சுக்கல்களாகக் கிழித்துக் காகிதக்கூளங்கள் நிறைந்த ஒருகூடையிலெறிந்தார். அவன் துணிவை நினைக்க அவருக்கு நிரம்ப ஆச்சரியமுண்டாயிற்று. “எப்படியும் நான் உயிருடனிருக்கும்வரை அவன் தன் முகத்தை இங்கு காட்டமுடியாது” என்று தீர்மானித்துக்கொண்டு அவர் அன்றிரவு படுக்கை சென்றார். ஆனால் வெகு நேரம்வரை தூக்கம் பிடிக்காமல் தம் படுக்கையில் இங்குமங்கும் புரண்டுகொண்டேயிருந்து அவர் கடைசியில் மூன்று மணிக்குப்பிறகு சிறிது கண்ணயர்ந்தார் அவர் விழித்துக்கொள்ளும்பொழுது காலைமணி ஐந்தரைக்கு மேலாயிருந்தது. மார்பு படபட வென்று அடித்துக்கொண்டு, தேக முழுவதும் மயிர்க்கூச் செறிய அவரெழுந்து தம் படுக்கையிலுட்கார்ந்து கொண்டார். வெளியிலெங்கும் இருட்டாயிருந்தது. சிறிது நேரத்திற்குப் பிறகுதான் அவர் தம் சுபாவ ஸ்திதியைப்பெற்று, தாம் கண்டது நிஜமல்ல, கனவென்றறியலானார். அவரை அவ்விதம் தலை முதல் கால்வரையில் நடுக்கமுறச் செய்தது அவர் கண்ட ஒரு பயங்கரமான கனவே யொழிய வேறல்ல. நிஜமாய் நடப்பதுபோல் அவ்வளவு தெளிவாய்த் தோன்றித் தம் மனதில் பயம், பச்சாத்தாபம், துக்கம் இவைகளை யுண்டாக்கிய அச்சொப்பனத்தை மீளவும் நினைப்பதற்குக்கூட அவர் உள்ளம் நடுங்கினார். அது கீழ்க்கண்டவாறு :—

கொழும்பிலுள்ள ஒரு பனங்காட்டின் வழியாய் அவர் போய்க்கொண்டிருந்தார். அப்பொழுது திடீரென்று விஜயசுந்தரத்தின் குரல் கேட்டதுபோல் அவருக்குத் தோன்றியது. சத்தம்கேட்டவிடத்தை நோக்கிச் சென்றபொழுது புல்லால் மூடப்பட்டிருந்த ஒரு பாழுங்கிணற்றில் விழுந்து அவன் உயிருடன் ஊஞ்சலாடுவதைக் கண்ணுற்றார். அவரைத் தெரிந்துகொண்டு அவன் தன் கைகளை நீட்டித் தன்னையெடுத்து விடும்படி வேண்டிக்கொள்ள, என்ன காரணத்தாலோ அவர் தன் செயலற்றவராகி, அவன் வேண்டுதல் காதிற்படாதவர் போலவே நின்றார். வெகுநேரம் தத்தளித்த பிறகு அவனுயிர் பிரிந்தது. இப்பொழுது அவர் தன் தேகம் முன்போல சுவாதீனப்பட்டவராகிக் குனிந்து அக்கிணற்றினுள் பார்க்கும்பொழுது, அவன் பிணம் ஜலத்தின் மேலெழும்பி, ஒரு வித பயங்கரமான சிரிப்புடன் அவரை வெறித்து நோக்கிக் கொண்டிருப்பதைக் கண்டார். அவர் முகம் முழுவதும் வியர்க்க தேகம் சில்லிட்டுப்போனதுபோல் தோன்றியது.

இச்சமயத்தில்தான் ரங்கநாத முதலியார் விழித்துக்கொண்டார். தம் படுக்கையிலெழுந்துட்கார்ந்து இருளைக்கண்டு பயப்படும் ஒரு சிறு குழந்தையைப்போல நாற்புறமும் வெறித்து நோக்கலானார். வெகுநேரம் கழிந்த பிறகு தான் அவர் கொண்ட திகில் ஒருவாறு சாந்தமாயிற்று. “சீ! என்ன ஒரு கனவைக்கண்டு இவ்வாறு பயந்து போனேம்” என்று தன்னைத் தானே சிறிது இகழ்ந்துகொண்டு அவரெழுந்து ஜன்னற் கதவுகளை நன்றாய்த் திறந்தவுடன், அப்பொழுதுதான் வெளுத்துக்கொண்டுவந்த கிழக்கு திக்கின் வெளிச்சம் சிறிது சிறிதாய்ப் பூமியின்மீது பரவ, தோட்டத்திலிருந்து புஷ்பங்களின் மணத்துடன் காற்றும் குளிர்ச்சியாய் உள்ளே வீசிற்று. அச்சம் தீர்ந்தும் ஒருவாறு

சோர்வு மட்டும் நீங்காமலிருந்த தன் மனதை உற்சாகப்படுத்தக் கருதி அவர் கதவைத்திறந்து தோட்டத்திலிறங்கினார். எங்கும் பனிமூடியிருப்பினும், அவ்வதிகாலை தேகத்திற்கும், இருதயத்திற்கும் ஒருங்கே ஆரோக்கியத்தைத் தரக்கூடியதாயிருந்தது. சிறிதுநேரம் அக்குளிர்ந்த காற்றை அனுபவித்த பிறகு அவர் தன் மாளிகையை நோக்கித் திரும்பும்பொழுது எதிரே சுந்தரியைச் சந்தித்தார். வழக்கத்தைவிட அவள் முகம் பின்னும் பிரகாசத்தையிழந்து வெளுத்து வாடித்தோன்றியது. அதிகாலையிலெழுந்திருப்பதே அவளது வாடிக்கையாயும், விருப்பமாயுமிருப்பினும், கடும் ஜுரத்தில் விழுந்து பிழைத்துத்தேறியது முதல் சுந்தரி அவ்விதம் செய்ய அவர் ஒப்பவில்லை.

தன்னைக்கண்டு சற்று தயங்கி நின்ற அவளை “இவ்வளவு சீக்கிரம் படுக்கையை விட்டெழுந்திருப்பது உன் உடம்பிற்கு நல்லதல்லவே, அம்மா” என்று அவர் சிறிது அன்புடனேயே கேட்டார்.

“இல்லை. இரவு முழுவதும் கெட்ட கனவுகளால் நான் சிறிதும் கண்ணயரவில்லை. ஆகவே சூரியோதயத்தை ஆவலோடு எதிர்பார்த்திருந்தேன்,” என்று சுந்தரி சொல்ல, உடனே அவருக்குத் தான் கண்ட சொப்பனம் நினைவிற்கு வந்து முகம் மாறியது. அன்றிரவு இரண்டு பெயர் தூக்கம் வராமல் தவித்தது அவர் மனதிற்குச் சற்றும் சமாதானமாயிருக்கவில்லை.

4-வது அதிகாரம்.

மேற் கூறிய சங்கதிகள் நிகழ்ந்து இரண்டு வாரத்திற்குப் பிறகு ஒருநாள் சாயந்திரம் திடீரென்று சுத்தமான நீலஆகாயத்தில் கரியமேகங்கள் சூழ்ந்து இடியுடனும், மின்னலுடனும் மழை அந்தர தாரையாய்ப்பொழியத் தொடங்கிற்று. அன்று ரங்கநாத முதலியார் தன் வியாபார ஸ்தலத்திலிருந்து சீக்கிரம் வீடுவந்துவிட்டார். அன்று பொழுது விடிந்தது முதல் சடுதியில் கோபமூட்டப்படும் அவர் மனதிற்கு யாவும் அப்பிரியத்தைத்தரக்கூடிய விதமாகவே நடந்தது. இரண்டொரு வேலைக்காரர்கள் விடுமுறை வாங்கிக்கொண்டு வாராமலிருந்தமையால் அவ்வேலை நேராகச் செய்யப்படவில்லை யென்று அவர் மற்ற வேலைக்காரர்களைக் கண்டபடி கோபித்துக்கொண்டார். பிறகு அவர் தம் வியாபார ஸ்தலத்திற்குச் சென்றபொழுது, அங்கும் அவர் உத்திரவிட்ட வண்ணம் சில முக்கிய கடிதங்கள் உடனே எழுதி அனுப்பப்படாமலிருந்தது அவர் கோபத்தைப் பின்னும் விருத்திசெய்ததே யொழிய அது சாந்தமாவதற்குச் சாதகமாயிருக்கவில்லை. இவ்விதம் அவர் அன்று கடுகடுத்த முகத்துடன் தன்னறையில் ஏதோ புஸ்தகம் பார்த்துக்கொண்டிருந்தபொழுது, வெளியில் “சாமீ!” என்று கூப்பிடும் சத்தம் காதில் விழ எரிச்சலுடன் ஏதோ வைது கொண்டு விசாரிக்க வாயலிற் சென்றார். படியில் நின்றிருந்த தபாற்காரன் “கடிதம் சாமீ!” என்று ஒரு கடிதத்தைக் கொடுத்தான். “ஏன் இவ்வளவு நேரம்?” என்று அவர் கடுமையாய்க் கேட்க, “இன்று தபால் வர நாழிகையாயிற்று. மேலும் திடீரென மழைபிடித்துக்கொண்டபடியால் நான் துரிதமாய் வரமுடியவில்லை” என்று கூறி மற்றொரு கடிதத்தையெடுத்து “சாமீ! இது பத்து தினங்களுக்கு முன் வந்த கடிதம். எங்களிலொருவன் தவறிப்போய் இதைத்தபாலாபீசிலேயேவைத்துமறந்துவிட்டான். இன்றுதான் அது மறுபடியும் எங்கள் கண்களில் அகப்பட்டது. அவ்வஜாக்கிரதைக்காக அவனை மேலதிகாரிகள் தகுந்தபடி கண்டித்து விட்டார்கள். இந்தாருங்கள்” என அதை வாங்கிக்கொண்டு ரங்கநாத முதலியார் “உங்களுடைய கவனக்குறைவினால்தான் எவ்வளவோ தீங்குகளுண்டாகின்றன” என்று கூறி உள்ளே சென்றார்.

மழை அப்பொழுது தான் முதலில் தொடங்கிய அகன் வேகத்தினின்றும் சற்று தணிய வாரம்பித்திருந்தது. மேகத்தின் இடைவிடாத ஆழ்ந்த துளியும் பளீர் பளீரென்றுண்டாகும் மின்னலும் மட்டும் இன்னும் ஒய்ந்தபாடில்லை. சென்ற ரங்கநாத முதலியார் மேஜையினருகிலிருந்த நாற்காலியிலுட்கார்ந்து தபாற்காரன் கொடுத்த முதற் கடிதத்தைப்பிரித்துப் படிக்கத்தொடங்கினார். வெளியிலிருந்த மப்பினால் போதுமான வெளிச்சம் குறைவாயிருக்கவே, விளக்கேற்றி வைப்பதன் பொருட்டு அவர் வேலைக்காரர்களை இரண்டு மூன்று தரம் கூப்பிட்டும் பதிலொன்றும் கிடைக்காதவராய்ப் பிறகு நாற்காலியை வெளியிலிருந்து வெளிச்சம் வரும் வழிக்குச்சரியாயிழுத்துப்போட்டுக் கொண்டு கடிதத்தைப் பிரித்தார். அது மூத்த மகன் மாசிலாமணி எழுதியது. தான் உத்தியோகமாயிருந்த இடத்தினின்றும் மற்றொரு ஊருக்குத் தன்னை மாற்றிவிட்டதைத் தந்தைக்குத் தெரிவித்திருந்தான். "தெய்வாதீனமாய் அதிக தூரமில்லை" என்று சொல்லிக்கொண்டே அவர் அதை வைத்துவிட்டு மேஜையின் மீது கிடந்த இரண்டாவது கடிதத்தை வழக்கம்போல எவ்விடமிருந்து வந்ததென முத்திரையைக் கவனியாமல் உடைத்து அவசரமாக இரண்டு வரிகள் படித்ததும் அவர் முகத்தில் யாரும் இதுவரையும் பார்த்திராதபடி ஒருவித மாறுதலுண்டாயிற்று. அவர் கைகள் நடுங்க, கடிதம் கீழே விழுந்து விடும்போல் தோன்றியது. அதிற் கண்ட விஷயம் பின் வருமாறு.

கொழும்பு,
22-ம் தேதி, மாசி.

ஐயா,

சென்ற நாலைந்து வருஷங்களாய் எங்களிடம் வேலை பார்த்து வரும் விஜயசுந்தரம் என்னும் பெயரையுடைய வாலிபனொருவன் வைசூரியினால் உயிர் துறந்த விசனகரமான சங்கதியைத் தங்களுக்குத் தெரிவிப்பது அவசியமென எண்ணுகிறோம். அவன் பந்து முறையார்களைப் பற்றி இது வரையும் ஒன்றும் தெரியாதிருந்தும் அவனிடமிருந்து கண்டெடுக்கப்பட்ட ஒரு மேல்விலாசத்தின் உதவியால் இக்கடிதம் வரைய நேர்ந்தது. இவ்விஷயத்தில் தங்கள் விருப்பத்தை எதிர் பார்க்கும்,

அருணாசலம் செட்டி,
முதல் ஏஜண்டு.

கடிதமும் அவர் கையினின்றும் கீழே விழுந்தது. 'அந்தோ! எப்படிப்பட்ட பாபம் செய்தேன்'! என்று ரங்கநாத முதலியார் உரக்கச் சொன்னார். தன் சகோதரன் மகனை—இளம் வயதில் அநியாயமாய் உயிர் துறந்த தன் சகோதரன் தான் இறக்கும் தருவாயில் தாயற்ற, இனித் தந்தையையும் இழக்கப் போகும்—மூன்று வயது பாலகனைத் தன் கையில் ஒப்புவித்துக் காப்பாற்றும்படி வேண்டியபொழுது அப்படியே செய்வதாக உறுதிமொழி கூறியதை அவர் எவ்வளவு சரியாய்க் காப்பாற்றினார்! சிறிதும் யோசனையில்லாமலும் இரக்கமில்லாமலும் தனியே ஒருவரும் கவனிப்பாரற்றுச் சென்னையில் விட்டு வைத்ததாலல்லவோ அவன் அப்பிழைகளை யிழைக்கும்படி நேர்ந்தது! அத்தப்பிதமும் அவரையே சேர்ந்ததல்லவா? ரங்கநாத முதலியாரின் தலை சுழன்றது. இச்சிறு வயதில் அவன் முகமறியாத ஒரு அன்னிய நாட்டில் ஒரு அற்பக் கூலியாளைப் போல் வேலைசெய்து முடிவில் உயிர் துறக்க நேர்ந்ததற்கும் காரணம் அவரேயன்றோ! இப்படிப்பட்ட மகா பாதகத்தைச் செய்த அவருக்கு எந்த லோகத்தில்தான் இடமுண்டாகும்! கீழே கிடந்த கடிதத்தைப் பார்த்த வண்ணம் அவர் வெகு நேரம் அசையாமற் உட்கார்ந்து கொண்டிருந்தார். மழை முற்றிலும் ஒய்ந்து மரங்களின் இலைகளினின்றும் வீட்டின்

மேற் கூரையினின்றும் சொட்டிக் கொண்டிருக்கும் சத்தம் மட்டும் இடைவிடாது கேட்டுக் கொண்டிருந்தது. ஏற்கெனவே இருண்டிருந்த அவ்வறை சூரியன் அஸ்தமித்ததனால் பின்னும் இருளடைந்திருப்பதை அவர் அறியவேயில்லை. உள்ளே மனிதரிருக்கும் சந்தடி கேட்காதது கண்ட வேலைக்காரன் யஜமானர் வெளிச் சென்றாரென வெண்ணி விளக்கேற்றிக்கொண்டு வந்து வைக்கவில்லை யாதலால் சிறிது நேரத்திற்குள் அவ்வறை முற்றிலும் கும்பிருட்டாய் விட்டது. கல்லாலடித்த பதுமைபோல் அவர் இதொன்றையும் அறியாதவராய் உட்கார்ந்திருந்தார்.

வெளியிலிருந்து திரும்பி வந்த ஞானசம்பந்தம் உள் நுழைந்தான். எங்கும் ஒரே அந்தகாரம் குடிகொண்டிருக்கவே ஒரு விளக்கையேந்திக் கையிலெடுத்துக் கொண்டு உட்பிரவேசித்ததும் அசையாமல் நாற்காலியிலுட்கார்ந்திருந்த தந்தையைப் பார்த்தான். தனிமையை ஒரு போதும் விரும்பாத அவர் அவ்விதம் இருளையும் எண்ணாமலுட்கார்ந்திருந்ததின் காரணம் அவனுக்கு விளங்கவில்லை. கீழே கிடந்த கடிதம் கண்களில் தென்பட்டதும் ஏதாவது வியாபார விஷயமாக நஷ்டம் நேரிட்டதோ வென்று அவனுக்குச் சந்தேகமுதித்தது. ஆனால் முன் எச்சரிப்புச் சிறிது மில்லாமல் அப்படி நேரிடுவது அசாத்தியம். ஞானசம்பந்தம் தந்தையின் சமீபம் செல்ல அவர் தன் தீராத்துக்கத்திலாழ்ந்திய முகத்தை நிமிர்த்தி அவனைப் பார்த்தார். அற்ப விஷயங்கள் ஒரு போதும் அவரை இவ்வண்ணம் கலக்காது, ஏதோ ஒரு பெரிய ஆபத்துத் தங்களைச் சூழ்ந்திருக்கவேண்டும் என ஞானசம்பந்தம் நடுநடுங்கி விட்டான். மௌனமாய் ரங்கநாத முதலியார் கீழே கிடந்த கடிதத்தை யெடுத்து அவனிடம் நீட்டினார். நடுங்கிய கைகளுடன் அவன் அதை வாங்கி முகம் வேறுபடாமல் வாசித்து முடித்ததும் அவர் "ஞானசம்பந்தம்! என்னைவிடக் கொடிய பாபி யொருவன் இவ்வுலகிலிருக்கிறானென நினைக்கிறாயா?" என்றார். அப்பொழுது இறுமாப்புடன் கூடிய அவர் கண்களிலும் இரண்டு மூன்று கண்ணீர்த் துளிகள் தோன்றி அவர் கன்னங்களின் வழியாய் வழிந்தோடின.

அவனொன்றும் அதற்குப் பதிற் கூறவில்லை. ஏதோ தீர்க்காலோசனையி லாழ்ந்தவன்போல் தோன்றினான். மீண்டுமொருதரம் அவ்வறையில் நிச்சத்தம் குடிகொண்டது, வெகு நேரம் கழித்து ரங்கநாத முதலியார் அந்நிச்சத்தத்தை மாற்றி "ஞானசம்பந்தம்! நீ எதைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்க "அத்துறப்பாக்கிய முள்ள பெண்—சுந்தரி—அவள் அறிந்தால்"—என்று ஞானசம்பந்தம் கம்மிய குரலில் கூறினான். இதுகாறும் அவளைப்பற்றி நினைக்காதிருந்த ரங்கநாத முதலியார் இப்பொழுது அவள் பெயரை கேட்டதும் முன்னிலும் பதின்மடங்கதிகமான மனோவேதனையை அனுபவிக்கலானார். தன் மகன் கூறியதை அவர் அறிந்து கொண்டார். அதனுண்மை இப்பொழுது அவர் மனதில் மிகவும் தெளிவாய் விளங்கிற்று.

"இதை அவள் அறியலாகாது" என்றான் ஞானசம்பநதம் உறுதியான குரலில்.

"அதெப்படி முடியும்? எனக்குச் சாத்தியமாய்த் தோன்றவில்லை" என்று அவன் தந்தை ஒரு பெரு மூச்சுடன்கூற,

"ஏன் சாத்திய மில்லை? இவ்வேழு வருஷங்களாக அவனைப் பற்றிச் சிறிதும் அறியாதிருந்தது போல் இப்பொழுது மிருப்பது நலமல்லவா? அவன் திரும்பி வருவானென்ற ஆசை ஒருவாறு ஒழிந்த பிறகு அவன் தெரிந்து கொள்ளுவது அவ்வளவு தீங்கிற் கிடமாகாது" என்றான் ஞானசம்பந்தம்.

"ஆம், நீ கூறுவதுண்மையே. நானியற்றிய இவ்வொரு கொடிய பாபமே இனி என் வாழ்நாள் முழுமையையும் அந்தகாரத்தி லாழ்த்தப் போதுமானது. ஆகா! அக்கனவு—"

கனவா?

"ஆம் இருவாரங்களுக்கு முன்பு ஓரிரவு நான் மிகவும் பயங்கரமானதோர் கனவு கண்டேன். அதைப்பற்றி மீளவும் நினைக்கவும் என்னுள்ளம் நடுங்குகின்றது. அவ்விரவிற்குப் பிறகுதான் இச்சம்பவமும் நிகழ்ந்திருக்க வேண்டும். அந்தோ! அது என்னை எச்சரிக்க வரும் ஒரு முன் சூசகமென்பதை யறியாமற் போனேனே. என் கடின இருதயத்தில் நான் விளைவித்த தீச்செயலுக்கு இனிப் பரிகாரமேது!" என்று அங்நிற்பாக்கியரான ரங்கநாத முதலியார் கூறித் தன்னைத்தானே வெறுத்துக் கொண்டார். சொர்க்கலோகத்திற்கு நேரே செல்லப் போகின்றவர்களில் தாமுமொருவரென எண்ணித் தம் நற்செய்கைகளைப்பற்றி அவர் கொண்டிருந்த இறுமாப்பு அகம்பாவம் யாவும் வெகு சீக்கிரத்தில் பறந்து போய் விட்டன.

பற்றி யெரிவது போன்ற தம் நெற்றிக்குச் சிறிது குளிர்ச்சியை யுண்டாக்கக்கருதி சிறிது நேரத்திற்குப் பிறகு அவரெழுந்து வாயிற் கதவைத் திறந்து வெளிப்புகுந்ததும் படியில் ஒரு மனிதன் நிற்பதைக் கண்ணுற்றார். அவரைக் கண்டு தலை குனிந்து நின்ற அவனை யாரென்று கேட்க வாயெடுத்தவர் திடீரென அவன் கண்கள் தம் கண்களுடன் ஒன்றுபட்டதும் 'ஞானசம்பந்தம்!' என்றுகூவிக் கீழே விழச் சென்றவர் ஒருவாறு தம்மை ஸ்திரப்படுத்திக்கொண்டு நின்றார். இக்கூக்குரல் கேட்டு ஒன்றும் விளங்காமல் ஓடி வந்த ஞானசம்பந்தமும் திடுக்கிட்டு அசைவற்ற மரம் போல் நின்று விட்டான், ரங்கநாத முதலியார் தம் கண்களையே நம்பமுடியாதவராய்த் தாம் காண்பது கனவோ வென்று திகைக்கலானார். தம் முன் நிற்பது நிஜ உருவமா? அல்லது வெளிச்சத்தின் மாருட்டமோ? ஒன்றும்தோன்றாமல் அவர் புத்தி மயங்கியது. கடைசியாக அவர் குரலே யெழும்பாத வண்ணம் 'நீ விஜயசுந்தரத்தின் பிசாசாயிருந்தால் என்னை இவ்விதம் வருத்துவது நியாயமே' என, அப்புதியவன் ஆச்சரியத்துடன் அவரை நோக்கினான்.

"நீ யார்? விஜயசுந்தரம் நீ தானா?" என்று ஞானசம்பந்தமும் நம்பாத குரலில்கூற "ஆம், விஜயசுந்தரம் நான்தான். ஏழு வருஷங்களுக்கு முன் என் தீச்செயல்களுக்குப் பரிகாரத்தைத்தேட இவ்விடம் விட்டுச் சென்றேன். ஆனால் அப்பொழுது மன்னிப்பை வேண்ட எம்மனம் இசையவில்லை" என்று அவன் பதிலுரைத்ததும்,

"இறக்காமல் நீ உயிருடனிருப்பது உண்மை தானா? அல்லது நான்தான் கனவு காண்கின்றேனா? நீ உயிரிழந்தா யென்ற கடிதத்தைச் சற்று முன்புதானே பார்த்தேன்" என்றார் ரங்கநாத முதலியார்.

"ஆம் கடுமையான வசூரியினால் மூன்று நாட்கள் முற்றிலும் நான் ஞாபகமற்றிருந்தமையால் தவறாகத் தங்களுக்குச் சங்கதி கிடைத்திருக்கலாம்" என்றான் விஜயசுந்தரம்.

"அப்பா! என் சமீபம் வா. நீ உயிருடனிருப்பதை உன்னைத் தொட்டுப் பார்த்தே தெரிந்து கொள்ளுவேன். ஒரு பெரிய மனத் துக்கத்தினின்றும் இன்று நீ என்னை ரக்ஷித்தாய். நான் பிறந்ததின் பயனை இன்றே பெற்றேன்" என்று அவர் கைகளை நீட்டியதும் அவன் சமீபம் அணுக நீர் ததும்பிய கண்களுடன் அவர் அவனைக் கட்டிக் கொண்டார். ஐயோ! நாம் முன்பு பார்த்த விஜயசுந்தரம்—ஒருவருக்கு மஞ்சாது, பிடிவாதமும தைரியமும கண்களில்

விளங்கிய இருபது வயது கட்டழகு வாய்ந்த சிறுவனல்ல இப்பொழுது! பல துன்பங்களிலடிப்பட்டு வியாதியின் கொடுமையால் எவ்வளவோ வேறுபட்டுத் தோன்றினான். இச்சந்தோஷ சங்கதியைத் தெரிவித்து சுந்தரியைக் கூட்டி வரும்படி அவர் கூறிய வண்ணம் ஞானசம்பந்தம் சென்று அவளை யழைத்து வந்தான். ஆநந்தம் மிகுதியால் அவளால் நடப்பதும் அசாத்தியமாயிருந்தது. அவளை ஒரு கையால் பற்றி அணைத்து ரங்கநாத முதலியார் "அம்மா! நானியற்றிய ஒரு பெரிய தீச்செயலின் பயனை நான் அனுபவிக்கா வண்ணம் கடவுள் என்னைக் காப்பாற்றினார். உங்களிருவருக்கும் நான் அதிக துன்பத்தை யிழைத்து விட்டேன். நீங்கள் மனப்பூர்வமாய் என்னை மன்னித்தாலொழிய என் இருதயம் ஒருபோதும் அமைதியை யடையாது" என, அவ்வுருக்கமான வார்த்தைகளைக் கேட்டதும் சுந்தரியின் கண்களினின்றும் கண்ணீர் தாரையாய்ப் பெருகத் தொடங்கிற்று.

விஜயசுந்தரமும் நீர்ததும்பும் கண்களுடன் "நடந்தவைகளைப்பற்றி நாமினி நினைக்காதிருப்பதே நமது முதற் கடமையாகும். ஞானசம்பந்தம்! உனக்குக் கடிதமெழுதப் பலநாள் நான் நினைத்ததுண்டு. நீயும சுந்தரியுமே என்நினைவை விட்டு எக்காலத்தும் அகலாதிருந்தவர்கள்" என்றான்.

"விஜயம்! நானும் அநேக முறை உன்னிடமிருந்து ஏதாவது சமாசாரம் கிடைக்குமென்றே எதிர் பார்த்திருக்கிறேன். நீ எழுதியிருந்தால் ஒரு வேளை முன்பே நாம் மீண்டும் ஒன்று சேர்ந்திருக்கலாம். இப்பயங்கரமான கடிதமும் வருவதற் கிடமுண்டாகாமலிருந்திருக்கும். ஆயினும் ஒவ்வொன்றும் அதன் காலம் கிட்டும்போதன்றோ நேருகின்றது! ஈசனின் செயலை யாரே அறிவார்!' என்று ஞானசம்பந்தம் மிகுந்த ஆர்வத்துடனும் கூறினான்.

அன்று ரங்கநாத முதலியார் அடைந்த சந்தோஷத்திற்களவேயில்லை. தம் மனதினின்றும் பெரும் பாரம் கழியப் பெற்றவராய் அவர் இச்சம்பவத்திற்குப் பிறகு முற்றிலும் வேறு மனிதனாய் விட்டார்.

முற்றிற்று.

ஸ்திரீகளின் நிஜ பக்தி.

(ஸ்ரீமதி அலமேலு அம்மாள்.)

புருஷர்களை விட ஸ்திரீகளுக்குத்தான் நிஜமான பக்தி யென்பது பின்வரும் உதாரணத்தால் நன்கு விளங்கும்.

கிருஷ்ணன் கோபர்கள்சூழப் பலராமனுடன் ஒரு நாள் பிருந்தாவனத்தைவிட்டு வெளிக்கிளம்பிப் பசுக்களைமேய்த்துக்கொண்டே வெகுதூரஞ் செல்லுகையில் வெயிலால் களைப்படைந்து, மரங்களடர்ந்த ஒரு தோப்பிற்குட்சென்று, தங்களுக்கு நிழலைத்தந்து சிரம பரிகாரம் செய்யும் மரங்களைப்பார்த்து 'இம்மரங்கள் மகாபாக்கியம் செய்தவைகள்; ஏனெனில்வெயில்,மழை, காற்று, பனி இவைகளை சகித்துக்கொண்டு, தம் நிழலை யண்டினவர்களுக்கு உதவி வருத்தத்தை நீக்குவதால் பிறருக்கே முழுதும் உபயோகமாகும் பிழைப்பையுடைத்தானவைகளாயிருக்கின்றன. சமஸ்த பிராணிகளுக்கும் ஜீவனத்தைத் தருகிற இம்மரங்களின் பிறப்பு, சற்ஜனங்களுடைய பிறப்புப்போல் மிகவும் மேன்மையானதாக விருக்கிறது. இவைகள் தங்களுடைய இலைகள், புஷ்பங்கள், பழங்கள், நிழல், வேர், மாவுரி, கிளைகள், நல்ல வாசனையளிக்கும் பிசின், தளிர், முளைகள் முதலியவற்றால் பிராணிகளுடைய விருப்பங்களைத் தருகின்றன. இவைகளைப்போலவே பிராணிகளும் பிராணிகளுக்குத் தங்கள் பிராணன்களாலும்,

பணங்களாலும், புத்தியினாலும், பேச்சினாலும் எப்பொழுதும்நன்மையைச் செய்வது பிறப்பின் பயனாகும்.'

இவ்விதம் சொல்லிக்கொண்டு, தளிர், பூங்கொத்து, பழம், இலைகள், பூக்கள் இவைகளின் பாரத்தால் தாழ்ந்திருக்கும் மரங்கள் நிறைந்த வழியே யமுனா நதிக்குச் சென்றார். அவ்வாற்றில் பசுக்களை ஜலம் குடிக்கச்செய்து, அவைகள் ஜலம் குடித்த பிறகு தாமும் கோபர்களும் ருசியான யமுனா நதியின் ஜலத்தைத் திருப்தியாகக் குடித்தார்கள்.

கோபர்கள் யமுனையாற்றின் அருகிலுள்ள காட்டில் பசுக்களை மேய்த்துக்கொண்டிருக்கையில், பசியினால் வருந்தி ராம கிருஷ்ணர்களிடம்சென்று பின் வருமாறு சொல்லுற்றனர்.

“புஜபலமுள்ள பலராமா! துஷ்டர்களை யடக்கும் கிருஷ்ணா! எங்களைப் பசி மிகவும் வருத்துகின்றது. அதை நீங்கள் நீக்கவேண்டும்” என்றனர்.

பசியினால் வருந்தும் கோபர்களின் இவ்வசனங்களைகேட்ட ஜகதீசனான பகவான் கிருஷ்ணன், தம்மிடம் பக்தி செலுத்திவருகிற வேதியர்களின் மனைவிகளுக்கு அனுக்கிரகம் செய்ய மனதில் எண்ணிப் பின்வருமாறுசொல்லுகிறார்:

“பிரம்ம நிஷ்டர்களான வேதியர்கள் சொர்க்கத்தை அடைய வேண்டுமென்று கருதி, ஆங்கிரச மென்னும் யாகத்தைச்செய்து வருகிறார்கள். ஏ கோபர்களே! நீங்களந்த யாகசாலைக்குச் சென்று என்னாலனுப்பப் பட்டவர்களென்று பூஜ்யரான பலராமருடைய பெயரையும் என் பெயரையும் சொல்லிக்கொண்டு, அவ்விடத்தில் அன்னம் கேளுங்கள்” என்று சொன்னார்.

இவ்வாறு ஆக்ஞை பண்ணப்பட்ட கோபர்கள் யாகசாலைக்குச்சென்று அஞ்சலியஸ்தர்களாய் வேதியர்களை சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து அன்னம் கேட்டார்கள். ‘பூலோக தேவர்களே! நாங்கள் ராம கிருஷ்ணர்களின் உத்தரவின்படி நடக்கிறவர்களென்றறியுங்கள். உங்களுக்கு மங்களம். அதோ அதற்குச் சமீபத்தில் ராமகிருஷ்ணர்கள் பசுக்களை மேய்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பசியுண்டாய் அன்னத்தை விரும்புகிறார்கள். தர்மத்தை யறிந்தவர்களில் மேன்மையடைந்தவர்களே! உங்களுக்கு சிரத்தை யிருக்குமானால் ராம கிருஷ்ணர்களுக்கு அன்னம் கொடுங்கள். பசுபந்த தீக்ஷை, சௌத்ராமணி இந்த யாகங்கள் தவிர மற்ற யாகங்களில் தீக்ஷை செய்தவர்களது அன்னத்தை சாப்பிடுவதனால் தோஷமில்லையாம்' என்று சொல்லி அன்னம் கேட்டனர்.

இவ்விதம் பகவானுக்கே கோபர்கள் அன்னம் கேட்டதைக் காதில் கேளாததுபோல் உபேக்ஷைசெய்து, அற்ப பலனுக்காக அதிகக் கஷ்டப்பட்டு யாகஞ்செய்கிறவர்களான அவ்வேதியர்கள் தாங்கள் எல்லாமறிந்தவர்கள் போல விவேகமற்றிருந்தார்கள். தேசம, காலம், பலவித திரவியங்கள், மந்திரம், தந்திரம், ருத்விக், கார்கபத்தியம், ஆகவனீயம், தக்ஷிணாக்னி, தேவதைகள் யாகம், தர்மம், யஜமானன் முதலியன யாவும் எந்தப் பரமாத்மாவினுடைய உருவங்களாக விருக்கின்றனவோ, அந்தப் பரமாத்மாவே உலக நன்மையின் பொருட்டு அவதாரம் செய்திருக்க, தாங்களே பிரம்ம நிஷ்டர்களென்ற கர்வத்தால்அவரைச் சாதாரண மனுஷ்யனென்றெண்ணி, அவரது உண்மையையும் மகிமையும் அறிந்து கொள்ளவில்லை.

அன்னம்கேட்ட கோபர்களுக்குக் கொடுக்கிமென்றும் இல்லை யென்றும சொல்லவில்லை. இதைப் பார்த்து கோபர்கள் அன்னத்தின் ஆசைவிட்டு ராம கிருஷ்ணர்களிடம் சென்று சங்கதி தெரிவித்தனர். அதைகேட்ட கிருஷ்ண பகவான் மிக நகைப்படைந்து “காரியவாதி

கோகான்” என்ற பழமொழியைச்சொல்லிக் காண்பித்து மறுபடியும் சொல்லலுற்றார்.

கிருஷ்ண பகவான்:—நீங்கள் அவ்வேதியர்களின் மனைவிமார்களிடம்சென்று சங்கர்ஷணனுடன் (பலராமர்) நான் வந்திருப்பதைத் தெரியப்படுத்துங்கள். அவர்கள் எப்பொழுதும் என்னிடத்தில் மனதைச் செலுத்திவருகிறவர்களாதலால் உங்களுக்கு வேண்டிய அன்னமளிப்பார்கள்.

என்றிவ்வாறு பகவான் சொல்ல கோபர்கள் யாகசாலைக்குச்சென்று, அங்கு அலங்கரித்து வசித்துக்கொண்டிருக்கும் வேதியர்களின் பத்தினிமாரைக்கண்டு, அவர்களுக்குத் தெண்டனிட்டு மிக்க வணக்கத்துடன் சொல்லுகிறார்கள். “அம்மணிகளே! உங்களை வணங்குகிறோம். நாங்கள் வந்த சங்கதியைத் தெரிந்துகொள்ளுங்கள். இதற்குச் சிறிது தூரத்தில் சஞ்சரிக்கும் கிருஷ்ண பகவான் எங்களை அனுப்பினார். அவர் பலராமரோடும் கோபர்களோடும் பசுக்களைமேய்த்துக்கொண்டு வெகு தூரம் வந்திருப்பதினால், அவர்களுக்குப் பசியுண்டாய் அன்னத்தையபேக்ஷிப்பதனால் யாவருக்கும் போதுமான அன்னமளியுங்கள்” என்றார்கள்.

அவ்வேதியர்களின் பத்தினிமார்கள் கிருஷ்ண பகவான் அவ்விடத்திற்கு வந்திருக்கும் சங்கதியைக்கேட்டு நெடுநாளாக அவரைப்பார்க்கவேண்டுமென்ற ஆவல் கொண்டவர்களாதலால் அவருடைய கதையில் ஈடுபட்டவர்களானார்கள். அப்பொழுது அவர்கள் ஷட்ரஸோபேதங்களான நான்குவித அன்னங்களைப் பாத்திரங்களிலெடுத்துக்கொண்டு, நதிகள் சமுத்திரத்தை நோக்கிச்செல்லுவதுபோலக் கிருஷ்ணனிருக்குமிடத்தை நோக்கிச்சென்றார்கள். அப்பொழுது அவர்கள் தங்கள் பதிகளாலும், பெற்றோர்களாலும், உடன் பிறந்தவர்களாலும், மக்களாலும் தடுக்கப்பட்டும் உத்தமசுலோகராகிய கிருஷ்ண பகவானிடம் நெடுநாளாய் அதிகப் பிரியத்துடன் மனதைச்செலுத்தினவர்களானதால் அதற்கு உடன்படாமல் அசோக மரங்களா லலங்கரிக்கப்பட்டிருக்கும் யமுனா நதிக்கரையின் உபவனத்தில்வந்து பலராமர் கோபர்கள் சூழச் சஞ்சரிக்கும் கிருஷ்ணனைக் கண்டார்கள்.

அப்பொழுது காளமேகம் போலக் கறுத்த நிறமுடைய கிருஷ்ண பகவான் தங்க ஆபரணங்களை யணிந்துகொண்டும், பூமாலை, மயில்தோகை, தாதுக்கள், பவளங்கள் முதலியவைகளால் நடவேஷந்தரித்தும், தம்மோடு வரும் ஒரு கோபனுடைய தோளில் ஒரு கையைப்போட்டுக்கொண்டும், மற்றொரு கையால் தாமரைப் பூவை ஆட்டிக்கொண்டும், அணிகளணிந்த காதுகளும் அழகிய கன்னமும் புன்சிரிப்புப் பொருந்திய முகத்தையுடையவராயுமிருந்தார்.

அப்பத்தினிமார்கள் கிருஷ்ண பகவானிடம் செலுத்திய மனமுடையவர்களாய் காதால் அவருடைய மகிமையைக் கேட்டதனாலும் கண்களால் அவரைப்பார்த்ததினாலும் தங்கள் இருதயத்தில் அவரைக்கொண்டு ஜாக்கிரத்தை விட்டு ஜீவன் ப்ராக்ஞனை யடைந்தது போல் அவரவரிஷ்டப்படி பாதசேவை செய்து அவரை தரிசித்துத் தங்கள் வருத்தத்தை நீக்கிக்கொண்டார்கள். மற்ற ஆசைகளையெல்லாம் விட்டுத் தம்மைப்பார்க்க வேண்டுமென்னும் விருப்பத்துடன் வந்திருக்கும் வேதியர்களின் மனைவிமார்களின் எண்ணத்தை யறிந்து எல்லோருடைய மனத்திற்கும் சாக்ஷியாகிய கிருஷ்ணபகவான் சிரித்துக்கொண்டு அவர்களைப் பார்த்துச் சொல்லுகிறார் :—

பகவான் :—நீங்கள் என்னைப்பார்க்கவேண்டுமென்று வந்தது நிரம்ப சரியானது. மகா பாக்கியம் பெற்றவர்களே! சுகமாக வந்தீர்களா? உட்காருங்கள் உங்களுக்கு நாம் செய்ய வேண்டியதென்ன? நீங்கள் உங்கள் விவேகத்தி

னால் புருஷார்த்தங்களை யறிந்து உங்கள் ஆத்மாவாகிய என்னிடத்தில் பிரியமான பயனைக் கருதாமலும், இடைவிடாமலும் பக்தி செய்து வருவது நிச்சயம். மனம், புத்தி, பிராணன், ஆத்மா, பெண்டு, புருஷன், பணம் முதலியவை யாதொரு பரமாத்மாவினுடைய சம்பந்தத்தால் பிரியமுள்ளனவைகளாகவாகின்றனவோ அவரைவிட வேறெது பிரியமாகும்? ஆகையால் யாகசாலைக்குச் செல்லுங்கள்; உங்கள் பதிகளாகிய வேதியர்கள் உங்களை முன்னிட்டு யாகத்தை முடிக்கப்போகிறார்கள்.

வேதியர்களின் பத்தினிமார்கள்:—பிரபுவே! இவ்விதம் எங்களுக்குப் பிரிய மில்லாத வார்த்தைகளைச் சொல்வது சரியல்ல. உமது மகிமையை விளக்கும் வேத வாக்கியத்தை உண்மையாகக் கூறும். நாங்கள் பந்துக்களையெல்லாம் தள்ளிவிட்டுத் துளசிமாலை படிந்திருக்கும் உமது பாதமூலத்தை எங்கள் சிரசால் சுமக்க வந்திருக்கிறோம். இனி எங்களை பதிகளாவது பெற்றோர்களாவது உடன் பிறந்தவர்களாவது பிள்ளைகளாவது பந்துக்களாவது சிநேகிதர்களாவது சேர்க்கமாட்டார்கள். இவர்களே சேர்த்துக் கொள்ளாதபோது மற்றவர்கள் எங்ஙனம் எங்களைச்சேர்த்துக்கொள்ளுவார்கள்? ஆகையால் காமக் குரோதாதிகளை யடக்கியாளும் பகவானே! தங்கள் பாதகமலங்களை வணங்காநின்ற எங்களுக்கு வேறு பணிவிடையை அருளாதிருங்கள்.

பகவான்:—ஸ்திரீகளே! உங்கள் பதிகளும் பெற்றோர்களும் உடன் பிறந்தார்களும் பிள்ளைகள் சிநேகிதர்கள் முதலிய யாவரும் என்னால் ஆட்டிவைக்கப்படுகிறவர்களாதலால் உங்கள் பேரில் யாதொரு மனஸ்தாபமு மில்லாமல் உங்களை ஒப்புக் கொள்ளுவார்கள். அதைத் தேவர்களும் சம்மதிப்பார்கள். மனிதர்களுடைய சரீரத்திற்கு ஆலிங்கனம் முதலானவைகளால் உண்டாகும் சிநேகப் பெருக்கமும் அதனாலுண்டாகும் சுகமும் அந்தந்தக் காலத்தில் மாத்திர முண்டாவதால் உத்தமமல்ல. ஆகையால் என்னிடம் மனதைச் செலுத்தித் தியானம் செய்துகொண்டிருப்பீர்களானால் சீக்கிரமாக என்னை அடைவீர்கள். சிரவணம், தரிசனம், தியானம், என் நாமத்தை உச்சரித்தல் முதலானவைகளால் பக்தி பெறுவது போல என் சமீபத்திலிருந்து வருவதால் அவ்வளவு பக்தி யுண்டாகாது. ஆகையால் நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள்.

இவ்விதம் அனுக்கிரகம் செய்யப்பட்ட வேதியர்களின் மனைவிமார்கள் தங்கள் யாகசாலைக்குச் செல்ல, வேதியர்கள் தங்கள் மனைவிமார்களின்மீது கோபங் கொள்ளாமலிருந்து யாகத்தைச் செய்து முடித்தார்கள். அவர்களுள் ஒருத்தி தன் கணவனால் தாத்தப்பட்டு ஓரிடஞ் சென்று சாஸ்திரங்களில் கூறியபடி பகவானை மனதில் உறுதியாகத் தியானம் பண்ணிக் கொண்டு பிராரப்த கர்மத்திலுண்டான ஸ்தூலதேகத்தைப் போக்கிப் பரமபத மெய்தினள்.

பிரபுவாகிய கிருஷ்ணனும் நான்கு விதமான அன்னத்தைக் கோபர்களுக்குக் கொடுத்து உண்ணச் செய்து தாமும் உண்டார். விளையாட்டுக்காக நரவேஷங்கொண்ட பரமாத்மாவானவர் சாமானிய மனிதர்கள் போல நடந்து தம் அழகினாலும் வாக்கினாலுமுண்டான சரித்திரங்களாலும் கோபர்களும் கோபஸ்திரீகளும் பசுக்களும் சந்தோஷப்படும்படி விளையாடினார்.

பிறகு வேதியர்கள் ராமகிருஷ்ணர்களுடைய மகிமையை நினைத்துக்கொண்டு ஜகத் கர்த்தர்கள் நம்மை அன்னங்கேட்க அதைக்கொடாது அலக்ஷியம் செய்த பாவிகளாய் விட்டோமே யென்று மிகவும் பரிதபித்தார்கள்.

தங்கள் பத்தினிகளுக்குக் கிருஷ்ண பகவானிடத்தில் ஏற்பட்ட திடமான பக்தி தங்களுக்கு ஏற்படவில்லையே யென்று மிகுந்த வருத்தமடைந்தார்கள். ‘அதோக்ஷஜரிடத்தில் நமக்கு பக்தியில்லாமற் போனதினால் நம்முடைய ஜன்மமும் மூன்று வேதாத்தியயனமும் அனேக விரதங்களை யனுஷ்டித்ததும் சிறந்த பாண்டித்தியமும் நல்ல வம்சமும் கர்மத்தைத் தவறாமற் செய்யும் வல்லமையும் பயனற்றனவாய் விட்டன. நாம் யாவருக்கும் குருவாயிருந்தும் முக்கிய பயனடையத் தவறிப்போனது யோகிகளையும் மயக்குகிற பகவானுடைய மாயையேயாகும் என்பது நிச்சயம். எந்த பக்தியானது யமனுடைய பாசக்கயிறுபோல் இல்லறத்தாலுண்டாகும் ஆசாபாசங்களை அறுத்து விடுகிறதோ அப்பேர்ப்பட்ட பக்தி ஜகத் குருவாகிய கிருஷ்ண பகவானிடத்தில் நம் மனைவிமார்களுக்குண்டானதைப் பாருங்கள்!’ என்றிவ்வாறு ஒருவருக்கொருவர் ஆச்சரியமாகச் சொல்லிக் கொண்டார்கள். ‘மேலும் இவர்களுக்கு வேதியர்களுக்குரிய உபநயனம் முதலிய கிரியைகள் குருகுலவாசம் வேதாந்த விசாரம் தவம் முதலியன ஒன்றும் கிடையா. அப்படியிருந்தும் உத்தம கீர்த்தியடைந்தவராயும் யோகீசுவரர்களுக்கு ஈசுவரனாயுமிருக்கிற கிருஷ்ணபகவானிடத்தில் திடமான பக்தி இவர்களுக்கு ஏற்பட்டது. நமக்கு மேற்கூறிய உபநயனம் முதலியவை யாவும் நிறைந்திருந்தும் அவ்வித பக்தி யுண்டாகவில்லை. இல்லறத்திலுண்டாகும் ஆசையால் மயக்கமடைந்து மோக்ஷமடைவதை மறந்த நமக்கு நல்லவர்களுக்கு நற்கதியளிக்கும் கிருஷ்ணபகவான் கோபர்களைக்கொண்டு அவ்வழியை நமக்குத் தெரிவித்தார். அவ்விதமில்லாமற் போனால் மோக்ஷத்தையளிக்கும் யஜமானனாயும் எல்லாக் கோரிக்கைகளையுமுடையவனான கிருஷ்ண பகவானுக்கு ஆளும் கருவிகளான நம்மால் என்ன பிரயோஜனம்? ஆகையால் இது விளையாட்டு.

“லக்ஷ்மி தேவியானவள் மற்ற யாவரையும் விட்டுக் கிருஷ்ண பகவானுடைய கால்களை ஒருதரம் தொடுவதற்காக அதிக காலம் அவரைச் சேவைசெய்து வருவதால் அவரே நம்மிடம் அன்னம் யாசித்தது மனிதர்களை மயக்கும் தன்மையாகிறது. யாகத்தில் தேசம், காலம் திரவியம், மந்திரம், தந்திரம், ருத்விக், மூவித அக்கினி தேவதைகள், யஜமானன் இவை யாவும் பகவானுடைய உருவங்களேயாகும். அப்படிப்பட்ட பரமாத்துமாவே யது குலத்தில் கிருஷ்ண மூர்த்தியாக அவதரித்து நேரில் வந்திருப்பதாகக்கேட்டும் நமது அவிவேகத்தால் அவரை நாம் கவனிக்கவில்லை.

‘பகவானிடத்தில் பக்தியைச் செலுத்தின ஸ்திரீகள் நமக்கு மனைவிகளாக இருப்பதனால் நமக்கும் அரியினிடத்தில் உண்மையான பக்தி பிறந்தது. இது நமது புண்ணியத்தின் பலனேயாம்.

‘எந்தப் பரமாத்மாவின் மாயையால் மயங்கி நாம் கர்மத்தைச் செய்வதிலேயே சுழன்று கொண்டிருக்கிறோமோ, அப்பேர்ப்பட்ட அகண்ட அறிவினையுடைய பரமாத்மாவாகிய உம்மை வணங்குகிறோம். அவரது மாயையால் மயங்கி அவருடைய மகிமையைத் தெரிந்து கொள்ளாதவரான நமது குற்றத்தை நமக்கெல்லாம் ஆதி புருஷனாகிய பகவான் பொறுத்தருள்வாராக.’

இவ்விதம் கிருஷ்ண பகவானிடம் தாங்கள் செய்த குற்றங்கள் யாவற்றையும் உரைத்து, அவைகளை நீக்கிக்கொள்வதற்காக அவரைப் பார்க்க விருப்பமுற்றனர்களாயினும் கம்சனது பயத்தால் (அபக்குவமானதால் கம்சன் பயம் தடையாயிற்று) அவ்விடம் விட்டுச்செல்ல முடியவில்லை; பரம பக்தர்களான அவர்கள் மனைவிமாருக்குக் கிடைத்த தரிசனம் இன்னம் அஞ்ஞானத்தால் மூடப்பட்டிருக்கும் இவர்களுக்கு லபிக்க சாத்தியமோ!

இகலோகப் பற்றற்று ஏகமனத்துடன் தம்மை ஆச்சிரயிக்கும் புண்ணியவான்களுக்கல்லவோ பகவான் அருள் புரிவார்.

மன்னிப்பு.

சிறு கதை.

ஸ்ரீமான் க. அமுதன்.

(உரிமைகள் ஆசிரியருக்கே.)

அவர்களிருவரும் ஒருவற்கொருவர் எதிரும் எதிருமாக மங்கிய ஒளி நிலவும் அறையில் உட்கார்ந்திருந்தனர். அவ்வறையின் ஒரு புறத்தில் உள்ள ஒரு வட்டமான நிலைக்கண்ணாடியினால் பகலவனுடைய அந்திக்கதிரொளி இழுத்து விழுங்கப்பட்டது.

அவளும் அவனும், மனைவியும் கணவனும் இம்மையில் நடக்கும் நித்திய நாடகத்தின் இரண்டு பிரதான பாத்திரர்கள்.

முதலிற் பேசியது அவளே:—

“என்னை நீர் ஏமாற்றி வருகிறீர்! அது தெரியும்!”

தழுதழுத்த குரலில் அவன் அவள் சொல்வியதை மறுக்க முயன்றான்.

“இல்லை! நீங்கள் ஒன்றுஞ் சொல்லவேண்டியதில்லை! நடந்த விஷயமெல்லாம் எனக்குத் தெரியும்!......ஆமாம், கையெழுத்திடாத ஒரு கடிதம்...ஒரு கேவலமான கடிதம்...”

“ஊர் பேரில்லாத ஒரு கடிதத்தை நீ நம்புகிறதாக இருந்தால்!” என்று சொல்லிக் கணவன் ஆறுதலுடன் பெரு மூச்சு விட்டான்.

“வாயை மூடுங்கள், இருக்கட்டும்! நீங்கள் ஒன்றும் சொல்லத்தேவையில்லை! முதலிற் கடிதத்தைப் படித்தவுடனே அதை யாரோ ஒரு போக்கிரியினுடைய வேலையாக இருக்க வேண்டுமென்று நினைத்தேன். நான் ஒரு பேதை. எனக்கென்ன தெரியும். அந்தக் கடிதத்தை எரித்து விடுவதற்கு பதிலாக மறுபடி ஊன்றி வாசித்துப் பார்த்தேன். அதிற் கண்ட சில விஷயங்கள் என் நெஞ்சைக் கவர்ந்தன. சில்லரை விஷயங்களை ஒருவரால் கட்டிவிட முடியாது! உங்களைப்பின் தொடர்ந்தேன்!...சங்கதி வெளியாய் விட்டது!” என்று மனைவி சுடச்சுட மொழிந்தாள்.

கணவனால் ஒன்றுஞ்சொல்ல முடியவில்லை. கைக்கு மெய்யாய்ப் பிடிபட்ட பிற்பாடு சொல்வதற்கு என்ன இருக்கும்? “ஆமாம், நீ இப்போது என்ன செய்வதாக இருக்கிறாய்?” என்று அரங்கன் அடைத்துக்கொண்டுபோகும் தொண்டையுடன் சொன்னான்.

அவள் சிறிது தயங்கினாள். பெருமூச்செறிந்து விம்மினாள். துர்த்தரை அவள் தொண்டையைச் சிறிது நேரம் பேசவிடாது அடைத்து விட்டது.

“எனக்கென்ன தெரியும். நல்ல வேடிக்கைதான்!” என்று கடைசியாக உத்திரம் தந்தாள்.

தன்னுடைய குற்றத்தினின்று எளிதிற் கரையேறி விடலாமென்று நினைத்துக்கொண்டு,

“மாதவியே! நீ ரொம்ப நல்லவள்! நீ என்னை மன்னித்து விடுவாய் என்பது எனக்கு நன்றாய்த்தெரியும்!” என்று திடங்கொண்டு அவன் அவளிடம் சொன்னான்.

இருள் அப்பொழுது அதிகரித்தது மனைவி கணவனிடம் கம்பீரத்தொனியில் பரிகாசமற்று சொல்லுகிறாள்:—

“மன்னித்து விடவா!...நீங்கள் அவ்வார்த்தையின் அர்த்தத்தை அறிவீர்களா?”

தான் செய்த குற்றத்தை ஒத்துக்கொண்ட சில வாரங்களில் மன்னிப்பு என்னும் வார்த்

தையின் பொருளை அரங்கன் பொருள்பட உணரலானான்.

மாதவி அரங்கனை மன்னித்து விட்டாள். அவர்களுடைய இல்வாழ்க்கை வழக்கம்போல் மறுபடி நடக்க வாரம்பித்தது. வெளிப்பார்வைக்கு இருவர்களும் சுக தம்பதிகளாகத் தோற்றினார்கள். ஆயினும் ஒரு விஷயம் அவர்களிருவரையும் மிகப்பயங்கரமாகப் பிரித்து நின்றது. அது அரங்கன செய்த குற்றத்தினால் உண்டாகவில்லை; அது மாதவி செய்த மன்னிப்பினால் ஏற்படலாயிற்று.

இருவரில் ஒருவர் மற்றவரைமன்னிக்கத்தக்க உயர் நிலையை அடைவதானது, தம்பதிகளின் வாழ்க்கைச் சுகத்தை அழிக்கப்போதுமானது. மனைவி மாதவி கணவன அரங்கனை மன்னித்தாள்—திராசின் ஒரு முனை தாழ்ந்தது. மாதவி அரங்கனைக் காட்டிலும உயர்ந்தவள் என்பது தானாக ஏற்பட்டு விட்டது; அவன் அரங்கனை மனனித்த அன்று சாயங்திரமே அது ஏற்பட்டு விட்டது. மாதவி தன்னிலும் உயர்ந்தவள் என்பதை அரங்கனின் இறுமாப்பு ஏற்கவில்லை.

மாதவியின் தயாள குணத்தினால் அரங்கன் தான் தோற்றுவிட்டதாகவும், தன் பலம் குன்றிவிட்டதாகவும் எண்ணி எண்ணி உளம் உடையலானான். அன்று முதல் இருவர்களும் மௌனமாக இரக்கமின்றி ஒருவரையொருவர் அகவழியில் எதிர்த்துப் போரிடலானார்கள்.

மாதவி அரங்கனுடைய குற்றத்தை முற்றிலும் மறந்துவிட எண்ணினாள். அரங்கன பல வழிகளிலும் அவளுக்கு அதை நினைவு மூட்டினான்.

பொழுது விடிவதற்கு முன்னே “உனக்குத் தான் தெரியுமே......அன்றைக்கு...” என்று சொல்லி அவளுக்கு நினைவு மூட்ட அவன் சிறிதும் அஞ்சவில்லை.

“வாயை மூடுங்கள், இருக்கட்டும்! அதைப் பற்றி மறுபடி பேசவேண்டிய காரணமென்ன? நானதான உங்களை அன்றைக்கே மன்னித்து விட்டேனே!” என்று மாதவி அரங்கனுக்கு வேண்டா வெறுப்புடன் பதில் உரைப்பாள்.

அச்சமயம் தன் கணவனுடைய முகத்தில் கடு வெறுப்பின் குறியை அவள் கவனித்தாளில்லை.

இவ்வாறாகப் பலமாதங்கள் கழிந்தன. ஒரு நாள் சாயங்திரம திடீரென அவர்களிருவருடைய மனவருத்தமும் ஆறாது அதிகரித்துக் காணப்பட்டது.

களைத்துப்போன இதயமும், வலிமையற்ற சிரையும் எவ்வாறு மிக உயரமான மலையுச்சியைப் பொறுக்காவோ அவ்வாறே மாதவியினுடைய வன்மையற்ற இள உயிரானது தான் காட்டிய பெருந்தன்மையை நீடித்த காலம் தாங்கமாட்டாது தவித்தது. கவலையும் வருத்தமும் நாளுக்கு நாள் அதிகரித்தன.

கடைசியாக துயரந்தாளாது தன்னால் இனி முடியாதென்றெண்ணிக் கணவனுடைய குற்றத்தைத் தன் பெருந்தன்மையினால் மன்னித்து விட்டதினின்று உண்டான கஷ்டிலையை சகிக்க முடியாது மாதவி மிக்கப் பரிதவித்தாள்.

அரிக்கும் கவலை நோயினால் மாதவி கஷ்டப்படுவதாக வைத்தியர்கள் சொன்னார்கள். தன் கணவன் செய்த குற்றத்திற்காக தான் இதுவரை வருந்தியதை மறந்து தானே அக்குற்றத்தைச செய்ததாகமாதவி நினைத்துவிட்டாள். நெஞ்சம் உடைபடும் வண்ணம் எண்ணி எண்ணிப் பதைத்தாள். குற்றமற்ற தூயமான மாதவி தான் ஏதோ செய்யத்தகாததை செய்து விட்டதாக எண்ணி எண்ணிப் பேதைபோல் கண்ணீர் சொரிந்தாள்.

ஒரு நாள் மாலை வேளையில் அரங்கன் வீட்டிற்குத் திரும்பிய பொழுது கூடத்தின் ஒரு

மூலையில் சோபாவின் மீது மாதவி மூர்ச்சையுற்ற மர்திரி விழுந்து கிடப்பதைக் கண்ணுற்றான். சிறிது நேரத்திற்கெல்லாம் அவளுடைய மார்பு விம்முவதையும் அவள் பெரு மூச்சு விடுவதையும் திடுக்கிட்டறிந்து அவளருகிற் சென்று உட்கார்ந்து அவள் வதனத்தைத் தன் கைகளில் ஏந்தி அவளை என்ன விஷயமென்று கேட்க இருக்கும் தருவாயில் அவள் தன் கணவன் பாதங்களில் விழுந்து தன்னை மன்னிக்குமாறு அவனிடம் பன்முறை விண்டு விம்மினாள்; 'மன்னிப்பீராக! என்னை மன்னிப்பீராக!!' என்று அவள் கதறி விம்மி அழுதாள்.

"எதற்காக உன்னை மன்னிக்கவேண்டும்... எதற்காக?" என்று அரங்கன் வினவினான்.

விவரமாக ஒன்றையும் விடாது கேட்பவர்கள் இதயத்தில் தான் சொல்வது உறையும் வண்ணம் மாதவி தனது குற்றத்தை அரங்கனுக்கு விளக்கினாள். அவள் தன் கணவனுக்குத் துரோகம் செய்து விட்டாளாம். அன்று பிற்பகல் அது நடந்து விட்டதாம்!

தன்னைப் பின்பற்றிய ஒருவனுக்கு அவள் பலியப்பட்டு விட்டாளாம். இவன் மாதவியை வெகு நாளாகப் பின் பற்றியதுண்டாம்!

தற்சமயம் மாதவிக்கு வெட்கம் தாளமுடியவில்லை! கணவன் முன்னிலையில் அவள் வெட்கத்தினால் துடித்தாள்.

உடனே அவளுக்கு அப்பொழுது நடுக்கு வலியும் நரம்பிழுப்பும் உண்டாயின. சோபாவினின்று தரையில் விரித்துள்ள இரத்தின கம்பளத்தின்மீது தன்னறிவற்று உருண்டு விழுந்தாள். அரங்கனும் வீட்டு வேலைக்காரியுமாக மாதவியைப் படுக்கை அறைக்கு எடுத்துச் சென்று அவளைக் கட்டிலின் மீது இறத்தினார்கள். வேலைக்காரப் பெண்ணை அரங்கன் "அம்மா இன்று சாயந்திரம் எத்தனை மணிக்கு வெளியிலே போனாங்கோ?" என்று வினவினான்.

"அம்மா இன்று வீட்டைவிட்டு அசையவேயில்லை!"

"யாராவது அம்மாவைப் பார்க்க வந்தாங்களா?"

"இல்லை, யாரும் வரவில்லையே!"

உடனே டெலிபோன் மூலமாக ஒரு டாக்டர் வரவழைக்கப்பட்டார். வைத்தியர் மாதவியின் கண்ணைச் சிறிது நேரம் உற்று நோக்கிக் கவனித்துவிட்டு அரங்கனைத் தனியாக அழைத்துச் சொல்லுகிறார்:—

"உனது மனைவி ரொம்பக் களைத்துக் காணப்படுகிறாள். அவள் மூளை மிகவும் களைத்துப் போயிருக்கிறது; அவள் ஏதோ ஒரு குறித்த எண்ணத்திற்கு இரையாயிருப்பதாகத் தோன்றுகிறது. தன்னுள் குடிகொண்ட ஏதோ ஒரு எண்ணத்துடன் போராடவும் வெல்லவும் அவளிடம் சக்தி யில்லை."

"என்ன பண்ணுகிறதையா வைத்தியரே? அவள் சொல்ல முடியாதவ்வளவு கஷ்டப்படுகிறாளே. இன்று பிற்பகல் அவள் தன் கற்பை இழந்து விட்டதாகக் கனவிடுகிறாள். அவளிடத்தும் அவளுடைய கற்பிடத்தும் மிக நம்பிக்கை உண்டு, என் மீது எனக்கு எவ்வளவு நம்பிக்கை உண்டோ அவ்வளவு அவள் மீதும் எனக்கு நம்பிக்கை உண்டு" என்று சொல்லி வைத்தியரிடம் அரங்கன் கதறினான்.

"சரிதான் இருக்கட்டும். மனைவி இப்பொழுது சொல்வதை யெல்லாம் நீ பொருட் படுத்த வேண்டாம். அவள் இப்பொழுது சொல்லி வரும் எண்ணங்களெல்லாம் அவள் மனதிற் பதியாதபடிக்கு பார்த்துக் கொள்ள வேண்டியதே இப்போதைப் பிரதான காரியம். அவளை மறுபடி இதனின்று மீட்பதற்கு உன்னுடைய உதவியை வெகுவாய் எதிர் பார்க்கிறேன்" என்றனர் வைத்தியர்.

"என்ன வைத்தியரே! என்னால் ஆகவேண்டியது என்ன என்று சொல்லுங்கோள்."

"அருமை நண்பா, கொஞ்சம் பொறுப்பாக. அவளிடம் பேசும் பொழுது அவளைக் குழந்தை என எண்ணிப் பேசுவாயாக. அவள் சொல்வதனைத்தையும் நீ சிறிதேனும் நம்புகிறதில்லை யென அவளுக்கு எண்பித்துக் காட்டு. அவளுடைய நோயுற்ற மனது அவளிடம் உண்டு பண்ணியிருக்கும் பிரமையை நீ எவ்வண்ணமாயாவது அழித்தாக வேண்டும். இவ்விஷயத்தில் எனக்கு உன்னிடத்து நம்பிக்கை உண்டு. நீ சொல்வதில் ஏதாவது ஒன்று அவளை மறுபடி பிரமிக்கச் செய்தால் நீ அதைக் கண்டு பயங்கொள்ளக் கூடாது—மேலும் நீ அதை மறந்து அவளிடம் உரையாடவேண்டும். அவள் இதனின்றும் கரையேறுவாள் என்பதில் நீ சிறிதும் ஐயங் கொள்ளல் கூடாது. அவள் தேறுவதற்கு இது ஒன்றே வழி' என்று வைத்தியர் விவரமாக விளக்கினார்.

அறையில் நுழைந்தவுடன் கதவின் பின்னால் மாதவி யிருப்பதை அரங்கன் கண்டான். அவள் எங்கோ வெளியிற் போவதற்காக உடுத்தி யிருப்பது போல் உடுத்தி யிருந்தாள்.

'எங்கே போகிறாய்?' என்று அவளை அரங்கன் கேட்டான்.

'இனி இங்கு தங்க எனக்கு யோக்யதையில்லை! எங்காவது நான் போய் விடுகிறேன்!' என்றாள் மாதவி.

"மாதவி, உனக்கு உடம்பு, சரியாக இல்லை. பேசாதேபோய் படுக்கையிற் படுத்துக்கொள்!"

"இல்லை, இல்லை என்படி என்னை விட்டு விடுங்கள். நான் உங்களுக்குத் துரோகம் செய்து விட்டேன். இனி இங்கு இருக்க எனக்கு உரிமை கிடையாது" என அலறினாள் மாதவி.

அரங்கன் மாதவியை வாரி இருகைகளாலும் அணைத்துக் கொண்டு கதறுகிறான்:—

"இல்லை மாதவி! நீ ஏதோ கனவுகாண்கிறாய்! உன்மீது ஒருவிதக் குற்றமுமில்லை!"

"இல்லை, இல்லை; நான் உங்களை ஏமாற்றியது மெய்யே. என்னை மன்னியுங்கோள்! உங்களைக் கீழே விழுந்து கும்பிடுகிறேன். என்னை மன்னித்து விட்டதாக ஒரு வார்த்தை சொல்லுங்கோள்!" என்று மாதவி அலறினாள்.

அவன் அவ்வேளை பலமாதங்களுக்கு முன் மன்னித்தபொழுது தான் எவ்வளவிற்கு இகழ்வடைந்ததாக எண்ணினான் எனபதை திடீரென நினைத்துக்கொண்டான். பழிக்குப் பழிவாங்கவேண்டுமென்கிற எண்ணம் அவனுக்கு அப்பொழுது ஒரு கணத்தில் உதித்தது. அதை அவனால் அடக்க முடியவில்லை.

"என்னை மன்னித்து விட்டதாகச்சொல்லுங்கோள்......சொல்லுங்கோள்" என மாதவி கதறிய வண்ணமாக இருந்தாள்.

மாதவியை அரங்கன் தன் இருகைகளாலும் வாரினான், எடுத்தான், அணைத்தான—பிறகு அவளைக் கேவலம திருப்தி செய்யும் பொருட்டு அவள் தன்னிடம் முன்னொருக்கால் சொலவியது போல்—

"மாதவி! உன்னை மன்னித்து விட்டேன்" என்று அவள் மனதிற் படும் வண்ணம் பகர்ந்தான்.

பிறகு அவள் கல கல வென்று வெகு நேரம் சொஸ்தமாகாத பைத்தியக் காரியைப்போல் சிரித்துக் கொண்டிருந்தாள். பிரமையும் அகன்றது. மனமும் தெளிந்தது.

பூரி ஜகன்னாதம்.

(சுவாமி அற்புதானந்தர்.)

ஒரிஸாவின் பண்டைய ஸ்தலங்களாகிய புவனேச்வரம், கோளமுகம், என்ற க்ஷேத்திரங்களைப்பற்றி வரைந்தபோது இன்னொரு சமயம் ஜகன்னாதத்தைப்பற்றி வரைவோமென்று கூறிவிட்டிருந்தோம். இவ்வமயம் இந்நகரின் அரிய விடயங்களில் சிலவற்றை வரைவாம்.

இந்தியாவின் எப்பாகத்திலிருந்தும் இருப்புப்பாதை மார்க்கம் இந்நகர் வரின் குர்தா ரோட்டு என்ற ஜங்ஷனுக்கு வரவேண்டிய அவசியமுண்டு. இங்கிருந்து ஜகன்னாதத்திற்கு சௌகரியமான வண்டிகள் ஏற்பட்டிருக்கின்றன. கல்கத்தாவிலிருந்து வருபவர்கள் நேராகச்செல்லும வண்டியைக்கொண்டிருப்பார். இந்நகரம வங்கக்குடாக்கடல் கரையிலுள்ளது. இங்குள்ள ஸ்னான கட்டங்களை மஹோததிகட்டமென்பர். இங்கு வங்கத்திலிருந்தும, ஏனைய நாடுகளிலிருந்தும பலர் வெப்பநாட்களில் குளிர்ச்சிக்கென வந்து தங்குவர். ஜகன்னாதத்தின கோயிலும் மிகப்பெரிய கோபுரங்களைக் கொண்டுள்ள கோயில ஆகும். தரை மட்டத்திலிருந்து 22அடி உயரத்தில இக்கோயில் கட்டப்பட்டுள்ளது. 606×644 அடி சதுக்கத்திலும 100×278 அடி சதுக்கத்திலும் இரண்டு துண்டுகள் இணைக்கப்பட்டுள்ள பெரும் பூமியில இக்கோயில் கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலின கோபுரம் சுமார் 192அடி உயரமுள்ளதென்பர். ஜகன்னாதத்தில பல அழகிய தடாகங்களுள. இவைகளிற் சிறந்தது நரேந்திர சரோவர் யெனபர். இது 784×573அடிகள் கொண்டுள்ளது. இங்கு சந்தன யாத்திரையென்ற உற்சவம் சுமார் 40 நாள் நடைபெறுகின்றது. இக்குளத்தின் வடகரையில விஜய கிருஷ்ண கௌஸ்வாமி (ஜடிபாலா)யினது சமாதி உளது. இங்கு வங்க சாதுக்கள் அநேக இனக்கூட்டங்களாகத் தங்குவார்கள. இவர் சைதன்ய மகாப்பிரபுவின சீடராகிய அத்துவைத கோஸ்வாமியின் சிஷ்யவர்க்கத்தினர் எனவென்றனர்.

ஜகன்னாதத்தின் கோயில்களைத் தயாரித்தவர் அனங்க பீமதேவர் ஆவர். இவர் பெரும் வைஷ்ணவர். இவர் ஜகன்னாதன் பலபத்திரன் சுபத்திரை மூவரையும் இங்கு ஸ்தாபித்தனர். இவ்விக்கிரகங்கள் கலலினால் அல்லது சிலை வார்ப்படத்தினால் ஏற்படவில்லை. வேப்பமரத்தினால் ஏற்பட்டுத் துணிகளை முறுக்கிட்டுச் சுற்றப்பட்டு, கைகள் இரண்டு துணிகளினால் இணைக்கப்பட்டு, ஜகன்னாதர் கருப்பு முகத்தையும் ஏனைய மூர்த்திகள் வெள்ளை முகத்தையும் கொண்டிருக்க கி. பி. 1297-ம் ஆண்டில் ஏற்படுத்தினார் எனச் சிலர் கூறுவர். பலர் இக்கோயில் மகா பாரத நாட்களை ஒட்டினதெனவும், இக்கோயில் மகா பாரதம் முடிந்து கிருஷ்ண பலதேவர் காலகதியடைந்துகொளுத்தப்பட்டுத் தண்ணீரில் விடப்படவே மிதந்து இங்கு வந்து கரை தங்கினதென்றும சொப்பனம் கண்ட ஒரு பிராமணனுக்காக அரசனும் கூடப்பட்டு இம்மூர்த்திகளை பிரதிஷ்டை செய்தார், எனவே விகாரரூபம கொண்டுள்ளனவென்பர். இவை எங்ஙனமாயினும் இவ்விஷயத்தில் இங்குள்ள மூர்த்தி காஷ்டமூர்த்தியே. கலேவரம என்ற சமயம் இம்மூர்த்தி புதுப்பிக்கப்படுவதுண்டு. அவ்வமயம இம்மூர்த்தியை தயாரிக்கும் தச்சன், பிரதிஷ்டை செய்யும் பிராமணன, செலவிடும அரசன் மூவரையும ஜகன்னாதஸ்வாமி கொன்று விஷ்ணுலோகம அளிக்கின்றனராம. பின்னர் ரதாரூடராய் மக்களுக்குக் காட்சி கொடுத்து ஜனகபுரம் செலலும காட்சி ஆயிரக்கணக்கானவோ, நூற்றுக்கணக்கானவோ, நடைபெற்றுள்ளதாம. ஸர் ஜான் உட்பர்ன் இந்நாட்டின கவர்னராக இருந்த சமயம "கலேவரம்" ஏற்பட்டு, மூர்த்திப பிரதிஷ்டையாகியும் மூவரும் விஷ்ணுலோகம் செல்லாமல் இந்தியாவிலேயே வசிக்கலானார்கள்.

இதன விவரம் எழுதப்புகின் விரியும். பண்டைய பாரதகதைகளுக்கும், பலரின

மன வெறுப்புகளுக்கும் இடமுமேற்படும். எனினும் வேறு சமயத்தில் இவைகளை வரைவோம். ஒரிஸா நாட்டில் இக்கோயில் மிகப் பெரியதாக இருப்பினும், சில்பமுறைகளில் பல அநாகரிகங்களைக்கொண்டுள்ளது, எங்கு பார்த்தாலும் இவ்வாபாச சிற்பங்களைக் காணலாம்.

இந்நாட்டின் பண்டாக்கள், யாத்திரிகஸ்திரீகளுக்கு மிக்க சாதுரியமாக இச்சிற்பங்களை தெரிசனை செய்விப்பர். இவைகள் ஜகன்னாதரின்போக பூமிலீலைகளென்பர் எம்போன்றவர்களுக்கு இக்கோயிலின் சிகரம் இவ்வளவு உயரமென யாத்திரிகளின் கண் திருஷ்டிபடாமல் இருப்பதற்குப் பண்டைய பெரியோர்கள் இவ்வித சில்பங்களை மக்களின் மனது மாறுபடக்கவர வேண்டுமென ஏற்படுத்தினர் என்பர், இருப்பினும் இவைகளை அநாகரிக சில்பமெனவே நாம் கண்டு, நகரின் பாகண்டங்களை அறிய முற்படலானோம். இந்நகரின் ஸ்தல மகிமையைப்போலவே இந்நகரின் மக ஊழல்களுமுள்ளன. வங்க ஒரிஸாநாட்டு இளம் கைம் பெண்கள் தம் காலங்களை ஜகன்னாத தரிசனத்திற் கழிக்க வருபவர்கள் இச்சிற்ப தரிசனங்களினால் வேசிகளாகவே திரிந்தலைவர். இந்நகரத்தில் இரண்டாவதாக கவர்ன்மெண்டார் வங்க ஒரிஸாநாட்டின் குஷ்டரோகிகளை சேகரித்து இருப்பிட வசதியையும் ஒருவேளை போஜனத்தையும் அளித்துச் சூலம்போட்டு விட்டு விட்டனர். இவர்கள்தான் வழி மார்க்கங்களில் எங்கு கண்டாலும்பிச்சைக்காரராகத் திரிவர். ஜகன்னாத ஸ்வாமிக்கு தினம் ஒரு பூசாரி. தினம் ஒரு தேவ தாஸி நர்த்தனம் செய்வாள். எனவே 365 பூசாரிகளும் 365 தேவர் அடியார்களும் உளர். இந்நாட்டுப் பெண்களை ஒரு கவி வருணிக்கும் காலத்தில் "ஆதி டாங்கு உகாரீ" என்றார். அதாவது இவர்கள் புடவை கட்டுவதில் ஒரு கால் முழங்கால்மேல் வரை, காற்றினால் அடிக்கடி திறப்புறும் என்றனர். இந்நாட்டினர் மாமிச ஆகாரிகளே. எனினும் வங்க பிராமணர்களிற் பலர் இறைச்சி உண்பதைப்போல் இறைச்சி எக்காலத்திலும் உண்ணார். மீன் (மச்சம்) மட்டும் ஜல புஷ்பமென உண்பர். அவல் ஆகாரமும் தானியங்களின் பொரிகள் வெல்லப்பாகு சேர்புவகையினமும் உணவாகக் காலையிற் கொள்வர். மிட்டாய் வகைகளை மிக்க அழகாகவே தயாரிப்பர். இந்நாட்டில் சுமார் 10-13 வித நெல்விளைவுகளுண்டு. எனவே அரிசிக்கடையின் விநோதம், கைத்தொழில் சிறப்புகள் கொண்டுள்ள கடைகளின் விநோதத்தைப்போலவே உள்ளது கைத்தொழிலில் மாட்டுக்கொம்பு, யானைத்தந்தம் முதலியவைகளில் மிக்க நேர்த்தியான வேலைகள் ஏற்பட்டுள்ளன. இருபத்துநான்குமணி நேரத்தில் ஆறு மணிநேரம் கோயில் மூடப்பட்டிருக்கும். மிகுந்த 18-மணிநேரத்தில் 36 முறை போக நைவேத்தியம் ஏற்படும். மத்தியான போக (நைவேத்தியத்தில்) இக்மிக்குக்கர் அல்லது அன்னபூர்ண குக்கர்கள்போன்ற முறையில் ஏழு அடுக்குப் பானையில் நைவேத்தியம் தயாரிக்கப்படும். மேல் அடுக்குப்பானை முதன் முதலாக தயாரிக்கப்பட்டு கீழ் இறக்கப்படும். பின்னர் இரண்டாவது அடுக்குப் பானை; கடைசியில் கீழ்பானை. ஏழாம் பானையிலுள்ள அரிசிவெந்துநைவேத்தியம் ஆகும். இவ் விமரிசையை ஓர் அதிசயமாக ஒருவர் மேல் ஒருவர் வீழ்ந்து யாத்திரிகள் கோயில் மடப்பள்ளியை மத்தியானத்திற் தரிசனம் செய்வர். பணக்காரர்கள் இதை நடத்தவும் பிரசாதம் பெறவும் பெரும் பொருள் அளிப்பர். இங்கு ஜாதி வித்தியாசமில்லை யெனவே சொல்வர். எனினும் தீண்டாதார்களை கோயிலுள் காண்பது அரிது. இஸ்லாம் மக்களுக்கு ஜெகன்மோஹன்வரை அனுமதியுண்டு. ஆனாலும் இந்திய தீண்டாதவர்களுக்கு அருண ஸ்தம்பர் வரை தான் உள்ளது.

இவ்விதமான ஆடம்பரத்தில் ஜகன்னாத ஸ்வாமி தன் மூத்த சகோதரருடனும் தங்கையுடனும் புரியில் வாழ்ந்துவரினும் இவருக்கு ஒரு மனைவியும் இரண்டு வைப்பும் உள்ளதென்கின்றனர். இவர்களை கர்மாபாயி, லெட்சிமி, ஜானகி என்கின்றனர். இதில் யார் எப்பாங்கு என்பதை விவரிக்காமல் விடயங்களை மட்டும் கவனிப்போம். கர்மாபாயின் கோயில் பெரிய கோயிலின் வடபாரிசத்தில் உள்ளது. இவ்வம்மைக்கு கிச்சடிதான் ஒரு வேளை உணவாக நைவேத்தியம் செய்யப்படும். லெட்சுமி தேவியின் கோயில் அழகிய கோயிலாகவே தென்பாரிசத்தில் உள்ளது. இவ்வம்மையாருக்கு மூன்று நைவேத்தியங்களுண்டு. ஜானகி அம்மையார் ஜனகபுரம் என்ற மூன்று மைல் தூரத்திலுள்ள ஒரு கிராமத்தில் வசிக்கின்றனர். இங்கு இந்த யாத்திரையில் வருடம் ஒரு முறை ஜகன்னாதர்சென்று ஏழு நாள் ஜானகியுடன் தங்கித் திரும்புகின்றனர். யாத்திரிகள் கர்மாபாயிக்கு நைவேத்தியம் செய்யவேண்டுமாயின் பண்டாவின் வாயிலாக ஒரு பானை சுமார் அரைப்படி கிச்சடி, கொஞ்சம் நெய், உப்பு, மஞ்சள், மிளகு, சீரகம், 10-விரட்டி (எருமுட்டை) கொண்டுவந்து கோயில் எதிரில் கிச்சடியைத் தயாரிக்கலாம். அரை அல்லது முக்கால் மணி நேரத்தில் தயாரிக்கப் பட்டவுடன் பண்டா நைவேத்தியமிட்டு அப்பானையை உடைப்பான். அப்பானை மூன்றே துண்டுகளாகும். இதைக் குயவனின் கைச்சாதுரியம் என்னாமல் கர்மாபாயின் சித்தி என்பர். ஒரு துண்டு கோயில் பூசாரிக்குச்சேரும். மற்றொன்று பண்டாவிற்குச் சேரும். மூன்றாவது யாத்திரிகளுக்குச் சேரும். ஆனால் ஜகன்னாத ஸ்வாமிகளோ தாம் 3ம் முறை 365 நாட்களும் உண்பதற்கென ஏகாதசியை தலைக்கீழாகக் கட்டி தொங்கவிட்டுள்ளார். இதுவும் ஒரு சிறு கோயிலில் கர்மாபாயி கோயிலுக்கும் பெரும் கோயிலுக்கும் மத்தியிலுள்ளது.

முன்னர் அருண ஸ்தம்பமெனகூறி நாட்டின் தீண்டாதார்கள் இதுவரையில் தான் செல்லலாம் என்றோம். இதைப்பற்றி சற்று கவனிப்பாம். இந்த ஸ்தம்பத்தை பதினெட்டாம் நூற்றாண்டில் மருட்டியர்கள் கோனாமுக்கிலிருந்து கொண்டு வந்து ஜகன்னாதத்தின் கோயிலுக்கு வெளிப்புரத்தில் ஸ்தாபித்தார்கள் இது 33 அடி உயரம். இதில் ஒரு குரங்கின் சில்பம் இருக்கிறது. இங்கிருந்துதான் வலது பாரிசமாகக் கோயிலுள் சென்று திரும்புங்கால் இடது பக்கத்தில் வருவர். எச்சில் என்பதுமட்டும் கிடையாது அவல் சாதம் முதலியவைகள் மிஞ்சி விட்டதைக் கழுவிப் பின்னர் நைவேத்தியம் செய்து உண்பர். எனவேதான் சர்வம் ஜகன்னாதம் என்பர். நாலு வருணங்களிலுள் வித்தியாசம் ஜாதி பேதம் கிடையாது. பண்டாக்கள் தம் யாத்திரிகளிலுள்ளும் எச்சில்என்ற வரம்புகளை ஒழிக்க முற்பட்டு விடுவர். இவை கோயிலின் எல்லைப் புரத்திலுள் மாத்திரமே இருக்கும். வெளியில் இவைகள் கிடையா. ஜனகபுரம் என்ற இடத்திலுள்ள ஜானகி கோயிலுக்குத் தினம் ஒரு முறை நைவேத்தியம், வருடம் 358 நாள் ஏற்படும். ரத உற்சவம் ஜனகபுரம் சென்று தங்கினவுடன் இவ்வம்மையாரின் அமக்களமே அமக்களம். திரும்பியதும் வெட்ட வெளிச்சம் தான். இரவில் இக்கோயிலில் ஒன்பது மணிக்கு மேல் தீபம் இருக்காது. ரத உற்சவத்திற்கென இந்நகரம் மிக்க அழகிய பெரும் ரஸ்தாவை இந்தியாவின் பல நகரங்கள் கொண்டில்லாதது போல் கொண்டுள்ளது. பனை ஓலை மேய்ந்த கூரைகளுடனும் இரண்டு சக்கிரங்களுடனும் இரண்டு உரியர்கள் இழுக்கும் வண்டிகள் உள. இது தவிர நாலு சக்கிரக் குதிரைவண்டிகளும் உள்ளன. ஏராளமான பசுமாடுகள் தர்மத்தில் விடப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான பிச்சைக்காரர்களையும் நூற்றுக் கணக்கான மடங்களையும் சத்திரங்களையும் காணலாம்.

இந்நாட்டில் வறுமையும் தரித்திரமும் அதிகம். கோயில் யாத்திரிகர்களைக் கொண்டே நகரத்தினர்களுக்குப் பிழைப்புப் பெரும்பாலாக ஏற்பட்டுள்ளது. மான்கள் அதிகமாக இக்காட்டிலிருப்பதினால் இவைகள் இரவில் சமுத்திர நீரைக்கண்டு தண்ணீர் அருந்த வந்து பெரும் மணல்களில் சிக்கி பாமரர்களுக்கு இரையாகி, தோல் பெட்டிகள், செருப்புகள் (சிலிப்பர்) தயாரிக்கப்படுவதிலும் உபயோகிக்கப்படுகின்றன. இந்நாட்டில் மா, பலா, முந்திரி முதலியவை ஏராளமாக விளைகின்றன. இக்கோயில் ரிஸீவர்களின் பார்வையில் இருக்கிறது. ஜகன்னாதத்தின் இராஜனெனப்பெயருக்கு ஒருவர் உளர். ரதம் தயாரிப்பது இவரின் பார்வையில் உள்ளது. வருடாவருடம் இரதத்திற்கென ஒரிஸா காடுகள் மரங்களை அளிக்கின்றன. இந்த ரதம் ஜனகபுரம் சென்று திரும்பியதும் சூறையிடப்பட்டுவிடும். அல்லது ஏலமிடப்பட்டு மக்கள் விறகுகளுக்கென உபயோகித்துக் கொள்வர். இக்கோயிலுள் தோல் சாமான்கள் செல்லல் கூடாது. செல்லுமாயின் பறிமுதல் செய்யப்பட்டு விடும். எனவே மணிபர்ஸ், ரிஸ்ட்வாட்ச், பெல்ட், ஹாண்டு பாக் வகையறுக்களையும் கால் செருப்புகளையும் வெளியில் விட்டுவிட்டுத்தான் செல்லவேண்டும். இவைகளை வைத்துக் கொண்டிருப்பதற்கென யாத்திரிகளில் ஒருவர் ஏற்படுவதே மிக்க நலம். இல்லையேல் போலீசின் ஆதரவினால்தான் இழந்த சாமான்களை திரும்பக்கொள்ள முயற்சிக்கவேண்டும்.

அழகிய சத்திரங்கள் பல உள்ளன. பண்டாக்கள் வீட்டிலும் இவற்றிலும் தங்க பண்டாக்களின் உபத்திரவம் மிக்க பெரியதாகவே ஏற்படும். ஜகன்னாதம் சென்றவர்கள் சாட்சி கோபாலத்திற்கு சென்றுதான் திரும்பவேண்டும். இதுவும் ஒரு இருப்புப்பாதை ஸ்டேஷன். மிக்க அழகிய கோயிலையும் சில தடாகங்களையும் கொண்டுள்ளது. குர்தாரோட் ஜங்ஷனிலிருந்து பூரி 28 மைல் தூரமுள்ளது. சாட்சி கோபாலம் பூரியிலிருந்து 9 மைல் உள்ளது. சோளமுகம் செல்பவர் பூரியிலிருந்தே செல்லலாம். 1533-ம் ஆண்டில் சைதன்னியர் இங்கு சென்றனர். இவருடைய மடம் ஒன்று இங்குள்ளது. இவருடைய பிரசாரத்தினால் வங்கநாடு பூரியில் சிரத்தை கொள்ளலாயிற்று. சங்கராசாரியார், வைஷ்ணவர்கள், உதாஸிகள் என மதப்பிரிவினையோர்களெல்லோரும் மடங்களைக்கொண்டுள்ளார்கள். பூரியின்உற்சவங்கள் பல எனினும் சந்தனமேலா, ரதயாத்திரை முதலியவைகளே பெரும் உற்சவங்கள். இன்னும் சிறுயாத்திரைகள் பல உள. இவைகளும் மிக்க விநோதக் காட்சிகளாகவே இருக்கும். இங்கு பேசுவது ஒரிஸா பாஷை. வங்க பாஷை பேசுபவர்களும் அநேகர். ஹிந்தி தெரிந்திருக்குமாயின் மிக்க நலம். ஆங்கில அதிகாரிகளாக இச்சில்லா போலீஸ் கமிஷனர், போஸ்டு, தந்தி, சமுத்திர கப்பல் ஆபீசர்கள் எல்லாம் உள்ளனர்.

* * *

நாட்டினர்கள் மிக்க ஏழைகளாகவே உள்ளார்கள். நாகரிகம் நகரத்தினர்களில் அவ்வளவு இல்லாவிடினும் நாட்டினர்களினுள் அதிகமாகவே உள்ளது. உணவு, உடை முதலியவைகளில் ஏனைய பிராந்தியங்களைக் காட்டிலும் மிக்க பிற்போக்குகளைக் கொண்டுள்ளார்கள். இவ்வொரிஸா காடுகளின் வாசிகளின் கூற்றை சொல்லல் மிக்க இழிவாகவே இருக்கும். இவர்கள் ஈயம் பித்தளைகளையே தரித்தும், கல்வி என்ற வாசனை யற்றவர்களாகவே இருப்பர். இவர்களினுள் கிறுஸ்தவ மதாசிரியர்கள் பிரசாரம் செய்கின்றனர். இந்து இஸ்லாம் மதாசாரியர்களின் பிரசாரம் இவர்களினுள் ஏற்படுவதில்லை. இக்கோயிலின் ஆர்ப்பாட்டங்கள் பண்டைய நூல்களைக் கொண்டிருப்பினும்அனு

கரிகமே மிகவாகப் பெருகியிருக்கக் காணலாம். இந்தியாவின் நான்கு தலங்களில் பூரி ஒன்று. ஏனைய மூன்று தலங்களாகிய பத்திரி நாராயன், துவாரகை, இராமேச்வரம் என்பனவைகளில் காணாத அநாகரிகமும் அதிக்கிரமமும் அட்டூழியங்களும் இங்கு காணலாம்.

எது சிறந்தது?

முன் ஒரு காலத்தில் ஓர் அரசன் தன் நாட்டில் மனு நீதி முறை பிறழாது செங்கோல் செலுத்தித் தன் பிரஜைகளுக்குத் தந்தைபோல் அரசுபுரிந்து வந்தான். கல்வி கேள்வியிற்சிறந்தவனான அவ்வரசனுக்கு இல்லறம் உயர்ந்ததா, துறவறம் உயர்ந்ததா என்பதில் ஐயமுண்டாயிற்று. தன் சபையின்கண் வரும் வித்வான்களான ஒவ்வொரு கிரகஸ்தர்களையும், துறவிகளையும் இதைத் தீர்க்குப்படி வினவினான். இல்லற தர்மத்தைத் தழுவி அதன்படி ஒழுகிவரும் கிரகஸ்தர்கள் இல்லறமே உயர்ந்ததென உரைத்தனர். அப்படிக்கூறிய அவர்களை அரசன் தகுந்த ஆதாரத்துடன் அதை நிரூபித்துக் காட்டும்படி வாதுபுரிந்தான். அவ்வாறு செய்யத்திறமையற்ற அவர்களை மன்னன் துறவு பூணும்படி நிர்ப்பந்தித்து வந்தான். அவ்வண்ணமே சந்நியாசக்கோலம் பூண்ட துறவிகளை எவ்வறம் உயர்ந்ததென வேந்தன் வினவ அவர்கள் துறவறமே மேம்பட்டதெனப் புகன்றனர். அவர்களுடனும் அரசன் வாது புரிந்து அவர்களைத் தோற்கச் செய்தான். துறவறம் சிறந்ததென நிரூபிக்கத் தவறிய அத்துறவிகள் இறைவன் கட்டளையால் இல்லற மார்க்கத்தை யனுசரிக்கவேண்டியவர்களானார்கள்.

இவ்வாறு சில நாள் செல்ல அரசன் சபைக்கு ஒரு முனிவர்வந்து சேர்ந்தார். வேந்தனும் தன் வழக்கம்போல் அவரை இல்லறம், துறவறம் இரண்டினுள் எது சிரேஷ்டமானது என்று வினவினான். அதற்கு அப்பெரியவர் அரசன் தம்கூட வந்தால் காட்டுவதாகச் சொல்லி அதற்குடன்பட்ட அரசனை தம்முடனழைத்துச்சென்றார். அரசனும் அத்துறவியும் நெடுந்தூரம் பிரயாணம் செய்து, கடைசியில் ஒரு பெரிய தேசத்தை யடைந்தனர். அந்நகர் முழுதும் பலவிதத் தோரணங்கள் கட்டி அலங்கரிக்கப்பட்டுப் பார்க்க மிக அழகாயிருந்தது. அவ்வூர் வேந்தனுடைய ஏக புத்திரியும், இரதியைப்பழித்த எழில்வாய்ந்தவளும், தந்தைக்குப்பின் அந்நாட்டினரசியுமான அத்தேசத்து ராஜகுமாரிக்கு அன்று சுயம்வர தினமாகையால் பற்பல நாட்டரசர்களும் அங்கு குமிழியிருந்தனர். நமது துறவியும் அரசனை அழைத்துக்கொண்டு சு யம் வ ர மண்டபத்திற் கேகினார். அங்கு தூணின் மறைவில் அவர்கள் நின்றுகொண்டு அங்கு நடப்பதைக் கவனித்தனர். இவர்களுக்கருகில் மண்டபத்தின் வாயிலண்டை ஓர் இளம் வயதினனாகிய கட்டழகமைந்த பால சந்நியாசி ஒருவர் தம் தேஜஸினால் அம்மண்டபத்தின் ஒளியை மழுங்கச் செய்கிறவராய் நின்றுகொண்டிருப்பதை முனிவரும் அரசனும் கண்டார்கள். அரசிளமங்கையும் சர்வாபரண பூஷிதையாய், சேடி மலர் மாலைகொண்டு பின்தொடர, மின்னற் கொடிபோல் அங்கு தோன்றினாள். ஒவ்வொரு அரசனைப்பார்த்துக்கொண்டே அப்பெண்மணி வேந்தர் குழாமனைத்தையும் கடந்து சென்றாள். மன்னர் யாவரும் அவள் ஒருவரையும் மாலையிடப் போவதில்லையென்று மலைத்து நிற்கையில், ராஜபுத்திரி மண்டபத்தின் வாயில்வரை சென்று தன் தாதியிடமிருந்த மலர் மாலையை வாங்கி அங்கு நாற்புறமும் காந்தி சூழ நின்றுகொண்டிருந்த பால சந்நியாசியின் கழுத்திலிட்டாள். அவ்விளம் துறவியோவெனில் மிக வெகுண்டு கழுத்திலிட்ட மாலையைக் கழற்றி யெறிந்து அவ்விடம் விட்டு விரைவா யகன்றார். அந்நாட்டரசனும் மற்றவரும் பின்தொடர அத்துறவி பாலோடி தன் ஏகபுத்திரியையும் அரசையும் ஏற்றுக் கொள்ளும்படி பலவாறு இரந்தனன். அந்த யௌவன சந்நியாசி ஒன்றையும் இலக்ஷியம் செய்யாமல் அந்நகரத்தை விட்டுச் சென்றார். தூணின் மறைவிலிருந்து இவை யாவையும் பார்த்துக் கொண்டிருந்த அரசன் வியப்பு மேலிட்டவனாகி முனிவரையும் அழைத்துக் கொண்டு அப்பால் சந்நியாசியைப்பின் பற்றிச் சென்றான். தேவமாதுபோன்ற அரச கன்னிகையையும் அகன்ற அரசையும் திரணமாக மதித்து நிக்கிரகம் செய்துள்ள அவ்விளம் யதியானவர் அடர்ந்த கானகத்துள் பிரவேசித்து இவர்கள் கண்களுக்குத் தென்படாமல் மறைந்து போயினர். காரிருள்போல் மேகம் நாற்புறமும் கவிந்து வர்ஷிக்கத் தொடங்கவே அரசனும் துறவியும் மேலே செல்ல முடியாதவர்களாய் ஒரு மரத்தடியில் தங்கினர்.

அப்பொழுது இரை தேடச்சென்று திரும்பி வந்த புறாவொன்று அம்மரத்திலிருந்த கூட்டை யடைந்தது. தன் பேடுடனும்மக்களுடனும் அம்மரத்தில் வசித்து வந்த அப்புறாவானது தன் இல்லாளை நோக்கி உரைத்தது:—"என் அன்பிற் கினியாளே! நம்மில்லத்தை யடைந்திருக்கும் இத்துறவியையும் அரசனையும் நாம் களைதீர்த்து குளிர்காயச் செய்து போஜனம் செய்வித்து அனுப்புவேண்டுவது கடமை. நான் மறுபடி சென்றுவருகிறேன்." இவ்வாறு அப்புறா உரைத்ததைக் கேட்ட அரசன் ஆச்சரியம் கொண்டு மேல் நடப்பதை கவனிப்போமென்றிருந்தான். சற்று நேரத்திற்கெல்லாம் வெளியிற் சென்ற அப்புறா மூக்கினால் எரியு மொரு கொள்ளிக்கட்டையைக் கவ்விக்கொண்டு இவர்கள் முன் போட்டது. அதன் மேல் சிறகுகளையும் சுள்ளிகளையும் பொருக்கிப் போட்டது. அரசனும் துறவியும் அதைப் பற்றவைத்துக் குளிர் காய்ந்தார்கள். குளிரினாலும், சிரமத்தினாலும் பசியினாலும் சோர்வுற்றிருந்த அரசனுக்குப்பசி தலைக்காட்ட ஆரம்பித்தது. அப்பொழுது அப்புறாவானது தன் பேடை நோக்கி "விருந்தினர் பசியைத் தீர்க்கவேண்டியது கிரகஸ்தனான எனது கடமை" என்றுரைத்துவிட்டுத் தன் உயிரைத் தியாகம் செய்துஅத்தீயிற் பாய்ந்தது. கணவன் செயலைக்கண்ட பெண் புறாவானது இருவருடைய பசியைத் தீர்க்க ஒரு அற்பப் புறாவின் மாமிசம் பற்றாது என்று குஞ்சுகளுடனுரைத்து விட்டு அரசன் துறவிகளுடைய திகைப்பு நீங்கு முன் அத்தீற் குதித்தது. தன் பெற்றோர்கள் செய்ததைக் கண்ட மக்கட் புறாக்கள் இருமனிதருணவுக்கு தம் பெற்றோர் மாமிசம் போதாதெனக் கருதி இவர்கள் தடுக்கு முன் நெருப்பில் வீழ்ந்திறந்தன.

துறவி அரசனைப் பார்த்தார். மன்னனும் 'உணர்ந்தேன்' என்றான். இருவரும்பிரிந்து தத்தம் வழியே சென்றனர். அரசன் ஞானம் பெற்றுத் தான் கண்ட காட்சியைக் கருத்தில் கொண்டு அது முதல் ஒருவரையும் தம்மறத்தை மாற்றும் படித் துன்புறுத்தாமல் வர்ணாசிரம தர்மத்தை விதிப்படி அநுஷ்டித்து முடிவில் நிர்வாண பதவி பெற்றான். இதிலிருந்து இல்லறமே சிறந்ததென விளங்குகிறது. சகலமும் துறந்த துறவிகள் கூட சிலவேளை இல்லறத்திலாழ்ந்திருக்கும் அரசனைத் தங்கள் காரிய நிமித்தம் அணுக நேரிட்டிருக்கிறதல்லவா? துறவறம் இல்லறத்தை யழிக்கும்; இல்லறமோவெனில் துறவறத்தைப் பெருக்கும்.

சுபம்.

தற்கால நாகரிகம் அல்லது சகோதரிகளுக்கு ஒரு வேண்டுகோள்.

(ஸ்ரீமான் S N. கோபாலகிருஷ்ணய்யர்)

சென்ற மாத சஞ்சிகையில் பண்டைக் காலத்து ஸ்திரீகள் அனுசரித்த நல்லொழுக்கங்கள் என்ற தலையங்கத்தின் கீழ் சிற்சில விஷயங்கள் குறிக்கப்பட்டிருந்தன என எல்லோரும் அறிந்திருக்கக்கூடும். ஆனால் தற்போது அப்படி நம் ஸ்திரீ சமூகத்தினர் அனுசரித்து வருகின்றார்களா, அல்லது பண்டைக் காலமும் தற்காலமும் ஒன்று தானா, தற்காலத்தில் அம்மாதிரி அனுசரிக்கச் சிறிதேனும் வசதிகளிருக்கின்றனவா என்பவைகளைச் சகோதர சகோதரிகள் கேட்கலாம். அம்மாதிரி இருக்கக்கூடும் என நம் வீட்டிலுள்ள முதியோர்கள் தங்கள் வாழ்வைப்பற்றிப் பெருமை பாராட்டி தற்காலத்தை முற்கால மெனவே மதித்தும் பேசிவருகிறார்கள். நாகரிகம்மிகுந்த இந்நாளில் பழைய நாகரிகம் படுத்துப் போகிறது. முற்காலத்தில் நடந்தது போலவே இக்காலத்தில் எதுவும் நடைபெறுகிறதில்லை, ஏன்? நினைத்து நினைத்துப் புதிய நாகரிகம் தலை யெடுக்கிறது. தன் புத்தி போனவாறு ஒரு காரியத்தைச் செய்து விட்டு இது (Moderu fashion) 'மாடர்ன் பாஷன்' தற்கால நாகரிகம் எனப்பெருமை பாராட்டிக் கொள்ளுவதும் அதற்கேற்ப அதை அனுசரிக்க அநேக சிஷ்யர்களும் எச்சமயத்தில் புது நாகரிகம் கிளம்புமோ என எதிர்பார்த்த வண்ணமுமாக இருக்கிறார்கள். ஆதலால் தற்கால நாகரிகம் ஆண், பெண் என்ற இருபாலரிடத்தும் குடிகொண்டிருக்கிறது.

மேற்படி நாகரிகமானது மனித சமூகத்தை வேரோடு அழித்து விட்டது என நம் நண்பர்கள் நினைக்க வேண்டாம். எப்பொருளை ஆராய்ந்து பார்த்தாலும் சாதக பாதகங்களிருக்குமாதலால் நாம் பாதகங்களைக் கவனித்துச் சீர்படுத்த வேண்டும். நமக்கு நிர்மலமானவை கிடைப்பது அரிது. நிர்மலமான வஸ்து ஒன்று தான். அவ்வஸ்துதான் கடவுள். ஆதலால் நாம் எவ்விஷயத்திலும் பாதகங்களைக் கவனித்தல் அவசியம்.

சம்சார வாழ்க்கையின் நிலைமையைப்பற்றி ஒரு குடும்பத்தை எடுத்துக் கொண்டு ஆராய்ந்து பார்ப்போம். ஒரு குடும்பத்தில் ஆண்களும் பெண்களும் இருக்கிறார்கள். ஆனால் அக்குடும்பம் முன்னுக்கு வருவதும் பின்னடைந்து க்ஷீணிப்பதும் பெண்களாலேதான். ஏனெனில் குடும்பத்திற்கு ஸ்திரீயானவள் ஒரு அணிகலம் போலும் லக்ஷ்மிபோலுமிருக்கின்றனள். வரவுக்கு மீறி செலவு செய்து உண்டு தின்று களித்து ஆடிப்பாடியிருந்தாலும் அந்தக் குடும்பம் முன்னுக்கு வரும் என்று சொல்லவல்லார் எவர்? குலத்தைக் கெடுக்க வந்த கோடாறிக் காம்பாகிய மூதேவி அவதார மென்றும் சீக்கிரத்தில் குடும்பம் நாசமாய்ப் போய்விடுமே என்று வருத்தப்படுவார்களே ஒழிய ஒருகாலும் சகிக்கார்கள். இப்பேச்சை இங்கு தள்ளிவிட்டு நல்ல குணவதியாகிக் குடும்பத்தைச் சரிவர நிர்வகிக்கும் ஓர் உத்தமியை எடுத்துக் கொண்டால் நாலுபேர் அதைப் பார்த்து தாங்களும் அவ்வாறிருக்கப் பிரயாசைப்படுவார்கள். ஜனங்கள் இக்குடும்பத்தில் 'என்று ஸ்திரீ காலெடுத்து வைத்தாளோ அன்று முதல் முன்னிருந்த அழுக்கெல்லாமொழிந்து போய் இவளல்லவோ குடும்பத்தை முன்னுக்குக்கொண்டு வந்தவள். பெற்றாலும் இப்பேர்க்கொத்தவளையல்லவோ பெறவேண்டும். அடைந்தாலும் இவ்வுத்தமியைப் போலுள்ளவளையல்லவோ அடையவேண்டும்' எனப் பல புகழ்சிகள் ஏற்படுவதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். புருஷன் சிற்சில சமயங்களில் அறிவீனமாயிருந்தாலும் சமயத்திற்கு ஸ்திரீயானவள் மந்திரிபோல் புத்தி யுக்தி சொல்லி நடக்கவேண்டியவற்றை சீர்பெற நடத்தி வருவதையும் பார்த்திருக்கிறோம். 'பெண் புத்தி பின் புத்தி' என்பது வாஸ்தவமே. என்றிருந்தாலும் சமயங்களில் அவர்கள் புத்தி சாதுரியந்தான் சிறந்து விளங்குகிறது.

சகஜமாக ஸ்திரீகளுக்கு ஆடவரை விட புத்தி அதிகம்தான் எனப் பலரும் விசேஷ காலங்களில் கவனித்திருக்கக்கூடும். நீதி சாஸ்திரத்திலும் இதை யொட்டியே அதாவது 'ஸ்திரீகளுக்கு புருடரைப் போல் இருமடங்கு ஆகாரமென்றும் புத்தி (அறிவு) நான்கு மடங்கென்றும்' சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்திரீகள் எந்த விஷயத்தையும் முன்னடியே ஆராய்ந்து விடுகிறார்கள். ஆதலால் தற்கால நாகரிகத்தினாலும் பழக்க வழக்கங்களாலும் உண்டாகிய சில கெடுதல்களை, சாதக மற்றவைகளை அவர்கள் கவனித்து, அவைகளை வேருடன் எடுத்துவிட்டு, நன் மார்க்கத்தில் நடந்து கொள்வார்களானால், புருடர்களும், தம் தம் குடும்பத்தில் தம்மால் ஏற்பட்டுள்ள மாறுபாடுகளைக் கவனித்து, அவர்களும் கூடிய சீக்கிரத்தில் நன்கு ஒழுகுவார்கள்.

நம்மவரில் அநேகம் குடும்பங்களில் முக்கியமாக மாமியாருக்கும் மருமகளுக்கும் ஒத்துக் கொள்ளுவதில்லை. ஏனெனில் 'மாமியார்' என்ற வார்த்தையைச் சொன்ன உடனேயே 'சண்டை பிடிப்பவள், சர்வாதிகாரி, இஷ்டப்படி செய்பவள்' எனப் பற்பலவிதமாகப் பெண்கள் எண்ணுவது சகஜம். ஆனால் அச்சமயத்திலேயே அவர்கள் அவர்களுக்கும் மாமியார் இருந்திருக்கவேண்டுமே, அல்லது அவர்களும் மருமகளாக இருந்திருக்கவேண்டுமே என நினைப்பதில்லை. ஏதோ சில பேர் மருமகள் நல்ல பெயர் எடுக்கவேண்டியதை அனுசரித்து, அவர்கள் பிசகாய் நடந்து கொள்ளுமிடங்களில், சுட்டிக்காட்டி 'இது தப்பு, இப்படிச்செய்யாதே, இப்படிச்செய்தால் இன்னவரும், நான் சொல்லுகிறபடி கேள், நீ புகழ் அடைவாய்' எனச் சொல்லும்போது, இவை மருமகள் காதில் புண்ணில் கோலிடுவது போலிருக்கும். சில பேர் அதை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு அதன்படி ஒழுகிக் கீர்த்தியடைகிறார்கள்.

சில மாமியார்கள் கல்லினும் கடின சித்தத்தையுடையவராய் மருமகளை அடிமைகளை விலைக்கு வாங்குவதைப்போல் பாவித்துத் தன் பெண்ணையும், இபபெண்ணையும், அநேக வித வித்தியாச வேறுபாடுகளுடன் நடத்தி வருகிறார்கள். அப்பொழுது புதிய பெண்ணாகிய மருமகள் என்ன செய்வாள் பாவம். மாமியாரும், மருமகளும் ஒன்று சேர்ந்து, ஒருவர்க்கொருவர் கலந்து, தாய் மகள் போலிருந்து, வினயமான வார்த்தைகளுடன், காரண காரியங்களோடு தங்களுக்குள்ளிருக்கும் கெடுதல்களைப் போக்கி நடந்து கொள்ளவேண்டும். தக்க நியாயம் சொன்னால் யாரும் சம்மதிக்க வேண்டியது தானே! ஆதலால் மாமியாருக்கும் மருமகளுக்கும் 'மயிர் பிடிச்சண்டை' என்று பலபேர் வாக்கில் வாராமல், 'அன்னியோன்ய குடும்பம்' எனப் பெயர் வாங்கும்படி இருக்கவேண்டும். பொறுமையைப் பூஷணமாகக் கொண்டால் எதுவும் கைக்கூடும்.

தம்பதியை எடுத்துக்கொண்டால், புருஷன் ஒரு காரியத்தை நினைக்க ஸ்திரீ அதற்குக் குறுக்காகத் தட்டிச் செல்வது, அதாவது வீம்பு நாகரிகத்தில் ஒன்றென்று தான் நினைத்துத் தான் சொன்னதற்கு இரண்டில்லை என்று என்ன வந்தாலும் தான் முரண்டி, தன் விஷயம் ஜெயிக்கும்வரை அக்கிரமங்கள் செய்து,

புருஷனுக்கு அடங்காமல், வேளாவேளையில் உண்ணாமல், சூர்ப்பனகைக் கடுத்தபடியாய் இருக்கிறதை தற்காலத்தில் நன்குணரலாம். இவர்களை மணந்த புருடர்களுக்கு மனம் என்ன பாடுபடும்? தாங்கள் எவ்வளவு சொல்லியும் கேளாமல், பெண்கள் தங்களிஷ்டப்படி இருத்தல் ஸ்திரீ சமூகத்திற்கே குறைவாம், ஆதலால் ஸ்திரீ வீம்பு பிடிக்காமல் தக்க சமயம் பார்த்துத் தங்கள் காரியங்களை எடுத்துரைத்து சாதக பாதகங்களைக் கவனித்துரைத்தல் வேண்டும்.

புருஷன் உத்திரவை எதிர் பார்க்காமலே இக்காலத்தில் சில பெண்கள் பல வீண் விஷயங்களில் பணத்தை இறைக்கிறார்கள். இதை அவரவர்களே சற்று யோசித்தால்தெரியவரும். காலத்திற்குத் தகுந்தவாறு நவ நாகரிகத்தை அதிகப்படுத்துவதாக எண்ணி பல பேர்கள் தைலங்களும், சோப்புகளும், முகத்தை வசீகரம் செய்யும் பவுடர்களும் இன்னம் இது போன்ற நானு விதமான பொருள்களை ஏற்படுத்தி, பல பத்திரிகைகளிலும் பிரசாரம்செய்து குக்கிராமங்கள் தோறும் வெளிப்படுத்துகிறபடியால், அவைகளிலிருக்கும் சூதைக் கவனியாமல் வாங்கி, வீண் ஆடம்பரம் செய்துகொண்டு, நாகரிகம் என்று குதித்துக்கொண்டு, தான் ஏமாந்ததை அறியாது தான் கெட்டிக்காரி எனவும், தங்காத்தில்தான் என்ன செய்தாலும் தங்காத்துக்காரர் கேட்கமாட்டார், நல்லவர் என்றும் பேசித்தன் மரியாதையைத்தானே கெடுத்துக்கொண்டு உழலும் பெண்காள்! சற்று யோசித்துப்பாருங்கள், நீங்கள் செய்வது நியாயமா? ஏன் புருஷனுடன் கலந்துகொண்டு வேண்டுவனவற்றைச் சொல்லக்கூடாது. சாதகங்களிருந்தால் அவற்றை வாங்கிக்கொடாமலிருப்பரோ? ஆதலால் பணத்தை வீணில் சில வழிக்காது, யுக்தி புத்தியோடு காலங்கழிக்க வேண்டும்.

முன் காலத்தில் மஞ்சள், குங்குமம் ஆகிய இவைகளின் மகிமை எவ்வாறிருந்தது? இப்போது மஞ்சள் போச்சு; டாய்லட் சோப்பு வந்தது. சீக்காய்ப்பொடி போச்சு. ஸாண்டல் வுட் சோப் கிளம்பிற்று. அதுவும் சாதாரணமா? லண்டன் ஸாண்டல் வுட்சோப்! குங்குமம் போச்சு! ஸெண்டட் சாந்து வந்தது. இப்படியும் செய்த பிறகு தேகத்திலுள்ள அழுக்குப் போகிறதா? இல்லை. தேகத்தை அழுத்தி அழுக்குப்போக தேய்க்காமல் அதற்குமேல் சோப்பு வாசனைக்காகப் போட்டு, துர்நாற்றம் தெரியாமலிருப்பதற்கு Phenyl (பினைல்) என்ற திராவகத்தை ஊற்றுவதுபோல, சோப்பையும், கூந்தல் வளரும் பரிமளத் தைலம் என்ற போலித் தைலங்களையும் வாங்கி, பகல் தோறும் கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் புருஷன் மனக்கவலைப்படவிடுவது தர்மமா? மஞ்சளில் குணமில்லையா? இவற்றை உபயோகியாமலிருந்தால் சுமங்கலி என்று கருதப்படுவார்களோ? உடம்புக்கு எவ்வளவோ நல்லது என்று வைத்திய சாஸ்திரத்தில் கூறியிருப்பதாக வைத்திய நிபுணர்கள் சொல்லுகிறார்களே. எப்படி ஒரு சுமங்கலி ஸ்திரீக்கு புருஷன் அவசியமோ அது போலவே அந்த ஸ்திரீக்கு இவை அவசியமில்லையா? ஆனால் சோப்பைப் பூசுவதால் மிகக்கெடுதி என்று சொல்ல நான் முன் வாவில்லை. தொன்றுதொட்டுவழங்கும் குங்குமம், மஞ்சள் இவற்றைத்தற்காலம் அநேகம் பேர் விட்டுவிட்டு, சோப்பையும், சாந்தையுமே மேன்மையாய்க் கொண்டாடுகிறார்கள். ஆதலால் இதை நாகரிகத்தோடு சேர்க்காது விட்டு விடவேண்டும்.

யோக்கியதை இல்லாமல் வெளி வேஷத்திற்கும் டம்பத்திற்குமாக எத்தனையோ பேர்கள் தான் பெரிய மனுஷி யென்று போலிப் பெயரெடுக்க கிளம்புகிறார்கள். வயிற்றிற்குக் கால் கஞ்சி கூட இல்லாமல் எல்லாவற்றையும் விலையுயர்ந்த ஆடையில் செலவுசெய்து, வெளிக்குப்

பகட்டாயிருக்கிறார்கள். 100, 150, ரூபாய் பெறுமான புடவைகள்தான் மானத்தைக்காப்பாற்றுகின்றனவோ? தன் யோக்கியதைக்குத் தகுந்தவாறு தாழ்மையான வஸ்திரம் தரித்தல் மானத்தைக் காப்பாற்றாதா? அவரவர்கள் தங்கள் தங்கள் அந்தஸ்தை உத்தேசித்தும், எப்பொழுதும் நீடித்து வரவேண்டிய காரியத்தை உத்தேசித்தும், எப்பிரகாரம் செய்ய வேண்டுமோ அவ்விதம் நடந்துகொள்ளவேண்டும்: ஏன் வீணில் நம் பணத்தை வாரி இறைக்கவேண்டும்?

தற்காலத்திய நாகரிகம் ‘கோள் சொல்லுதல்’ என சிலர் நினைப்பதுண்டு. இவ்விடத்துப் பேச்சை அவ்விடத்திலும், அவ்விடத்துப் பேச்சை இவ்விடத்திலும் சொல்லி, ஒன்றுமேலொன்று தூக்கிப்போட்டு விரோதம் உண்டாக்கி விடுகிறார்கள். உதாரணமாக ஒரு பெண் மற்றோர் வீட்டில் புகுந்த பின் (வாழ்ந்து வரும் சமயத்தில்) புருடன் வீட்டைத் தன் சொந்த வீடெனவே பாவிக்கவேண்டும். அதில் எவ்வளவு ஊழல்களிருந்தாலும், அதைப் பிறந்த வீட்டில் சொல்லி யாது பயன்? அதைச் சீர்படுத்துகிறவர் அவர்களா? இந்த இழிவான வார்த்தைகள் திரும்பித் தம்மையேதான் பாவிக்கும். ஆதலால் அவரவர்கள் குடும்பத்தில் நடக்கும் சங்கதிகளைப் பிறருக்கு அறிவிக்காமல் தாமே சிரமமெடுத்துக்கொண்டு சீர்படுத்தினால் புகழுண்டாம். பிறரை அனாவசியமாகத் தூஷிக்காமல் தத்தம் வேலையில் கண்ணும் கருத்துமாகவும், அதில் பிறர் குற்றம் கண்டு பிடிக்காமலுமிருக்கவேண்டும்.

தற்காலத்திற்கேற்றபடி, பெண்கள் முன் காலத்தியதைவிட அதிகமாகப் படிக்கக்கற்றுக்கொண்டு விட்டார்கள் எனக்கேட்க சகலருக்கும் வெகு சந்தோஷமே. ஆனால் தற்காலத்தில் உலகமே நவீன நாவல்களால் நிறம்பி யிருப்பதால் நமது பெண் மக்களுக்கு இதிலேதான் அதிக ஊக்கம் போகிறதே ஒழிய புராதன இதிகாசங்களாகிய ராமாயணம், மகா பாரதம் முதலிய நூல்களையும், சாவித்திரி, சாத்தியவான், மார்க்கண்டன், அரிச்சந்திரன் முதலானோருடைய சரித்திரங்களையும் படிக்க புஸ்தகங்கள் கிடைப்பது கஷ்டம்போல் தெரிகிறது. ஆனால் நவீன நாவல்களென்னும் சாகரத்தில் எதைப் படிக்கலாம் எதைப்படிக்கக் கூடாது என்று மாத்திரம் தெரியவில்லை. படிக்கின்ற அவாவினால் ஊழல்களும் கலந்து விடுகின்றன. ஆதலால் அதை உணர்ந்து, நல்லவைகளைத் தேர்ந்தெடுத்து, அதிலுள்ள சத் விஷயத்தைக் கிரகித்தும், பழைய கிரந்தங்களைப் படித்தும், அதில் சொல்லியபடி நன்மார்க்கங்களைக் கடைப்பிடித்தும், தீயவைகளை விலக்கியும் நடந்துகொள்ள வேண்டும்.

சிலர் பெண்களுக்குக் கல்வி வேண்டாம், அக்கல்வியானது அவர்களைக் கெடுத்து விடுகிறது என்று சொல்லுகிறார்கள். அது தவறான அபிப்பிராயம். கல்வியானது பொதுவாக மனிதர்களுக்குத் தங்கள் புத்தியை விசாலப்படுத்தி விஷயங்களை ஆராய்ந்து செய்ய உபயோகமாகிறது. ஆடவர்கட்குக் கல்வி எவ்விதம் முக்கியமோ, அவ்விதமே பெண்பாலருக்கும் முக்கியம். ஆனால் ஆடவர்கள்போல் அவர்களும் கற்க வேண்டுமென்று ஒருவரும் சொல்ல முன்வாரார்கள். பெண்களுக்கு எத்தகைய கல்வி எவ்வளவு அவசியமோ அவ்வளவு போதும். டாக்டர் அனிபெசண்ட் அம்மை ஒரு சமயத்தில் பெண்களுக்குப் படிப்பு அவசியமென்றும், அது சாதாரணமாயிருந்தால்போதுமென்றும், தமிழ் சம்ஸ்கிருதம் கற்கவேண்டுமென்றும், நூல் நூற்றல், நெசவு, தையல்வேலை, குழந்தைகளின் சம்ரக்ஷணார்த்தம் கொஞ்சம் வைத்திய சாஸ்திரம், சுகாதாரம், சரீர சாஸ்திரம், சித்திரம்வரைதல் முதலியவை தெரிந்திருக்க வேண்டுமென்றும், ஷைபடிப்பானது தன் குடும்

பத்தைத் தானாகவே செவ்வையாகக் கவனிக்க சௌகரிமென்றும்செல்லியிருக்கின்றனர். மேலும் உலகப்போக்கு இன்னதென்று அறியாதிருப்பவர்கள் அதை அறிந்து கொள்ள சுலபமாயிருக்கும் ஆதலால் படிக்காதவர்கள் மேற்படி படிப்பைத் தக்க வயதிற்குள் கற்றறியவேண்டும். கற்றறிந்தவர்கள் மேற்படி உலக விஷயங்களிலேயும் ஊக்கங் கொண்டு நன் மார்க்கத்தில் ஒழுக முயலவேண்டும். முக்கியமாக ஸ்திரீகளாலேயே நம் நாடு முன்னுக்கு வரவேண்டும். அதற்குப் படிப்பு அத்தியாவசியமானது.

அநேக இடங்களில் 'வம்பர் மகா சபைகள்' நடந்தேறி வருகின்றன. அதில் பெரியோர்களும் சிறியோர்களும் தங்கள் வம்புத்திறமைக்குத் தகுந்தவாறு அக்கிராசனம் காரியதரிசி முதலிய கௌரவ ஸ்தானங்களை ஏற்றுக் கொண்டு நிர்வாகம் செய்து வருகிறார்கள். அதன் முக்கிய நோக்கமாவது எவரொருவரையேனும் (ஆண் அல்லது பெண்) பற்றிப் பல தூஷணைகள் சொல்வதுதான். பூஷணைகள் மாத்திரம்அவர்கள் மூளைக்குஎட்டா. எச்சமயத்தில் எங்கு குற்றம் கண்டு பிடிக்கலாம் என எதிர் பார்த்த வண்ணமிருப்பார்கள். வீண் வம்பு பேசிச்சண்டைக்கு ஆளாகிப் பெண்ஜன்மத்தை மறைத்து இராக்ஷசி ரூபம் எடுத்துக் கலவரப் படுத்தி விடுகிறார்கள். ஆடவர்களைப் போல் ஏதோ சபை கூட்டி அறிவு வளர்ச்சிக்கும் இகபரசாதனத்திற்கும் ஹரிகதா காலக்ஷேபம் செய்வது போல் ஏன் பெண் சமூகத்தினர்க்குள் பல கூட்டங்கூடி நற்கருமங்களைப் பற்றி உபந்நியாசங்கள் செய்யக்கூடாது? இது ஒவ்வொரு குக்கிராமங்களிலும் நடத்தக்கூடிய விஷயம்தானே. ஆதலால் வம்பர் மகாசபைகளை வேரோடு அழித்து விட்டு வேறு நல்ல சங்கங்களை ஸ்தாபித்து அதன் அபிவிர்த்திக்காக அவர்களே பாடுபட வேண்டும். ஒழிந்த நேரங்களில் கூட்டங்கூடி படிப்பு முதலிய விஷயங்களை எடுத்துரைத்து ஷெ படிப்பை விருத்தி செய்யவேண்டும். இவ்விதம் வந்தால் பெண்களின் நிலைமை முன்னுக்கு வரும். இதன் காரணமாகத் தேசம் செழித்தோங்கித் தன் சுதந்திரத்தைக் கட்டாயம் அடையும். தற்காலத்து நாகரிகத்தை ஒட்டிய இன்னம் பலவித கெட்ட ஒழுக்கங்களை நாளடைவில் அவர்கள் விட்டுவிட்டு எல்லோரும் நன்மார்க்கத்தில் ஒழுகவும் பெண்களின் அபிவிர்த்திக்காக ஏற்பட்டுள்ள கல்விச்சாலைகளில் பெண்களைப் படிக்கும்படி செய்யவும் ஏற்படாத இடங்களில் ஏற்படுத்தும்படி ஏற்பாடு செய்யவும் வேண்டும். இதைப் படிப்பு இலாகா உத்தியோகஸ்தர்களும் நன்கு உணர வேண்டும். ஒவ்வொருவரும் தங்களில் குடியிருக்கும் தீய எண்ணங்களைத் துலைக்கவேண்டும். மனிதர்கட்கு வாழ்க்கை நிச்சயமானது என்றிராமல், இன்னம் பல காலம் ஜீவிக்கலாம், பிற்பாடு பார்த்துக் கொள்வோம் என்றிராமல், 'சுபஸ்ய சீக்கிரம்' என்பதற்கிணங்க பெண்களின் முன்னேற்றத்திற்காக உழைத்தும், சகோதர சகோதரிகளின் சிரமத்தை உணர்ந்தும், அவர்களின் அபிப்பிராயங்களை அனுசரித்துப் பிரார்த்தித்துப் பிரசங்கங்களின் மூலியமாகப் பல இடங்களிலும் பற்பல விஷயங்களைப் பரவச் செய்யும் ஸ்ரீமதி பாலாம்பிகையைப் பத்திராசிரியராய்க் கொண்டு பரந்துலாவும் 'சிந்தாமணி'யைக் கைப்பற்றியும், அதிலுள்ள சாராம்சத்தைக் கிரகித்தும் நம் பாரத நாடு க்ஷேமமடையும்படி அன்னாரின் யத்தினம் கைகூடுமாறு எல்லோரும் பகவானை அடிபணிவோமாக.

'பொங்கும் மங்களம் எங்கும் தங்குக'.

செந்தமிழ் நாட்டுச் சிறப்புக் கும்மி.

(ஸ்ரீமான் வித்வான் நா. கோவிந்தசாமி பண்டிதர்.)

சொல்லுவே னின்னமுந் தோகையரே சோம
சுந்தரன் செந்தமிழ் தந்தவன்காண்
மெல்லிய லுக் கொருபாக மளித்தருள்
வித்தகன் செஞ்சடை மீதொருபால். (1)

எண்ணிரண்டு கலையாகியே வளர்ந்த
இந்துவின் வம்மிசம் வந்ததென்னன்
பண்ணிவுளி கொள்வங்கிய சூடாமணி
பாண்டிய னென்றொரு பார்த்திவன்றான். (2)

நண்புறு தொண்டரினாயகன் பாதத்தை
நாளுமறவாத நன்மனத்தான்
செண்பக மாறனென்றிவர்க் கொருபெயர்
தெண்டிரை சூழ்புவி செப்பும் அன்னான். (3)

புண்ணியன் பூம்பொழில் செய்தொளிர் காந்தநற்
பொருப்பில் வேடை நீப்பானிருப்ப
அண்ணிய பத்தினி கூந்தலினன் மணம்
அமைந்திருப்பதைத் தானறிந்தான். (4)

சங்கப் புலவரெல்லா மதிக்கமணத்
தன்மை யெவருந் தெரிந்துரைக்க
கங்கற வோங்கிய கம்பத்திற் பொற்கிழி
கட்டினன் இதனைக் காண்பமென்று. (5)

மணத்தின் மாண்பதை வழுத்து மேலவர்
வைத்த கிழிபதைக் கொள்கவெனுக்
குணத்திற் கோமகன் வள்ளுவர் பறையிற்
கூறவுஞ் செய்தனன் பூதலத்தே. (6)

அந்தவேலை தன்னிலா திசைவமா
பந்தணன் தருமியென்றொருவன்
தந்தையுந் தாயுமிலாதவன் காண் ஆதி
தந்தையாஞ் சுந்தரன் தாள்பணிந்தே. (7)

எந்தையே வித்தையெலா மறிந்தும்விதி
பின்படிமேல் வழியே நடந்தும்
சந்தமிகுந்த நின்தாளடைந்தும் மனம்
சந்ததி வாழ்வில் தயங்குவதால். (8)

என்றன் மாபினுக் கேற்ற மங்கையுடன்
இல்லறந் தன்னை நடத்திடவே
பொன்றல் இலாதபொருள் தந்தருள்கெனப்
பூதநாதன்றனைக் கேட்டனனே. (9)

அந்தண கேட்டியருந்திறற் பாண்டியன்
ஆயிரமாகும் பெரும் பசும்பொன்
கந்தமிகு மலர்க்குந்தளவியற்கை
காணதென் றேற்றினன் கம்பமதில். (10)

வேதிய நான்தரும் ஏடதைக் கொண்டுபோய்
விற்பனர் சங்கத்திற் காட்டுவையேல்
நீதி யறிந்திடுஞ்சோதி மதிமகன்
நின்கையில் பொற்கிழி தந்திடுமே. (11)

கொண்டுபோய் வாழ்கெனக் கூடலினாயகன்
கொங்குதேர் வாழ்க்கை யெனுங்கவியை
தண்டமிழ் தன்னிலே தானெழுதி ஓமத்
தனல் வளர்ப்பவனுக் களித்தான். (12)

நற்றவனேடதைக் கொண்டு நடந்துபன்
னாவலர் நல்லவை நண்ணியன்பால்
கற்றவர்கைகளில் நீட்டினன்காண் அந்தக்
கவியின் சொற்பொருள் கண்டுவந்தார். (13)

மதுரைக் காவலனுக் குரைத்தார் அவன்
மனக்கருத்து நேரொத்ததனால்
முதுவர் தம்மொடு மேகியே செம்பொனின்
முடிச்சைக் கொள்கெனவே மொழிந்தான். (14)

பொற்கிழி தன்னை யறுக்கையிலே சங்கப்
புலவன் கீரனென்பா னொருவன்
சொற்குற்ற மின்று பொருட் குற்றமிக்கவி
தொட்டறுக்காதே போதூர மென்றான். (15)

பூசரன் கண்டு மனம் புழுங்கிக்கூடல்
புண்ணியன் சந்நிதி நின்றிறைஞ்சி
மாசறு பாடலை யெழுதித் தந்தனை
வல்லவன் ஒருவன் குற்றமென்றான். (16)

நின்றிருவாடலின் நீர்மையிதோவென
நின்றனன் கேட்டனன் நின்மலனை
வென்று வருகுவம்வா வெனக்கண்ணுதல்
வேணியன் நாவலனாகி யன்றே. (17)

சங்கத்திற்சென்று மறுத்த புலவனைச்
சார்ந்து நீயோ குற்றஞ் சாற்றியவன்
பங்கயமாமுகப் பத்மினி ஜாதிக்கைம்
பாலுக்கு நன்மணம் பான்மை யன்றோ? (18)

என்னவே தெய்வ மகளிர் உலகத்தார்
எவர்க்கும் இல்லை குழல் மணமே
சொன்ன நீ முக்கண்கொள் சுந்தரனாயினும்
சொல்லுவேன் குற்றமென்றான் புலவன். (19)

அன்னதுகேட்டுப் பொன்னம் பலக்கூத்தினன்
அக்கினிக் கண்ணைத்திறக்க அன்னான்
மன்னுறு மெய் மனம் வெம்மையானொந்து பொன்
மாமலர்ப் பொய் கையில் வீழ்ந்தனனே. (20)

உள்ளங் கவர்ந்திடுங் கள்வன் மறைந்தனன்
ஒண் கிழி கொண்டந்தணன் மகிழ்ந்தான்
தெள்ளமிழ்தா மஹாதேவன் மொழிந்தருள்
செந்தமிழ்ப் பெருமை செப்பரிதே. (21)

மூர்த்தி யுந்தலமுந் தீர்த்தமுஞ் சிறந்த
முத்தி நகர் மதுராபுரியின்
பார்த்திவன் குமரியங்கயற் கண்ணி
பரிணயங் கொண்டருள் சுந்தரன் தான். (22)

ஏழையான ஒரு பத்தனுக்கே யுளம்
இரங்கி யெங்கும் புகழ் தமிழை
யாழைபிற் கையாலெழுதிக் கொடுத்தது
மாட்சிமை மிக்க தன்றோ தெரிவீர். (23)

எந்தப்பாஷையிலோ இருந்து வந்ததென்
றியம்புகின்றனர் கேள்வியிலார்
சந்தக்கழலுடைச் சுந்தரன் சொன்னது
தண்டமிழ் தக்கவர் தாமறிவார். (24)

இன்னமுங் கேளுங்களேந்திழையீர் ஜக
தீசன் தடாதகை நாயகன்றான்
மன்னவன் சோனுக்கீந்த திருமுகம்
மாண்பு மிகுந்தது மாநிலத்தே. (25)

மதுரைமா நகர் தன்னிலே பாணரின்
மன்னவனொருவன் யாழில் வல்லோன்
குதிரை விற்றவன் கோயில் முப்போதும் போய்க்
கூறுவன் செந்தமிழ் நல்லிசையில். (26)

இத்தொழிலின்றி யிவற்கு வேறே தொழில்
இன்மையால் இன்னிசை பாடவல்ல
பத்திரன் தன்னிலம் பாடு கண்டே பரம்
பரன் திருவுளந் தானிரங்கி. (27)

பாண்டியன் பொன்னறைச் செல்வ மணிக்கலன்
பல்கலை மாமணி பொற்றகடும்
வேண்டிய சாமரைக்காம்புந் திருடியே
வீணை வல்லோனவன் காண வைப்பார். (28)

மீனவன் செல்வமெல்லா மொழிந்த விடை
மேலவன் தொண்டன் மிடியறிந்தே
வானவரும் மறியாததோர் சித்தனாய்
வந்தவன் கனவிற் சொல்லுகின்றான். (29)

குழந்தைகளை வளர்க்கிறதற்குள்ள முக்கியமான வழிகள்.

(ஸ்ரீமதி சீதம்மாள்)

தாய்ப்பால்தான் குழந்தைகளுக்கு வேறு எல்லாவித ஆகாரத்தையும் விட மிகவும் சிறந்தது. நல்ல பசுவின் பால்கூட தாய்ப்பாலுக்கு நிகராகாது. ஒவ்வொரு திட சரீரமுள்ள தாய்க்கும் தங்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பால் கொடுக்கிறது, நியமனமாயும், தர்மமாயுமிருக்கிறது. சிசுக்களுக்கு தாயினிடம் பால் குடிக்கிறது எவ்வளவு நன்மையோ அவ்வளவு தாயினுடைய தேகத்திற்கும் நல்லது. சிலர் குழந்தைக்குத் தாய்ப்பால் ஒத்துக்கொள்ளவில்லையென்று சொல்லுகிறார்கள். குழந்தைக்குத் தாய்ப்பாலே ஒத்துக்கொள்ளாவிட்டால், பசும் பாலோ, அல்லது வேறு ஆகாரங்களோ ஒத்துக்கொள்ளுமென்பது அசம்பாவிதமான காரியம். தாய்ப்பால் ஒத்துக்கொள்ளவில்லையென்கிற அச்சமயத்தில், தாயினுடைய ஆகாராதி விஷயங்களில் ஏதாவது தப்பு இருக்கவேண்டும். அவள் பச்சைக் கறிகாய்களையோ, அல்லது வேறு ஜிரணிக்கக்கூடாத சாமான்களையோ சாப்பிட்டிருக்கவேண்டும். ஆகையினால் தாயானவள் சாப்பாடு விஷயங்களில ஜாக்கிரதையாயிருக்கவேண்டுமேயொழிய குழந்தைக்குப் பால் கொடுப்பதை மறக்கடிக்கக்கூடாது. குழந்தைக்குப் பால் கொடுப்பது ஒரு திட்டத்திலிருக்கவேண்டும். குழந்தை கத்துகிற ஒவ்வொரு சமயங்களிலும் பால் கொடுக்கக்கூடாது.

முதல் இரண்டு மாதங்கள் நடந்து கொண்டிருக்கிற பொழுது பகலில் இரண்டு மணிக்கொரு தடவையும் இரவில் நான்கு மணிக்கொரு தடவையும் ஆகாரம் கொடுக்க வேண்டும். மூன்று மாதஙகள் ஆன பிறகு பகலில் மூன்று மணிக்கொரு தடவை ஆகாரம் கொடுக்கவேண்டும். இந்தப் பிரகாரம் ஆகாரம் கொடுத்துக் கொண்டு வந்தால்தான் நல்லது.

குழந்தைகளை வளர்க்கிற தாய் தன் ஜீவனை அமைதியாக வைத்திருக்கவேண்டும். தான் திட சரீரியாகவிருக்கும்பொழுது பால்க்காரி வைத்துக் குழந்தைகளை வளர்ப்பது மிகவும் அசந்தர்ப்பமானது. நம் முன்னோர்கள் ஒரு பொழுதும் அப்படிச்செய்ததேயில்லை. இப்பொழுது எல்லாம் நவீன நாகரிகம் முற்றி எல்லாம் தலை கீழாக மாறி இருப்பதுபோல் குழந்தைகளுக்குப் பால்க்காரி வைத்து சிலர் வளர்க்க ஆரம்பிக்கிறார்.

முற்காலத்தில் ஒரு ராஜபுத்திர ஸ்திரீயானவள் தன் குழந்தையைத் தொட்டிலில் தூங்க வைத்துவிட்டு ஸ்னானம் செய்வதற்குப்போயிருந்தாளாம். குழந்தை எழுந்து பசியினால் அழ ஆரம்பித்து விட்டதாம. குழந்தையின் அழுகையைக் கேட்டவுடன் தாயானவள் மிகுந்த பரபரப்புடன் ஸ்னானாதிகளை முடித்துவிட்டு வந்து பார்க்கையில் குழந்தை விளையாடிக்கொண்டிருந்ததாம். பசியினால் அழுத குழந்தை ஏன் விளையாடிக்கொண்டிருக்கிறது என்று வேலைக்காரியைக் கேட்டதற்கு அவள் அதற்குத் தான் தன் பாலைக்கொடுத்ததாகச் சொன்னாளாம். உடனே அந்த ராஜபுத்திர ஸ்திரீ மிகுந்த கோபத்துடன் வேலைக்காரியை வைது விட்டு குழந்தையைத் தூக்கிக்கொண்டு தட்டாமாலை சுற்றிப் பாலை வாயிலெடுக்கும்படி வைத்தாளாம். தவறி ஒரு தடவை பால் கொடுத்ததற்கே அவள் அப்படிச் செய்தாள். இப்பொழுது நவீன நாகரிகம் பிடித்தவர்கள் வேலைக்காரி வசமே குழந்தைகளை ஒப்புவித்துவிடுகிறார்கள். என்னே! காலத்தின் கோலம்!

இதைப்பற்றியெல்லாம் சொல்லிக் கொண்டு போனால் வளரும். அதனால் இதை இத்துடன் நிறுத்துகிறேன்.

குழந்தைகளுக்குப் பால் கொடுக்கும் தாயானவன் நல்ல புஷ்டியான ஆகாரங்களையே சாப்பிடவேண்டும். முக்கியமாகப் பாலை ஜாஸ்தி சாப்பிடவேண்டும். குறைந்தது பிரசவித்து மூன்று மாதம் இளைப்பாறுதலாக இருக்கவேண்டும். குறைந்தது ஒன்பது மாதம் குழந்தை தாய்ப்பாலால் வளர்வது மிகவும் நல்லது. குழந்தை வயிற்றிக்குப் போதுமான பால் தாய்க்கு இராவிட்டால் நல்ல பசுவின் பாலைக் கொடுக்கவேண்டும். கெட்டியான ஆகாரத்தைக் கொடுக்கக்கூடாது. குழந்தைகளுக்கு ஆவணி புரட்டாசி அல்லது ஐப்பசி மாதங்களில் அவசியமாயிருந்தாலொழிய பாலை மறக்கடிக்கக் கூடாது. இந்தக் காலங்களில் கோடை கால வயிற்றுப் போக்கினால் அநேக குழந்தைகள் இறந்து போகின்றன. தாய்ப்பாலால் வளரும் குழந்தை ஒன்று இறந்தால் கை ஆகாரம் கொடுத்து வளர்க்கிற குழந்தைகள் ஐம்பது இறந்து போகின்றன. கோடை காலங்களில் உக்கிரம் தாங்காமல் நடுப்பகலில் குழந்தைகள் தாகமதிகரித்துக் கத்தலாம். அச்சமயத்தில் நன்றாகக் கொதித்த வெந்நீரை ஆற்றி இரண்டு ஸ்பூன்கள் கொடுக்கலாம். அது ஒரு கெடுதலும் செய்யாது. குழந்தைக்கு (Dummy Teat) ரப்பர் பாலூட்டியை ஒரு போதும் கொடுக்கக் கூடாது. அது குழந்தைகளின் ஜீரணத்தைக் கெடுத்து வயிற்றுப் போக்குக்குக் காரணமாகும். வைத்தியர்களினுடைய உத்தரவின்றி குழந்தைக்கு மருந்து ஒரு பொழுதும் கொடுக்கக் கூடாது

உடுப்புப் போடல்

குழந்தைகளை எப்பொழுதும் சூடாகவே வைத்துக் கொண்டிருக்க வேண்டும். உள்ளுடுப்புகள் கம்பிளி நூலினாலாவது அல்லது கம்பிளித் துணியினாலாவது போடவேண்டும். அது இறுக்கமாய்ப் பிடித்திருக்காமல் தளர்ச்சியாக இருக்கவேண்டும். முழங்கால் வரையில் மேஜோடுகள் போட்டிருக்கவேண்டும். காலினுடைய பாகம் ஒன்றும் வெறுமையாயிருக்கக் கூடாது.

நல்ல காற்று

படுக்கையறையில் நல்ல காற்று வரும்படி ஜன்னல்கள் திறந்தே இருக்கவேண்டும். போதுமான காற்று எப்பொழுதும் இருக்கவேண்டும். பகலில் குழந்தைகளை வெளியே நல்ல காற்றுள்ள இடத்திற்குக் கொண்டு போவது மிகவும் நல்லது. இரவில் வெளியேகொண்டு போகக் கூடாது.

குழந்தைகளைத் தனித்தனி படுக்கையில் தூங்க வைக்கவேண்டும். ஒவ்வொரு நாளும் வெந்நீரில் குழந்தைகளைக் குளிப்பாட்ட வேண்டும். நம் சகோதரியார் ஒவ்வொருவரும் இவ்விஷயங்களையெல்லாம் கவனிப்பாராக.

தமிழ் மாதருக்கு ஆங்கிலக் கல்வி அவசியமா ?

தற்காலத்திலே காலத்திற் கேற்ற கோலங்களும், குலத்திற்கேற்ற குணங்களும், குணத்திற் கேற்ற கொள்கைகளும், பாஷைக்கேற்ற ஞானங்களும், ஆங்காங்கு உலாவுகிறதை நாம் நாளுக்கு நாள் கண்ணாரக் கண்டும் காதாரக் கேட்டும் வருகின்றோம்.

நம் நாட்டுத் தமிழ் மாதருக்கு அன்னிய பாஷை அவசியமாவென்று ஆராயு முன்னர், நம் சகோதரர்களுக்கு இது எதுவரையில் பிரயோசனப்படுகின்றதென்பதைப் பற்றிச் சற்றே ஆராய்வோம். நம் நாட்டு ஆடவர்களிலனேகர் உயர்ந்த கல்வி உயர்ந்த பட்டம் பெற்றிருக்கிறார்கள். ஆனால் இவர்கள் நோக்கம் முழுதும் உயர்ந்த உத்தியோகஞ் செய்யவும் தகுந்த சம்பளம் பெறவுமல்லாமல், இக்கல்வியேற்றத்தினறிவுடைமையால் இவர்கள் தங்கள் தேசாசாரம், மதாசாரம், நன் நடத்தை என்பனவற்றைத் தெளிந்து கொள்ளவில்லை. இன்னும் இவர்கள் இக்கல்வி யேற்றத்தினால் அவசியமில்லாத மேலைத்தேச ஆசாரங்களைக் கையாண்டுகொண்டு தங்கள் வாணாட்களைக் கழிக்கிறார்கள். இது மாத்திரமல்ல, தங்கள் சுயபாஷையாகிய தமிழைப்பேசவும் நாணுவர். அப்படி யில்லையென்று பேசினும் தமிழுடன் ஆங்கிலங் கலந்துபேசித் தேன்போன்ற தமிழை அலங்கோலப்படுத்தி விடுகிறார்கள். நிறமொன்றைத் தவிர மற்றெவ்வகையாலும் தாம் ஐரோப்பியருக்குத் தோல்வி யல்லரென நடிக்கிறார்கள். அந்தோ! இவர்கள்பேதமை இருந்தவாறென்னே! ஆடவர் ஆங்கிலங் கற்று தங்கள் தேச ஆசாரங்களை வெகுதூரங் கைவிட்டதைக் கண்டும் பெண்கள் ஆங்கிலங் கற்க வேண்டுமென்று அபிமானம் கொண்ட அனேக பெற்றோர் தம் பெண்மணிகளை ஆங்காங்கு வித்தியாசாலைகளுக்கு அனுப்புகிறதைப் பார்க்கிறோம். பெரியோர்களே, உங்கள் பெண் குழந்தைகளை ஆங்கிலங் கற்க அனுப்பும் நோக்கமென்ன? அவர்கள் உத்தியோகம் பார்த்தாலும் விவாகஞ் செய்யாமலிருக்கப் போகிறார்களா? விவாகஞ் செய்து விட்டால் உத்தியோகம் பார்ப்பதெப்படி? வரன் தேடும் நோக்கமாக உங்கள் பெண்மணிகளுக்கு ஆங்கிலந் தேவையா? பிறதேசங்களில் போய் உத்தியோகம் பார்க்கும் தங்கள் நாயகர் எழுதுங் காகிதங்களை வாசித்தறிய ஆங்கிலமவசியமோ? அப்படி ஆங்கிலத்திலெழுதும் தமிழ் வீரவான் தமிழில் வரைந்தனுப்பினால் இவர் மகத்துவத்திற்குக் குறைவோ? அல்லது இவர் தன் சொந்தப் பாஷையில் தான் விடும்பிழைகளைத் தன் மனைவி கண்டு கொள்வாளென்ற பயமோ? அல்லது தன் ஆங்கிலத் திறமையை தன்னில்லாளிடம் காட்டவேண்டுமென்ற நோக்கமோ? இவ்வித கலியுக நவீனமெல்லாம் கருணைக் கடலாகிய இறைவனுக்கே அற்புதம்.

ஆங்கிலங் கற்றலினால் பெண்கள் தேகாரோக்கியத்திற்கு வேண்டிய விதிகளையும், காலத்திற் கேற்ப உணவுப் பொருட்களைப் பாகம் பண்ணுவிக்க வேண்டிய முறைகளையும் அறிந்து காலத்திற் கிணங்கிய விதமாகத் தங்கள் நாயகரையும் குழந்தைகளையுங் காப்பாற்றுவார்களென்று சிலர் சமாதானஞ் சொல்லுகிறார்கள். இப்படி கூறும் புத்திமான்கள் தங்கள் தாய்ப்பாஷையிலிவைகளைப் பற்றிக் கூறும் சாஸ்திரங்களனேகமிருக்கின்றனவென்று அறியார்கள் போலும். வீடுவாசல்களைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டிய முறைகளையும், இன்னும் மற்றும் இல்லறத்திற்கு வேண்டிய

முறைகளையும் கூறுஞ் சாஸ்திரங்கள் அனேகம் தங்கள் தாய்பாஷையில் மலிந்திருக்கின்றனவே. அவைகளை அனேகர் படித்தறியாமல் பரிதவித்து, ஆங்கிலத்தில்தான் ஆறுதலைக்கொடுக்கும் விதிகளையும், முறைகளையுங்கூறுஞ் சாஸ்திரங்கள் அனேகமிருக்கின்றனவென்று ஏமாந்து தங்கள் பெண்களுக்கு ஆங்கிலமவசியமென்று கதறுகிறார்கள். வேறு சிலர் நாகரிகம், சீர்திருத்தம், மற்றும் தேர்ச்சிகளை ஆங்கிலங் கற்றால்தான் அடையலாமென்று பறை சாற்றுகிறார்கள்.

தமிழாகிய தங்கள் ஒழுகவேண்டிய முறைகள் திருவள்ளுவ நாயனார் திருவாய் மலர்ந்தருளிய திருக்குறளிலும் பார்க்க வேறு எந்த நூலிலே விசேஷமாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆங்கிலங் கற்பதிலும், அக்கல்வியின் பயனால் ஒழுகும் ஒழுக்கத்திலும் செலவழிக்கும் நேரத்தில் காற்பங்கு நேரத்தை நம் சகோதரிகள் மேலே கூறப்பட்ட நூலைப்போன்ற நூல்களில் செலவழிப்பார்களாயின் இவர்கள் எய்தும் பயனுக்கு வரம்புமுண்டா? அதிக பணச் செலவு செய்து தங்களுடைய சாதியாசாரத்திற்கும், மதாசாரத்திற்கும் இணங்காத கல்வியை நம் பெண்மணிகள் படித்து எவ்வகையான ஈடேற்றத்தை நம் தேசத்திற்குச் செய்யப் போகிறார்களோ விளங்கவில்லை.

வேறு சிலர் ஆங்கில பாஷை உலகமெங்கும் தெரிந்த பாஷையானபடியால் நம் பெண்மணிகளும் அந்தப் பாஷையை அவசியங் கற்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இவர்கள் இப்படிக் கூறுமுன், தங்கள் பெண்கள் இன்றைக்கு முன்னாவது அல்லது இப்போதாவது ஆடவரில்லாமல் தனியே வெளியேறினதுண்டாவென்று சற்று யோசிக்கட்டும். இதுவரையிலிவர்கள் தனிமையாகப் பிரயாணம் பண்ணவுமில்லை, இனிமேல் பிரயாணம் பண்ணப் போகிறதுமில்லை, இவர்கள் எப்பொழுதும் இன்னொருவனுடைய சுவாதீனத்திலிருக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள். மேல்நாட்டு மங்கையர் அப்படியல்ல. இப்படியான வித்தியாசமிருக்கும் பொழுது அவர்களுக் கிணங்கியது நம் பெண்மணிகளுக் கிணங்காது என்றது பூரணமாய் விளங்குகிறது.

நமது பெண்மணிகள் தமிழ்க் கல்வியால் எய்தும் பயன்:—தமிழ்க் கல்வி ஊட்ட ஊட்ட நன்மை தீமை இன்னதென உணரும் அறிவு ஏறிக்கொண்டே வரும். துன்மார்க்கம் விலகி சன்மார்க்கம் பெருகும். பதிவிரதாத் தன்மையதிகரிக்கும். ஏனெனில் தமிழ் நூல்களில் ஆனமார்த்தம், கற்பு, தெய்வ வழிபாடு முதலியவைகளைப் பற்றியும், இவைகளைக் கைக்கொண்டொழுகுதலால் அடையும் நற்பயனையும் தெளிவாய்க் கூறப்பட்டிருக்கிறது. முற்காலத்தில் ஆங்கிலங்கல்லாத பெண்களிலெத்தனையோ பெயர் சிறந்த கற்பரசிகளாயிருந்திருக்கிறார்கள். அவர்களுக்கு யார் தான் தற்காலத்தில் நிகரானவர்கள். முற்காலத்தில் சீர்திருத்தமில்லையென்று சிலர் கூறுகிறார்கள். அவர்கள் சமீப காலத்தையே முற்காலமென்கிறார்கள். அனேக வருடங்களுக்கு முன்னே இருந்த திருத்தங்களெல்லாம் சமீபத்தில் கொஞ்சக்காலத்தில் கெட்டிருந்தன. அக்காலத்திலேயே அனேகர் குறித்து தாங்களிப்போது அனேக சீர்திருத்தத்தை ஆங்கிலங்கற்று அடைந்திருப்பதாக சாற்றுகிறார்கள்.

ஒரு சாதனத்தை அடையுமுன் அது நமக்கு அவசியமா அவசியமில்லையா வென்று சிந்தியாது, சேதுக்கரையில் ஒருவர் மண்ணில் சிவலிங்க உருச்செய்வதைப் பார்த்து இதரஜனங்களெல்லாரும் அவர் செய்த நோக்கமறியாது அதே மாதிரித் தாங்களும் சிவலிங்க உருச்செய்தது போல, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜப்பான், முதலிய தேசப் பெண்மணிகள் கற்கிறார்கள், ஆடவர்கள் கற்கிறார்கள் என்று நமது பெண்மணிகள் தமது நிலைமை இன்னதென்றும் அது பலநூற்றாண்டுகளுக்கு முன் இருந்த நிலைமை

யாதென்று மறியாமல் இவர்களும் மேல் நாட்டுக்கல்வி பயில்வது உசிதமற்றதும் அடாததும் நமது ஆசாரங்கட்குச் சிறிதும் பொருந்ாதுமாயிருக்கிறது. 'ஒருவனுக்கு அமுதாயிருப்பது மற்றொருவனுக்கு நஞ்சாயிருக்கிறது' என்ற ஆங்கிலேயப் பழமொழிக்கிணங்க, ஒரு தேசத்துக் குலாசாரம், பழக்க வழக்கம், ஒழுக்கம், கல்வி, நாகரிகம், முதலியவை மற்றொரு தேசத்துக்குப் பொருத்தமுள்ளதாயும், நன்மை பயக்கத்தக்கதாயுமிருக்குமென்று சொல்வது அசாத்தியம். ஒரு தேசத்து உடை, உணவு, ஆசாரம் முதலியன அந்த தேசத்துத் தேச வழக்கத்தைத் தழுவியிருப்பது போல ஒரு தேசத்துக் கல்வியும், நாகரிகமும், அந்தத் தேசத்துக் குலாசாரம் பழக்க வழக்கங்களை ஒட்டினதாகவே இருக்கவேண்டுமென்பது எவரும் ஒத்துக்கொள்ளக்கூடிய விஷயமே. ஆகையால் நம் பெண்களுக்கு எது அவசியமோ அதைப்புகட்டாது மேல் நாட்டுக் கல்வியை நம்பெண்மணிகள் கற்றுக்கொள்வதெதற்காக? பெண்களாய்ப் பிறந்தவர்களை நற்குணவதிகளாயும் குடும்பமாகிய அரசாங்கத்தை நன்கு பரிபாலிக்கத்தக்க சாதுரியமும், சாமர்த்தியமுமுள்ளவர்களாயும், குழந்தைகளைப் போற்றி நன்னெறியில் வளர்ப்பதற்கு இன்றியமையாத அன்பும் பொறுமையும் தயாள குணமும் வாய்ந்தவர்களாயும் உண்டாக்கச் சக்தியற்ற மேல் நாட்டுக் கல்வி நம் நாட்டுப் பெண்மணிகளுக்கேன்? மதாபிமானம், குலாபிமானம், தேசாபிமானம், உறவபிமானம், பாஷாபிமானம் முதலியவற்றை ஒழித்து, உடலபிமானம், உணவபிமானம், மதவபிமானம், உடையபிமானம், புகழபிமானம் முதலியவற்றை நம்மனதில் வேரூன்றித் தழைத்தோங்கச் செய்யும் இந்த மேல் நாட்டுக் கல்வியை நம் பெண்மணிகள் அங்கீகரிக்க வேண்டியது அவசியமா? "கற்றதனாலாய பயனென் கொல்வாலறிவ னற்றாடொழா ரெனின்" என்னும் மெய்மொழியை மறந்து மேல் நாட்டு நாகரிகத்தை அனுஷ்டிக்கும்படி கட்டாயப்படுத்தும் இக்கல்வி அவசியமா? வித்தியாசாலை, பெரியோர் கூடுமிடம், ஆலயம், சற்சன சங்கம் முதலிய உயிர்க்குறுதியைச்செய்யக் கூடிய இடங்களுக்கு மனதைச் செல்லவொட்டாது தடுத்து நாடகசாலை, நடனசாலை, சங்கீத சாலை முதலிய விநோத சாலைகளுக்கு மனதைத்திருப்பிக் கல்வியை நமது பெண்மணிகளுக்கு ஊட்டுவது உசிதமா? புண்ணியவதிகளும், புனிதவதிகளும், சத்தியவதிகளும், பதிவிரதா சிரோன்மணிகளும், மூவுலகத்தாரும் புகழத்தகுந்த அருமையான குணக்குன்றங்களாய் விளங்கும் பெண்மணிகளான சாவித்திரி, நளாயினி, தமயந்தி, அருந்ததி, சீதை, திரௌபதை, முதலானவர்களுடைய வழித்தோன்றல்களாகிய நம் பெண்மணிகள் புராண இதிகாசம் முதலிய திவ்விய பிரபந்தங்களைப்பற்றியும், யோகீச்வரர்கள், முனீச்வரர்கள், ரிஷீச்வரர்கள், மற்றும் நம் தாய் நாட்டின் ஈடேற்றத்திற்காக உடல் பொருள் ஆவி ஆகிய மூன்றையுந் தியாகஞ்செய்து பாடுபடும் பக்தர்கள் கொண்டாடுஞ் சிங்கங்களைப் பற்றியும், அவதார புருஷர்களைப் பற்றியும் அறியாமல் "கண்டதே காட்சி, கொண்டதே கோலம்" என்று மேல் நாட்டுக்கல்வியைக்கற்று இவர்கள் அடையும் பயன் நம் ஆசாரத்திற்கு நன்மை பயக்கத்தக்கதோ.

பெண் கல்வியின் நோக்கம் பெண்களிடத்து நற்குண நற்செய்கை, நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் மாதர்களுக்கு இன்றியமையாத நான்கு குணங்களும், பதிபக்தி, கடவுள் பக்தி, எவரிடத்துடம் தயை ஆகிய இவற்றை விருத்திசெய்யக் கூடியதாக விருத்தலேயாம். இக்கல்வியே நம் பெண்மணிகளுக்கு அவசியமான கல்வி. யோகிகளும், ஞானிகளும், பக்தர்களும், மகாத்மாக்களும், நடுவுநிலை தவறாத கணக்கற்ற மன்னவர்களும் நம் தாய் நாட்டில் உற்பத்தியானது அந்நாட்டு மாதரின் நன்னெறி, நல்லொழுக்கம், பதிவிரதா தர்மம் ஆகியவற்றாலேயே என்பதை ஒவ்வொருவரும் நன்குணருங்கள். உணர்ந்து அவ்வரிய தாய்மாரின் குணங்களை நம்பெண்மணிகளின் மனதில் பயிற்சிசெய்ய முயலுங்கள். அதற்கேற்ற கல்வியை ஊட்டுங்கள். மேலே சொன்னபடி வாழ்வதே நமது பெண்களுக்குச் சிலாக்கியம். அதுவே அவர்களுக்குப்பெரியதோர் பாக்கியம். இல்லாவிட்டால் இப்பெண் வாழ்வால் என்ன யோக்கியம்.

"தமிழ் நேசன்"